
# கல்வி உலா



0
கொ
PR

கலாநிதி.ச.நா.தணிகாலசம்பிள்ளை

# கல்வி உலா

- ஒரு கல்வி உயர் நிர்வாகியின் கதை-

கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கல்வி உலா |
| ஆசிரியர் | : | *கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை* |
| ISBN | : | 978-955-50250-3-4 |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| முதற் பதிப்பு | : | 25.10.2009 |
| வெளியீடு | : | கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை பணிநயப்பு குழு |
| பக்க வடிவமைப்பு | : | திருமதி.செ.ரஜனி |
| அட்டைவடிவமைப்பு | : | திரு.க.ரணேஷ் |
| பதிப்பு | : | மல்ரிவிஷன் அச்சுக்கலையகம், இல.77,முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா. |
| பக்கங்கள் | : | 148 |
| விலை | : | ரூபா: 300.00 |

| | | |
|---|---|---|
| Title | : | "Educatinal Journey - Story of a Senior Educational Executive Officer" |
| Author | : | Dr.S.N.Thanikasalampillai |
| Copy right | : | Author |
| ISBN No. | : | 978-955-50250-3-4 |
| First Edition | : | 25.10.2009 |
| Publisher | : | Felicitation Committee of Dr.S.N.Thanikasalampillai |
| Lay Out | : | Mrs.S.Rajani |
| Cover design | : | Mr.K.Ranesh |
| Printing | : | Multivision Printers, No.77,1st Cross Street, Vavuniya. |
| Pages | : | 148 |
| Price | : | Rs.300.00 |




# சமர்ப்பணம்



கோண்டாவில் குடைச்சாமியார்

# கல்வி உலாவின் அந்தக்காலங்கள்

எண்பதுகளின் நடுப்பகுதி பல நல்லாசிரியர்களால் வழிநடத்தப்பட்டு ஆசிரியத் தொழிலிலேயே நுழைய விரும்பி ஓர் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்ற காலம்; யாழ் மாவட்டத்தில் கிளிநொச்சி பிரதேசத்தில் கடலும்கடல் சார்ந்த பூமியும் வயலும் வயல் சார்ந்த பூமியும் காடும் காடுசார்ந்த பூமியும் அங்காங்கே காணப்படும் பாலைநிலமும் அமைந்த பகுதியான பூநகரியில் நுழைந்த வேளை; அப் பூநகரியின் கௌதாரி முனைப் பகுதியில் அமைந்த பாடசாலையில் முதல்நியமனம் பெற்று படிப்பித்த காலங்கள் நினைவுக்கு இன்று வருகிறது ஏன்?

மலைகள்தான் இங்கில்லை என்று நினைத்தபோது கௌதாரி முனைப் பகுதியில் உள்ள மணல் குன்றுகள் அக்குறையை நிவர்த்தி செய்தன. ஒருபுறம் வெண்மணற்குன்றுகளின் நிமிர்வும், மறுபுறம் பரவுகடலின் அழகும் அவ்வூரின் பிள்ளைகளின் துடித்துடிப்பும் ஆசிரியர் மனங்களை கொள்ளை கொண்டிருந்த காலம்.

அங்கு பணியாற்றிய ஒரு வருட்காலத்துள் பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில பயிற்சிநெறி வாய்ப்பு கிட்டியது. அந்த இரண்டு வருடங்களும் மிக விரைவிலேயே ஓடிவிட்டன. மீண்டும் பூநகரிப் பிரதேசத்தில் 18மைல் காட்டு வழிப் பயணம் செய்து சென்றடைய வேண்டிய வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பணிபுரிய அனுப்பப்பட்ட காலம். இந் நூலாசிரியருடைய தொடர்பு கிட்டிய வேளை அது. பூநகரிப் பிரதேசத்துப் பாடசாலைகள் எல்லாம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.ச.நா.தணிகாசலம்பிள்ளை அவர்களின் கல்வி நிர்வாகத்திற்குள் கட்டுப்பட்டிருந்த காலம் அன்று.

யாழ்ப்பாணம் இணுவிலில் வாழ்ந்த எனக்கு யாழ்ப்பாணம் வீதியில் வாழ்ந்துகொண்டிருந்த வட்டாரக் கல்வி அதிகாரியுடன் பாடசாலை விடயங்களை ஒட்டி அடிக்கடி சந்திக்கும் தேவை ஏற்பட்டது. உத்தியோக ரீதியான சுற்றறிக்கைகள், பாடசாலை உபகரணங்கள், பரீட்சைத்தாள்கள் என்பவற்றை போக்குவரத்தும் தொடர்பாடலும் தபால் சேவையும் மந்தமான நிலையில் இருந்த பூநகரிப் பிரதேச பாடசாலைகளுக்கு எடுத்துச் சென்று ஒப்படைக்கும் பணி அவ்வப்போது செய்வதற்கு ஷெல்லடி மத்தியிலும் வாய்ப்பு கிடைத்த காலம் அது. அந்தக்காலங்கள் தான் நாட்டின் போர்மேகங்கள் சூழ்ந்த காலங்கள். இந்த நிர்வாக ரீதியான தொடர்பு படிப்படியாக கல்வி, நாடகம் போன்ற துறைகளுடன் திரு.ச.நா.தணிகாசலம் பிள்ளைக்கிருந்த ஆர்வம் காரணமாக மேலும்வலுப்பெற்றது. அவரது பிள்ளைகளுக்கான ஆங்கில கற்பித்தலையும் அவ்வப்போது செய்திருந்தேன். இக் காலங்களில் நாம் வெவ்வேறு திசைகளில் பயணப்பட்டாலும் பயணங்களில் சந்திக்கும்போது உற்சாக வார்த்தைகள் கூறி முன்னேறவேண்டும் எனும் துடிப்பை



ஊட்டத்தவறவில்லை. பின்னாளில் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம், மொழியியல், நாடகமும் அரங்கியலும் படிக்கும் காலத்தில் அவரது முதுகலைமாணி நாட்டுக் கூத்து ஆய்வுடன் மீண்டும் அவருடன் ஆய்வு மட்டத்தில் விவாதம் செய்ய வாய்ப்புக் கிட்டியது. ஒருபுறம் கல்விநிலையில் ஆராய்ச்சி மறுபுறம் நிர்வாக ரீதியில் பரந்து பட்ட கல்விச் செயற்பாடுகளும், பொதுமக்கள் உறவும் என அவர் பணி தொடர்ந்தது. சமயக்கல்வி நூலாக்கத்திலும் அவர் பணி குறிப்பிடத்தக்கது. இன்று ஓர் அனுபவம்மிக்க ஒரு கல்வி நிர்வாகி ஆகவும் கலநிதிப்பட்டம் பெற்ற ஆராய்ச்சி அறிஞனாகவும் திகழும் தணிகாசலம்பிள்ளை அவர்கள் தமது கிராமத்து வாழ்வை முன்னிலைப்படுத்தி தனது கல்வி உலாவை எழுத்தில் வடித்துள்ளார்.

கிராமியமே உலக வாழ்வுக்கு ஊற்றாகவும் ஆதாரமாகவும் மிளிர்கின்றது என்றார் காந்தி. வட்டுக்கோட்டைக் கிராமத்தில் பிறந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற ச.நா.தணிகாசலப்பிள்ளை தனது கல்விப் பணியின் உச்சமான சேவையை பூநகரிக் கிராமத்தில் ஆற்றியவர். ஒரு சாதாரண ஆசிரியராக தென்னிலங்கை முஸ்லிம் கிராமத்தில் தனது கல்வி உலாவைத் தொடங்கியவர். அதிபராக, வட்டாரக் கல்வி அதிகாரியாக, பிரதம கல்வி அதிகாரியாக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, மாவட்டகல்விப்பணிப்பாளராக, யாழ் வலயக்கல்விப் பணிப்பாளராக, வடக்கு கிழக்கு மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளராக உயர்ந்து இளைப்பாறியவர். தொடர்ந்தும் மத்திய கல்வி அமைச்சில் சிரேஸ்ட கல்வி ஆலோசகராக கடமைபுரியும் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்கள் ஒரு முதல் வகுப்பு கல்வி நிர்வாகசேவை அதிகாரி ஆவார். கலைமாணிப்பட்டத்தினைத் தொடர்ந்து பட்டப்பின்கல்வி டிப்ளோமா, பட்டப்பின் கல்வி முகாமைத்துவப் டிப்ளோமா, கல்வியில் முது தத்துவமாணி – மற்றும் கல்வியில் கலாநிதிப்பட்டங்களை தனக்கு உரித்தாக்கியவர். இவ்வாறாக கல்வியிலும், நிர்வாக சேவையிலும் உயர்ந்த ஒரு சாதாரண குடிமகனின் வாழ்வை கல்வி உலாவாக இந்நூல் தருகிறது. ஏற்கனவே *கல்விச்சிந்தனைகள், கல்வி நிர்வாகம், ஆரம்பக்கல்வி, முறைமைசாராக் கல்வி முறையில் நாட்டுக்கூத்துக்கள், கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளையின் கட்டுரைகள், The Role of Principals in Managing Small Schools in Difficult Areas of Sri Lanka, பாரம்பரிய தொழில்முறையில் உய்த்துணரத்தக்க கற்கைநெறிகள் வடபிரதேச கிராமப் பாடசாலைகளின் மேம்பாடு பற்றிய சிக்கல்கள்* ஆகிய நூல்களைத் தந்தவர். இந்நூல் கல்வியல்சார் அனுபவப் புதையல் என்றால் மிகையாகாது. ஒரு நாவல் போல எழுதப்பட்டுள்ள இந்நூல் கல்விசார் மாணவர்கள் வாசிக்க வேண்டிய நூலாகும்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்,**
**தலைவர்,**
**ஆங்கிலமொழிப் போதனைப் பிரிவு,**
**யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம்.**

**12.09.2009**

## பொருளடக்கம்

| | |
|---|---|
| **உலா 1:** | **பக்கம்** |
| கருவறையில் | 7 |
| **உலா 2:** | |
| ஆரம்பக்கல்வியும் உயர்தரக்கல்வியும் | 9 |
| **உலா 3:** | |
| பல்கலைக்கழகக் கல்வி | 23 |
| **உலா 4:** | |
| ஆசிரிய சேவை | 25 |
| **உலா 5:** | |
| பூநகரியில் கல்விப்பணி | 38 |
| **உலா 6:** | |
| கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி நிர்வாகியாக.... | 47 |
| **உலா 7:** | |
| முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்விப்பணிப்பாளராக.... | 63 |
| **உலா 8:** | |
| யாழ் வலயக்கல்விப் பணிப்பாளராக கலாநிதி... | 68 |
| **உலா 9:** | |
| யாழ் மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளராக.... | 78 |
| **உலா 10:** | |
| ஒப்பந்த அடிப்படையில் சேவை | 90 |
| **உலா 11:** | |
| கல்விச்சுற்றுலா | 98 |
| **உலா 12:** | |
| சமயச்சுற்றுலா | 112 |
| **உலா 13:** | |
| மனதில் படித்த காட்சிகள் | 117 |
| **உலா 14:** | |
| கல்வி உலகில் எனது ஆய்வுப் புலம் | 127 |
| **உலா 15:** | |
| கல்வி உலகில் உருவான என் நூல்கள் | 145 |
| பிற்சேர்க்கை | 148 |





உலா 01

ஒருமைக்கும் தான் கற்ற கல்வி
எழுமைக்கும் ஏமாப்புடைத்து

# கருவறையில்

தெய்வத்தாய் தெய்வயானைப் பிள்ளை அவவே எனது தாயும் தந்தையுமாவர். அம்மாவிடம் கேட்ட பொழுது தான் மூன்றாம் வகுப்புவரையே படித்ததாக சொன்னார். அவரது வாசிப்பு எழுத்துத் திறனை அவர் எமக்கு சொல்லித்தந்ததன் மூலம் அறிந்து கொண்டேன். அவர் நல்ல கேள்வி ஞானம் உடையவர். எம் வட்டுக்கோட்டை ஊர் நாட்டுக்கூத்து மூலம் கேள்வி வழியாக வந்த பாடல்கள் அறிந்தவர், கூத்துக்களை பாடியும் ஆடியும் கதையும் உரைப்பார். அவரது ஞானம் கருவில் திருவானது.

மனிதனின் தோற்றத்துடன் அவனது விழுமியமும் ஆரம்பிக்கின்றது. தோற்றத்திற்கு ஆதி மூலமான கருவறையில் தாயினால் விழுமியம் விதைக்கப்படுகின்றது.

"சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்". கந்தசஷ்டி விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை வரும் என்ற நம்பிக்கை. அகப்பை என்பது கருப்பையைக் குறித்து நின்றது. மூத்த பிள்ளையாக 1936இல் அக்கா சிவசூரியம்மா பிறந்தார். எமது தந்தையார் சரவணமுத்து நாகமுத்து தனக்கு ஓர் ஆண் குழந்தை கிடைக்க வேண்டுமென்று அவாவுற்றார் என அம்மா கூறினார். இதன் பொருட்டு அக்கா பிறந்து ஆறு வருடங்களாக வருடம் தோறும் கந்தசஷ்டிக்கு உபவாசம் நோக்கலாயினார். அவர் நோற்ற ஆறாவது வருடமே யான் கருவில் உருவுற்றேன். சட்டியில் இருந்து கந்தனின் அருளால் அகப்பையில் யான் வந்தமையால் (பிறப்பு

*29.09.1942)* எனக்கு "தணிகாசலம்" எனப்பெயர் வைத்து முருகனுக்கு நன்றிசெலுத்தினார். பிள்ளை எமது குடும்பப் பெயருக்குப் பின்னால் வருவது. ஒன்று விட்ட அண்ணன்மாருக்கும் வேலாயுதம்பிள்ளை, முருகுப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, என பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன. இதனால் எனது பெயர் தணிகாசலம்பிள்ளை என வைக்கப்பட்டது. அடுத்த ஆறு வருடங்களில் எனது தம்பி (தவரத்தினசிங்கம்) 21.02.1948ல் பிறந்தார்.

பெயரை வைத்து நன்றியான தந்தையார் தாயாரிடம் கூறியுள்ளார். "இந் நன்றி தொடர வேண்டும். எனது மகனும் ஆறுமுகப் பெருமானுக்கு கந்தஷஷ்டி ஆறு நாளும் உபவாசம் இருக்க வேண்டும்" (அதனை நிறைவேற்றவே வருடம் தோறும் எமது கந்தஷஷ்டி விரத உபவாசப் பணி. அவ்வாறு நோற்று எனக்கு மூன்று ஆண்குழந்தைகள்: இரு பெண் குழந்தைகள் கடைசி தணிகை பாலன், எனது செல்வங்களாகினர்.)

அப்பா என்னை தோளில் சுமந்து பள்ளிக்கு கூட்டிச் சென்ற காட்சி மனக்கண்ணில் இன்னும் தெரிகிறது. அவரது மூன்று வெண்ணீற்றுக் குறிகள் கொண்ட நெற்றியும் அதன் மத்தியில் சிறு சந்திரன் போன்ற தோற்றம் கொண்ட சந்தணப் பொட்டும் அதன் நடுவே சிறுகுங்குமமும் அவரது அழகுத் தோற்றம். இச் சந்தணம் கல்லில் சந்தணக் கட்டையை அரைத்து எடுத்து பொட்டு போடப்படும். (இன்றும் எமது வீட்டில் உள்ள கிணற்றுக் கட்டில் கிழக்கு நோக்கி வைத்து கட்டப்பட்ட சந்தண அரைகல் உண்டு.) பொட்டுவிழுந்து விடாமல் நெற்றிக் கண்ணில் முட்கிழுவம் பால் தொட்டு, வைப்பார். அப்பாவின் சிறு படிப்பும் கேள்வி அறிவுக்கல்வியும் அம்மாவின் கருவறையில் கல்விஞானமாக ஊற்றெடுத்தது. அத்தகைய அப்பா எனது ஐந்து வயதில் (கண்ணின் காட்சியாகவே இன்றுவரை) காலனின் கையில் அகப்பட்டு விட்டார். இது அப்பாவின் மற்றவர்களுக்கு உதவும் தன்மையால் வந்தவினை.

இதனால் என் தெய்வத்தாயே எனது கல்விக்கு தந்தையும் தாயுமானார். தன் பொறுப்பை தான் சாகும் 1993 வரை (83வயது) நிறைவேற்றத் தவறவில்லை. 'கருவறையில் இருந்து கல்லறைவரை' என்ற கல்வித் தத்துவத்தை அர்த்தமாக்கிய அன்னை தெய்வானைப் பிள்ளை.

* * *





உலா 02

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குதக

# ஆரம்பக் கல்வியும் உயர்தரக்....

"தந்தை மகற்காற்றும் உதவி அவயத்து முந்தியிருக்கச் செயல் "(தந்தையின் பணி)" , ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்." என்ற இரு திருக்குறள் முதுமொழிகளுக்கிணங்க எனது தந்தையும் தாயும் பள்ளியில் சேர்க்கத் தவற வில்லை. அயலில் பள்ளிக்கூடம் இருந்தாலும் எனது தாய் மாமா திரு.த.முத்துலிங்கம் அவர்களுக்கு ஆசிரிய நியமனம் கிடைப்பதற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காக யான் வட்டு பிளவத்தை அமெரிக்கமிசன் அ.த.க.பாடசாலையில் அரிவரி வகுப்பில் 21.05.1947 திகதியில் சேர்க்கப்பட்டேன் (சேர்விலக்கம் : 879) அவருக்கும் ஆசிரிய நியமனம் கிடைத்தது.

எனது ஆரம்பக்கல்வி அரிவரி வகுப்பு ஆசிரியர் திரு செல்லையா வாத்தியார். அவரது அர்ப்பணிப்பு எம் மீது காட்டிய அக்கறை இன்று வரை கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தி வருகின்றது. "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்ற முதுமொழிகளுக் கிணங்க என்னைக் கற்பித்து உயர்த்திய தெய்வங்கள். இளமையில் கல்வியை சிலையின் எழுத்தாக வடித்தார்கள்: ஐந்தில் வளைத்தார்கள்: செல்லையா வாத்தியார் வகுப்பில் மட்டுமல்ல எங்கள் வீட்டுக்கும் வந்து கல்வியை வழங்க முன்வந்தார். நாம் பள்ளியை புறக்கணித்து நின்றால் கம்புடன் கையில் இழுத்துச் சென்று அவர் அடித்த அடி கல்விக்கு வித்தானது. தனது பிள்ளைகள் போல்

எம்மை பார்த்தார். "தந்தையற்று எம்போல் கஷ்டத்தில் கல்வி கற்போர் மீது அத்தெய்வம் கூடிய கவனம். அவரது வீட்டில் மாலை நேரத்தில் வகுப்பில் கற்கத் தவறி கள்ளம் ஒளிப்பவர்களுக்கு விசேட வகுப்பு. தற்போதைய ரியூசன் வகுப்பல்ல அது. திண்ணைப் பள்ளிக் கல்வி: நியமக்கல்வி வகுப்பில் தலை சீவாது நகம் வெட்டாது, எண்ணெய் வைக்காது, குளிக்காது சென்றால் அவ்வளவுதான். அப்படியே கிணற்றடிக்கு சென்று குளிக்க வைத்து, எண்ணெய் பிரட்டி, தலைசீவி, உடுப்புத் தோய்த்து, உடைமாற்றி வகுப்பிற்கு கொண்டுவந்து விடுவார். வகுப்பில் இன்று போல் மாணவர்கள் 45 அல்ல. 15 அல்லது 20க்கு குறைவான மாணவர்கள். இதனால் ஒவ்வொருவரிலும் தனிக்கவனம். "பிறர் பிள்ளையைத் தடவ தன் பிள்ளை தானே வளரும் என்ற" அடிப்படையில் கல்வி கற்பித்து உயர்த்தினார்.

அவரிடம் கற்ற எங்கள் வகுப்பு சகமாணவர்கள் யாவரும் கெட்டிகள்: கெட்டிக்காரர்கள்: திரு.மு.பரமானந்தசிவம் (முன்னாள் அதிபர்), திரு.M.இராஜரட்ணம் (கணித ஆசிரியர்), க.புஸ்பராணி (B.Sc), கா.இந்திராணி, திரு.செல்வராசா, திரு.குலசூரியர், திரு.குருசாமி போன்றோர் ஒருவருக்கொருவர் முந்துவதற்காக பாட ஒப்புதல், தேவாரமனனம் ஆகியவற்றில் வீரராகத் திகழ்ந்தோம். இக்காலத்தில் அதிபர் கந்தையா (தொல்புரம்) அவரது மனைவியர் தையல் அம்மா ஆகியோரது மேற்பார்வையும் அக்கறையும் எம்மால் மறக்கமுடியாது. பாடசாலையில் காலைப் பிரார்த்தனைக் கூட்டங்கள், மாணவர்கள் வரிசையாக வகுப்பறைக்குச் செல்லல், காலையில் ஆசிரியர்களை மதித்து காலை வணக்கம் கூறுதல், கீழ்ப்படிவு, மரியாதை; மதிப்பளித்தல் என்பன எமக்கு பாரம்பரியமாக கையளித்த கையளிப்புகள்: இளமையில் தேடிக் கொண்ட செல்வங்கள். குரோட்டன் இலையில் சம்பல், இரண்டு துண்டு பாண் மதியவேளைச் சாப்பாடு.

**கனிஷ்ட இடைநிலைக்கல்விக் காலங்கள்**

அங்கிருந்து மூன்றாம் தரம் முடித்துக் கொண்டு நுழைவுத் தேர்வுப் பரீட்சைக்கு வட்டு இந்துக்கல்லூரியில் தோற்றி (9.1.1952 சேர்விலக்கம் 3778) கனிஷ்ட இடைநிலைக்கல்விக்காக 4ம் தரத்தில் சேர்க்கப்பட்டேன். அங்கு 4ம் வகுப்பில் திருமதி. சுப்பிரமணியம் (அரசு மிஷ்) சொல்லித்தந்த ஆங்கிலம், அவவின்



கண்டனம், பாடமாக்குதல், ஆங்கில உச்சரிப்பு ஆகியன எம் நெஞ்சில் விட்டுஅகலாது 10 ஆங்கிலச் சொற்கள் தந்தால் அதனை மனனம் செய்து ஒப்புவிக்காவிட்டால் அரசி அம்மா அடி, அதற்குள் நண்பன் சுவாமி அப்பாத்துரைக்கும் (கனடா) எனக்கும் போட்டி. அவனை முந்தி அடிவாங்காமல் நான் தப்பிவிடுவேன். (நண்பன் சுவாமி அப்பாத்துரை 60 வருடங்களின் பின் கனடாவில் எங்களைக் கண்டதும் கூறியது. "எட மச்சான் நீ அரசி மிஸ்சின் பாடங்களை ஒரு மூலையில் இருந்து பாடமாக்கி ஒப்பிவித்து அடி வாங்காமல் தப்புவதும் நான் குறும்புத்தனம் செய்து அடிவாங்குவதும் நினைவுக்கு வருகின்றது." என்று கூறி ஆரத்தழுவினான்.

அத்தகைய விதத்தில் எமது ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு அர்ப்பணிப்புடன் கடமையாற்றியதன் காரணத்தினால் நாம் புலம் பெயர்நாட்டில் மட்டும் அல்லாமல் எமது நாட்டிலும் மற்றவர்களுக்கு சேவையாற்றும் விதத்தில் வளர்ந்தோம். இக்கல்வியைத் தந்தவர்கள் எமது முன்னைய ஆசிரியர்கள்: எமது ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் திரு.செல்லையா வாத்தியார், தையல் அம்மா ஆசிரியை (திருமதி. கந்தையா) ஆகியோரும் நான்காம் வகுபில் இருந்து எஸ்.எஸ்சி வரை கற்பித்த ஆசிரியர்கள் திருமதி.சுப்பிரமணியம் (அரசுமிஸ்) துரைசுவாமி ஆசிரியர், திருமதி.பரமானந்தம் (L.S.மிஸ்) திருமதி.பரமானந்தம், திரு.கந்தரட்ணம், PTசேர், ஆட்மாஸ்ரர் (மணியவாத்தியார்) ஓமன் வாத்தியார், C.S.வாத்தியார் (சுப்பிரமணியம்) M.S.வாத்தியார், சிவசுப்பிரமணியம் ஆகியோர் நினைவில் உள்ளவர்கள்.

5ம் வகுப்பில் இருந்து S.S.C வரை படித்த காலத்தில் குறிப்பிடக் கூடிய ஆசிரிய, ஆசிரியைகள் பலர் திருமதி.L.S.மிஸ் (Mrs.பரமானந்தம் கனடா) அவர் 5ம் வகுப்பில் கணிதம் கற்பித்தவர். வாய்ப்பாடு கணிதசெய்கை சரியாக முடிக்காவிட்டால் உள்ளங்கையில் பிரம்பால் அடி. அரசுமிஸ்சுக்கு இளைத்தவர் அல்லர். குறிப்பாக திறமை குறைந்த மாணவர்களை தனது வீட்டில் சனிக்கிழமை அழைத்து கற்பிப்பார். திறமை குறைந்த மாணவர்களுக்கு கற்பிக்கும் நுட்பம் மறக்க முடியாது. துரைச்சுவாமி ஆசிரியர் தமிழ் கற்பித்தார். அவர் இசையுடன் பாடல் பாடும் வல்லமை வாய்ந்தவர். இலக்கணத்தை மேல் வகுப்புக்களில் கற்றுத்தேற அடி அத்திவாரம் இட்டவர் அவரே.

திரு பரமானந்தம் (கனடா) அவர்கள் ஆங்கிலத்தை 7ம் வகுப்பில் கற்பித்தார் திரு.கந்தரட்ணம் ஆசிரியர் *P.T.Sqaud Drill* பழக்கினார். *Drill* பாடத்தின் கதையை இலுப்பை மரம் கூறும். ஒழுங்காக நிற்காவிட்டால்: ஸ்ராண்டட்டீஸ் *Standatease* செய்யாவிட்டால் காலின் கீழ் பிரம்பு பார்க்கும் பதம் சொல்ல முடியாது. கட்டைக் கந்தரட்ணம் கறுப்புக் கண்ணாடி போட்டு கள்ளம் விடுபவர்களை அவதானித்துக் கொடுக்கும் தண்டனை சொல்லும் தரம் அன்று. கல்விக்கு உடல் உறுதி அவசியம் என்ற எண்ணக் கருவை எனக்கு ஊட்டியவர் அவரே. (எனது 'கல்வியியற் சிந்தனைகள்' என்ற நூலில் ஒரு பாடம் அமைத்து அதனை கல்வி கற்பதற்கு உடல் உறுதி அவசியம் என்பதை கல்வி உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளேன்.)

7ம் வகுப்பில் இருந்து 10ம் வகுப்பு வரை சைவசமயம் கற்பித்த திருவயிரவநாதர் தேவாரக் கருத்துக்களை, நாயன்மாரது சமயத்தொண்டுகளை எம் மனதில் விதைத்தவர். அவரை நினைக்கும் பொழுது நாம் கூட்டாக விட்ட குறும்பை இங்கு கூறத்தான் வேண்டும். பள்ளிக்கூடம் இருநேரப் பாடசாலை. அவர் மதியவேளை நல்ல தயிர் மோர் கொண்டு வந்து கீரைக்கறியுடன் நல்ல பிடிபிடிப்பார். பிடித்ததன்பின் 6ம் பாடம் சமயம். அவர் சமயம் படிப்பிக்கும் பொழுது இடையில் தூங்கி விடுவார். நாம் எல்லோரும் சேர்ந்து எமது கொம்பஸ் பெட்டிகளை ஒரே நேரத்தில் கீழே போடுவோம். அவர் திடுக்கிட்டு எழுந்து விரலால் சுட்டி "பரமானந்தம்" "தணிகாசலம்" என்று வந்து எம்மை மொக்குவதும் ஆனந்தம்.

மணியவாத்தியாரிடம் நல்லசித்திரம் பயின்றோம். அவருடன் இந்தியாவில் இருந்து வந்து கற்பித்த ஓமன் மாஸ்டரையும் மறக்கமுடியாது. ஏனைய பாடங்களுக்கு வரைவு அவசியம் என்பதையும் உணர்த்தி கையால் புவியியல், சுகாதாரப் பாடங்களை வரைந்து இலகுவில் கற்க வைத்தவர்கள் அவர்களே.

**எமது படிப்பு முறைகள்**

எமது காலம் கற்றலுக்கு தனிப்பட்ட ரீயூசன் இல்லாக் காலம். எமது குடும்ப ஏழ்மை, கஷ்டம் கல்வியை கற்கவைத்தது.



கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தி உயரவைத்தது. குறிப்பாக ஏழாம் வகுப்பில் அவ்வுணர்வு உறுத்தியது. கிழமையில் அதுவும் பரீட்சை கிட்டுவதாயின் பின்னேரங்களில் ஒதுங்கி விடுவோம். பாடசாலையால் வந்ததும் சாப்பாடு ஒரு பிடிபிடித்துவிட்டு புத்தகங்களை எடுப்போம். தமிழ், சரித்திரம், புவியியல், எண்கணிதம் பாடங்களை கொண்டு சென்று திருநாவுக்கரசு ம.வியின் கனிஷ்ட பாடசாலைக் கட்டிடத்தில் நானும் பராமனந்தசிவமும் வாங்கை வெளியில் எடுத்துப் போட்டு பாடங்களை படித்துத் தள்ளுவோம். கணக்குகளை செய்து பயிற்சி பெறுவோம். கட்டுரைகளை எழுதிப் பழகுவோம்.

இது மனதை ஒருமைப்படுத்திப் படிக்க உகந்த இடமாக விளங்கியது. சனசஞ்சடி இல்லை. ஒரே அமைதியான இடம் சந்தேகங்களை ஒருவருக்கொருவர் கேட்டுத்தெளிவோம். எங்கள் வீடுகள் கிராமப்புறம் மாலையில் ஊரவர், உறவினர், குறிப்பாக பெண்கள் மற்றவர்களைப்பற்றி வம்பளக்கும் இடம். அதனாலே அவ்வீடுகளை விட்டு இவ்வாறு ஒதுங்கி நின்று படிப்பதுண்டு. இத்தகைய கல்விக்கு எம்மை ஒருவரும் வற்புறுத்தியது கிடையாது. தனிமையாக நாமாக நினைந்து ஆர்வமாகப்படித்தோம்.

கற்கக் கற்க கல்வி எம்மை உயர்த்தியது. உணரவைத்தது. வெள்ளிகிழமைகளில் நாம் சிவன் கோயில், வயிரவர் கோயிலுக்கு கூட்டுப் பிரார்த்தனைக்கு சென்று தேவாரம் திருவாசகம் படிப்போம். சிவன்கோவிலில் திரு.மு.பரமானந்தசிவம் கூட்டுப் பிரார்த்தனைக்கு தலைமை தாங்கி நடாத்துவர். வைபிரகோவிலில் (சடையன்) அண்ணர், நா.கணபதிப்பிள்ளை அவர்கள் நடாத்துவார்.

இக் கூட்டுப் பிரார்த்தனை எமக்கு கூட்டுணர்வை இளமையில் விழுமியமாகக் கற்றுத் தந்தது. பகவான் சத்தியபாபா கூறியபடி *Live together, Move together, Pray together* ஒன்றாக வாழுங்கள், ஒன்றாகப் பழகுங்கள், ஒன்றாகப் பிரார்த்தியுங்கள். என்ற தன்மை எம்மால் அன்றே அடையப் பெற்றது. கூட்டுப் பிரார்த்தனை அவற்றுடன் மனனம் என்ற கல்விச் செயற்பாட்டையும் காட்டி நின்றது. அன்று சகல தேவாரங்கள், திருவாசகங்கள், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருப்புகழ் என்பவற்றை இலகுவாக மனனம் செய்யக் கூடியதாக இருந்தது.

பாடசாலைகளில் அவற்றை இலகுவாக ஒப்புவிக்கக் கூடியதாக இருந்தது. இன்று கல்விச் செயற்பாட்டில் மனனத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமை மன வேதனை அளிக்கின்றது. இன்று மனத்தின் வேலையை நாம் எல்லோரும் ஒலிப்பதிவு நாடாவிடம் ஒப்புவித்துள்ளோம். ஆனால் மனனம் எமது உள்ளத்தில் பதித்து, நினைத்தநேரத்தில் நினைவு கூர, ஒப்புவிக்க, ஒரு சிறந்த செயற்பாட்டுத் தன்மையை வழங்கும் அல்லவா?

எட்டாம் வகுப்பில் இருந்து *S.S.C.*வரைகணிதம் கற்பித்தவர் திரு.கந்தையா ஆசிரியர் அவர்கள். எமக்கு சரக்கும் முதலும், நேரமும் தூரமும் கற்பித்தார். அதனை ஏசி, ஏசி அவர்கள் புகுத்துவார். ஆனால் புகாவிட்டால் மனமுறிவு ஏற்படக்கூடிய விதத்தில் குறைவாகக் குறை கூறுவார். இதனால் எல்லாப் பாடங்களிலும் *S.S.C.*யில் விசேட சித்தி அடைந்தும் எண்கணிதத்தில் தேர்ச்சி அடையாமல் நூன சித்தி, பெற்றேன்.

இரண்டாம் முறை எம்மை தேற வைத்தவர் அமரர் எமது உறவினர் திரு.ந.சிவகுரு ஆசிரியர் அவர்கள். அவரிடம் யானும் நண்பன் திரு.நாகப்புவும் தனிப்பட்ட கற்கையாக ஒவ்வொரு சனி, ஞாயிறும் படித்தோம் ஆசிரியர் அரிராசசிங்கத்திள் கணிதப் பயிற்சிகளை செய்து முடித்து பரீட்சையில் சித்தி அடைந்தோம்.

*S.S.C*வகுப்பில் ஆசிரியர், உபஅதிபர் திரு.க.கயிலாயநாதர் அவர்களிடம் தமிழ் இலக்கணம் கற்றோம். அவரது தமிழ் மொழி விளக்கம் என்ற நூல் எம்மை ல, ழகர, நகர, னகர, ணகர, பேதம் பற்றிய சரியான தெளிவு ஏற்பட வைத்தது. அவற்றுடன் பண்டிதர் நவரட்ணம் அவர்கள் சுருக்கம், கட்டுரை, பந்தி அமைப்பு, கடிதம் எழுதுதல் பற்றி சரியான விளக்கத்தை அளித்து கற்பித்தார். அவர் தந்த குறிப்புக்கள் பொன்னானவை. நமது பின்னைய பட்டப்படிப்பின் போது விரிவுரைகளை கிரகித்து சுருக்கமான குறிப்பை எழுத வாய்ப்பளித்தவர் பண்டிதர் நவரட்ணம் அவர்கள். கடுமையான தொனி, கண்டிப்பானவராக இருந்தாலும் அவரது கற்பித்தல் தமிழ் மொழியில் நல்ல, காலத்திற்கு தேவையான விளக்கங்களை அளித்தவர். திரு.மகேசன் ஆசிரியர் அவர்களது சரித்திரக் கற்பித்தலையும், திரு.க.அருணாசலம் அவர்களது குடியியற்



கற்பித்தலையும் திரு.*C.S.*சுப்பிரமணியம், திரு.***M.S.***அவர்களது ஆங்கிலக்கல்விப் போதனைகளும் குறிப்பானவை. ஆங்கிலம் கற்பதில் தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்தி வெறுப்பு உண்டாக்கி பிள்ளையின் ஆங்கில அடைவு மட்டத்தினை உயர்த்துவதில் எம்மவர் பல சிக்கல்களைத் தோற்றுவிப்பர். ஆனால் திரு.*M.S.*மாணவரை ஊக்குவித்து வழிகாட்டினார்.

யாழ் வட்டு இந்துக்கல்லூரியில் திரு.சிவகுருநாதப்பிள்ளை அவர்களின் முகாமைத்துவம் பற்றி குறிப்பிட வேண்டும். அவர்கள் உருவத்தில் குட்டியாக இருந்தாலும் பாடசாலை மேற்பார்வை, நடத்துகையிலும், ஆசிரியர்களிடம் உதவுவதிலும் கடுகு போல சிறிதென்றாலும் காரம் பெரிதாகக் காட்சி அளித்தார். அவர்வைத்திருந்த கார். *A.30.* 'குட்டியருக்கென்ற குட்டிக்கார்' என்பார்கள். மாணவர்களை கண்ணாடியை நிமிர்த்தி பார்க்கும் கடும் பார்வை. கல்வியிலும் சரி, ஒழுக்கத்திலும் சரி பிறழவிடாது உயர வழிவகுத்தது.

இங்கு நடந்த மாணவர் மற்றும் சமய மன்றச் செயற்பாடுகள் எம்மை நானாவித செயற்பாடுகளிலும், புறக்கிரியைகளிலும் மேலோங்கவைத்தது. அக்காலத்தில் கல்விக் கேற்ற அழகியல் உணர்வு மூலம், உள அமைதியைத் தந்தது. கல்லூரிச் செயற்பாடுகள் கல்வியுடன் உடல் உறுதியையும் உள அமைதியையும், வழங்கின.

அத்துடன் நல்ல கல்விப் பெறுமானத்தையும் விழுமியங்களையும் எம் மாணவர்கள் மீது விதைத்தது. அவ்வை அன்னையின் "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது "பிச்சை எடுத்தும் கற்பன கல்" என்ற கல்லூரி மகுட வாக்கியம் ஆகியது. அதற்கேற்ப கஷ்டத்திலும் அக்கிராம மக்களை கல்வியில் உயர்த்திய வட்டு இந்துக் கல்லூரியின் அன்னையின் மகத்தான பணி போற்றுதற்குரியது.

**கிராமிய உழைப்புடன் கூடிய உயர்தரக் கல்வி**

சிறந்த உயர் வகுப்பு பெறுபேற்றையும் ஆசிரியர் குழாமையும் கொண்ட யாழ் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் (1960ம் ஆண்டு தை மாதம் 04ம் திகதி) உயர்படிப்பிற்காக பிரவேசித்தேன். சிரேஷ்ட

உயர்தர பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சைக்கும், பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்கும் எம்மைத் தயார்படுத்த வேண்டிய போட்டிப் பரீட்சை இதுவாகும். இப்பரீட்சைக்குரிய இறுதித்தேர்வு 1961 டிசம்பர் மாதமாகும். இதனைக் கருத்தில் கொண்டு அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களும் எமது கலை வகுப்பு ஆசிரியர்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தனர். எனது புகுமுகத்தேர்வுப் பாடங்களாக தமிழ், அரசியல்; இந்திய வரலாறு, இலங்கை வரலாறு ஆகிய பாடங்களை தெரிவு செய்து கொண்டேன். இலங்கை வரலாற்றை திரு.C.தியாகராசா ஆசிரியரும் (முன்னை நாள் யாழ் D.E.O) அரசியலை திரு.கிருஷ்ணமூர்த்தி ஆசிரியரும் இந்திய வரலாற்றை திரு.வி.பொன்னம்பலம் ஆசிரியரும் தமிழ்ப் பாடத்தை பல ஆசிரியர்களும் துறைபோகக் கற்பித்தனர். தமிழ் இலக்கணத்தை திரு.வ.நடராசா ஆசிரியரும், இலக்கிய வரலாறு பாடநூல்களை வித்துவான் சி.ஆறுமுகம் அவர்களும், திருக்குறள் கிருஷ்ணன் தூது ஆகிய நூல்களை திரு.விசுவநாதக்குருக்களும், தமிழ் விசேட பாடத்தை பாலசுந்தரக் குருக்களும் கற்பித்தனர். இவர்களின் கற்பித்தலினால் தமிழ் பாடத்துறையில் மாணவர்களிடத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. தமிழ் மொழியில் ஆழமாகவும், அகலமாகவும் நாம் யாவரும் துறைபோகக் கற்றோம். வித்துவான் ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள் "பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மலைச்சாரலில் மங்கைகளுடன் கைகோத்து உலாவுவதை நினைத்து படியுங்கடா படித்துப் படித்து குவியுங்கடா என்று கூறி பருவத்திற்கேற்ப ஊக்குவித்தார்."

நாம் பேராதனைப் பல்கலைக்கழக புகுமுகத் தேர்வுப் பரீட்சைக்கு ஸ்கந்தாவில் படித்த இரண்டு வருடங்களும் பாடசாலையில் 4ம் வகுப்பில் இருந்து 9ம் வகுப்புவரை காலைப் பாடசாலையும் 10ம் வகுப்பில் இருந்து 12ம் வகுப்புவரை மாலைப்பாடசாலையும் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒழுங்கு பாடசாலையில் இட நெருக்கடி, தளபாடம் பற்றாக்குறையை சமாளிக்க அமரர் ஒறேற்றர் சுப்பிறமணிய அதிபரால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்காகும். அவர் அவ்வாறு மேற் கொள்ளப்பட்ட ஒழுங்கு அக்காலத்தில் ஏழ்மையுடன் கல்வி கற்ற ஏழை மாணவர்களுக்கு பெரும் வாய்ப்பாக இருந்தது. காலையில் 4மணிக்கு எழுந்து 6மணி வரைபடித்தேன். பின்பு



ஆறுமணியில் இருந்து 10மணிவரை எமது தாவளை தோட்டக் காணியில் தோட்டம் செய்ய வாய்ப்பளித்தது. அவ்வருமானமே எமது குடும்ப வருமானமாக அமைந்தது. தாயார் அவற்றை சந்தைப்படுத்தி வருமானம் பெறுவார்.

**காலையில் தோட்ட வேலை**

வயலில் அதர் எடுத்து பழஓலை தாட்டு பூசணிக்கொடி நாட்டுவோம். அதர் எடுத்து ஓலைபோட்டு தாக்கும் மண்ணில் மேல் வெண்காயம் நடுவோம். பூசணி, வெங்காயம் பெருமளவு லொறிக்கு ஏற்றப்பட்டது. இவற்றுடன் உள்ளூர் சந்தைப்படுத்த கத்தரி, வெண்டி, பாவற்காய், பிஞ்சுமிளகாய், புடலங்காய் ஆதி யனவும் நாட்டப் பெற்றது.

இப் பயிர்வகைகளுக்கு தண்ணீர் இறைப்பதும் ஒரு கலை. கிணற்றில் இருந்து பட்டை மூலம் தண்ணீர் அள்ளப்படும். தண்ணீர் கோலி வெளியே ஊற்ற நாம் துலா மிதிப்போம். கூடுதலாக அத்தான் திரு.இ.துரைராசசிங்கம் (கோண்டாவில் புகையிரத நிலையத்தில் செக்கராக Checker இருந்தவர்) பட்டை பிடிப்பார். நான் துலா மிதிப்பேன். சமநிலைக்கு முன்னுக்கு சென்று பின்னுக்கு வருவது பெரிய கலையும், உடற்பயிற்சியும். உடலில் வேர்த்து தண்ணீராக வடியும். உடல் உறுதி பெற்றது. கையில் இன்றும் தோட்டம் செய்து மரத்த அடையாளம் உண்டு. இம் மரத்த கை தான் படிப்பித்த காலத்தில் மாணவர்களின் முதுகை பதம்பார்த்தது. (நவீன சிறுவர் நேயப் பாடசாலை அன்பர்கள் மன்னிக்க).

இக்கல்வி கற்ற காலத்தில் எனது ஒன்றுவிட்ட அண்ணர் திரு.நா.கணபதிப்பிள்ளை உதவி ஞாலத்திலும் மாணப் பெரிது. அவர் தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர். தனது வருமானத்தில் இருந்து க.பொ.த உயர் வகுப்புக்குரிய குறிப்பிட்ட நூல்களை வாங்கி உதவினார். அந்த ஞாபகமாக பரிமேலழகரது உரை கொண்ட திருக்குறளும், திருவாசகம், கிருஷ்ணன் தூது, பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்களது இலக்கிய வரலாறு: மாமா திரு.த.முத்துலிங்கம் ஆசிரியர் தந்த நன்னூற் காண்டிய உரை என்பன இன்றும் என்னால் பொன் போல் போற்றி வைத்திருக்கப்படுகின்றன. இக் காலத்தில் என்க்கு விசேட தமிழுக்கு

(கட்டுரை) முதற் பரிசு கிடைத்த நூலான 'திருவள்ளுவமும் வாழ்க்கை விளக்கமும்' என்ற நூலை போற்றிவைத்திருக்க முடியாது போய்விட்டது.

**கிராமியத்தில் மண்வீடு**

எல்லோரும் பொருளாதார வசதிபடைத்த நிலையில் எல்லாமே கல்வீடு. எங்கள் வீடு யாம் பிறந்ததும் மண்வீடு. பாதுகாப்பான மண் சுவருடன் ஒரே ஒரு அறை தடிப்பான பலகையாலான கதவு. யன்னலே இல்லை. பாதுகாப்பிற்காக. சுவர்கள் மெழுகியிருந்தாலும் இடைக்கிடை கறையான்புத்து.

கதவுக்கு முன்னால் ஒரு விறாந்தை அது ஓர் திறந்த விறாந்தை. அம்மா, அக்கா, நான், தம்பி யாவரும் சேர்ந்து அதில்தான் படுப்போம். பக்கத்து வீட்டு அமுதமாமி தங்கள் வீட்டில் பேய் சத்தம் போடுது என்று பிள்ளைகளும் தானும் எங்களுடன் வந்து சேர்ந்து உறங்குவா.

வீட்டில் கூரை ஓலை பெரிய வீடாக இருந்த படியால் வேய்வதற்கு பனை ஓலை கூடுதலாகத் தேவை வீட்டில் வளர்ந்த பனை ஓலையை வெட்டுவதுடன் சித்தங்கேணிக்கு அங்கால் வடலிஅடைப்பிலும் தாவளையிலும் கூடுதலான பனைஓலை வெட்டிக் கொண்டுவரப்படும். ஓலை வெட்டும் பொழுது உறவினர்களுக்கெல்லாம் கூறி அழைத்துச் செல்வோம். பனை ஓலை வெட்டிச் சரிக்கும் பொழுது ஓ என்று சத்தமிட்டு கீழே விழும். கீழே முட்புதரும் இருக்கும். அவற்றுள் பனங்குருத்து தேடி எடுப்பது ஓர் ஆனந்தம் அவற்றைக் கிழித்துச் சென்று ஓலையை கூட்டி எடுத்து வருவோம். வரும் பொழுது கையை கருக்குமட்டை பதம் பார்க்கும். ஓலை மிதித்தல் ஒரு கலை. நீட்டுக்கு வெளியான இடத்தில் றெயில் தண்டவாளம் மாதிரி ஓலை மிதித்து படியவைப்பர். காலையில் வெட்டி படியவைத்த ஓலையை பின்னேரம் 2 மணிக்கு கருக்கு மட்டை வேறு ஓலை வேறாக வெட்டிக் கழிப்பர்.

கழித்த ஓலைகளை இழுத்துவந்து இரட்டை மாட்டு வண்டியில் ஏற்ற எடுத்துக் கொடுப்போம். வண்டியில் ஏற்றி வந்து



வீட்டு ஒழுங்கையில் நீண்ட மரத்தை வண்டியால் இழுத்து விழுத்திய மாதிரி பறித்துவிடுவர். நாம் எல்லோரும் ஒழுங்கையால் படபட என்று இழுத்து ஓடுவோம். இழுத்துச் செல்லும் பொழுதும் சின்னஞ் சிறுசுகளுக்கிடையே ஓர் போட்டி அப்பொழுது வெட்டிய கருக்கு வெட்டு இன்றும் என் உள்ளங்காலில் உள்ளது.

வீட்டு முற்றத்தில் ஓலை வெட்டியவர் கரம்போடுவார். கரம் சுற்றி, சுற்றி வட்டமாக அடுக்கப்படும். அவ்வாறு அடுக்கிய ஓலை 10, 15 நாட்கள் மேலே கருக்கு மட்டைகளை குவித்து படியவைக்கப்படும்.

10,15 நாட்கள் கழித்து விட்டுகூரை பிடுங்கப்படும். பிடுங்குவதற்குமுன்பு கீழே இருந்து கட்டிய நார் கட்டை கொக்கச் சத்தகத்தால் அறுத்து விடுவோம். பழை ஓலை வீட்டுக் கூரையில் இருந்து பிடுங்கும் பொழுது படார் படார் என கீழே கூரையால் விழும். அவற்றின் மத்தியில் எலிப்பிள்ளையார் ஓடி ஓடி ஒழிப்பார்கள். கடைசி பழ ஓலைக் கூரையில் ஒழித்து விடுவர். அவற்றை இழுத்து விழுத்தி எலியைத் துரத்தித் துரத்தி அடிப்பதிலும் ஆனந்தம்.

வடலி ஓலையை கிழித்து வெறும் கூரையைதூசு தட்டுவோம். அடுத்தநாள் கூரைவேயும் கிழவனார் வர கரத்தை மட்டைகளை அகற்றி வெறுமையாக்கி ஓலையை இழுத்து, இழுத்து கூரைக்கு வேய எறிவதில் ஆனந்தம். காலையில் தொடங்கிய வீட்டுவேய்தல் பி.ப. 2மணியளவில் முகடு கட்டி முடிக்கப்படும்.

ஓலை வெட்டு, கூரைவேய்தலில் எல்லோரும் சேர்ந்து சாப்பிடுதல் ஆனந்தம் கூட்டு கூட்டாக ஒவ்வொருதர் வீட்டிலும் சாப்பாடு. ஓலை வீடு அதுவும் மண்வீடு வாழ்வதற்கு ஆனந்தம் நிலம் மண் அதுவும் சாணத்தால் மெழுகிய திண்ணை. முருக்கம் இலைச்சாற்றை மாட்டுச் சாணத்துடன் சேர்த்து மெழுகிவிடுவர். படுக்க உடலுக்கு ஜில் என்று குளிர்தரும். விரத நாட்களில் அம்மா சாணம் போட்டு மெழுகிவிடுவா. சுத்தம் ஆனந்தம்.

1961 டிசம்பர் பல்கலைக்கழகம் புது முகத்தேர்வுப் போட்டிப் பரீட்சைக்கு படிக்க சித்திரைமாதத்தில் தர்மபுத்திரன் நாட்டுக் கூத்து

ஆடி முடித்ததுடன் திட்டம் போட்டேன். எங்கள் வீட்டுக்கு கிழக்குச் சுவருக்கு அருகில் பனைமரத்தில் இருந்து பூவரசந்தடி வைத்து கட்டி பத்தியாக்கினோம். $15^{I} \times 10^{I}$ சதுரமான அறையானது. கீழே மண்சுவர் மேலே பனை மட்டை யால் வரிந்த தட்டி நாலு பக்கமும். முன்னே பனம் மட்டையால் ஆன கதவு. உள்ளே சாக்கால் மறைக்கப்பட்டது. தெற்குப் பக்கத்தில் சிறிய மட்டையால் ஆன யன்னல்.

படிப்பதற்கு மேசை சண்லைற் பெட்டியால் மரக்கால் வைத்து அடித்து தயாரிக்கப்பட்டது. இருப்பதற்கு அப்பா பாவித்த பழம் கதிரை. ஆனால் நீண்ட நேரம் இரவில் படிக்க சில நேரம் உரல் கதிரையாக மாற்றப்படும். மேசையில் மண்ணெண்ணெய் அரிக்கன்லாம்பு. அந்தலாம்பும் அம்மம்மா தன் பேரன் நல்லாக படிக்க வாங்கித்தந்தது. அது இரவு 6 மணியானதும் ஏற்றப்பட்டு இரவு 11மணிக்கு அணைக்கப்படும்.

மூன்று மாத படிப்பு 11 மணிக்கு படுத்து அதிகாலை 4மணிக்கு எழுதல் அம்மா 9 மணிக்கு சுடுதண்ணிப் போத்தலில் தேனீர் கொண்டு வந்து தருவார். "மேனே படித்தது போதும் படு என்பா'' ஆனால் ஒரே முறையில் பல்கலைக்கழகத்திற்கு செல்லவேண்டுமென்ற ஆர்வம், உத்வேகம் விடவில்லை. மார்கழி மாதம் பரீட்சை ஐப்பசி, கார்த்திகை கடும் குளிரில் போர்வையால் தலை, காது மூடி படித்தேன். இங்கு காலையில் எழும்புவதற்கு அம்மம்மா வாங்கித்தந்த சிமித் எலாம் மணிக்கூடு இன்றும் யாழ் வீட்டில் என் மேசையில் பெறுமானப் பொருளாக பேணப்படுகின்றது.

ஆச்சி (அம்மம்மா) ஏழுவயதில் கையில் பிடித்து கூட்டிச் சென்று சிவன் கோவிலில் தீட்சை வைப்பித்தா ஆச்சி (அம்மம்மா) சிறுவயதிலேயே சமய ஞானம் ஊட்டினர் ஐயா. சின்னவயதில் இறந்ததாலும் தனது மகனாரின் மகள் சொந்த மச்சாளை எனக்கு சாணக்கூறை போட்டு படிக்க வைத்ததும் அவவின் ஆசை ஆனால் யான் சொந்த மச்சாளை திருமணம் செய்ய வில்லை.

அம்மா ஆறு மணிக்கு வீபூதி பூசி கடவுளை கும்பிட்டு மேசையில் இருக்கவேண்டும் என்றதில் மிகவும் கண்டிப்பாக



இருந்தா. வீட்டுக்கு அருகில் சிவன்கோவில் மாலைப் பூசை 5 மணிக்கு முடிந்தது. 12 - 18இடைப்பட்ட வயதில் சிறியபெடியங்கள் எல்லாம் நிலத்தில் இருந்து சரத்தால் போத்துக்கொண்டிருந்து வம்பளப்பதில் ஆனந்தம் ஆறு மணிக்கே சில காலங்களில் இருட்டடித்து விடும். வீட்டுக்கு உரிய நேரம் வரவில்லையென்றால் அம்மா தீப்பெட்டி கொண்டு வந்து விடுவா.

மெது மெதுவாக வந்து சத்தம் போடாமல் பதுங்கிப், பதுங்கி வந்து நெருப்புப் பெட்டியில் குச்சியை வைத்து தட்டிவெளிச்சத்தை எனது முகத்தில் பிடித்து கையில் பிடித்து விடுவா. மற்றதுகள் அடிவிழப்போகுது என்று பறந்து ஓடிவிடுவாங்கள். இவ்வாறு தாயார் கல்வியில் கவனமாக இருந்தா அது தெய்வம்.

பல்கலைக்கழகம் பிரவேசித்து முதல்தரம் புகையிரத நிலையத்தில் எல்லா மாணவர்களும் றெயிலில் ஏற நின்று கொண்டிருந்தோம். அம்மா அனுப்ப வந்தவர். எல்லாரது கையையும் பார்த்தால் கைவாச். எனது கையில் மட்டும் இல்லை. அப்பொழுது கூறினா அடுத்த முறை வரும்பொழுது வாங்கித்தருவேன் என்றார். வந்த பொழுது வீட்டில் ஐயாவைத்து வளர்ந்த தேசிக்காய் மரத்தில் விழுந்த தேசிக்காய்களை பொறுக்கி எடுத்து பணம் சேர்த்து வைத்திருந்தார்.

150ரூபா தந்தார் 09-1-1963ம் ஆண்டு றிசிட் இல:- 00429 1ம் வருடம் 3ம் தவணை வந்ததும் வராததுமாக யாழ் சாம்பசிவம் கடையில் 132 ரூபாவுக்கு ரயிற்றஸ் கைவாச் வாங்கித்தந்தார். அது பூரணை நாளில் விரதம் பிடித்து எனது கையில் கட்டப்பட்டு வருகின்றது. 46 வருடங்கள் ஆகியும் அவரது ஞாபகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அது ஓர் பெறுமதியான ஞாபகச் சின்னம் *(Sentimental Value)* இவ்வளவு காலமும் பேணிப்பாதுகாப்பது அம்மாவை நினைத்துக் கொள்வதற்கே. இவற்றில் ஆச்சரியம் இவ்வளவு காலமாக அந்தவாச்சை பல இடங்கள் திரிந்தும், அலைந்தும், வேலைபார்த்தும் அவற்றை தொலைக்காது பேணிப்பாதுகாத்து வருவது; இவையே அக்கால பாரம்பரிய விழுமியம்.

இச் சூழலில் நாம் 12பேர் கலைத்துறையில் எங்கள் வகுப்பில்

இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோம். அனைவருமே முதல் முறையில் தெரிவானவர்கள். எங்களுடன் மருத்துவம் பல்மருத்துவம் பொறியியல், விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளில் 64பேர் எமது ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இருந்து தெரிவானோம். இன்னும் ஒரு சிறப்பு. ஓறேற்றர் சுப்பிறமணியம் அதிபர் அவர்கள் ஓய்வு பெற்ற ஆண்டாக இருந்தமை. தனது ஓய்வு பெறும் காலத்தில் இவ்வாறு 64பேர் தெரிவானமைக்கு அவர்கள் எல்லோருக்கும் தனது செலவில் மதிய போசனம் அளித்ததுடன் குழுப் போட்டோவும் எடுத்து ஞாபகமூட்டலாகத் தந்தார்கள்.

இப்பெறுபேற்றை அடுத்து நாம் அனைவரும் 1962ம் ஆண்டு யூன் மாதம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோம். இத் தெரிவானது இலங்கை *Daily News* பத்திரிகையில் பெயரைத்தாங்கி வந்தது. அப் பெயர் பத்திரிகையில் வெளிவந்த அன்று முதன் முறையாக ஒரே முறையில் முதல் அமர்வில் தெரிவானவை மனத்திற்கு மட்டில்லா மகிழ்ச்சி. இந்த நாளில் யான் குடும்ப கஷ்ட நிலையில் வயலில் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த பொழுது தெரிவுப் பெறுபேற்றை நண்பர்கள் ஓடோடி வந்து கூறினர். அதைக்கேட்ட மகிழ்ச்சியில் உடம்பை வயல்வெளிக் கிணற்றில் கழுவிவிட்டு ஓடோடிச் சென்று அம்மாவிற்கு தெரியப்படுத்தினேன். அம்மா பூரண மகிழ்ச்சியால் என்னை கட்டிப்பிடித்து ஆரத்தழுவினார். எனது வாழ்வில் திருப்புமுனை ஆரம்பமானது. பல்கலைக்கழகம் பேராதனை. இங்கு தெரிவு வயது கீழ் மட்டம் 18ஆக இருந்தது. எனக்கு அப்பொழுது வயது 18கீழ் மட்ட வயதில் தெரிவானது பிற்கால உயர்வுக்கு துணையாக அமைந்தது. பல்கலைக்கழகப் பிரவேசம் வாழ்க்கையில் ஒரு திருப்பு மையமாகும்.





உலா 03

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

# பல்கலைக்கழகமும் கூத்தும்

பல்கலைக்கழகத்தில் கலைமாணி முதல் நிலை பகுதி Iல் கற்றோம். எனது புகுமுகத்திகதி 25.06.1962. எனது பதிவெண் 2472/1962. எனக்கு அளிக்கப்பட்ட வதிவிடம் விஜயவர்த்தனா மண்டபம். இம் மண்டபம் பல்கலைக் கழக நுழைவாசலில் றோட்டுக்கு அருகாமையில் உள்ளது. 4ம் மண்டபம் அறை இலக்கம் 236 இம்மண்டபத்தில் எனது அறை வலது பக்கத்தில் அமைந்திருக்கின்றது. (மூத்தபுதல்வி திருமதி நரேந்திரன் சுகந்தி விவசாய படிப்பிற்கு தெரிவானகாலத்தில் 4 வருடங்கள் அங்கு தங்கியிருந்தார்.) யான் முதல் நிலை வகுப்பில் கற்ற பாடங்கள் பொருளியல், வரலாறு, தமிழ். முதல் நிலை வகுப்பில் சித்தியெய்தி IIம் நிலை வகுப்பில் 1963ல் பிரவேசித்து, 1964ல் அவற்றில் கற்று முடித்து 1965ம் ஆண்டு யூலைமாதம் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தி கலைமாணிப் பட்டம் பெற்று வெளியேறினேன்.

இரண்டாம் ஆண்டு அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நெறியாள்கையில் "கர்ணன் போர்" நாடகத்தில் அர்ச்சுணன் பாத்திரம் ஏற்று நடித்தேன். எனது தேரோட்டியாக பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் நடித்தார்கள். கர்ணனாக பேராசிரியர் மௌனகுரு அவர்கள் நடித்தார்கள்.

ஜனவரி மாதம் 1964ம் ஆண்டு நடாத்தப்பட்ட இந்து மாணவர் மன்றத்தில் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டு செயலாளராக 1965ம் ஆண்டு மார்ச் மாதம்

வரை பதவி வகித்தேன். இப்பதவிக்காலத்தில் பெருந்தலைவராக பேராசிரியர் நடராசா (சட்டபீடம்) அவர்களும் பெரும் பொருளாளராக பேராசிரியர் V.செல்வநாயகம் அவர்களும் இருந்தனர். செயற்குழுவில் இன்றைய பேராசிரியர் சபாஜெயராசா, தகவுபெற்ற ஓய்வுரிமைபெற்ற கல்விஅமைச்சு முன்னாள் செயலாளர் K.பரமேஸ்வரன், திருமதி.பத்தினி அம்மா, தலைவராக திரு.நவரட்ணராசா இவர்களுடன் பொறியியற்பீட பேராசிரியர் கனகசபாபதி அவர்களும் சேர்ந்து 1965ம் ஆண்டு தைபூசத்திருநாள் அன்று தற்போதைய பேராதனை குறிஞ்சிக்குமரன் ஆலயத்தின் இடத்தை பொறுப்பேற்று ஆலய அமைவிற்கு மண் எடுத்தோம். ஆலயத்திற்கான அத்திவாரம் 1966ம் ஆண்டு தை பூசத்திருநாளில் இடப்பட்டது. அந்த தைப்பூசத்திருநாளில் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் சங்காபிஷேமாக வருடம் தோறும் கொண்டாடப்படுகின்றது. பல்கலைக்கழக முதல் நிலை வகுப்பில் தமிழ் இலக்கணம் பேராசிரியர் சு.வித்தியானந்தன், அவர்களாலும் தமிழ் இலக்கிய வரலாறு பேராசிரியர் தனஞ்செயராசசிங்கத்தாலும் குறிப்பிட்ட பாட நூல்கள் பேராசிரியர் அ.சதாசிவம் அவர்களாலும் கற்பிக்கப்பட்டன.

பேராசிரியர் க.இந்திரபாலா, (இலங்கை வரலாற்றை) பேராசிரியர் சிவசாமி இந்திய வரலாற்றையும் கற்பித்தனர். பொருளியலை பேராசிரியர் ந.பாலகிருஷ்ணன் அவர்கள் அரசியலை திரு.ஈஸ்வரதாசன் அவர்களும் கற்பித்தனர். அடுத்து IIம் நிலையிலும் இறுதித் தேர்விலும் இவர்களுடன் பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, வரலாற்றை பேராசிரியர் பத்மநாதனும் பொருளியலை ரோனி இராஜரட்ணம், யூனியர் பாலகிருஷ்ணன் ஆகியோரும் கற்பித்தனர்.

பல்கலைக்கழக வாழ்வில் இனிதே கற்று தேர்ச்சி அடைந்த நான் 1966ம் ஆண்டு சனவரிமாதம் நாவலர் மண்டபத்தில் தமிழ் பல்கலைக்கழக இயக்கம் நடாத்திய கலைமாணி முதல் நிலை வகுப்பிற்கு பொருளியல் விரிவுரையாற்றவும். க.பொ.த.உயர் வகுப்பில் தமிழும், அரசியலும், கற்பிக்க நியமனம் பெற்றேன். இந்நியமனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொழுது அரசினர் ஆசிரிய நியமனத்திற்கு அனுப்பிய விண்ணப்பத்திற்கு ஏற்ப 7.9.1966ம் ஆண்டு முதல் மாத்தறை திக்குவெல்லை மின்ஹாத் மகாவித்தியாலயத்தில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றேன்.







# ஆசிரிய சேவை

திக்குவெல்லை என்ற இடத்தை யான் கேட்டதும் இல்லை. பார்த்ததும் இல்லை. இலங்கைப் படத்தில் தேவுந்தர முனையில் கதிர்காமம் அம்பாந்தோட்டை தங்காலை, திக்வெல்லை என அடையாளம் பிடித்தேன். என் அம்மாவிற்கு கடிதம் எழுதினேன். 'அது சிங்கள இடம் செல்ல வேண்டாம்' என்று பதில் வந்தது. அம்மாவிற்கு இதை விட்டால் எமது வீட்டு வறுமையைப் போக்க முடியாது; இது ஓர் அரச நியமனம்; ஏதோ இறைவன் செயல் என்று முடிவுகட்டி தாயாருக்கு விளக்கமளித்து அங்கு சென்று கடமையாற்றினேன்.

அங்கு சென்ற பொழுது திரு.ஏ.தங்கராசா, திரு ஜோதிரவி நாலரை வருடங்கள் கடமையாற்றி எமது கடமையேற்புக்கு காத்து நின்றனர் நாம் கடமையேற்றதும் அவர்கள் இருவரும் அவ்விடத்தை விட்டு தமது சொந்த இடமாகிய யாழ்ப்பாணத்திற்கு மாறினர்.

இங்கு கடமையேற்ற பொழுது குறிப்பிட்ட கால எல்லையில் கடமையாற்றினால் இடமாற்றம் கிடைக்குமென உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் நாலரை வருட சேவையின் பின் இடமாற்றம் கிடைத்தது. இங்கிருந்த காலத்தில் (தென்மாகாணம் முழு சிங்கள பிரதேசமாக இருந்தது) சிங்கள மொழியை கற்பதற்கு பயன்படுத்தியிருந்தேன். வெவுறுகல பன்சலவில் பௌத்த குருவானவரிடம் சனி, ஞாயிறு நாட்களில் சிங்கள மொழியை முறையாகக் கற்றுவந்தேன் அதே நேரத்தில் கோந்தெனிய என்ற இடத்தில் பண்டா என்ற வீட்டில் இருந்த போடிங்கில்

(தங்குமிடத்தில்) தங்கியிருந்து சிங்கள மொழியை மேலும் நாளாந்தபாவனைக்குப் பயன்படுத்தினேன். இக் காலத்தில் "தினமின" என்ற சிங்களபத்திரிகையை வாசித்ததுடன் 'கம்பெறளிய' 'ஹொலுகதவத்த' என்ற இரு நாவல்களை வாசித்து வந்தேன். இது சிங்கள மொழி விருத்திக்கு உதவியது. இம்மொழி விருத்தியும் எனது கல்வி ரீதியான *(Academice)* வாண்மை *(Professional)* ரீதியான உயர்வுடன் இன்று வரை (67வயதுவரை) தொழில்புரிய வைத்துள்ளது.

ஆசிரியராக 7.9.1966 தொடக்கம் 1970வரை கடமையாற்றிய காலம் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுத்தந்தது. யான் கற்பித்த பாடநெறிகள் க.பொ.த உயர்தர வகுப்பில் தமிழும், அரசியலுமாகும் க.பொ.த சாதாரணதர வகுப்பில் தமிழ் மொழியும் குடியியலுமாகும். க.பொ.த சாதாரண வகுப்பில் தமிழ்மொழியை கற்பித்த காலத்தில் மாணவர்கள் உச்சரிப்பது எனக்கு விளங்காமல் இருந்தது. அவர்களுக்கு யான் உச்சரிப்பது விளங்காமல் இருந்தது. 'சிப்பி' என்று எழுதிய பொழுது அவர்கள் சிரித்தார்கள் சக ஆசிரியர்களிடம் ஏன் சிரித்தார்கள் என்று கேட்ட பொழுது அது பெண்குறியை குறிக்கும் வழக்கம் அவ்வூரில் உண்டென்றார்கள் ஆதலால் வகுப்பில் அதை உச்சரிக்க வேண்டாம். என நண்பன் ஜனாப்ஜலீல் ஹாஜியார் கூறினார். அதேபோல அவ்வூருக்கு சொந்தமான உச்சரிப்பான 'எங்கே பெயித்திட்டுவாறய்' (போய்விட்டு வாறீங்கள்) 'என்னத்தியம் செல்லிய' (எதைச் சொன்னீங்கள்) 'அது ஈக்கா'(அது இருக்கின்றதா) 'வாப்பா கண்டால் திண்டிடுவார்' (அப்பா பார்த்தால் அடித்திடுவார்) என்ற வசனங்களை பழக வேண்டிய இடர்ப்பாடு எனக்கு இருந்தது. பிரதானமாக யானும் எனது நண்பர் திரு.செ.கமலாகரன் (இணுவில்) விஞ்ஞான ஆசிரியரும் பின்னேரங்களில் உலாவுவது வழக்கம் அவ்வாறு செல்லும் பொழுது ஒரு உம்மா (அம்மா) கூறினார். 'எடே கொல்லையில் பேண்டுடிடாடே வாப்பா கண்டால் திண்டுடிடுவாரடா' என்ற சொல் (அப்பா பார்த்தால் அடித்துப் போடுவார்) என்ற பதம் இன்றும் நண்பர் காணும் பொழுது சொல்லிச் சொல்லிச் சிரிப்பவையாகும். அதே போல அம்மா ஒருவர் ரிபின் கரியரில் சாப்பாடு கொண்டு வந்து தரும்பொழுது 'இன்னாசாப்பாடு' 'இந்தாருங்கோ சாப்பாடு' என்று கூறுவதும் எம்மால் நினைவு கூரும் வசனங்களாகும்.



நண்பர் கமலாகரன் (இணுவில்) சிங்கள நேர் முகப் பரீட்சைக்கு செல்லும் பொழுது சில வசனங்களை பாடமாக்க சொல்லிக் கொடுத்தோம். அவை 'ஒவகே வயச கீயத?' (உங்கள் வயது எத்தனை?) 'மகே வயச விசிப்பகய்' (எனது வயது இருபத்தைந்து) ஆனால் அவர் நேர்முகத் தேர்வில் தேர்வாளர்களை சிரிக்க வைக்க கூறிய வசனம் 'மகே வயச சத்தவிசிபகய்' (எனது வயது இருபத்தைந்து சதம்) அதே போல 'ஒவ அத உதய மொணவத ஹாவாய்' (இன்று காலை நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள்) 'மம அத உதய புட்டுவ' (கதிரை) ஹாவய (நான் இன்று காலை புட்டு சாப்பிட்டேன். அவர் தேர்வாளர்களை சிரிக்க வைக்க கூறியது. 'மம அத உதய புட்டுவ காவாய்; (நான் இன்று காலை கதிரை சாப்பிட்டேன்.) இவற்றைக் கேட்ட தேர்வாளர்கள் குலுங்கக் குலுங்கச் சிரித்துவிட்டு வாய் மொழி பரீட்சையில் 'அனுதாப தோரணையில் அவர் முயற்சிக்கின்றார்' என அவரது முயற்சியை பாராட்டி சித்தியெய்தும் புள்ளியை வழங்கி சித்தியெய்த வைத்தனர்.

எனது ஆரம்ப கற்பித்தற்காலம் திக்குவல்லை மின்ஹாத் மகாவித்தியாலம் ஒரு பொற்காலம் என்று கூறுலாம். இங்குள்ள மாணவர்கள் கல்வியை கற்பதில் ஆர்வமாக இருந்தார்கள் நாம் தங்களுக்கு அர்ப்பணிப்புடன் கற்பிக்கின்றேன் என அறிந்து மிகவும் கீழ்ப்படிவாக நடந்து கொண்டார்கள். எங்களிடம் மாலையில் தேடிவந்து 'என்னசேர் செய்ய வேண்டும்?; என கேட்டு தேநீர் வைப்பது, சாப்பாடு செய்வது போன்ற தொண்டுகளைச் செய்து அவை முடிய கற்றுச் செல்வார்கள் எல்லாமாணவர்களும் ஆண்களாக இருந்தபடியால் சனி, ஞாயிறு, காலை, மாலை, பகல் எனப் பாராது குருசீட பரம்பரையைப் பேணி பணி செய்து கற்றுத்தேறினார்கள்.

அந்த அடிப்படையில் எம்மிடம் கற்றுத்தேறி பல்கலைக்கழகம் சென்றவர்கள் திக்குவல்லை இனாயா திக்குவெல்லை அத்கார்திக்குவல்லை *P.M.*முகமட் போன்றவர்கள் ஜனாப் இனாயத்துல்லா ஜனாப் ஹிதாயத்துல்லா, ஜனாப் ஸப்பான் ஜனாப் அத்கர் போன்றவர்கள் இலக்கணத்தை இலக்கியத்தை ஆர்வத்துடன் மொழி வழிக்கற்றலுக்கேற்ப ஆர்வத்துடன் கற்றார்கள். சூத்திரங்களை பிழைவிடாது திறம்படக்கற்றார்கள். மூவாயிரம்

சிங்கள மொழி பேசுவோர் கொண்ட சிங்களக் கிராமத்தில் முன்னூறு குடும்பங்களைக் கொண்ட தமிழ்மொழி பேசும் முஸ்லீம் மாணவர்கள் தமிழ் மொழியைப் படித்து க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஏ பிரிவில் சித்தியெய்தி பல்கலைக் கழகத்திற்கு 7 மாணவர்களில் 3 மாணவர்கள் தெரிவானார்கள்.

பத்திரிகையில் பெறுபேறுவரும் காலம் அக்காலம் பத்திரிகையைப் பிரட்டி சந்தோஷித்துக் கொண்டிருந்த பொழுது மாணவர்கள் வரிசையாக வட்டிலபப்பத்தையும் ஆளுக்கொரு சேட்டும் கொண்டு வந்து 'சேர் இது எங்கள் நன்றி தெரிவிக்கும் பணி தயவு செய்து ஏசாமல் சாப்பிடுங்கோ, உடுத்திடுங்கோ' என்று கூறிய அந்த இன்முகக் காட்சி என்றும் மறக்க முடியாதவை.

இவர்கள் யாவரும் யான் கொழும்புக்கு வந்த காலத்தில் இருந்து இன்றும் என்னைத் தேடிவந்து சந்தித்து குசலம் விசாரித்து தங்கள் அன்பையும் நன்றியையும் வெளிக்காட்டுவர். இஸ்லாமிய பண்பாட்டுக் கோலங்கள் எம்மால் மறக்க முடியாதவை: போற்ற வேண்டியவை.

ஜனாப் *P.M.*முகமட் அவர்கள் ஆசிரியப் பணியிலும் அதிபர் தரம் ஒன்றிலும் கடமையாற்றியமையினால் நான் தேசிய கல்வி நிறுவகத்திலும் கொழும்பின் பல இடங்களிலும் நடாத்தும் கல்விகள அமர்வு *(Work Shop)* கல்விக் கலந்துரையாடல் *(Seminar)* ஆகியவற்றில் பங்கேற்றுச் செல்வார். எனது பணிபற்றியும் அதன் பெறுமானம் பற்றியும் கடிதம் எழுதி அனுப்பியிருந்தார்கள்.

எல்லா மாணவர்களையும் விட இவரது செயற்பாடு ஈடுபாடு வித்தியாசமாக என்னுடன் இருந்தமைக்கு ஒரு காரணம் இருந்தது. இவர் யான் ஆரம்பத்தில் தந்தையாரை இழந்து படிக்க கஷ்டப் பட்ட காலத்தில் எனது ஒன்று விட்ட சகோதரர் எனக்கு புத்தகங்கள் (தமிழ் நூல்கள்) வாங்கி உதவியது போல இவருக்கும் நூல்கள் வாங்கி உதவியிருந்தேன். இவர் ஒரு நாள் என்னிடம் கூறினார். எனது குடும்ப வறுமைநிலை படிக்க இடமளிக்காதுள்ளது சேர் யான் கடைக்கு சென்று உழைக்க வேண்டும் என்றார் யான் அவருக்குக் கூறினேன். 'நீ கெட்டிக்காறப் பையன் அவ்வாறு வேண்டாம் யான் கூறுவது போல் செய்வோம்' என்று கூறி



எனது மைத்துனர் பொன் இராஜகோபால் (வீரகேசரி வார இதழ் பிரதம ஆசிரியர்) அவர்களிடம் கதைத்து மித்திரன் பேப்பரை கொழும்பில் இருந்து வருவித்துக் கொடுத்து விற்கும்படி கூறினேன். அவர் வகுப்பு முடிந்ததும் திக்குவல்லை பஸ்நிலையத்தில் அவற்றை தோளில் சுமந்து மித்திரன் மித்திரன் என (சூடானசெய்திகள் உடன் வெளிவருபவை) கூறி விற்றார் வாசகர்களது ஆர்வத்தால் தினமும் விற்று முடித்து வீட்டில் இலாபப் பணத்துடன் வந்து உம்மாவிடம் (அம்மாவிடம்) கொடுத்து குடும்பச்சுமையை சுமந்து கொண்டு படித்து பல்கலைக்கழகத்திற்கு முதல் முறையே சென்றிருந்தார்.

அதிபர் ஏ.ஆர் முகமட் கண்டிப்பானவர் வசதிகள் சேவைகள் கட்டணம் கட்டாது அனுமதிப்பத்திரத்தை *(Admission Card)* பெறமுடியாது. பரீட்சைக்கு எல்லா மாணவர்களுக்கும் *(A/L)* கொடுத்து முடிந்தாகிவிட்டது. அது ஒரு வெள்ளிக்கிழமை திங்கட்கிழமை பரீட்சை. அவர்கள் வெள்ளிக்கிழமை வெலிகம செல்ல ஆயத்தம். ஜனாப்*P.M.*மொகமட் அவர்கள் கவலை தோய்ந்த முகத்துடன் என்னிடம் வந்து ஒன்றும் கதைக்காது சிறிது கண்ணீர் துளி கொட்ட நின்றார்.

எனக்கு எனது வறுமை நிலைதான் ஞாபகம் வந்தது. அவரை எனக்கு முன்னால் இருக்க வைத்து காரியாலயத்திற்கு வகுப்பாசிரியர் என்ற தோரணையில் சென்றேன். சேட்டுப் பொக்கற்றில் இருந்து ஐம்பதுரூபா பணத்தை எடுத்து கொடுத்து சேர் நிலுவை இல்லாது முழுப் பணத்தையும் பற்றிக் கொண்டு *P.M.*முகம்மட்டின் அட்மிசன் காட்டை தரும்படி கேட்டேன். நீங்கள் கட்டத்தேவையில்லை யான் எனது பணத்தில் அறவிட்டு அதை வழங்கலாம். என்றார். இல்லை சேர்.*P.M.*கெட்டிக்காரப் பையன் அவரது நேரத்தை வீணாக்க முடியாது. தயவு செய்து பத்திரத்தை கையளிக்கவும் என கூறி பணம் முழுவதையும் பாக்கி இல்லாது கட்டி எடுத்துச் சென்று அவரை உற்சாகப் படுத்தி அனுப்பியிருந்தேன் இந்த நிகழ்வு ஏனைய மாணவர்களுக்கு தெரியாத விதத்தில் செய்து முடித்தேன்.

இந்த நிகழ்வு எனது மாணவ காலத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கஷ்டத்தில் வாழ்ந்த மாணவர்கள் பரீட்சைக்கு முன்பு

கந்தையா தாடிக்கிளாக்கரிடம் அனுமதிப்பத்திரத்தை வாங்க முயன்றதை நினைவூட்டியது. தனது நிலுவையை வாங்க வகுப்புகளுக்கு வரும்போது ஞாபகத்தில் ஒவ்வொருவரும் எவ்வளவு தவணை நிலுவை உண்டு எனக் கூறி அறவிட்டு அட்மிசன்காட்டை வழங்குவதை ஞாபகப்படுத்தியது. நிலுவை கொடுக்காதவர்களுக்கு அக்காட்டை அவர் கொடுக்காது செல்வதும் ஞாபகம் வந்தது.

எனது கன்னிக் கற்பித்தல் அனுபவத்தில் இம் மாணவர்களை தமிழ் மொழியை கற்பதில் ஆர்வப்படுத்தினேன். இலக்கணச் சூத்திரத்தை பிழையறப் பாடமாக்கினர். நான் இவ்வாறு செய்ய எனது மாமனார் பண்டிதர் மு.கதிரவேலு (மெமோறியல்கல்லூரி ஆசிரியர்) இலக்கணத்தை கற்பித்த விதமும் எனது கல்லூரி ஆசான் வித்துவான் நடராசா அவர்கள் இலக்கணத்தை முறையாக கற்பித்து உதவியமையுமே உதவின. வித்துவான் நடராசா அவர்கள் குரும்பசிட்டியைச் சார்ந்தவர். அவர் மூளாய் ஆஸ்பத்திரியில் தனது சுகவீனத்திற்கு காட்டி வருபவர். மாதமொருமுறை காட்ட யான் காலையில் எழுந்து துண்டு எடுத்துக் கொடுத்து காட்டவைப்பது வழக்கம். இது குருவுக்கு மாணவன் செய்யும் தொண்டு.

திக்குவல்லை மின்ஹொத் மகாவித்தியாலயத்தில் 7.9.1966 தொடக்கம் 5.7.1970 வரை கற்பித்தேன் எனது கற்பித்தல் சேவையின் சிறப்பை கண்ணுற்ற அவ்வூர் ஜனாப் வெபா (முன்னாள் கல்வி அமைச்சர் பதியுத்தீன் முகமட் அவர்களின் அந்தரங்கச் செயலாளர்) அவர்கள் என்னை தான்முன்பு அதிபராக இருந்த கம்பஹா மாவட்ட அலிகார் மகாவித்தியாலயத்திற்கு மாற்றிவிட்டார். இம்மாற்றம் அவரது முன்னைய பாடசாலையை மேம்படுத்தவும் எனது இடமாற்றத்தேவையையும் (யாழிற்கு அண்மையில் கொழும்பிற்கு வரவும் உதவியது.) பூர்த்தி பண்ணியது.

## அலிஹார் மகா வித்தியாலயத்தில் ஆசிரியப்பணி

இங்கு அலிகார் மகாவித்தியாலயம் ஒரு கிராமப்புறப் பாடசாலை. நல்ல பெற்றோர்கள் கீழ்ப்படிவான மாணவர்கள் விரும்பி ஆவலுடன் கற்றார்கள். இங்கு இரண்டரை வருடங்கள் கடமையாற்றினேன் இப்பாடசாலையும் எனது வாழ்க்கையில் மறக்க



முடியாது. இங்கு இருந்த காலத்தில் தான் எனது திருமண நிச்சயமும், திருமணமும் நடை பெற்றது. திருமண நிச்சயத்தின்பின்பு வெயாங்கொடையில் புகைவண்டியில் ஏறினால் யாழ்ப்பாணத்திற்கு ஆறுமணத்தியாலயம் செல்ல முடிந்தது. யான் விரும்பிய செல்வி இராசதுரை சுபத்திராவிற்கும் எனக்கும் 2.9.1971ல் திருமணப் பதிவு நிறைவேறியது மூத்த புதல்வன் (*Dr*சுசிதரன்) இங்கு கடமையாற்றிய காலத்தில்தான் எமக்கு கருவில் உருவானான். இக்காலத்தில் திக்குவல்லை இனாயா, சவ்பான், *P.M.*முகமட்டை எவ்வாறு மறக்க முடியாதோ அதே போல கல்எலிய ஜனாப் பஸ்லி, ஹருபா, மரினா, ஆகியோர் முதன்மை மாணவர்களாகத் தேறி பல்கலைக்கழகம் பிரவேசித்தனர்.

இஸ்லாமிய சூழலில் தனிமையில் இருந்த எனது மனைவியார்க்கு எனது மாணவிகளே சகோதரிகளாக விளங்கி துணையாக வந்து கதைத்தார்கள். பாடசாலைக்கு அருகாமையில் விடுதியானபடியால் எமது பாடசாலைச் சமூகத்திற்கும் எமது குடும்பத்திற்கும் உறவு நன்றாக அமைந்திருந்து.

மனைவியாரின் கர்ப்பகாலத்தில் எமக்கு வேண்டிய பொருட்களை இச் சமூகம் வழங்கத் தவறவில்லை. எமது விடுதிமனைக்கு அருகில் மையவாடி இருந்தது. இதனை மனைவியார்க்கு மறைத்தே இருந்தேன். யான் இங்கு ஆசிரியராக இருந்தகாலத்தில் திருமணத்திற்குமுன்பு ஆசிரியர்கள் தங்கு மனையில் அவர்களுடனேயே தங்கியிருந்தேன். எங்கள் அதிபர் ஜனாப் ஓமர் மிகிலார் தந்தைபோல் எங்கள் ஆசிரிய விடுதியை பொறுப்பேற்று வழி நடத்தினார். திறமையான ஆளுமை படைத்த செயல்வீரன். மும்மொழியிலும் வல்லவர். எங்கள் தேவைகளை இருந்த இடத்திலேயே கடிதம் எழுதி திணைக்களத்தில் நிறைவேற்றிவிடுவார். அவருக்கு உதவியாக உபஅதிபராக திரு ஜோசப் இருந்தார். அவர் கிறிஸ்தவர் அவரும் எங்களுடனேயே இருந்தார். யாம் எல்லோரும் சமைத்து உண்டு கூட்டாக வாழ்ந்த கூட்டுச் சமூக வாழ்க்கை பின்னைய காலத்தில் இஸ்லாமியர்கள் சிங்களவர்களுடன் இறுக இணைந்து வாழும் பழக்கத்தை ஏற்படுத்தியது. இன்றும் கல்விஅமைச்சில் மொழி, மத, சமூக வேறுபாடுகளின்றி என்னால் உயர்ந்த பதவிகளில் இருந்து கடமையாற்ற முடிகின்றதென்றால் திக்வெல்லை, கல்எலிய ஆகிய இருகிராமங்களிலும் வாழ்ந்து பெற்ற அனுபவங்களே.

31.12.1972 வரை வெளி மாவட்டங்களில் கடமையாற்றிய யான் எனது சொந்த மாவட்டமாகிய யாழ்ப்பாண மாவட்டத்திற்கு, அதுவும் எனது பிறந்த ஊர் வட்டுக்கோட்டை சித்தங்கேணி இந்துக்கல்லூரிக்கு 01.01.1973 முதல் இடமாற்றம் பெற்றேன். அதுவும் என்னை உருவாக்கிய அன்னையாம், அக்கல்லூரியிலே படித்து உயர்ந்தேன். மாணவராக இருந்த யான் ஆசிரியராக இங்கு பணிபுரிய கிடைத்தமையையிட்டு சந்தோஷமடைந்தேன் அதுவும் எனக்கு கற்பித்த ஆசிரியர் மதிப்பிற்குரிய திரு.க.அருணாசலம் அவர்கள் அங்கு அதிபராக கடமையாற்றியமையும் எனக்கு பெரும் வழி காட்டியாக அமைந்தது.

இங்கு சொந்த மாவட்டத்திற்கு கிடைத்த இடமாற்றம் பிரமாண அடிப்படைக்குட்பட்டது. வெளி மாவட்டங்களில் ஆறு வருடங்களிற்கு சேவை புரிந்தவர்களை சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம் பெறமுடியும் என்ற நிபந்தனையை இடமாற்றசபை மத்திய நிலையில் விதித்திருந்தது. 7.9.1966ல் இருந்து 31.12.1972 வரை 6 வருடங்கள் 4மாதங்கள் ஆசிரிய சேவையாற்றியபின்பே இடம்மாற்றம் கிடைத்தது. அக்காலத்தில் முதல் நியமனமும் இடமாற்றமும் பிரமாண நிபந்தனைக்குட்பட்டது. இதனை எந்த செல்வாக்காலும் மீற முடியாதிருந்தது. அரசியல் நிர்வாக செல்வாக்கில்லாத கல்வி நிர்வாகமாய் அமைந்தது வெளிமாவட்டங்களுக்கு சென்று வந்தமை யான் முன்பு கூறியது போல் நல்ல அனுபவத்தை மொழி, மத, இனரீதியாக பெற்றுத்தந்தது. யான் டிக்வெல்லை மின் ஹாத் மகாவித்தியாலயத்தில் இருந்த காலத்தில் வவுருக்கல பன்சலவில் சிங்கள மொழியை 3மாதங்கள் அங்குள்ள பிரதான தேரரிடம் சென்று கற்று வந்தேன் சிங்கள இல்லத்தில் தங்கியிருந்தபடியால் சிங்களமொழியை பேச எழுத வாசிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. சிங்கள தகுதிகாண் 1ம் 2ம் 3ம் பிரிவுப் பரீட்சைகளிலும் அங்கு தேறியிருந்தேன்.

**யா/வட்டு இந்துக்கல்லூரியில்.....**

01.01.1973ல் சொந்த மாவட்டத்தில் யான் கற்றுயர்ந்த பாடசாலையில் பணி ஏற்ற பொழுது எனது முன்னாள் ஆசிரியரும் அப்போதைய அதிபருமான திரு.க.அருணாசலம் அவர்களால்



பாரிய பொறுப்பு தரப்பட்டது. க.பொ.த. உயர்தர வகுப்பில் இறுதி வருடத்தில் பரீட்சைக்குத் தோற்ற இருந்த மாணவர்களுக்கு 1974 ஏப்ரல் மாதத்திற்கான பொருளியல்,தமிழ் பாடங்கள் பாடத்திட்டம் தொட்டும் பார்க்கப்படவில்லை பொருளியல் பாடத்தையும் தமிழ் பாடத்தையும் பொறுப்பேற்றிருந்த ஆசிரியர்கள் இருவரும் கடந்த 9மாதங்களாக தங்களுக்கு எதுவும் கற்பிக்க வில்லை என கண்ணீர் மல்க அதிபர் முன்னிலையில் கூறினர். திரு.க.அருணாசலம் அவர்கள் என்னைப் பார்த்து "நீர் இக்கல்லூரியின் பழைய மாணவர் இதனை ஒரு சவாலாக ஏற்று கற்பித்து மாணவர்களை தயார் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப வேண்டும்" என்று கட்டளையிட்டதுடன் அவர் அதைச் செய்வார் என்றும் மாணவர்கள் முன்னிலையில் சிரித்துக் கொண்டு கூறினார். யானும் ஒரு நிபந்தனை போட்டேன். இம்மாணவர்கள் மாலையிலும் சனி, ஞாயிறுக்கிழமையிலும் மேலதிக வகுப்புக்களுக்கு வருகைதந்து படிக்க வேண்டுமென்று. அதற்கு மாணவர்கள் சம்மதிக்க பாடத்திட்ட கற்பித்தலும் பூர்த்தியடைந்து 9 மாணவர்களில் 5 மாணவர்கள் பல்கலைக்கழகப் படியில் முதன்முறையாகவே கால் வைத்தனர். இதற்கு சான்று மக்கள் வங்கியில் கடமையாற்றும் திருமதி. தவஞானேஸ்வரி பண்ணாகம் மெய்கண்டான் ஆசிரியை திருமதி கமலாதேவி அருட்பிரகாசம், கொட்டாஞ் சேனை தேசிய கல்லூரியில் கற்பிக்கும் திருமதி கிருபாரூபி, திருமதி திருத்தேவி (பிரான்சு), கிராம சேவையாளர் திரு குலசேகரம் வைத்தியகலாநிதி திரவியராசா (பிரான்சு) ஆகியோர் ஏனைய மாணவர்கள் க.பொ.த உயர்வகுப்பில் சித்தி அடைந்து வேறு தொழில்களில் பணியாற்றினார்கள். மாணவர் வைத்திய கலாநிதி திரவியராசா யான் பிரான்சிற்கு சென்ற பொழுது ஆரத்தழுவி தனது ஞாபகார்த்தமாக சிற்றிசன் வாச் ஒன்றை அன்பளிப்பாகத்தந்தார். இதில் ஒரு உண்மையென்ன வென்றால் பழைய மாணவர்கள் ஆசிரியராக, அதிபராக அக்கல்லூரியில் இருந்தால் கல்லூரியில் பற்றுடன் பாசத்துடன் கடமையாற்றுவார்கள் என்பது. தன்னை உயர்த்திய அக்கல்லூரி உயர்வுக்கு உழைக்க வேண்டுமென்ற உணர்வூட்டம் பெறுவர். இதுவே பழைய கல்வி நிர்வாகச் செயற்பாட்டில் கருத்துக் கொள்ளப்பட்டது.

இக்காலத்தில் கல்லூரிக்கு பின்புள்ள விளையாட்டு மைதானத்தை சுவீகரிக்க பணம் தேவையென அதிபர் அவர்கள்

வேண்டிய பொழுது மாபெரும் காணிவல் ஒன்றை திரு.அன்றஸ்ஸின் உதவியுடன் யான் ஒழுங்கு பண்ணிகாட்சிப்படுத்தி அதனை 10 நாட்கள் விடுமுறையில் இயங்க வைத்து பெரும் பணம் சேகரித்து கொடுத்தேன். அக்காணிவல் ஞாபகமாக கல்லூரியின் முன்றலில் தென்மேற்குப் பக்கத்தில் தெருவுக்கு அண்மையில் நாட்டிய மாங்கன்று இன்று ஞாபகம் மூட்டிய வண்ணம் கிளைவிட்டு ஓங்கி வளர்ந்துள்ளமையைப் பார்க்கலாம்.

எனது மூத்த மகனார் 13.01.1973ல் பிறந்தார். இதனால் மனைவியார் எமது வீட்டில் தாய்தந்தையருடன். (சுபஸ்த் தான்) காங்கேசன்துறைவீதியில் வசிக்க வேண்டியவரானார். இரண்டாவது மகனார் (பொறியியலாளர் திரு.நந்தனன்) 16.08.1974ல் பிறந்தார். இவ்விரு குழந்தைகளுக்கும் உதவியாக என்னை மனைவியார் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று வரும்படி வேண்டியதன் பேரில் திரு.P.S.குமாரசாமி அதிபர் என்னை யாழ் இந்துக்கல்லூரிக்கு 01.01.1976முதல் இடமாற்றம் பெற்றுத் தந்து அழைத்துச் சென்றார். என்னை அவர் வட்டுக் கோட்டை இந்துக்கல்லூரிக்கு இடமாற்ற மற்றும் பரீட்சை பெறுபேறுகளை கண்டறிய வந்த பொழுது (அவர் கல்வி அதிகாரியாக யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றினார். பின்பு யாழ் இந்துக்கல்லூரி அதிபராக செல்லும் எண்ணமும் வைத்திருந்தார்.) தான் செல்லும் பொழுது எனது A/L கற்பித்தல் பெறுபேற்றை கண்வைத்தே இடமாற்ற உத்தரவைப் பிறப்பித்து அழைத்துச் சென்றார். அவர் ஓர் சிறந்த கல்வி நிர்வாகி தனது பழைய கல்லூரியில் பற்று வைத்துச் சிறந்த யாழ் இந்து அதிபராகவும் பணியாற்றியிருந்தார் நான் முன்பு சுட்டிக்காட்டிய கல்லூரி விழுமியங்கள் இங்கு நிலை நிறுத்தப்படுகின்றது. யாழ் இந்து கொண்டிருந்த குறிப்பிடத்தக்க அதிபர்களில் இவரும் ஒருவர் இங்கு கடமையாற்றிய காலத்தில் 16.02.1976ம் ஆண்டு மூத்தமகளான சுதந்தி (விவசாய முதுநிலைப்பட்டதாரி, அவுஸ்திரேலியா) பிறந்தார். இங்கு A/L மாணவர்களுக்கு தமிழும் பொருளியலும் O/L மாணவர்களுக்கு தமிழும் கற்பித்து வந்தேன். எனது ஆசான் வித்துவான் ஆறுமுகம் அவர்களும் இவ்வகுப்புக்களுக்கு உடன் கற்பித்த ஆசிரியராக இருந்தார். அப்பொழுதும் சில சந்தேகங்களை எனது குருவிடம் கதைத்துத் தெளிவடைந்தேன். இங்கு கற்பித்த 1976ம் ஆண்டில்



இறுதிக்காலத்தில் அதிபர் பதவியை கடமையேற்கும்படி பூநகரி மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர், பழைய மாணவர்கள் வேண்டி ஒப்புதல் கடிதம் பெற்றிருந்தனர். பழைய மாணவர் சங்கத்தலைவர் திரு.என்.இராசநாயகம் (கிளிநொச்சி அரச அதிபராக இருந்தவர்) அவற்றை வைத்து கொழும்பில் பணிப்புரை பெற்று யாழ் கல்வித்திணைக்களத்தினூடாக என்னைகடமைநிறைவேற்றும் அதிபராக நியமித்து இடமாற்றக் கடிதம் அனுப்பியிருந்தனர். இக்கடிதத்தைக் கண்ட P.S.குமரசாமி அவர்கள் என்னை அழைத்து "நீ நல்ல ஆசிரியர் என்றல்லோ வட்டு இந்துவில் இருந்து அழைத்து இடமாற்ற உத்தரவு பெற்றுத்தந்தனான். A/L மாணவர்கள் உமது கற்பித்தலை நன்றாக பராட்டி விரும்புகின்றார்கள். ஆதலால் உம்மை விடமுடியாது" என இரத்துச் செய்து விட்டார்.

இதனை அறிந்த பூநகரி நலன் விரும்பிகள் திரும்பவும் அதே பதவியில் எனக்கு கடிதம் பெற்று அனுப்பியிருந்தனர் திரும்பவும் P.S குமாரசாமி அதிபர் அவர்கள் இரத்துச் செய்தார்கள். எனது மனதில் ஏற்பட்ட உத்தரவாதமொழிக்கு மாறானது இவ் இடமாற்றம் நியமனம் என்பதால் தாங்கிக் கொண்டேன். இருந்தாலும் இத்தகைய தடை எனது வாண்மைரீதியான முன்னேற்றத்தை தடை செய்கின்றது, என்ற உணர்வால் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் மண்டபத்தை அடைந்து சக ஆசிரியர்களிடம் எனது துயரை பகிர்ந்தேன். யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரிய இளைப்பாறும் ஆசிரிய அறையில் ஓய்வு வேளை நல்ல முத்தான கல்வி, அறிவியற் கருத்துக்களை பரிமாறும் கருத்துக்களம் வித்துவான். கார்த்திகேசன் அவர்கள் நல்ல கருத்துக்களைத் தருவார்.

இக்காலத்தில் எனது மாணவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள் திரு.S.இளங்கோ தற்போதைய செயலாளர் வடக்கு மாகாண கல்வி அமைச்சு, திரு. இரகுபரன் சிரேஷ்ட விரிவுரையாளர் (தமிழ்), தென் கிழக்கு பல்கலைக்கழகம் திரு ஸ்ரீ தரன் (வரலாறு), முன்னாள் உதவிப் பதிவாளர் யாழ் பல்கலைக் கழகம், திரு சிவகுமாரன் ஆசிரியர் (தமிழருவி) வவுனியா தமிழ் ம.வி. சிறந்த சமய சொற் பொழிவாளர், கம்பவாருதி அவர்களும் எனது சமகால மாணவர் என்பது குறிப்பிடவேண்டியதே.

மூன்றாம் முறையும் அதிபர் இடமாற்ற கடிதம் வந்தது.

இப்பிரச்சினையை எனது சக ஆசிரியர்களுடன் பகிர்ந்து உரையாடினேன். ஆசிரிய நண்பர் புண்ணியலிங்கம் சந்தியாப்பிள்ளை ஆசிரியர் ஆகியோருடன் கூடி ஆராய்ந்தோம். அவர்கள் கூறினார்கள் "மச்சான் *P.S.* நல்லவர் உனது முன்னேற்றத்திற்குரியது இவ் அதிபர் பதவி நீ சனிக்கிழமை காலை வீட்டிற்குச் சென்று உனது பிரச்சினையை அவருடன் சொல்லி *Release* (விட்டுவிடும்படி) கேள் அவர் உதவுவார்" என்றனர்.

அவர்களது ஆலோசனைப்படி முடிவு செய்து சனிக்கிழமை காலை எழுந்து 7.30 மணிபோல் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றேன் கொக்குவில், கோண்டாவில் தாண்டி இணுவில் பண்டிதர் திருநாவுக்கரசு அவர்கள் வீட்டடிக்குச் சென்றதும் ஒரு அற்புதமான நிகழ்வு நிகழ்ந்தது. எனது பக்கத்தில் இருந்து என்னை ஆட் கொண்ட உருவம் (யான் முன்பு காணவில்லை ஆனால் நண்பர் புண்ணியலிங்க ஆசிரியர் பண்டிதர் சண்முகலிங்கம் மூலம் நிறைய கேள்விப்பட்டனான்) குறுக்கால் என்னைத் தடுத்துச் செல்ல நின்றது. அந்த உருவத்தின் தோற்றத்தில் குடையுடன் ஊண்டி கூனிநின்றதும் அவர்தான் கோண்டாவில் குடைச்சாமியார் என அறிந்து கொண்டேன்.

சுவாமி அவர்கள் தடுத்தாண்டு கிழக்குப் பக்கத்தில் உள்ள பண்டிதர் திருநாவுக்கரசு (முன்னாள் நாவலர் ம.வி. அதிபர், முன்னாள் கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம் அவர்களின் மூத்த சகோதரர்) வீட்டிற்குச் கூட்டிச் சென்றார். எனது சயிக்கிளை நிறுத்தி விட்டு வீட்டின் கிழக்குப் பக்கமாகச் சென்றதும் சுவாமி அவர்களை உபசரிக்க ஆயத்தமாக சகல ஒழுங்குகளும் இருந்தன. தண்ணீர் செம்பினுள் நிறைத்து பண்டிதர் அம்மா கையில் ஏந்தி நின்றார். யான் என்னை அறியாது சுவாமியின் திருவடியில் வீழ்ந்து வணங்கியதும் அல்லாமல் அவரது திருவடி பதித்த செம்மண்ணை பேப்பரில் வழித்து அள்ளி மடித்து வைத்துக் கொண்டேன். அம்மண் இன்றும் எமது கே.கே.எஸ் வீதி வீட்டுசாமி அறையில் கறுத்த டப்பாவில் வைத்து வழிபடப்படுகின்றது.

என்னை எழும்பும்படி சைகை காட்டிய சுவாமிகள் "என் அப்பன், என் ஐயன், அருள் தெரியுது அருள் தெரியுது எல்லாம் சரியாக நடக்கும்" என்று கூறிவிட்டு உள்ளே அழைத்துச் சென்றார்.



அங்கு அம்மா சுவாமிக்கு வாழையிலையில் இடியப்பம் சம்பல் கறியுடன் படைத்து சுவாமியை உண்ணும்படி வேண்டி நின்றார். சுவாமி எனக்கு தேநீர் கொடுக்கும்படி சைகை காட்டியதும் மூக்குக்குவளையில் தயாராக இருந்த பசும்பால் சுவையுடன் கூடிய தேநீர் அம்மாவால் எனக்கு வழங்கப்பட்டது. யான் அவற்றை அருந்தி முடித்ததும் அவற்றை அவதானித்த சுவாமி அவர்கள் "எல்லாம் சரியாக நடக்கும் வாருங்கோ சரியாக நடக்கும் உயர்வு வரும்" என்றார்.

அற்புதமான தரிசனத்தால் ஆட்கொள்ளப்பட்ட யான் அகமகிழ்ந்து புளகாங்கிதம் அடைந்து சயிக்கிளை மெதுவாக எடுத்து மேற்குப் பக்கம் சென்று ஏறி அதிபரின் சுண்ணாகம் வீட்டை நோக்கிச் சென்றேன் அதிபர் வீட்டில் சென்று கேற்றைத் திறந்ததும். அதிபர் முன் விறாந்தையில் சுண்ணாகச் சந்தையில் மரக்கறி வாங்கி வந்து வைத்து களையுடன் தேநீர் அருந்திக் கொண்டு ஆறுதலாக இருந்த காட்சி. என்னைக் கண்டதும் சிரித்த முகத்துடன் "தணிகாசலம் வா இரு. இம் முறையான் தடுக்காமல் உன்னை விடுவிக்கின்றேன் நீ சென்று பூநகரி மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றலாம்." என்று இன்முகத்துடன் சிரித்து தேநீர் தந்து பரிமாறி அதிபர் கடமை பொறுப்பு பற்றி நிறைய ஆலோசனை கூறி வழிகாட்டி 'வெற்றியாகட்டும்' என வாழ்த்தி அனுப்பியிருந்தார்.

உண்மையில் அன்றைய நிகழ்வு எனது தொழில் ரீதியான உயர்வின் மறக்க முடியாத நன்னாள். தெய்வ அருளும் ஆசியும், தொழில் அதிபரது வாழ்த்தும் வழி காட்டலும் கிடைத்த நன்னாள். அதுவே எனது இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு 1ம் வகுப்பில் உயர்ந்து பல்வேறு படிநிலைகளில் பல இடங்களில் தொழிலில் உயர்ந்து மனத்திருப்தியுடன் சேவையாற்றி ஓய்வு பெற அடி அத்திவாரமாய் அமைந்த பொன்னாள். ஓய்வின் பின்பும் கல்வி முதுநிலை கல்வி ஆலோசகராக கல்வி அமைச்சில் இருக்க அந்த கடமைநிறைவேற்றும் அதிபராக பதவிவகித்த பதவித்தன்மையை வைத்தே இலங்கை கல்வி நிர்வாகசேவை *V* வகுப்பு (பின்னையை காலத்தில், 1985ல் ஒன்றிணைத்து மாற்றியமைக்கப்பட்டகல்வி நிர்வாகசேவை 3ம் வகுப்பாக்கப்பட்டது.) பதவி வழங்க அத்திவாரமிட்ட நன்னாள்.



உலா 05

யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையும் கல்லாதவாறு.

# பூநகரியில் கல்விப்பணி

அன்றைய நிகழ்வின் ஒரு கிழமை கழித்து 31.12.1976ம் நாளுடன் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் சேவையை முடித்து அதிபர் கடமையை பூநகரி ம.வித்தியாலயத்தில் கடமையேற்க 01.01.1977ம் திகதி யாழ் நகரில் இருந்து கேர தீவு நோக்கி பஸ்ஸில் ஏறிச் சென்று கேரதீவில் காலை 7 மணிக்கு இறங்கினேன். இறங்கும் பொழுது மக்கள் வரவேற்க தோணியில் ஏறி வந்து இறங்கி காத்து நின்றனர். வரவேற்ற மக்கள் தோணியில் ஏற்றி அழைத்துச் சென்றதும் யாவருமாக சங்குப்பிட்டியில் இறங்கினோம்.

இறங்கியதும் அன்பான வேண்டுகோள் விடுத்தார்கள் "இன்று மன்னார் செல்லும் பஸ் பழுதுபட்டதாம் சேவையில் இல்லை. ரக்டர் கொண்டு வந்துள்ளோம் ஏறி எங்களுடன் வாருங்கோ" என்று என்னை ரக்டர் பெட்டியில் படங்கு அதன் மேல் பாய், போட்டு அமரும்படி ஏற்றி இருத்தினர். இது எல்லாம் அனுபவம். சேவைக்கு செல்லும் முதல் நாளே கஷ்டம் என்னை அரவணைத்தாலும் கஷ்டப்பட்டு வளர்ந்தவன் என்ற மனத்தால் ஏறி இருந்து சந்தோஷமாக அரை மணித்தியாலயத்தில் 7.40 மணிக்கு பாடசாலைக்குச் சென்று இறங்கினோம்.

அங்கு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அன்போடு வரவேற்று மாலை அணிவித்து அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர் 7.45 மணிக்கு பாடசாலை ஆரம்பத்திற்கு மணிஅடித்தது. பாடசாலை



ஆரம்ப நிகழ்வில் கலந்து மாணவர்களுக்கு ஆசிரியர்களுக்கு பெற்றோர்களுக்கு 5 நிமிடம் உரையாற்றி பாடசாலை தொடக்க நேரமான 7.50 மணிக்கு பாடசாலையை ஆரம்பித்தோம். என்னை அழைத்துச் சென்று அலுவலகத்தில் அமரவைத்து யாவரும் விடைபெற்று தங்கள் தங்கள் கடமைக்குச் சென்றனர்.

அலுவலகம் ஆசிரியர் விடுதியின் முன் அறை 10'x 20' சதுரடி கொண்டது பழைய தூர்ந்த கட்டிடம் ஒரு அலுமாரி மட்டுமே. அங்கு எந்தக் கோவையும் காணப்படவில்லை. அலுவலக தஸ்தாவேதிகள் என உருட்டிக் கட்டப்பட்ட பந்து போன்ற திரட்டலை எடுத்துத் தந்தனர். மாணவர் வரவு ஆசிரியர் வரவு இடாப்புக்கள் முறையாக இருந்தது. தற்காலிக அதிபர் ஒருவர் எதுவித நியமனக்கடிதமும் இல்லாமல் பொறுப்பேற்று கடமையாற்றிய படியால் அவ்வளவு ஆர்வத்துடன் செயற்படவில்லை. அவர் பாடசாலைக்கு வந்த நாட்களை விட வராத நாட்களே அதிகம். யான் சென்றதுடன் அவரை உதவி ஆசிரியராக ஸ்ரான்லிக் கல்லூரிக்கு இடமாற்றியிருந்தனர். அவர் பொறுப்புத் தர ஒன்றும் மில்லையென்று கூறி சிரித்து விட்டு சம்பவத்திரட்டில் குறித்து எழுதிய கையளிப்பு பொறுப்புடன் சென்று விட்டார். ஆனால் உப அதிபராக இருந்த திருமதி.ச.சதாசிவம் சிரேஷ்ட ஆசிரியர் மற்றும் சிலர் என்னை உற்சாகப்படுத்தினர். "உங்களை அறிந்துள்ளோம். நீங்கள் நல்ல ஆசிரியர் என அறிந்தோம். AL வகுப்புக்களில் சிறந்த பெறுபேறு பெற்றுக் கொடுத்துள்ளீர்கள். இங்கும் A/L வகுப்பைத் தொடக்கி இந்தப்பகுதியையும் முன்னேற்றுங்கள். நீங்கள் 35வயது இளம் வயதாக இருந்தாலும் 11 வருட ஆசிரிய அனுபவம் உள்ளபடியாலும் உற்சாகமான தோற்றமும் சிந்தனையாலும் இப்பாடசாலையை கட்டி எழுப்புவீர்கள்" என்று கூறி உற்சாகம் தந்தார்கள்.

அவர்களது அன்பான அரவணைப்பை ஏற்று யான் பாடசாலையை சுற்றிப்பார்த்தேன். அலுவலகம் இருந்த ஆசிரியர் விடுதி பழைய கட்டிடம். அதனுள் இரண்டு அறைகள். இரண்டு ஆண் ஆசிரியர்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் தங்கி இருந்தார்கள். அங்கு சமைத்து சாப்பிட்டார்கள் குளிக்க ஒரு சின்னக் கிணறு. அது உவர் நீர் குடிக்க தண்ணீர் பெற்றோர்களால் வண்டி மூலம் காலையில் ப.நோ.கூட்டுறவுச்சங்க நிதி உதவியால் பீப்பாமூலம் வரவழைக்கப்பட்டிருந்தது. தினமும் அவ்வாறே.

கட்டிடங்கள் மூன்று மட்டுமே C.T.B பஸ்வண்டி நிற்பாட்டிய மாதிரி அடுத்தடுத்து கட்டப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் பொருட்களை ஒரே இடத்தில் இலகுவாக பறித்து 40x20, 60x20, 40x20 சதுர அடி மூன்று கட்டிடங்கள் மட்டும் கட்டியிருந்தனர். 300 மாணவர்களுக்கு போதுமானதாக இருந்தது. பாடசாலை சுற்றுப்புற வேலி இல்லை நரி ஓடும் இடமாக, கட்டாக்காலி மாடு உலாவும் காட்டுப் புறமாக காட்சி அளித்தது. எல்லாவற்றையும் அவதானித்து பாரிய பொறுப்பும் சுமையும் உண்டு என மனதில் இருத்திக் கொண்டேன்.

இவற்றை பெற்றோரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்ற திட்டமிட்டு பின்வரும் செயற்பாடுகள் நான் பதவி வகித்த (01.01.1977 - 20.2.1981) வரையான மூன்று வருடங்கள் 2மாதத்திலும் நிறைவேற்றினேன்.

1. 3ம் ஆண்டு தொடக்கம் 11ம் ஆண்டு வரையான மாணவர்கள் ஒவ்வொருவரையும் 10 பனை மட்டைகள் வீதம் கொண்டுவரும்படி கூறி அவற்றுடன் பெற்றோர்கள் கம்பிக்கட்டையை தங்கள் ரக்டர்மூலம் தருவித்து எடுத்து பனை மட்டை மூலம் கம்பியில் வரிந்து 10 ஏக்கர் நிலத்தை 3நாள் சிரமதானம் மூலம் சுற்றி வேலி அடைத்து கேற்போட்டேன். மாணவர்கள் ஆசிரியர்கள் நினைத்த நேரம் வருவது வெளியேறுவது தடுக்கப்பட்டதுடன் பெற்றோர்கள் கட்டுப்பாடின்றி மாணவர்களை வந்து கூட்டிச் செல்வதும் தடுக்கப்பட்டு ஒழுங்குமுறை நிலை நாட்டப்பட்டது.

2. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.ஆனந்தசங்கரி அவர்களை அணுகி ரூபா 50,000ம் நிதி ஒதுக்கீடு செய்து 110'x20' சதுர அடி கட்டிடம் ஒன்று ஆரம்ப வகுப்பு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு கட்டப் பட்டது. 10'x20' அறை ஒன்று அதனுடன் இணைத்து அமைத்து அலுவலக அறையாக இயங்க வைக்கப்பட்டது இது கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டது. ஆரம்ப வகுப்பு நடாத்துவதற்காக மாதிரி சுற்றி வலைக் கம்பிகளும் அடைக்கப்பட்ட கட்டிடம்.

3. அதே போன்று குறிப்பிட்ட வருடத்தில் கட்டிமுடிக்க இன்னோர் 110'x20' கட்டிடம்; மேலும் ரூபா 50000ம் நிதி ஒதுக்குவித்து கட்டிமுடித்து அக்கால கல்விப் பணிப்பாளர் திரு.மாணிக்கவாசகர் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 40'x20' அடி அறை அமைக்கப்பட்டு புதிய கல்லூரி அலுவலகமாக்கப்பட்டதுடன் முன்னைய 10'x20' கட்டிடம் களஞ்சிய அறையாக மாற்றப்பட்டது இங்கு பதித்த ஞாபகக்கல்லை இன்றும் பார்க்கலாம்.



4. இரண்டு நிதி ஒதுக்கீட்டையும் குறித்த வருடங்களில் வேகமாக பயன்படுத்தி கட்டிடம் கட்டி முடித்தபடியால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் உதவியால் 60'x40' மனையியல் கட்டிடம் ஒரு கிணறு இரு மலசலகூடங்களும் கட்டி முடிக்கப்பட்டது.

இவையாவும் கட்டி முடிக்க காரணம் எனது ஆர்வமும், துணிச்சலுமே. கட்டிடங்களுக்கு அக்காலத்தில் கூரைக்கு வீம் ஊசிக்கால் 6''x41'' சதுர அங்குல மரம், கதவிற்கு மரங்கள் பலகை எடுப்பது கஷ்டமாக இருந்த காலக்கட்டத்தில் காட்டில் ரக்டரை அனுப்பி அக்கால உதவி அரசாங்க அதிபர் திரு.செ.யோகநாதன் இராணுவப் பொறுப்பாளர் சிட்னி ஜயவர்த்தனா அவர்களின் உதவியுடன் பாலை மரம், முதிரை மரங்களை தறிப்பித்து ரக்டரை நானே ஓட்டி றோட்டால் கொண்டு வந்து பாடசாலை வளாகத்துள் கிடங்கு வெட்டி மரம் அரிவித்து பயன்படுத்தினேன். அதே போல பனை மரங்களும் தறிப்பித்து சலாகை மரம் தயாரிக்கப்பட்டது.

இக்கட்டிடமும் கிணறும் கட்டி முடித்து பணம் பெறும் ஒப்பந்த காரருக்கும் எனக்கும் இறுதியில் முரண்பாடு ஏற்பட்டு இடமாற்றம் பெறவேண்டியும் ஏற்பட்டது. கிணற்றில் வெட்டி முடித்து தண்ணீர் உள்ளதைக் காட்ட தண்ணீர் வவுசரில் கொண்டு வந்து நிரப்பப்பட்டும், நிலத்தின் அடியில் கொங்கிறிட் போடாது காறை இழுத்ததை அதிபராகிய நானும் அக்கால வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த நண்பன் அ.தங்கராசாவும் சுட்டிக்காட்டியபடியால் என்னை கிளிநொச்சி பரந்தன் ம.வித்தியாலயத்திற்கு (கடித இல யா-ஈரி-30

கடிதத்திகதி 31-01-1979) இடமாற்றியதும், (நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்லும்படியாக வேண்டியும்) நான் ஏற்க மறுத்து அதிபர் பதவியை துறந்து உப அதிபராக யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் வேண்டி வந்தேன் .

5. இக்காலத்தில் 300 மாணவர்களாக இருந்த மாணவர் தொகையை பாராளுமன்ற உறுப்பினர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்களின் உதவியுடன் கறுக்காய் தீவு ஞானிமடம் போன்ற இடங்களுக்கு பூநகரி வாடியடிக்குமாக் இ.போ.ச சேவையை அறிமுகமாக்கி அங்குள்ள பாடசாலைகளில் தரம் 5ற்கு மேல் கல்வி கற்ற மாணவர்கள் பூநகரி ம.வித்தியாலயத்தில் கற்க வாய்ப்பளிக்கப்பட்டது. இதனால் ஆசிரிய வளப் பற்றாக்குறை போக்கப்பட்டதுடன் மாணவர்களது உயர் வகுப்பு கற்கைக்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

6. 01.01.1978ம் ஆண்டு முதல் க.பொ.த உயர் கலை வகுப்பு ஆரம்பிக்க அனுமதி பெறப்பட்டு தொடங்கப்பட்டது. இவ்வனுமதிக்கு அக்கால பிரதம கல்வி அதிகாரியாக கடமையாற்றிய திரு N.R.பாலசிங்கம் அவர்களுடன் யான் ஏற்படுத்திய நல்லெண்ண உறவு உதவியது. மூன்று மாணவர்களை க.பொ.த உயர் கல்விகற்க தகுதி அடைந்திருந்தும் அத்தொகையை மூன்றிற்கு முன்னால் ஒன்றைப் போடுவித்து 13 ஆகக் காட்டி அனுமதி பெறப்பட்டது. 'பொய்மையும் வாய்மையிடத்து புரைதீர்ந்த நன்மைபயக்குமெனின்' என்ற வள்ளுவரது குறளுக்கேற்ப அவராலும் என்னாலும் அச் செயல் மேற்கொள்ளப்பட்டது. (இவ்வாறு பெறப்பட்ட கலை வகுப்பிற்காய அனுமதி பெறப்பட்டு 20 வருடங்களின் பின்பு 1998ம் ஆண்டு நான் வடக்கு கிழக்கு மாகாணக் திட்டமிடற் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் 01-01-1998 முதல் விஞ்ஞான க.பொ.த உயர் வகுப்பு ஆரம்பிக்க என் முயற்சியால் அப்பாடசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

20 வருடங்களாக அதிபரும் அதிகாரிகளும் சட்டத்தை இறுக்கிப் பிடித்து அனுமதியைக் கொடுக்கவில்லை வெளிமாவட்டங்களுக்கு போக்குவரத்து வசதியின்மையால்



செல்ல முடியாமல் பூநகரியில் மட்டும் முடங்கிக்கிடந்த வன்னிவாழ் மக்களும் உயர்கல்விகற்க இவ்விரு அனுமதியும் வழிகாட்டி வாழ்வளித்தது. ஏராளமான மாணவர்கள் பட்டதாரி ஆகியதுடன் கூடுதலானவர்கள் அரசு உத்தியோகம் பெற குறிப்பாக ஆசிரியர் தொழில் பெற வாய்ப்பளித்தது. யாழ் மாவட்ட உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள் அங்கு சென்று கடமையாற்றத் தவறிய காலத்தில் அக்கால உள்ளூர் மனித வளத் தேவையை நிறைவு செய்தது.

7. எனது அதிபர் பதவிக்காலமாகிய 1978ம் ஆண்டு இப்பூநகரி ம.வித்தியாலயம் இலங்கைத் தீவில் ஒரு சாதனையை நிலை நாட்டியது *Times* பத்திரிகை கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடாத்திய (கடிதம் இல *SO/E/57* கடிதத்தின் திகதி 28-03-1980) அதிதிறமை மாணவன் *(All round Best student)* போட்டியில் பூநகரி மகாவித்தியாலயத்தில் இருந்து திரு.இராமச்சந்திரன் என்ற மாணவன் தெரிவானார் தற்போது சுவிஸ்நாட்டில் உள்ளார். இவர் எல்லாத் துறைகளிலும் முதலாம் இடம் பெற்றிருந்தார் அதாவது சாதாரணதரபரீட்சைப் பெறுபேற்றில் எல்லாப்பாடங்களிலும் *D's* பெற்றிருந்தார் மெய் வல்லுநர் போட்டியில் சகல போட்டியிலும் முதலாம் இடம் பெற்று வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றதுடன் சாரணியத்தில் கல்லூரி தலைவன் மாணவ தலைவர்களின் முதுநிலை மாணவராக தெரிவாகியிருந்தார். இவையெல்லாம் எனது குருநாதர் கந்தையா குடைச் சுவாமியின் அருளாலும் ஆசீர் வாதத்தாலும் கிடைக்கப்பெற்றவையே.

இப் பாடசாலையில் எனது அதிபர் பதவியை தொடர்ந்து பதவியேற்ற திரு.துரைராசா, திரு.பரம்சோதி(கனடா), திரு.சிவகுமார் (கனடா) திருமதி.மகேந்திரராசா, திரு.தில்லைநாதன் அவர்களும் எனது நோக்குக்கும் இலக்குக்கும் ஏற்ப ஒத்தாசையாக இருந்தது நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். அத்துடன் 1989 வரை வட்டாரக் கல்வி அதிகாரியாக, கல்வி அதிகாரியாக நான் நியமிக்கப்பட்டேன். இத்துடன் இப்பாடசாலை வளர்ச்சிக்கு உதவிய எனது மேலதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வீ.ஆனந்தசங்கரி அவர்கள் தந்த ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கது.

அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு.மாணிக்கவாசகர் கல்விப்பணிப்பாளர், திரு.சிமியாம்பிள்ளை இவர்களுடன் திரு.N.R.பாலசிங்கம் (பிரதம கல்வி அதிகாரி) ஜனாப் M.M.மன்சூர் (பிரதமகல்விஅதிகாரி) கல்வி அதிகாரிகள் செல்வி.நவரட்ணசிங்கம், திரு.நவரத்தினம், திரு.தங்கராசா (விளையாட்டுத்துறை) வட்டாரக்கல்வி அதிகாரிகளான திரு.ஏ.தங்கராசா ஆகியோர் அத்துடன் பூநகரியில் அதிபராக கடமையாற்றியதால் யான் 1982 முதல் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்பட்டு 1989 வரை பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றியமையும் உதவியது பௌதீக வளம என்னால் வேண்டியளவு பகிர்ந்தளிக்கப்பட்டது. இக்காலத்தில் கல்விடிப்ளோமா பயிற்சி நெறிக்கு தெரிவாகி திறந்த பல்கலைக் கழகத்தில் பயின்று திறமைச்சித்தி பெற்றிருந்தேன்.

## யாழ்ப்பாணத்தில் மீண்டும்

27.02.1980 முதல் யாழ் பாடசாலைகளுக்கு இடமாற்றப்பட்டேன். அவை பெரியபுலம் ம.வி அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அதிபராக (இரண்டு கிழமை) கடமையாற்றினேன். இத்தகைய இடமாற்றங்களால் விரக்தியுற்று அதிபர் பதவி வேண்டாமென ஆசிரியராக கடமையாற்ற அனுமதிக்கும்படி வேண்டினேன். வேண்டியதன் பேரில் நாவலர் மகாவித்தியாலயத்தில் பண்டிதர் திருநாவுக்கரசு அதிபருடன் உதவி ஆசிரியராக கடமையாற்றினேன்.

உதவி ஆசிரியராக கடமையாற்றிய இரண்டு கிழமையில் அக்காலத்தில் நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றிய எனது நண்பர் திரு.மகாலிங்கம் (அமரர்) அவர்கள் பாடசாலைக்கு வருகை தந்து "திறமையான அதிபர், உதவி ஆசிரியராக இருக்க விடமுடியாது. எமது சுய நலமும் கூட எங்கள் ஊர் யா/குப்பிளான் விக்னேஸ் மகாவித்தியாலயத்திற்கு அதிபராக வரவேண்டும்" என்று அன்புக்கட்டளை இட்டு சம்மதக்கடிதம் பெற்று அலுவலகத்தில் கடிதம் அடித்து குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி அதிபராக அனுப்பியிருந்தார். அடுத்தநாள் குப்பிளான் விக்னேஸ்வராப் பெருமானை வழிபட்டு பொறுப்பேற்றேன். இங்கு இரண்டு வருடங்கள் அதிபராக கடமையாற்றினேன். இக்காலத்தில் எம் ஏ படிப்பதற்கு யாழ்பல்கலைக்கழகத்தில் தெரிவாகி 1984ம் ஆண்டு



எம் ஏ படித்து முடித்தேன். யாழ் வட்டுக்கோட்டை கூத்து மூலம் மக்கள் பெறும் முறைசாராக்கல்வி பற்றி ஆய்வு கட்டுரை எழுதினேன்.

இப்பாடசாலையில் தெற்குப் புறத்தே ஒரு மாடிக் கட்டிடம் கட்டி முடித்ததுடன். பாடசாலைக்கும் பிள்ளையார் கோவிலுக்கும்மிடையில் மேற்குப் புறமாக இருந்த காணியை சுவீகரித்து வகுப்பறைகள் கட்டுவித்தேன். அவை உற்சவ காலத்தில் அடியவர்கள் இருந்து அன்னதானம் புசிப்பதற்கு ஏற்றவிதத்தில் பயன்பாடுடையதாக்கப்பட்டது. மாணவர்களுக்கு மலசலகூடம் புதிதாக அமைத்ததுடன் தண்ணீர் தொட்டி கட்டி குழாய்நீர் விநியோகம் செய்தேன் சுற்றிவர பெற்றோர் நிதிமூலம் மதில்கட்டுவித்தேன். குழாய் நீர் விநியோகத்துடன் பாடசாலை வளாகத்தில் வாழைத்தோட்டம், கத்தரி, மரவள்ளி, வெண்டி, பாகல், தோட்டம் பாடசாலை தோட்டமாக வகுப்பறை தோட்டமாக பரிணமித்தது. இவற்றுடன் பாடசாலை முன்பாக உள்ள வெற்றுக் காணியை விளையாட்டுப் போட்டி நடாத்த சிரமதானம் மூலம் துப்பரவு செய்து பாடசாலை மெய் வல்லுனர் போட்டி பெருவிழாவாக பிரதமகல்வி அதிகாரியாக இருந்த ஜனாப் எம். எம் மன்சூர் பிரதம விருந்தினராக இருக்க நடாத்தி முடிக்கப்பட்டது.

இங்கு அதிபராக கடமையாற்றிய காலத்தில்தான் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்பட்டேன்.

யான் போட்டிப் பரீட்சையில் தெரிவாகி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டேன். (கடிதம் இல 1 கடிதத் திகதி 9.02.1982) ஆனால் அரசியல் செல்வாக்கு இல்லாத படியால் தெரிவாகவில்லை கடமைபார்க்கும் அதிபர், கல்விடிப்ளோமா அதி உயர் சித்தி, எம் ஏ படித்துக் கொண்டிருத்தல் ஒன்றும் நேர்முகத் தெரிவில் கருத்தில் எடுத்து கொள்ளப்பட வில்லை. மேன்முறையீடு செய்தும் பலன் இல்லை. ஆனால் எனது குருநாதர் தனது ஆசியை நிறைவேற்றியே முடித்தார்.

யான் கடமைநிறைவேற்றும் அதிபராக பூநகரி ம.வி, மற்றும் குப்பிளான் விக்னேஸ்வரா ம.வியில் கடமையாற்றியதை அடிப்படையாகக் கொண்டு கடமைநிறைவேற்றும் அதிபராக

உள்ளவர்களை அந்தந்தப் பாடசாலை தரத்திற்கேற்ப மந்திரிசபை தீர்மானத்திற்கு அமைய நிரந்தரமாக்குதல் நிலைக்கு அமைய இ.க.நிர்வாக சேவை 5ம் வகுப்பிற்கு 21.04.1982 முதல் பதவி உயர்த்தப்பட்டேன் முதலில் எனக்கு 3ம் தர அதிபர் பதவியே தரப்பட்டது. அதனையும் எதிர்த்து மேல் முறையீடு செய்ததன் பேரில் அதனை இரத்துச் செய்து இ.க.நி.சேவை 5ம் வகுப்பு 21.04.1982 முதல் தரப்பட்டது. இதற்கு முழுதாக உதவியவர் எனது வாண்மை உயர்வுக்கு வழி காட்டிய ஜனாப் எம்.எம்.மன்சூர் அவர்களே. வாண்மை ரீதியாக வழிகாட்டிய குருவாக என்னால் இன்றும் போற்றி மதிக்கப்படும் பெரும் உத்தமர். எனக்கு 3ம் தர அதிபர் பதவி தந்து இரத்துச் செய்து பின்பு இ.க.நி.சேவை 5ம் வகுப்பு பிந்தி கிடைத்தமை கடமையேற்றதற்கிணங்க இ.க.நி.சேவை 1ம் வகுப்பு பதவி உயர்வில் பாதிப்பை ஏற்படுத்தியது யான் மேன்முறையீடு செய்தும் கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. சம்பள உயர்வு குறைவாக கிடைத்தது.

கடமை நிறைவேற்றும் அதிபர்களாக இருந்த என்னைப் போன்ற திரு.பொன்சபாபதி, (வட்டக்கச்சி ம.வி) திரு.மகாதேவா (மல்லாகம் ம.வி) ஆகியோர்க்கும் அன்னார் பதவி உயர்வைப் பெற்றுக் கொடுத்தார். எனது பதவி உயர்வுடன் ஜனாப் எம்.எம்.மன்சூர் அவர்கள் கிளிநொச்சி மாவட்டம் புதிதாக பிரகடனப்படுத்தப்பட்டு யாழ் மாவட்டத்தில் இருந்து தனியான மாவட்டமாக இயங்கத் தொடங்கிய பொழுது அதன் மாவட்டக் கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் முல்லைத் தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளராகவும் 1983ல் நியமிக்கப்பட்டார்.





**உலா 06** உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே கல்லாதார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி நிர்வாகியாக...

அவ்வாறு நியமிக்கப்பட்ட பொழுது பதவி அணிகள் (*Cadre*) வெற்றிடமாக வந்தவுடன் என்னை அவர் பரந்தன் வட்டாரக்கல்வி அதிகாரியாக பதவி உயர்த்தினார். எங்கள் நியமனத்துடன் ஏற்கனவே பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த திரு.அ.தங்கராசா (இங்கிலாந்து) அவர்கள் கிளிநொச்சி மாவட்ட கல்வி அதிகாரியாகவும் அமரர்.திரு.சண்முகநாதன் (கிளிநொச்சி ம.வி அதிபர்) வட்டாரக்கல்வி அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டு பதவி உயர்த்தப்பட்டனர். எங்கள் மாவட்ட கல்விப் பணிமனையாக கிளிநொச்சி நெற் சந்தைப்படுத்தும் சபைக்கட்டிடம் பயன்படுத்தப்பட்டது. யான் பரந்தன் வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த இரு மாதங்களில் திரு சண்முகநாதன் இருதய நோயினால் பீடிக்கப்பட்டமையால் ஜனாப் மன்சூர் அவர்கள் என்னை விட்டுக் கொடுத்து கிளிநொச்சி வட்டாரத்தைப் பொறுப்பேற்கும்படி வேண்டியதன் பேரில் இருவரும் மாற்றப்பட்டோம். அவ் வேளையில் ஜனாப் மன்சூர் சேரிடம் வேண்டிக் கொண்டேன். அவர் சுகமாகியதும் திரும்பவும் என்னை பரந்தன் வட்டாரத்திற்கு மாற்றி விடும்படி. அந்த உத்தரவாதத்தின் பேரில் திரு.சண்முகநாதன் அமெரிக்கா பயணம் சென்ற பொழுது என்னைத் திரும்பவும் பரந்தன் வட்டாரத்திற்கும் ஜனாப் இனானுான் அவர்கள் கிளிநொச்சி வட்டாரத்திற்கும் நியமிக்கப்பட்டனர். அதே காலத்தில் திரு.S.கமலநாதன் விஞ்ஞான கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் இலங்கைக் கல்வி

நிர்வாக சேவை தரம் 4 போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தினேன். (கடித இல *ESC/FS/1/123*) திகதி 21.10.1985) இவற்றிலும் அரசியல் செல்வாக்கு இல்லாமல் இப்பதவி நேர்முகத் தேர்வில் கிடைக்க வில்லை.

கிளிநொச்சி வட்டாரத்தில் வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த காலத்தில் நல்ல அனுபவங்கள் கிடைத்தன. அக்காலத்தில் வட்டாரப் பாடசாலைகள் அனைத்தும் வட்டாரக் கல்வி அதிகாரி (C.E.O)களது அண்மித்த நேரடி மேற்பார்வையிலேயே இருந்தன. இப்பாடசாலைகளது வருடாந்த விபரத்திரட்டு ***(Anual Return)*** திரட்டுவதுடன் ஒவ்வொரு ஆசிரியர்கள் அதிபர்களது, சம்பள உயர்வை சிபார்சு செய்பவர்களும் அவர்களே. அத்துடன் அப்பாடசாலைகளை நேரடியாகத் தரிசித்து அப்பாடசாலைகளது மனிதவள, பௌதீகவளத்தேவைகளையும் அவர்களே சிபார்சு செய்யவேண்டும். அந்த அடிப்படையில் பாடசாலைகளை தரிசித்தே ஆகவேண்டும். 1980 களில் காடுகள் நிறைந்த இடங்கள் சுருக்கப்பாதையால் துவிச்சக்கர வண்டியிலும் பஸ்வண்டி மூலமும் கள வேலைகளை மேற்கொள்வது. அனேகமாக அப்பாடசாலை அதிபர்களது ஒத்துழைப்பு பெறப்பட்டது. அவர்கள் ஆசிரியர்களை எம்மை கூட்டிச் செல்ல அனுப்பி வைப்பார்கள். பாதை காட்டுவதற்கு எங்களது உதவியாளரான வட்டாரக்கல்வி உதவியாளராக ஒரு ஆசிரியர் பாடசாலையில் இருந்து விடுவிக்கப்பட்டு பணி ஆற்றுவார். எனக்கு கிளிநொச்சி வட்டாரத்தில் கடமையாற்றியவர் ஜெயதீரவரதன் (அதிபராக உள்ளார்) உதவியாளர்களையும் கூட்டிச்சென்று அவர்களின் உதவியுடன் விபரத்திரட்டுக்களை திரட்டுவது வழமை.

கிளிநொச்சியில் இவ்வாறு கடமையாற்றிய பொழுது வன்னேரிக்குளம் அக்கராயன்குளம், கோணாவில் போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு சென்று வந்தோம். கோணாவிலில் இருந்து கிளிநொச்சிக்கு சுருக்கப்பாதையால் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தால் கடமை முடித்து திரும்பி வந்த பொழுது, ஒற்றைஅடிப்பாதையால் சயிக்கிளில் ஓடி வந்த பொழுது மாலைவேளை 5மணியளவில் அருகே யானைக்கூட்டம் கொப்புகளை முறித்து தின்னும் சத்தம்கேட்டது கூட்டிவந்த ஆசிரியர்கள், சைகை காட்டி இறுக்கி உழக்கும்படி கூறினார்கள்:



ஒரே உழக்குதலில் ஆண்டவன் துணையுடன் ஒருவாறு கிளிநொச்சி கல்வித்திணைக்களத்திற்கு வந்து மூச்சுவிட்டோம். பயத்தில் இரவு 7 மணிக்கே உணவு அருந்தி விட்டு படுத்து விட்டோம். அப்பொழுது எங்கள் கல்வித்திணைக்களம் கிளிநொச்சி கனிஷ்ட ம.வித்தியாயலத்தில் (அமரர் இராசேந்திரம் அதிபர்) வட்டக்கச்சிக்கு செல்லும் றோட்டுக்கு அருகாமையில் உள்ள இருமாடிக்கட்டிடத்தில் இயங்கியது. யாம் எல்லாரும் கிளிநொச்சி அதிபர் பணிமனையில் கல்விப்பணிப்பாளர் மன்சூர் உட்படத் தங்கினோம்.

இவ்வாறு தங்கிய காலத்தில் ஒருநாள் இரவு 10 மணிக்கு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. ஏகப்பட்ட செல்கள்வந்து விழுந்தன. அவ்வெடிச்சத்தத்தினால் யாவரும் விழித்துக் கொண்டோம். விழித்து இரண்டு மூன்று மணித்தியாலயம் பயத்தினால் ஒருவரை ஒருவர் பார்த்து முழுசிக் கொண்டோம். பிரதம எழுதுவினைஞர் பத்மநாதன் பயத்தினால் அடிக்கடி மலகூடத்திற்கு சென்று வந்தார். எல்லோரும் செய்வதறியாது இரவு 12 மணிக்கு ஊர்ந்து பரவிப்பாஞ்சானுக்கு சென்று அங்கிருந்து கண்டாவளை சென்று தட்டுவன் கொட்டி பின்பக்கமாக நடந்து வந்து பளைக்குச் சென்று அடுத்த நாள் காலை யாழ்ப்பாணம் பஸ்ஸில் வீடுகளுக்கு வந்து சேர்ந்தோம்.

திணைக்களத்தில் தங்கிய காலத்தில் மாலையிலும் காலையிலும் திருவையாற்றின் வழியாக வடியும் இரணைமடுக்குளத் தண்ணீரில் பாலத்தின் அடியில் குளித்து இரவு சாப்பிட்டு படுத்து திடீர் பாடசாலைப் பரிசோதனைக்கு காலை 7மணிக்கு பாடசாலையில் நிற்போம் அக்காலங்களில் கூட்டாகச் செல்வதும் கடமையை சரியாக செய்து ஆசிரியர்களுக்கு கற்பித்தலிலும் மாணவர்களுக்கு கற்றலிலும் வழிகாட்டி மனநிறைவுகண்டோம்.

யான் அக்காலத்தில் இராமநாதபுரம் வட்டக்கச்சிக்கு அடிக்கடி பாடசாலைகளை தரிசித்து வந்தேன். இராமநாதபுரம் மாணவர்களின் க.பொ.த. சாதாரண நல்ல பெறுபேற்றின் அடிப்படையில் உயர்தர வகுப்பு கலை மாணவர்களுக்கு ஆரம்பிக்க எனது சிபார்சின் பேரில் கல்விப்பணிப்பாளர் ஜனாப்.எம்.எம்.மன்சூர் அனுமதி கொடுத்திருந்தார். அதே போல வட்டக்கச்சி

அதிபருக்கெதிரான விசாரணையின் பின் நன்றாக அபிவிருத்தி செய்தவர் என்றும் பார்க்காமல் உருத்திரபுரம் ம.வித்தியாலயத்திற்கு அதிபராக இடமாற்றிவிட்டோம். அவ் அதிபரின் திறமை ஆளுமையால் அவ்விருபாடசாலைகளும் வட்டாரத்திலேயே நல்ல பெறுபேறுகளை ஈட்டி கட்டிட வசதிகளுடன் விருத்தியாயின. அவர் எங்களது இ.க.நிர் சேவை 5ம் வகுப்பைச் சார்ந்தவர். அவ் அதிபரால் நடாத்தப்படும் இல்லவிளையாட்டுப்போட்டி மாவட்டத்திலேயே முதற் தரமான ஒழுங்கமைப்பு விளையாட்டுப்போட்டியாகும். அதிபரின் ஆளுமையே அவர் தமிழ்பயிற்சி பெற்ற ஆசிரியராக இருந்தும் ஒழுங்கமைப்புக்கு காரணமாக அமைந்தது.

பரந்தன் வட்டாரத்தைப் பொறுத்தமட்டில் நல்ல கல்விப்புல அனுபவங்கள் எனக்கு ஏற்பட்டது. இவ்வட்டாரம் எனக்கு புதிதானதல்ல. யான் முன்பு பூநகரி மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றியிருந்தமையால் சக அதிபர்களாக இருந்தவர்களை நன்கறிவேன். அவர்களது ஒத்துழைப்பும் நிறைய இருந்தது. இவ் வட்டாரம் ஒரு பரந்த பிரதேசம் பூநகரி, பளை, களவெட்டித்திடல், கண்டாவளை, தர்மபுரம், புளியம்பொக்கணை, முரசுமோட்டை மாசார், முகாவில், பரந்தன் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கி இருந்தது.

அக்காலம் பாடசாலைகளுக்கு நல்ல சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் பெற்றோர்களது ஒத்தாசை ஊக்கமளித்தது. அதிபர்களதும் ஆசிரியர்களதும் கீழ்ப்படிவு, சேவைநோக்கு ஆர்வத்தை கூட்டியது. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் கடமையாற்றும் பாடசாலைகள் மிகவும் பின்தங்கிய கஷ்டப்பாடசாலைகளாக இருந்தமையால் அங்கெல்லாம் விரும்பிச் சென்று கடமையாற்றுபவர்களை ஊக்குவித்து தட்டிக்கொடுத்து எம்மை அர்ப்பணித்து சேவை செய்தோம், சந்தோஷப்பட்டோம், சாதனைபடைத்தோம். நடந்தும் சயிக்கிளில் ஓடியும் வண்டிலில் தோணியில் பயணம் செய்தும் மனம் சளைக்காது சேவை செய்தோம்.

பரந்தன் வட்டாரம் எனக்கு களவேலைக்கு நல்ல தளமாகவும் வளமாகவும் அமைந்தது. பளை மகாவித்தியாலயத்தில் எமது



வட்டாரக் கல்வி அலுவலகம் இருந்தது. திங்கள், வெள்ளி, நாட்களில் கல்வி அலுவலகத்திலும் புதன்கிழமை திணைக்களத்திலும் செவ்வாய் வியாழக்கிழமைகளில் பாடசாலை தரிசிப்புக்களிலும் ஈடுபட்டோம்.

பரந்தன் வட்டாரத்தில் பூநகரி ஒரு பரந்த பிரதேசம் மிகவும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளைக் கொண்டது. இங்கு யாழில் இருந்து கேரைதீவு சென்று சங்குப்பிட்டியில் பஸ் எடுத்து வாடியடியில் இறங்கி பூநகரி மகாவித்தியாலயத்தில் இருந்து துவிச்சக்கரவண்டி மூலம் செல்வோம்.

கூடுதலாக அரச அலுவலர்களும் எங்களுடன் தினமும் பயணம் செய்வார்கள். தோணியில் ஏறிச் சென்று கேரதீவில் இருந்து சங்குப்பிட்டியை கடக்கும் பொழுது அவசரத்தில் ஒரு பக்கத்திற்கு சனம் வந்துவிட்டால் தோணி அந்தப்பக்கம் சரிவுகாணும் அப்பொழுது அணியத்தில் இருப்பவர்கள் கடலில் விழுந்து விடுவார்கள். எனக்கு ஒருமுறை நல்ல அனுபவம் ஏற்பட்டது. படகு சரிந்து விழுந்து மனைவியார் கட்டித்தந்த தோசைப்பார்சல் நனைந்து மிதக்கத் தொடங்கியது. பின்பு உடுப்பு மாற்றி கடமைக்குச் சென்றேன்.

பூநகரியில் கௌதாரிமுனை, வினாசிஓடை என்ற இரு இடங்கள் மணல் நிறைந்த இடம். துவிச்சக்கர வண்டியில் ஓடமுடியாது. உருட்டிச் செல்ல வேண்டும். கால் வைத்தால் முழங்கால் அளவிற்கு மணல் நிறைந்த பாதை. இதனால் அங்கு கூடுதலான வட்டாரக் கல்வி அதிகாரிகள் பாடசாலைக்குச் சென்று தரிசிப்பது கிடையாது. பரம்பன்கிராய் பாடசாலையில் சம்பவத்திரட்டுக் கொப்பியை எடுப்பித்து அதிபரை வரும்படி அழைத்து அப்பாடசாலையில் வைத்து இரு பாடசாலைகளது வருடாந்த விபரத்திரட்டும் முடிக்கப்படும்.

ஆனால் நானும் நண்பர் தங்கராசாவும் இதற்கு விதி விலக்கானவர்கள். எங்களது பதவிக்காலத்தில் இருவரும் அங்கு சென்று ஒருநாள் தங்கி மறுநாள் வருவது வழமை. நண்பர் அரியம் (வில்லடி அதிபர்) சயிக்கிளில் எம்மை பரம்பன்கிராயில் இருந்து அழைத்துச் செல்வார். கவுதாரிமுனை, வினாசியோடை

அதிபர்களும் எமக்கு மதிய இரவு, காலை உணவு அளித்து தங்கள் கஷ்டத்தில் எம்மையும் பங்கெடுக்க வைத்தனர். வருடத்தில் ஒரு நாளாவது தாம்படும் துன்பம் இவ்வையகமும் பெறுக எனக் காட்டி விடுவர். தற்பொழுது வெள்ளவத்தை *W.A.D.* சில்வா மாவத்தையில் வசிக்கும் ஓய்வுபெற்ற அதிபர் சிவராசா (சிவா) இக்கதைகளை ஞாபகப்படுத்துவார்.

இதே போலவே அத்தாய், செம்மண்குன்று, தம்பிராய் நல்லூர் பகுதிகளும் பூநகரிக்கு கிழக்கேயும், வடக்கே கறுக்காய்தீவு, ஞானிமடம் ஆகிய பாடசாலைகளும் என்னால் தரிசனம் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைகளாகும். இப்பாடசாலைகளது எல்லா இல்லமெய்வல்லுனர் போட்டிகளுக்கும் பிரதம விருந்தினராக அழைப்பார்கள். பெற்றோர்களுடன் ஆசிரியர், மாணவர்களுடன் சமூகமயமாவோம். அவர்களது கஷ்டங்களை அறிந்து எதிர்பார்ப்பை அறிந்து அவற்றை நிறைவேற்றிய ஆத்மதிருப்தி எனக்கு ஏற்பட்டது.

இவ்விடங்கள் வயல்கள் நிறைந்தவை குறிப்பாக கறுக்காய்தீவு மொட்டைக்கறுப்பன் நெல்லுக்கு பேர் போனது. வாடியடிச்சந்தியில் கைக்குத்து குத்தரிசி விற்பார்கள். அதனை இங்குவரும் அரச அலுவலர்கள் எடுத்துச் செல்வார்கள். குறிப்பாக செத்தல் மிளகாய், கத்தரிக்காய், மொட்டைக்கறுப்பன் அரிசி வாய்க்கு நல்ல உருசியாக இருந்தது. மொட்டைக்கறுப்பன் அரிசி மாப்பிட்டும், குத்தரிசிக் கஞ்சியும் வாய்க்கு உருசியானவை.

பூநகரிப்பாடசாலைகளில் ஓராசிரியர் கடமையாற்றும் சிறிய பாடசாலைகளது அதிபர்களது முகாமைத்துவ பிரச்சினைகள் சம்பந்தமாக எனது *The Role of Principals in managing small school in difficult areas in Srilanka!* என்னும் ஆங்கில ஆய்வு நூலில் எழுதியுள்ளேன். இப்பிரதேச கல்வியியல் பிரச்சினைகளை தெளிவாக ஆர்வம் உள்ளவர்கள் கற்றறிந்து கொள்ளலாம்.

பரந்தன் வட்டாரத்தில் களவெட்டித்திடல் கண்டாவளை, தர்மபுரம், முரசு மோட்டை, கிளாலி பகுதிகளில் கள வேலைகளில் திருப்தி கண்டோம். நாம் கடமையாற்றிய காலம் 1980கள் யுத்த மேகம் கார்சூழ்ந்த காலம். களவெட்டித்திடல் அ.த.க.பாடசாலைக்கு



வருடாந்த விபரத்திரட்டு திரட்ட நானும் நண்பர்தர்மஇரத்தினம் (கண்டாவளை முன்னாள் அதிபர்) சயிக்கிளில் *Circuit Bag* கொழுவியபடி காட்டினூடாகச் சென்றோம் மக்கள் நடமாட்டம் குறைந்த ஒருநாள் ஹெலி ஆட்களை தேடியது. நாம் இருவரும் தூரவந்த ஹெலியின் கண்ணில் அகப்பட்டுவிட்டோம் எங்களைக் கண்டதும் தாழப் பறந்து சுட்டுத் துரத்தியது. இருவரும் சமயோசிதமாக சயிக்கிளை காட்டில் மரத்தில் தெரியாமல் சாத்திவிட்டு அடர்ந்த காட்டுக்குள் தவழ்ந்து ஒரு இடத்தில் இருந்து வேறு இடத்துக்கு மாறி விட்டோம். ஹெலி *Fire* பண்ணி விட்டு சென்றதன் பின் ஒருவரை ஒருவர் உயிரோடு இருக்கின்றோமா என எழுந்து பார்த்து இருவரும் தப்பிவிட்டோம் என்ற ஆனந்தத்தில் சயிக்கிளை எடுத்து கண்டாவளையில் இறங்கினோம். இதைக் குறிப்பிடுவதன் நோக்கம் எவ்வளவு கஷ்டம் எடுத்து ஓடிச் சென்று அக்காலத்தில் வசதிகள் குறைந்த நிலையில் கடமையாற்றினோம் என்பதை தற்போதைய வசதிகளுடன் பணியாற்றும் கல்வி அலுவலர்களுக்கு கூறுவதற்கே.

கண்டாவளை ம.வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி மிகவும் கலகலப்பான சந்தோஷமான நிகழ்வு. நண்பர் தர்மரத்தினம் முதல் நாளே அழைத்து விடுதியில் தங்க வைப்பார். மாலையில் குளித்து இரவு சாப்பிட முன்பு கருப்பணி குடித்தோம். உடன் இறக்கிய பதார்த்தமாக இருந்த படியால் உடம்புக்கு மிகவும் தென்பாக இருக்கும். கோழிக்கறியும் கண்டாவளைக்குத்தரிசியும் வாய்க்குருசியாக அமையும். பெற்றோர்கள் மாட்டு வண்டி ரக்கடரில் படங்குடன் வந்து தங்கள் தங்கள் பிள்ளைகள் உள்ள இல்லங்களுக்கு பந்தல் போட்டு சோடிப்பார்கள். சமூக கூட்டுணர்வு அத்தகைய தனிச் செயற்பாட்டில் மிளிரும். அவ்வூர் விளையாட்டுத்திருவிழாவாக அமையும். கயிறு இழுத்தல், சாக்கோட்டம் றிலே அற்புதமாக அமையும். அன்று பாடசாலைப் பிரச்சினைகள் பற்றி பெற்றோர் மனம் விட்டு கதைத்து தீர்வு கேட்பார்கள். அவற்றை நிறைவேற்றிக் கொடுத்தே நாம் மீளவும் செல்ல முடியும். தப்ப விடாமாட்டார்கள். எவ்வளவிற்கு நல்லவர்களோ அந்தளவிற்கு கண்டிப்பானவர்களும் கூட.

தர்மபுரம் அ.த.க.பாடசாலை இல்ல மெய்வல்லுநர்

விளையாட்டுப்போட்டிக்கு ஆரம்ப நேரத்திற்கு பி.ப 2மணிக்கு சிறிது பிந்தி விட்டேன் (யாழில் இருந்து வந்தபடியால்) ஆனால் குறித்த நேரத்தில் அதிபரால் ஆரம்பித்துவைத்து நிகழ்ச்சிகள் நடந்தன. என்னை அழைத்துச்சென்று இருத்தியதும் அதிபரை பாராட்டி யானும் பிரதமவிருந்தினர் இருக்கையில் இருந்து பார்வையிட்டேன். “அய்யர் வரும் வரை அமாவாசை காத்திருக்குமா” என்ற முதுமொழிக்கிணங்க ஆரம்பித்து வைத்தமையை எனது சொற்பொழிவில் பாராட்டினேன். அப்பாராட்டுக்குரியவர் தற்போதைய கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளராக இருக்கும் திரு.த.குருகுலராசா. அவர்களே நேரமுகாமை முன்மாதிரியானது. வ.க.அதிகாரியும் ஏனைய அலுவலரைப்போல் கோபிக்காது தனது தவறை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு வேண்டும்.

கிழக்கே உள்ள தட்டுவன் கொட்டி, உமையாள்புரம் பாடசாலைகளும் பூநகரிப் பாடசாலைகள் போன்று பின்தங்கிய பாடசாலைகளே. இப்பாடசாலைகளில் உமையாள்புரம், ஆனையிறவு அ.த.க.பாடசாலைகள் A9 றோட்டருகில் இருப்பதால் அதிபர்கள் ஆசிரியர்கள் கஷ்டமின்றி அங்கு சென்று கடமையாற்றினார்கள். ஆனால் தட்டுவன் கொட்டி அ.த.க பாடசாலைக்கு ஆசிரியர்களை அதிபரை அனுப்புவது பெரும் சிரமமாக இருந்தது. A9 வீதியில் இருந்து 5 கிலோமீற்றர் கிழக்கே உள்நோக்கி செல்ல வேண்டும் இதனால் ஆசிரியர்கள் சென்று சேவையாற்றத் தயங்குவார்கள் முதல் நியமன ஆசிரியர்களையே இப்பாடசாலைக்கு அனுப்பி வைப்பது வழக்கம். தங்கிநிற்கும் ஆசிரியர்களும் திங்கள் காலை 10 மணிக்கு வருவார்கள் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு புறப்படுவார்கள். ஆனால் தொழில் ஆர்வம் அர்ப்பணிப்பு கொண்ட ஆசிரியர்கள் திங்கள் முதல் வியாழன் வரை மாலை வகுப்புக்களை வைத்து மாணவர்களுக்கு தொண்டு செய்தார்கள்.

இதற்கு தீர்வு காண அப்பகுதியில் இருந்து யாழ் மாவட்டத்தில் க.பொ.த.சாதாரண வகுப்பு வரை கற்று திறமையானவர்களை நியமனத்தின் போது இனங்கண்டு நியமித்திருந்தேன். அவர்களில் ஒருவர் திருமதி.த.சண்முகநாதன் (அதிபர்) திரு.பஞ்சலிங்கம் (அதிபர்) திருமதி.கந்தசாமி ஆகிய



மூவரையும் நியமித்ததன் பின்பு பாடசாலை ஒழுங்காக நடைபெற்றது. இங்கு முன்பு எட்டாம் தரம் வரை வகுப்புக்கள் நடைபெற்றிருந்தாலும் பின்பு ஆசிரியர்களது தட்டுப்பாட்டுப் பிரச்சினையால் 5ம் வகுப்புவரை மட்டுமே நடைபெற்றது. இம்மாணவர்கள் அங்கு நல்ல சீரான வீதி A9 னை தொடுக்காத காரணத்தினால் மாணவர்கள் குறுக்குப்பாதையால் ஆனையிறவு அ.த.க.பாடசாலைக்கு சென்று கற்று வந்தனர் அத்துடன் அங்குள்ள மாணவர்கள் சிறு வயதில் தொழிலுக்கு அதாவது வயல்வேலை தோட்டவேலை, இறால் பிடிப்பு, உப்பள வேலைகளுக்குச் சென்று வந்தமையால் இவர்களது கல்வி கற்பதில் பல சிக்கல்கள் தோன்றியிருந்தன. எங்கள் வட்டாரத்தில் அதனைக் கருத்திற் கொண்டு அதிபரும் கல்வித்திணைக்கள வட்டாரங்களும் சேர்ந்து சில பரிகார கற்பித்தல், கற்றல் செயற்பாடுகளை அறிமுகம் செய்திருந்தோம்.

ஆனையிறவு அ.த.க.பாடசாலை முன்னைய இராணுவ முகாமை அண்டியிருந்தும் A9 வீதியின் அருகாமையில் இருந்தமையாலும் யாழ் ஆசிரியர்கள், அதிபர்கள் தினமும் வந்து கற்பித்துச் சென்றார்கள். அவ்வரிசையில் திரு.தங்கராசா முக்கியமானவர் (கனடா). இங்கு அதிபராக இருந்தவர். அவருடைய காலத்தில் வருடாந்த விபரத்திரட்டு சேகரிக்கச் சென்ற பொழுது (1986) அவரது பாடசாலைக் கணக்கெடுத்தல் நிகழ்ந்தபொழுது பழைய நூல்களை பரீசீலித்த பொழுது யான் பல காலம் தேடி அலைந்த ‘கல்வியின் புதிய பாதை’ என்ற நூல் (1972ம் ஆண்டு கல்விச்சீர்திருத்தம்) அகப்பட்டது. அதனை அதிபரின் அனுமதியுடன் எடுத்து வந்தேன். அந்நூல் யான் யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்றிய பொழுது பல மாணவர்களுக்கு போட்டோப்பிரதி செய்து கொள்ள சந்தர்ப்பம் அளித்தது. அந்தளவில் அந்தப் பாடசாலை கட்டிடம் அழிக்கப்பட்டாலும் எனது மனதைவிட்டு அகலாது இருக்கின்றது.

பள.மகாவித்தியாலயம், சோரன்பற்று, தர்மக்கேணிப் பாடசாலைகள், A9 வீதியில் இருந்து அண்மையில் இருந்த படியால் அவற்றை நிர்வகிப்பது வட்டாரக் கல்வி அதிகாரி என்ற அடிப்படையில் கஷ்டம் இருக்கவில்லை. ஆனால் பளைப் பிரதேசத்தில் உள்ளே இருந்த அல்லிப்பளை அ.த.க.புலோப்பளை

அ.த.க. பாடசாலைகளுக்கு சென்று வருவதில் மிகவும் கஷ்டப்பட்டேன் இங்கு துவிச்சக்கர வண்டிமூலமே சென்று வருவது வழக்கம். *1983 - 1988* வரை நான் கடமையாற்றிய காலத்தில் வழியில் இராணுவத்தினர் அடிக்கடி வந்து செல்வதால் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தேன். சயிக்கிளில் முன் காண்டிலில் கொழுவிச் செல்லும் *Circuit Bag* ஒரு *C.E.O.* வின் அடையாளமாக காப்பாற்றிவந்தது. அங்கும் மணல் நிறைந்த வீதியில் மிகவும் சிரமத்தின் மத்தியிலேயே சயிக்கிளை ஓட்டிவந்தோம்.

இயக்கச்சி சந்தி, இன்னும் *A9* வீதியில் உள்ள கட்டைக்காட்டுச்சந்தி என்பன எனக்கு நல்ல அனுபவமாக இருந்தது. இச்சந்திகளில் இருந்து கோவில் வயல் பாடசாலை, முகாவில் பாடசாலைகளுக்கு சென்று வந்தேன். அங்கு நிறைய *Life Risk* ஆக இருந்தது. குறிப்பாக அக்காலத்தில் இராணுவம் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட காலம். ஆனாலும் அப்பாடசாலைகளது கல்வி கற்றல் கற்பித்தலை மேற்பார்வை செய்து, வருடாந்த விபரத்திரட்டையும் திரட்ட வேண்டியிருந்தது. அடிக்கடி மறிப்பார்கள். யான் யார் என்று விளக்கமளித்து அரச தொழில் அட்டை சிங்கள மொழியில் காணப்பட்டமையாலும் சிங்களம் கதைக்கத் தெரிந்த படியாலும் இறைவன் காப்பாற்றி சேவையில் உயரவைத்தது மட்டும் அல்லாமல் வாழவும் வைத்துள்ளான். வெடிச்சத்தங்கள், ஆட்களைத்துரத்தல். அவர்கள் ஓடி மறைதல் சுட்டு விட்டு ஒழித்தல், போன்ற நிகழ்வுகள் ஏராளம்.

உண்மையில் இந்நூலை எழுத வேண்டிய நினைவு வந்ததே யான் *A9* வீதி *2002*இல் திறந்ததும் கொழும்பில் இருந்து அலுவலக விடயமாக *A9* வீதியில் வந்தபொழுது எனது உதவி உத்தியோகத்தர் சாரதியாருடன் கதைப்பேன் அவர்கள் வற்புறுத்தினார்கள் "நீங்கள் பெற்ற இவ்வனுபவங்கள், கஷ்டங்களை மற்றவர்கள் அறிந்து கொள்ளவும் நிர்வாக அனுபவத்தைப் பெறவும் ஒரு நூலை ஆக்கும்படி" கூறினர். அதன் வெளிப்பாடாகவே இந்நூல் உங்கள் கையில் தவழ்கின்றது. உலாதந்த நினைவாக கல்வி உலா.

மசார் ம.வித்தியாலயம் புதுக்காட்டுச் சந்தியில் இருந்து கிழக்கு நோக்கி உள்ளது. இப்பாடசாலைக்கு சோரன்பற்று கணேசா ம.வித்தியாலயத்தில் இருந்து சயிக்கிள் பெற்று தென்னைகள்



அடர்ந்த மணல் நிறைந்த வீதியால் கஷ்டப்பட்டுச் செல்லவேண்டும். நண்பர் சிதம்பரப்பிள்ளை அவர்கள் எனது காலத்தில் அதிபராக இருந்தார் அவர் தனது பாடசாலைக்கு வந்து தான், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், படும் கஷ்டங்களை கண்டறிய வேண்டும் உதவ வேண்டுமென அன்புக் கட்டளை விடுவார். பாடசாலைக்கருகாமையில் உள்ள ஆசிரியரிடம் கூறி நாம் செல்லும் நாளில் நல்ல கோழி இறைச்சிக்கறியும் குத்தரிசிச் சோறும் நண்டு, இறால் கறியும் ஆக்கித்தருவார். எல்லாவேலைகளும் முடித்து பி.ப. 3மணியளவில் பாடசாலையை விட்டு புதுக்காட்டுச் சந்திக்கு வந்து பஸ் எடுத்து யாழ்ப்பாணம் இரவு 7மணிக்கு வந்து சேருவோம்.

## தபால் பெட்டி கல்வி நிர்வாகம்

இச் சந்தர்ப்பத்தில் பளை, பரந்தன், பூநகரிப் பிரதேசங்களை பரந்தன் வட்டாரம் என்றும் நிர்வகித்த வட்டாரக்கல்வி அதிகாரிமுறையைப் பற்றி எழுதுவது சிறந்ததெனக் கருதுகின்றேன். இது ஓர் நல்ல பயன்பாடான கல்வி நிர்வாக செயற்பாடாகவே இருந்தது. இதனை ஒரு தபால் பெட்டி *(Post Box)* கல்வி நிர்வாகம் என்று அழைத்தார்கள் அதாவது வ.க. அதிகாரி ஒவ்வொரு புதன்கிழமையும் திணைக்களம் சென்று கல்விப் பணிப்பாளரது கூட்டத்தில் பங்கு பற்றி அவர் விளக்கமளிக்கும் சுற்று நிபங்கள், மற்றும் கல்வி நிர்வாக அறிவுறுத்தல்களை பெற்று வந்து மாதம் ஒருமுறை அதிபர்களுக்கு கூட்டும் வட்டார அதிபர்கள் கூட்டத்தில் தெளிவு படுத்துவார். சுற்று நிருபங்கள் காகிதாதிகள், வரவு இடாப்பு பதிவேட்டுக் கொப்பிகள் ஆகியவற்றை பகிர்ந்தளிப்பார். அதே போல் அவர்கள் கையளிக்கும் கடிதங்கள், பதில்கள் கோரிக்கைகளை பெற்றுக் கொண்டு கல்வித்திணைக்கள பணி மனையில் கையளிப்பார் இதனால்தான் அது *Post Box* நிர்வாக முறை என அழைக்கப்பட்டது.

எங்கள் பரந்தன் வட்டாரத்தில் 74 பாடசாலைகள் எனது நேரடி மேற்பார்வைக்குட்பட்டது இவற்றுள் ஆரம்பப் பாடசாலை, கனிஷ்ட வித்தியாலயம், சிரேஷ்ட மகாவித்தியாலயங்கள் அடங்கின. இவ்வட்டாரத்தில் பளை ம.வி, பூநகரி ம.வி முரசுமோட்டை முருகானந்த ம.வி, பரந்தன் இந்து வித்தியாலயம்

இருந்தன. இவற்றுக்கு *Feeder School* ஆக ஏனைய கனிஷ்ட்ட, ஆரம்பப் பாடசாலைகள் விளங்கின. மாணவர்களது உயர்கல்விக்கு இம் மகாவித்தியாலயங்கள் பொறுப்பேற்றிருந்தன.

அதிபர்கள் ஆசிரியர்கள் நிர்வாக ரீதியாக வட்டாரக் கல்வி அதிகாரிகளில் தங்கியிருந்தார். கூடிய மரியாதை மதிப்பு வைத்திருந்தார்கள். நாங்கள் கூறும் தூரநோக்கு அறிவுரைகளை கேட்பார்கள். அந்த அடிப்படையில் அறிவுரை வழங்கி வசதிகளை அளித்தன் அடிப்படையில் பயிற்சி ஆசிரியராக இருந்த திரு.க.ஸ்ரீகணேசன் இன்று கலாநிதி க.ஸ்ரீகணேசனாகியுள்ளார். பல்கலைக்கழகத்தில் ஆங்கில முதுநிலை விரிவுரையாளராகி அதிக ஆங்கில புலமையாளர்களை உருவாக்கிறார். மட்டற்ற மகிழ்ச்சி.

அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பவரும் நேரடி Bossம் இவரே. ஆதலால் நிறையப் பயப்பட்டார்கள். இடமாற்றம், சம்பளஉயர்வு ஆகியன இவரது கையில் இருந்தபடியால் பயந்து நடவடிக்கை எடுக்கலாம் என்ற கடமை அடிப்படையில் கடமையாற்றினார்கள். இப்பாடசாலைகள் ஒரு தலைவனாக ஏற்று நடந்தார்கள். கஷ்ட நஷ்டங்களை அணுகி கூறி தீர்த்துக் கொண்டார்கள். வட்டார இல்ல மெய்வல்லுனர் மற்றும் கலை நிகழ்வுகள் ஒருவரில் ஒருவராக விளங்கி நல்ல முறையில் நடக்க இடமளித்தது. கூடுதலாக பரந்தன் வட்டார மத்திய போட்டிகள் பரந்தன் இந்து வித்தியாலயத்திலேயே நடை பெற்றது. இது முதல் பரந்தன் கனிஷ்ட ம.வித்தியாலயமாகவே இருந்தது. அதேபோல தர்மபுரம் கனிஷ்ட வித்தியாலய, இயக்கச்சி கனிஷ்ட வித்தியாலயம் நல்லூர் அ.த.க பாடசாலை கண்டாவளை கனிஷ்ட வித்தியாலயங்கள் விளங்கின. இவையாவும் அதிபர், ஆசிரியர், பெற்றோர்களது அயராத முயற்சியால் மகாவித்தியாலயங்களாக தர உயர்த்தப்பட்டு அப்பகுதி மாணவர்களுக்கு க.பொ.த உயர்தரகல்வியையும் அளித்தது.

இவ் வட்டாரக் கல்வி நிர்வாகமுறையில் கற்றல் கற்பித்தல் வீணடிக்கப்படவில்லை. தற்பொழுது உள்ள சேவைக்கால பயிற்சி ஆலோசகர் (*I.S.A*) பதவி முறை அக்காலத்தில் இருக்கவில்லை விஞ்ஞான, கணித, தொழில் நுட்பப் பாடங்களுக்கு கல்வி அதிகாரிகள் ஒருவர் இருவர் இருந்து முழு மாவட்டத்தையும் மேற்பார்வை செய்தனர். இப்பொழுது போல் *PDE, ZDE, DDE,*



*ADE*கள் நிறைய இல்லை. அளவு அதிகம் தரம், செயற்பாடு கேள்விக்குறியே.

கல்வித் திணைக்களத்தில் கல்விப் பணிப்பாளர் ஒருவர் (மட்டுமே) இருந்தார். அவருக்கு உதவியாக பிரதம கல்வி அதிகாரி இருவர் கல்வி அதிகாரிகள் நிர்வாகத்திற்கு இருவர் பாடத்துறைகளுக்கு ஒருவர் வீதம் அவர்களுடன் அந்தந்த வட்டாரங்களுக்குப் பொறுப்பாக வட்டாரக் கல்வி அதிகாரிகள் இருந்தனர்.

மனிதவளங்கள் அளவு ரீதியாக (*Quantity*) இல்லாமல் தற்போது வலயக்கல்விப்பாளர்கள் பலர்; திட்டக் கல்வி, அபிவிருத்தி போன்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள்; சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர்கள் பலர் கற்பித்தலில் அனுபவமான வள ஆளணியினர்கள் கல்வி நிர்வாகக் கலாசாரத்தில் கவர்ந்திழுக்கப்பட்டு கல்வி நிர்வாகம் குழப்பம் அடைந்துள்ளது. கல்வி நிர்வாகத்தில் அரசியல் செல்வாக்கு செலுத்திய பல குழுப்பநிலை; முறையான வளர்ப்பகிர்வின்மை; வளவீண்விரயம்; உரியவர் உரிய இடத்தில் இல்லாத தன்மை; ஒரு நிறுவனமுறைமை இன்மை; காலதாமதம்; நிறுவன பகுப்பாய்வு இன்மை காணப்படுகின்றது.

## கொத்தணி முறைமை, கோட்டக் கல்வி வலய முறைமையும்

1986ம் ஆண்டு அகில இலங்கையிலும் வட்டாரக்கல்வி அதிகாரி முறையை நீக்கி கொத்தணி அதிபர் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எங்கள் பரந்தன் வட்டாரத்தில் பளைக் கொத்தணி, முரசுமோட்டை கொத்தணி, பூநகரி கொத்தணி உருவாக்கப்பட்டது கொத்தணி முறை உருவாக்கப்பட்டதால் யான் கிளிநொச்சி கல்வித் திணைக்கள கல்வி அதிகாரியாக பதவி உயர்த்தப்பட்டேன்.

கொத்தணிமுறை என்பது 10,15 பாட சாலைகளை இணைத்து கொத்தணி ஆக்குதல் இவற்றில் அனுபவம், கல்வித்தராதரம், வாண்மை விருத்தி உடையோர் நியமிக்கப்பட்டனர். இதன் அமைப்பு சமமான அதிபர்களில் முதல்வர் அந்த

அமைப்பினுள் ஒரு பாடசாலையில் உள்ள வளத்தை ஏனைய பாடசாலைகள் குடும்ப அமைப்பாக மாறி, மாறி பயன்படுத்தி அபிவிருத்தி ஏற்படுத்தல். ஆனால் நடைமுறையில் இவ்வாறு வழங்கப்பட்ட வளங்களை கொத்தணி முதல்வர் தனது நிலையைப் பயன்படுத்தி தனது பாடசாலையை விருத்தியாக்க இடமளித்தபடியால் அம்முறை நீக்கப்பட்டு, 1994 முதல் வலய அமைப்பும் கோட்டக்கல்வி நிர்வாகமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

## கல்வி முகாமைத்துவ உதவிக்கல்விப்பணிப்பாளராக....

கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி வந்த காலத்தில் 1988ம் ஆண்டு தேசிய கல்வி நிறுவக கல்வி முகாமைத்துவ நுழைவுத் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றினேன். 1988 ஆகஸ்ட் முதல் 1989 மார்கழிவரை முழுநேர படிப்பு லீவு அனுமதிக்கப்பட்டு தே.க.நிறுவகம் மகரமவில் வெளிநாட்டு கல்வி நிபுணர்களின் விரிவுரைகள், புதிய கற்கை முறைகளுக்கு உட்படுத்தப்பட்டேன். இந்த ஒருவருடமும் எனக்கு கல்வி நிர்வாகப் புலத்தில் ஒரு கதவு திறந்தமாதிரி புதிய கல்வி நிர்வாகச் சிந்தனைகள் ஊற்றெடுத்து. *Diploma in Educational Management* என்ற முகாமைத்துவ கல்வி டிப்ளோமாப்பட்டம் பெற்று வெளியேறினேன்.

யாழ்ப்பாண கல்வித்திணைக்களத்தில் புதிதாக *Education Management Centre* கல்விமுகாமைத்துவ நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது. வடக்கு கிழக்கு கல்வி அமைச்சில் செயலாளராகபதவி வகித்த எம்.எம்.மன்சூர் அவர்களின் பணிப்பின் பேரில் கல்வி முகாமைத்துவ நிலையத்தில் முகாமைத்து ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளராக 01.01.1990 முதல் நியமிக்கப்பட்டேன். கல்வித் திணைக்களத்தில் செல்வி.தி.பெரியதம்பி அவர்கள் கல்விப் பணிப்பாளராக இருந்தார்.

அவர்கள் யான் கடமையேற்றதும் யாழ் மாவட்டத்தில் வழங்கப்பட்ட ஜனசவிய ஆசிரிய நேர்முகத் தேர்வை சகல கல்வி அலுவலகங்களிலும் ஒழுங்கு பண்ணவும் அவ் ஆசிரியர்களுக்கு அந்தந்த கல்வி அலுவலகங்களிலும் திசைகோள் உறுத்தற் பயிற்சியையும் ஆரம்பிக்க இணைபுபடுத்தும் பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்தனர். அப்பொறுப்பை சரியாக நிறைவேற்றி



உரிய பாராட்டையும் பெற்றுக் கொண்டேன்.

திருமதி.தி.பெரியதம்பி அவர்களுக்கு வடக்குகிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் மாகாணக்கல்விப் பணிப்பாளர் நியமனம் கிடைத்ததும், யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளராக அமரர் இரா.சுந்தரலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களது ஒத்துழைப்புடன் முகாமைத்துவ நிலையம் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டது. என்னுள் பயிற்சி அளிப்பதற்கு ஒரு குழுவை இணைத்துக் கொண்டேன். அவர்கள் திரு.அ.பஞ்சலிங்கம் (முன்னார் யாழ் இந்து அதிபர்) திரு இ.கணேசன் (முன்னாள் தென் மராட்சி கோட்ட கல்வி அலுவர்) திரு முத்துக்குமாரசாமி (கொழும்பு இந்து அதிபர்) முன்னாள் நாவற்குழி ம.வி அதிபர் அமரர் திரு.இராசதுரை (முன்னாள் மத்திய கல்லூரி அதிபர்) ஆகியோர் இணைக்கப்பட்டனர். இவர்கள் பகுதிநேர பயிற்றுவிப்பாளர்களாக எனது தலைமையில் பயிற்சிகளை ஆரம்பித்தனர்.

முதலாவது பயிற்சியை மாவட்ட கல்வி அலுவலக பாடசாலை சிற்றூழியர்களுக்கு வழங்கி அவர்களுக்கு வேலையின் பெறுமானத்தை உணர்த்தி நிர்வாகச் செயற்பாட்டிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வழிகாட்டப்பட்டது அத்துடன் பயிற்சியின் போது அவர்களுக்கு கொடுப்பனவும் வழங்கப்பட்டது. அவர்கள் சேவைக்கு அங்கீகாரம் கொடுத்தபடியால் நிர்வாகச் செயற்பாட்டிற்கு நல்ல ஒத்துழைப்பை வழங்கினர்.

இதேபோல பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், (நிர்வாகம்,) (நிதி) ஆகியோருக்கும் சிரேஷ்ட பிரிவுத்தலைவர் பாட இணைப்பாளர், தர இணைப்பாளர் ஆகியோருக்கும் இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சார்ந்த அலுவலக அதிபர்களுக்கும் வார இறுதியில் முகாமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டது. இவர்களுக்கு கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

முகாமைத்துவ நிலைய நிர்வாகக் கடமையை சரிவர மேற்கொள்ள திரு.கருணாநிதி திருமதி.வில்வநாதன், செல்வி கந்தையா, திரு.குகானந்தன் ஆசிரியர்களுடன் தொழில்நுட்பக் கல்லூரி பயிற்சியாளர்கள் மற்றும் மூன்று எழுது வினைஞர்கள்

நியமிக்கப்பட்டனர். அவர்களது ஒத்துழைப்புடன் நிலையம் ஒழுங்காக தனது பணியை நிறைவேற்றி நிறைவு கண்டது. இரண்டு வருடங்கள் 1990-1992 வரை இச் செயற்பாடு கல்வி முகாமைத்துவ நெறியில் புதிய அத்தியாயத்தைப் படைத்ததைக் கண்ணுற்ற எமது சக பிரதிகல்விப் பணிப்பாளர்கள் வாண்மைப் பொறாமை (*Professional Jelosy*) உற்று அக்காலத்தில் சக்தி படைத்தவர்களின் உதவியை நாடி என்னை அந் நிலையத்தில் இருந்து இடமாற்றுவித்தார்கள். ஆசைப்பட்ட நண்பர் ஒருவர் கல்வி முகாமைத்துவம் பயிற்சி பெறாதவர் பொறுப்பேற்று இரண்டு மாதங்களில் அந்நிலையம் எப்பயிற்சி நெறியும் அளிக்காது மூடப்பட்டது.

என்னை வேலணைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளராக நியமித்தனர் அதன்பின் எனக்கு முது நிலையில் குறைவடைந்தவர் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். என்னை அங்கிருந்து பண்டத்தரிப்பு கோட்டத்திற்கு இடமாற்றம் செய்தனர். அங்கு முது நிலையில் (*Seniority*) உள்ள திரு மகேசவேலு கடமையாற்ற அவருக்கு உதவியாக செயற்பட்டேன். அவர் இளைப்பாறியதும் என்னை அப்பதவியில் இருக்கவிடாது எனக்கு முதுநிலையில் குறைந்த திரு.துரைசிங்கம் அவர்களை கோட்டக்கல்விப் பணிப்பாளராக நியமித்தனர் அதனை கல்விப் பணிப்பாளர் அமரர் திரு. இரா சுந்தரலிங்கத்திடம் ஆட்சேபித்ததும் என்னைத் திரும்பவும் வேலணைக் கோட்டத்தில் முதுநிலையில் உள்ள திரு.சிவகுருநாதன் அவர்களுக்கு கீழ் நியமித்தனர். அவ்வாறு கடமையாற்றிய பொழுது இத்தகைய பந்தடியை அவதானித்த (திரு.வி.பொன்னம்பலம்) இராஜங்க அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் எனக்கு இ.க.நிர்வாக சேவை 2ம் வகுப்பிற்கு பதவி உயர்த்தியும் 5.3.1993 முதல் முல்லைத் தீவு மாவட்ட கல்வி பணிப்பாளராக பகிரங்க சேவை ஆணைக்குழு அனுமதியை எதிர்பார்த்து கல்விச் சபையால் கடிதம் அனுப்பிவித்தார்.







அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம் - பாரதி

## முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்விப்பணிப்பாளராக....

இவ்வாறு யாழ் மாவட்டத்தில் வெட்டவெட்டதளைத்த யான் முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளர் பதவியை 5.3.1993 முதல் பதவியேற்றேன். அங்கு கிளாலியைத் தோணிமூலம் கடந்து பஸ்மூலம் புதுக்குடியிருப்பில் அமைந்த கல்விப் பணிமனையைப் பொறுப்பேற்றேன். நண்பர் உருத்திரமூர்த்தி (*AO*) (நிர்வாக அதிகாரியாக இருந்த படியால் அன்போடு வழிப்படுத்தி தங்குமிட வசதிகளை செய்து தந்தார். அங்கு நிறைவேற்றப்பட்டபணிகள்.

1. அலுவலகம் புனர்நிர்மாணம் செய்து. அலுவலகத்திற்கு வேண்டிய தளபாடங்கள் காகிதாதிகள், மின் பிறப்பாக்கி, மாநாட்டு மேசை ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பெற்று வந்து அம் மாவட்ட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுக்கு உதவினேன்.

2. பாலர் வகுப்பிற்குரிய கதிரை மேசை வழங்கப்பட்டது.

3. மாங்குளத்தில் பரீட்சைத் திணைக்கள அனுமதியுடன் க.பொ.த.உயர்தர பரீட்சை நிலையத்தை பரீட்சையின் போது நிறுவியபடியால் மல்லாவி, பாண்டியன்குளம், மாங்குளத்து மாணவர்கள் புதுக்குடியிருப்பிற்கு செல்லாது தாங்கள் வசிக்கும் இடத்தில் பரீட்சை எழுத ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. இது அதற்கு முன்பு பதவி வகித்த எந்த கல்விப் பணிப்பாளராலும் நிறைவேற்ற முடியாது போன செயல்.

4. ஒவ்வொரு பரீட்சைக்கும் அனுமதி பெற்று, Red Cross வாகனங்களுக்கு பெற்றோல் மண்ணெய், ஓயில் கொண்டு வர அனுமதி பெறப்பட்டு பரீட்சை ஒழுங்காக நடாத்தப்பட்டது.

5. முல்லை மாவட்ட சிற்றூழியர்கள் அமைய முறையில் இருந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கியதுடன் கூடுதலான அமைய ஊழியர்களையும் நியமித்தேன். (ஏறக்குறைய ஆறுபேர்).

6. கிராமப்புறப் பாடசாலைகளுக்கு கட்டிடவசதிகளை பெற்றுக் கொடுத்ததுடன் புதிய ஆசிரிய நியமனங்களை வ.கி மாகாண கல்வித்திணைக்களம் மூலம் செய்வித்ததுடன் ஆசிரியவளப் பகிர்வை புதுக்குடியிருப்பு, தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகியவற்றில் தேங்கிக் கிடந்தவர்களை பின்தங்கிய பகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன். இதனால் துணுக்காய், மல்லாவி, மாங்குளம், கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு, தச்சடம்பன் போன்ற பகுதிகளது ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்பட்டது. கூடுதலான ஆசிரியர்களது பகைமையை சம்பாதித்தாலும் துணிந்து இடமாற்றத்தை செய்தேன்.

7. ஒரு மாவட்டக்கல்விப் பணிப்பாளர்களாலும் மாங்குளம் ம.வியில் இருந்து அகற்ற முடியாது போனநண்பர் சண்முகரத்தினத்தை துணுக்காய் கோட்டக் கல்விப் பணிப்பாளராக 1994 யூலைமுதல் பதவி உயர்த்தி ஊக்குவித்து அவ்விடத்திற்கு பொருளியல் பட்டதாரியான திரு.தியாகராசாவை அதிபராக நியமித்தேன் இவரும் எனது டிப்ளோமாமாணவன். இவருடன் ஒட்டிசுட்டான் ம.வி.க்கு பங்கயச்செல்வனையும் புதுக்குடியிருப்புக்கு திரு.சிவலிங்கத்தையும் அதிபராக நியமித்தேன். ஆற்றல் மிக்க திரு.சரவணபவன், திரு நாகரத்தினம் அவர்களை முதுநிலை அடிப்படையில் கல்வித்திணைக்களத்தில் திட்டமிடல் கல்வி அபிவிருத்திக்கு கல்வி அலுவலர்களாக நியமித்தேன். இவர்கள் 1ம் தர அதிபர்களாவர்.

8 . பாடசாலைகளில் கற்பித்துக் காட்டாது கல்வித்திணைக்களத்தில் இணைக்கப்பட்டிருந்த கல்வி ஆலோசகர்களை அவ்வப் பாடசாலைகளில் மீளவும் இணைத்து திணைக்களத்தில் சம்பளம் வழங்கினேன். இதனால் பாடசாலைகளில் ஒப்பமிட்டுவிட்டு வீட்டில் அல்லது தனிப்பட்ட வேலைகளை கவனிக்கின்றதன்மை வீண்விரயம் கண்டுபிடிக்கப்பட்டது. வளவீண்விரயம்செய்கின்ற தன்மை தவிர்க்கப்பட்டது. திரு நவரட்ணம் அவர்களை ஆங்கில உ.க.பணிப்பாளராக நியமித்தேன். அவர் இ.க.நி சேவையில் IIIம் வகுப்பில் உள்ளார்.

9. மாங்குளம் ம.வியில் தமிழ்கற்பிக்க உயர்தர வகுப்பிற்கு ஆசிரியர் இல்லாததை அறிந்து நானும் திரு. சரவணபவனும் வார இறுதியில் சென்று அம்மாணவர்களுக்கு தமிழ் வகுப்பு நடாத்தினோம் இதனால் க.பொ.த.உயர்தர வகுப்பில் தமிழ் பாடத்தில் நல்ல பெறுபேற்றை மாணவர்கள் ஈட்டினர்.

10. கடமைநிறைவேற்றும் அதிபர்கள் *(Acting)* கூடுதலான காலம் நிரந்தமாக்காத இருந்து 1994ம் ஆண்டின் சுற்றுநிருபத்திற்கமைய நிரந்தரமாக்கப்பட இருந்தார்கள். அவர்களது விண்ணப்பங்கள் தமிழில் பூர்த்தி செய்யப்பட்டமை. மொழி பெயர்ப்பின்மையை காரணம் காட்டி கல்வி அமைச்சில் வைத்திருந்தார்கள். கல்வி அமைச்சு இசுறுபாயவிற்கு சென்று காலையில் இருந்து 11மணிக்கு முன்பு தனித்தனி விண்ணப்பங்களின் மொழிபெயர்ப்பை முடித்து மாலை மூன்று மணிக்கு 19பேரின் நிரந்தரக் கடிதத்தை பெற்று வந்து யாவருக்கும் விழா எடுத்து (எனது செலவில் மதிய போசனம் அளித்து) முதன் முதலாக தமிழ் பிரதேசங்களில் நிரந்தர நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்ற மாவட்டம் முல்லை மாவட்டம் என்ற பெருமையைப் பெறவைத்தேன்.

11. 1994ம் ஆண்டு சுற்று நிருபத்திற்கமைய கல்விக் கோட்டங்களை ஏற்படுத்தியிருந்தேன். துணுக்காய் ஒட்டு சுட்டான் புதுக்குடியிருப்பு, முள்ளியவளைக் கோட்டங்கள் உருவாக்கப்பட்டது. துணுக்காய்க்கு திரு.சண்முகரட்ணம், ஒட்டு சுட்டானுக்கு திரு.சிவசம்பு (ஒட்டு ம.வி அதிபர்) புதுக்குடியிருப்புக் கோட்டத்திற்கு திரு. நாகரட்ணம், முள்ளியவளைக் கோட்டத்திற்கு திரு.விசாகலிங்கம் என்னால் நியமிக்கப்பட்டனர். ஆனால் எனது சகமாணவன் திரு.சிவசம்புவை தொடர்ந்து வைக்க முடியாமல். திருமதி,

மகாலிங்கம் அவர்கள் யாழ் மாவட்டத்தில் இருந்து புதுக்குடியிருப்பு கல்வித்திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருக்கும்படி யான் சிபார்சு செய்து நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றார். ஆனால் அவர் சில அரசியல் சக்திகளைப் பயன்படுத்தி விடுதி வசதிக்காக ஒட்டுசுட்டான் கோட்டப் பணிப்பாளராகக் கடமை ஏற்றார். இதனால் நண்பன் சிவசம்பு ஒட்டுசுட்டான் ம.வி. அதிபர் பதவியையும் இழந்து அவருக்கு கீழ் கடமையாற்ற வேண்டியிருந்தது. தான் கட்டி எழுப்பிய அப்பாடசாலைக்கு அதிபராக செல்லும்படி யான் வேண்டியும் திரு.சிவசம்பு செல்ல மறுத்து திருமதி.மகாலிங்கத்திற்கு கீழ் கடமையாற்றினார். இது எனக்கு மிகமனவருத்தமாக இருந்தது.

முல்லைத்தீவில் யான் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் என்னை அங்கிருந்து மாற்ற சில அரசியல் சக்திகள் துணைநின்றன முன்பு யாழில் சிக்கல் தந்த முகாமைத்து நிலையத்தின் பணிப்பாளர் ஒருவர் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளரானார்.

1994 டிசம்பர் மாதம் அங்கிருந்த வவுனியா கல்வித்திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட யான் மேன் முறையீடு செய்தேன். கல்வி அமைச்சின் பகிரங்க சேவை ஆணைக்குழு, கல்விசபையால் அவ் இடமாற்றம் இரத்தும் செய்யப் பட்டு திரும்பவும் முல்லைத்தீவு கல்வித்திணைக்களத்திற்கு மாவட்டக்கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றேன். அவ்வாறு கடமையாற்றும் போது நிர்வாகக் கடமையாற்ற முடியாது அரசியல் சக்திகள் தடுத்தன. தலைமைக்கு முறைப்பட்டதன் பேரில் தடுத்து வைத்திருந்தவர் தண்டணை பெற்றதுடன் யான் விடுவிக்கப்பட்டு கல்விப் பணிப்பாளராக வ.கி மாகாணசபைக்கு இடமாற்றப்பட்டேன். இரண்டு கிழமைக்குள் அங்கு இருந்து வேலணைக்கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டேன். இதனை எதிர்த்து மேன்முறையீடு செய்தும் பிரதம செயலாளர் திரு. கணேசநாதன் வெளி சக்திகளின் தலையீட்டால் முடியாதென கைவிரித்தார். இக்காலத்தில் விசேட லீவு தரப்பட்டது. 7 மாதங்கள் கடமையாற்றிய நிலையில் 1995ம் ஆண்டு ஒக்டோபர் மாத இடப்பெயர்வுடன் சாவகச்சேரியில் பணி மனைக்கு மாற்றப்பட்ட பொழுது 1996



யூன் மாதம் திருகோணமலை வ.கி. கல்விஅமைச்சில் திரு.சுந்தரம் டிவகலாவால் திரும்பவும் கல்விப் பணிப்பாளர் திட்ட மிடலுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டேன்.

3மாதங்கள் கடமையாற்றிய நிலையில் திரு.கந்தசாமி கல்விப் பணிப்பாளர் வந்து எனது திட்டமிடல் பணிப்பாளர் பதவியைப் பெற்றதும், யான் ஆரம்பக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டேன். இதன் போது எனது ஆலோசணையுடனும் செயலாளரது ஒத்துழைப்புடனும் கல்வி அமைச்சில் ஆரம்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அப்பிரிவில் திருமதி. நடராசா (ஆங்கிலப் பயிற்சி) திருமதி. பத்மினி ஆரம்பக் கல்வி ஆசிரியை, திரு.மகேசு ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரியர் எனது விதப்புரையுடன் அக்கிளைக்கு இணைக்கப்பட்டார்கள். அக்கிளையில் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு வ.கி.முழுவதும் நல்ல அபிவிருத்தி செய்யபணி நடைபெற்றது. அந்தளவில் திரு.சுந்தரம் டிவகலாவின் தலைமைத்துவம் ஆளுமை போற்றற்குரியது. புத்தாக்கமானது.



உலா 08 எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

## யாழ் வலயக்கல்விப் பணிப்பாளராக கலாநிதி....

இவ்வாறு கடமையாற்றிய பொழுது 1996ல் கலாநிதிப்பட்டம் பெற்றேன். இத்தகைய நிலையில் வலயக்கல்விப் பணிப்பாளர் பதவி வடக்கு கிழக்கில் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது முன்னைய அதி உத்தமி சந்திரிகா அம்மையாரின் பணிப்பில் ஒக்டோபர் 1998முதல் யாழ் கல்வி வலயத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையேற்றேன். இப் பதவி ஏற்பில் சில முட்டுக்கட்டைகள் இருந்த போதிலும் அவை வெயிலைக் கண்ட பனிபோல் நீங்கின.

யான் பதவி ஏற்ற பொழுது கல்விப்பணிமனை நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள தனிப்பட்ட வீட்டில் இயங்கியது. கல்விப் பணிமனை அலுவல்கள் நடாத்த மிகவும் சிரமமாக இருந்தது. தொலைபேசி இல 021-222-2449 மட்டுமே இருந்தது. கொழும்பில் இருந்து கொண்டு வந்த பக்ஸ் மெசின் இணைக்கப்படவில்லை அவற்றை எடுத்து இணைத்து தொடர்பாடலை துரிதப்படுத்தினேன். யுத்தத்தில் இடிந்து தரைமட்டமாக இருந்த கல்வித் திணைக்களத்தை பொறியியலாளர் சிவபாலன் அவர்களுடன் சென்று பார்வையிட்டேன். அவர் முன்னுக்கு இருந்த உயர்ந்த சுவர்களுடன் கூடிய கட்டிடத்தை தரை மட்டமாக்குவோம் என்றார். யான் இடம் கொடாது அதற்கு கூரை போடுவித்து பூச்சுப் பூசிவித்தேன். பின்னால் உள்ள முகாமைத்துவமண்டபம். அத்திவாரம் மட்டுமே இருந்தது. அவற்றை பழைய சுவர்கள் இருந்த அடையாளத்தை வைத்து கல்லு



வைத்துக்கட்டி மறு உருவம் கொடுத்தேன். யான் முன்பு முகாமைத்து ஆலோசகராக கடமையாற்றிய பொழுதே யானே நிதி ஒதுக்கீடு செய்து இக்கட்டிடத்தை கட்டி எழுப்பியிருந்தேன். அது எனது முன்னைய செயற்பாடுகளை ஞாபகமூட்டி நின்றது.

இவற்றுக்கு பின்னால் இருந்த கல்வி அபிவிருத்திக் கட்டிடத்தை திருத்தி பொறியியலாளர் பணிமனை ஆக்கினேன். முன்னைய பொறியியலாளர் கட்டிடத்தை திருத்தி கணக்காளர் அலுவலகமாக மாற்றினேன். பழைய கோட்டக்கல்விக்கட்டிடம் கூரைகள் மட்டும் சேதமாய் இருந்தவற்றை திருத்தி வட இலங்கை சங்கீதசபை காரியாலயத்தையும் அவற்றுடன் இணைத்து விசேட பாட கல்வி அலுவலர்களுக்கு மேசை ஒதுக்கி அவர்களை பணிமனையில் வாரம் இரு நாட்கள் கடமையாற்ற வசதிசெய்தேன். இது அவர்களை ஊக்குவிக்க என்னால் மேற் கொள்ளப்பட்ட நடவடிக்கை. இவற்றுக்கு மேலாக பின்னால் இருந்த பழைய Circuit Bunclow ஐபுதுப்பித்து அறைகளாக்கி கல்வி அலுவலர்கள் (வெளி இடம்) தங்குவதற்கு உரிய (தளபாடங்களுடன்) சுற்றுலா விடுதிஆக்குவித்தேன். இதற்கு ஒரு Care taker யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இருந்து இடமாற்றுவித்தேன். எல்லாரும் பாராட்டக்கூடிய சுற்றுலாவிடுதியாக அமைந்தது. (எனது இந்த தூரநோக்கு பார்வை மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் அலுவலகமாக மாற்றி அமைக்கப்பட்டதுடன் தொலைந்தது. அங்கு நான் கடமையாற்ற பின்பு நிர்ப்பந்திக்கப்பட்டேன்.)

வலயக்கல்வி அலுவலகத்தை திருத்துவித்து முன்னைய இடத்தில் 3 Phase Current கொண்டு வந்து பக்கத்தில் கணனி அறையைத் திறந்தேன் Intercom தொடர்பாடல் ஏற்படுத்தி அலுவலகத்திற்கு தாமதமாக வருபவர்களை கண்காணித்ததும். வேலை நேரத்தில் தங்கள் தங்கள் பணிமனையில் கடமையாற்று கின்றார்களா என்பதையும் கண்காணித்து நெறிப்படுத்தினேன். இவற்றுக்கு மேலாக இன்னொரு தொலைபேசி (0212222467) இணைப்புச் செய்வித்து கல்விப்பணிப்பாளரது நேரடி தொலைபேசி ஆக்கி 21449 ஐ பக்ஸ்சுக்கும் கிளைகளில் இருந்து வெளி இடத்தில் இருந்து வரும் அழைப்புகளுக்கு பதில் இறுக்கவும் வழிவகுக்கப்பட்டது. இதனை நிர்வாக அலுவலரின் பொறுப்பில் விட்டிருந்தேன்.

பணிமனைக்கு செல்லும் வீதிபள்ளமாக வெள்ளத்துடன் இருந்த கஷ்டநிலையை RDA உதவிபெற்று றோட்டுப் போடுவித்து அலுவலர் பொதுமக்கள் பாவனைக்கு இலகுவாக்கினேன். இவ்வளவு வசதிகளும் சரியாக ஒரு வருடத்தினுள் யான் அமெரிக்காவிற்கு போகுமுன் ஏற்படுத்தப்பட்டது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. பாடசாலை மைதானத்திற்கு முன்பாக மதில் அமைப்பித்து இரண்டிற்கும் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வளவு செயற்பாட்டிற்கும் நிதியை ஒதுக்கீடு செய்து அள்ளித்தந்து ஒத்துழைப்பை தந்த திரு சுந்தரம் டிவகலாலா அவர்களது (முன்னை நாள் செயலாளர்) துணிச்சலான செயற்பாட்டை பாராட்டாமல் இருக்க முடியாது. யான் கேட்ட நிதி ஒதுக்கீடுகளை உடனுக்குடன் தந்துதவினார். இவ்வொதுக்கீடுகள் சிதைந்த கட்டிடங்களை புனர் நிர்மாணம் செய்யவும். புத்தாக்கநிலையில் கல்வி நிர்வாகத்தை அபிவிருத்தி செய்யவும், கற்றல், கற்பித்தல் மேம்பாட்டிற்கும் உதவியது.

யான் 01.10.1998 முதல் வலயக்கல்விப் பணிப்பாளராக யாழ் மாவட்டத்தில் பதவி ஏற்ற பொழுது எனது கல்விக்கு அடி அத்திவாரமாக அமைந்த எனது ஆரம்பக்கல்விப் பாடசாலை, பிளவத்தைப் அமெரிக்கமிசன் அ.த.க பாடசாலையை மறக்க வில்லை. நன்றிக்கடனாக கடமையேற்றதும் அரச வாகனம் மூலம் அப்பாடசாலைக்கு சென்று தரிசனம் செய்தேன். சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் நிகழ்வைப் பொறித்துக் கொண்டேன். அத்துடன் அப்பாடசாலையின் மேற்குப்புற மதிலுக்கும். புனர் நிர்மாண வேலைகளுக்கும் நிதிஒதுக்கீடு செய்தேன். அத்துடன் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் யாழ் வட்டு இந்துக் கல்லூரிக்கு 60 இலட்சம் நிதி ஒதுக்குவித்து நாம் 1953ம் ஆண்டில் படித்த பழைய தெற்குப்புற சுண்ணாம்புக் கட்டிடங்களை அகற்றி இரண்டு மாடிக்கட்டிடம் அமைத்தேன் அதே போல உயர்கல்வியை அள்ளித்தந்த ஸ்கந்த வரோதயாக் கல்லூரியின் திருத்தவேலைக்கும் நிதி ஒதுக்கீடு செய்தேன்.

யானே யாழ் மாவட்ட வலய அலுவலகத்திலும் யாழ் மாவட்ட மேலதிக மாகாணக்கல்வி அலுவலகத்திலும் கடமை ஏற்று பதவி வகித்த முதலாவது கல்விப் பணிப்பாளராவர். அப்பெருமையையும் இறைவர் எனக்கு தந்தார் இக்காலத்தில் எனது



குழந்தைகள் ஐவரும் கல்வியில் உயர்ந்த யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு 20 இலட்சம் ரூபா செலவில் சிறு நூலகக் கட்டிடத்தை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்தேன், எனது மனைவியாரின் வீட்டிற்கு முன்னால் அமைந்ததுள்ள, ஏழைச் சமூகத்திற்கு வாழ்வாதாரக் கல்வியை அள்ளிக் கொடுக்கும் பள்ளியில் நண்பர் க.கனகசிங்கம் அதிபராக இருந்தார் அதன் கல்வி அபிவிருத்தியிலும் பௌதீக மனித வள விருத்தியிலும் சரித்திரம் படைத்தவர். அந்த யா.பெரியபுலம் மகா வித்தியாலயத்திற்கு சிறு நூலகம் அமைக்க 20 இலட்சமும் விஞ்ஞான கூடம் அமைக்க 30 இலட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்து கட்டி முடிப்பித்தேன்.

எனது இவ்விரு பதவிக்காலமும் யாழ் மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியில் துரித புரட்சிகர முன்னேற்றத்தை செய்ய முடிந்த காலமாகும். இதற்கு உதவியாக நல்ல முகாமைத்துவக் குழுவை இணைத்துக் கொண்டேன். கல்வி நிர்வாகத்திற்கு திருமதி மகாலிங்கமும் கல்வித்திட்டமிடலுக்கு திரு வரதராஜனும், கல்வி அபிவிருத்திக்கு 1ம் தர அதிபராக இருந்த நண்பர் க.கனகசிங்கம் மற்றும் திரு. இராஜலிங்கம் அவர்களை இணைத்துக் கொண்டேன் இவ்விருவரும் சிறந்த அதிபர்கள். அவர்களை அப்பாடசாலைகளை விட்டு எடுத்து கல்வி அலுவலகத்தில் இணைத்தமை அப்பாடசாலைகளது கல்வி வளர்ச்சியில் சிறிது தாமதத்தை ஏற்படுத்தினாலும். மாவட்டக் கல்வி அபிவிருத்தியில் எல்லாப் பாடசாலைகளது கற்றல் கற்பித்தல் மேம்பாட்டில் முத்திரை பதித்தது. திரு.க.கனகசிங்கம் கல்விப் பரிசோதனைக் குழுவிற்கு தலைமை தாங்கியமை பேருதவியாக இருந்தது. என்னை யாழ் மாவட்டத்தில் மேலதிக மாகாணக்கல்விப் பணிமனைக்கு பதவி உயர்வாக இடமாற்றிய பொழுது திரு.க.கனகசிங்கம், திரு.சோ.பத்மநாதன் பிரதி கல்விப் பணிப்பாளர் ஆகியோர் (மீள் நியமனம் - மொழி ரீதியாக தமிழ், ஆங்கிலம்) யாழ் மாவட்டக்கல்வி விருத்தியில் பெரும் பங்காற்றினர்.

இக் காலத்தில்தான் ஆரிய பாஷாவித்தியாலயம் கே.கே.எஸ் வீதியில் மூடப்பட்டிருந்த பாடசாலையை கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வித்து புனர்நிர்மானம் செய்ததுடன் பால பண்டிதர், பண்டிதர்

வகுப்புக்களை நடாத்த ஒழுங்குகள் செய்ததுடன் அதற்கான அலுவலகத்தை நடாத்த ஆரிய பாஷா திராவிட விருத்திச் சங்கத்திற்கு கட்டிடத்தையும் கையளித்தேன். இதனால் பால பண்டிதர் பண்டித வகுப்புக்கள் மீண்டும் நடாத்த ஒரு நிரந்தர தளம் அமைக்கப்பட்டது.

இக்காலங்களில் பாடசாலைகளது அதிபர் வெற்றிடங்கள் ஏற்பட்ட பொழுதெல்லாம் நேர்முகத் தேர்வின் மூலம் நல்ல கடமைநிறைவேற்றும் அதிபர்களை நியமித்து வளர்ச்சியில் பின்னடைவு கண்ட சில பாடசாலைகளை அபிவிருத்தி அடையச் செய்தோம். யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயம் சைவத்திற்கும் வளர்ச்சிக்கும் தமிழுக்கும் திரு அம்பிகைபாகன் அதிபராக இருந்த காலம் வரலாறு படைத்திருந்தது. அதனை தொடர்வதற்கு திருவன்னிய சிங்கத்தையும், உரும்பிராய் இந்துக்கல்லூரிக்கு திரு ஈஸ்வரநாதன் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திற்கு திரு.யோகராசா கொழும்புத்துறை ம.வி திருமதி சிவபாலன் ஸ்ரான்லிக்கல்லூரிக்கு திரு மாணிக்கம் போன்ற இளம் அதிபர்களை நியமித்து அவற்றின் வளர்ச்சிகளைக் கண்டு பெரிதும் திருப்தி கண்டேன்.

யாழ் மாவட்டத்தில் அரச பாடசாலைகளின் வளர்ச்சிக்காக கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்காக **"ஊக்குவிப்பு தரிசனம்"** குழுப் பரிசோதனையாக நடந்தது. கற்றல், கற்பித்தல் நேரங்களில் ஆசிரியர்களை அதிபர்கள் பாடசாலைக்கு வெளியே காணக்கூடாது. என நிபந்தனை போடப்பட்டது. கண்டவர்கள் மீது தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேபோல இல்ல மெய்வல்லுனர் போட்டி, தமிழ்த்தினப் போட்டிகளுக்கு மாணவர்களை பயிற்றுவித்தல், ஆசிரியர்களுக்கான செமினார், கலந்துரையாடல், கள அமர்வு என்பன பாடசாலை நேரம் தவிர்ந்த சனி ஞாயிறு மாலை நேரங்கள், விடுமுறை நாட்களில் நடாத்த வேண்டுமென இறுக்கமாக நிபந்தனை போடப்பட்டது. இதனால் தமிழ் ஆசிரிய சங்கத்தின் வெறுப்பையும் சம்பாதிக்க வேண்டியிருந்தது.

மாணவர்களது இல்ல மெய்வல்லுனர் போட்டி பரிசளிப்பு விழாக்கள், கலை கலாசார நிகழ்வுகளுக்கு சகல பாடசாலைகளும்



அழைத்து விடுவார்கள். இதேபோலவே தனியார் பாடசாலைகளது விருத்தியிலும் கூடிய கவனமும் ஆதரவும் அளிக்கப்பட்டது. யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி, வட்டு யாழ் கல்லூரி, சென் பற்றிக்ஸ் யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரிகளது மேம்பாட்டில் கண்ணும் கருத்துமாக இருந்தேன். இவற்றிற்கு இலவச புத்தகங்கள் இலவச சீருடை பௌதீக வள விஞ்ஞான உபகரணம், இரசாயனப் பொருட்கள் காலத்துக்குக் காலம் தருவித்து அரச பாடசாலைகளுக்கு எத்தகைய முன்னுரிமை அளிக்கப்பட்டதோ அத்தகைய முன்னுரிமை இப்பாடசாலைகளுக்கும் அளிக்கப்பட்டது. இதனால் இப்பாடசாலைகள் தமது வருடாந்த பரிசளிப்பு க.பொ.த உயர் மாணவ விருந்துபசாரம் போன்றவற்றிற்கு பிரதமவிருந்தினராக அழைத்துச் சென்று கௌரவித்திருந்தார்கள்.

ஆனால் யான் கற்பித்த எனது வீட்டிற்கு அருகாமையில் இருக்கும் யாழ் இந்துக்கல்லூரி ஒரு நிகழ்விற்கும் அழைக்கவில்லை யான் பழைய மாணவனாக இருக்கவில்லை என்று காரணம் காட்டினர். ஆனால் யான் இக் கல்லூரியின் பழைய ஆசிரியர். அதே கல்லூரியில் கிழக்குப் பக்கமாக விளையாட்டுமைதானத்திற்கு இடையில் அமைக்கப்பட்ட கட்டிடம் பழைய மாணவர் நிதி அன்பளிப்பிலும் அரசஅதிபராக திரு.சண்முகநாதன் காலத்தில் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது நிதி ஒதுக்கீட்டிலும் கட்டப்பட்டது அக் காணி அரச காணி இல்லையென்றும் அவற்றில் அரச நிதி ஒதுக்கீட்டில் கட்டிடம் கட்டமுடியாதென பொறியியலாளர் சிவபாலன் போன்றோர் கட்டிட அமைக்க விடாது தடுத்திருந்தனர். இதனால் பெரும் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

நண்பர் வித்தியாதரன் மற்றும் முன்னாள் அரச அதிபர் சண்முகநாதன் அவர்கள் என்னை அழைத்து பாடசாலை பழைய மாணவர் செயற்குழுக் கூட்டத்தில் ஆலோசித்த பொழுது திணைக்களத் தலைவர் என்ற அடிப்படையில் எல்லாம் பாடசாலை வளர்ச்சி தேவைக்கென்று தற்துணிச்சலுடன் கட்டுவதற்காய அனுமதியை செயலாளரின் ஒப்புதலுடன் கொடுத்திருந்தேன். அதன் பின்பு கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்றது.

இக் கல்லூரியில் யாழ் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க

அகில இலங்கையில் க.பொ.த உயர் வகுப்பில் கணிதத்துறையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று மாணவன் பொறியியலாளர் திரு. குமரன் சாதனைபடைத்தான். இவர் அதனால் அவுஸ்திரேலியாவில் பேத்மாநகரில் *Curtin* பல்கலைக்கழகத்தில் புலமைப் பரிசில் பெற்று கற்று இன்று விரிவுரையாளராக உள்ளார். இதேபோல சகல விஞ்ஞான உயர்தர வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளில் செய்முறைகளை **(*Pratical*)** நடைபெற கண்ணும் கருத்துமாக இருந்தேன்.

ஒருமுறை யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு நண்பர் தனபாலன் அதிபராக் இருந்தகாலத்தில் எனது விஞ்ஞான குழுப்பரிசோதனைக் குழு பாடசாலைகளுக்கு சென்று கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கு ஆற்றிவரும் ஊக்குவிப்புகளை அறிந்து அழைத்திருந்தார். எமது குழு முன்னறிவித்தலுடன் அதிபரது அழைப்புடன் சென்றது. அங்கு விஞ்ஞான ஆய்வு கூட வகுப்பறையில் எமது குழுவினர் சென்று கற்பித்தும் செய்முறையைக் காட்டியும், அக்கல்லூரி ஆசிரியர்களுடன் கலந்துரையாடி கற்பித்தல் பிரச்சினைகளுக்கு அறிவுறுத்தல் செய்தும் ஒரு கூட்டுணர்வுடன் **(Collegi ality) *Horizontal*** முறையில் வழங்கப்பட்டது. கல்விப் பணிப்பாளர், விஞ்ஞான கல்விப் பணிப்பாளர், விஞ்ஞான கல்வி ஆலோசகர்கள் பிரபல்யமான கல்லூரி முதுநிலை விஞ்ஞான ஆசிரியர்கள் என்ற கூட்டுணர்வாக நடந்த அக் களச் செயற்பாட்டை கண்டு வெகுவாகப் பாராட்டினார். "நீங்கள் அடிநிலையில் உயர்ந்த ஆசிரிய ஊக்குவிப்பாளர்களாக இருந்தீர்களே ஒழிய ஒருமேல் நிலை அதிகாரத்தை செலுத்தும் அதிகாரியாக விளங்கவில்லை. உங்கள் குழுவினரும் உங்கள் நோக்கத்தை அறிந்து செயற்பட்டமை பாராட்டுக்குரியதுதான். இத்தகைய குழுப்பரிசோதனை செயற்பாடு மீண்டும், மீண்டும் நடைபெற வேண்டும், வரவேண்டும்" என்று அன்பாக விநயமாக வேண்டினார். "நீங்கள் நாளாந்த நடைமுறை **(Routine)** வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ஒரு ஆசிரியனை கல்விப்பணிப்பாளராக பதவி உயர்த்துவது, கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கு உதவ என்பதைக் காட்டினீர்கள்" என்றார். அத்துடன் "நீங்கள் கல்வி ரீதியாக *(Academical)* வாண்மை ரீதியாக *(Professional)* ரீதியாக உங்களை உயர்த்தியமையும் ஒரு காரணம்" என்றார்.



உண்மையில் ஒரு கல்விப் பணிப்பாளர் நாளாந்த நடைமுறை நிர்வாக வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் கல்வி மேம்பாட்டிற்காய *Instructional Programme* (அறிவுறுத்தல் நிகழ்விற்கே) முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் தனது மேல்நிலை நிறுவனங்கள் அலுவலர்கள், கீழ்நிலை அலுவலர்களது செயற்பாட்டை கற்பித்தல் கற்றலை உயர்த்துதல் *(Enhancement of Teaching and Learning)* செய்பவராக இருக்க வேண்டும் சில சூழ்நிலைகளில் துணிந்து முடிவு எடுக்க வேண்டும் பயப்படக் கூடாது. எல்லாத் தீர்மானம் எடுத்தலையும் பந்தை அடுத்தவரிடம் உருட்டி விடுவதுபோல் உருட்டி விடக்கூடாது. தான் சமயோசிதமாக முடிவு எடுக்க வேண்டும் மேலதிகாரிகளிடம் கடிதம் அனுப்பி காத்திருக்கக் கூடாது.

எனக்கு ஒரு அனுபவம் ஒரு விஞ்ஞான ஆசிரியை நாட்டுப் பிரச்சினையால் தொழிலை விட்டு வெளிநாட்டிற்கு 3வருடங்கள் சென்றதிலிருந்து திரும்பி வந்து வேலையைக் கோரியிருந்தார் இதற்கு செயலாளர் அவரது சொந்தக் கோவையைக் கோரியிருந்தார். இவர் ஊர்காவற்துறை கோட்டத்தைச் சார்ந்தவர். இவர் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளராக இருந்த திரு மகாசிவத்தின் உதவியுடன் திரு மகாசிவமே என்னிடம் செயலாளது கடிதத்தை கொண்டுவந்தார். எனது நிர்வாக உத்தியோகத்தரை அழைத்து கோவையை அனுப்பி வைக்கும்படி கோரினேன். அவர் தேடவேண்டும் என அவகாசம் கேட்டு இரண்டு கிழமையில் வேலணை இடப்பெயர்வுடன் தொலைந்து விட்டது; ஒன்றும் செய்ய முடியாதென கடிதம் தந்தார்.

யான் திரு.மகாசிவத்தையும் வைத்து கணக்காளரை அழைத்து இவர் சம்பளம் பெற்ற லெஜரை கொண்டு வரும்படியும் அவர் சம்பளம் பெற்ற காலத்தை உறுதிப்படுத்தி தரும்படியும் வேண்டினேன். அவர் கடந்த 10 வருடங்களாக பெற்றிருந்தமையை உறுதிப்படுத்தித்தந்தார் அவற்றுடன் ஆசிரியையின் முதல் நியமனக்கடிதத்தில் இருந்து தொழிலை விட்ட காலம் வரையான சகல ஆவணங்களது நிழல் போட்டோப் பிரதியை வைத்து கோவையை உருவாக்கி எனது சிபார்சுடன் செயலாளருக்கு அனுப்பி வைக்க அவர் அவரை மீளச் சேவைக்கமர்த்தும்படி இவ் விடயத்தில் நிர்வாக அதிகாரி திரு.மற்றாஸ்மெயில்

கூறியவேளைகளை நிறைவேற்றி உதவினார். அனுப்பிய கடிதம் மூலம் அவரது சேவை தொடரப்பட்டது.

ஆசாரி வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்கமாட்டார்கள் என சில வேளைகளில் நிர்வாக அதிகாரிகள் பிரதம எழுது வினைஞர்கள் விடய எழுதுவினைஞர்கள் விடயத்தை செய்ய விடாது, ஆலோசனை கூறுவார்கள் ஆனால் அவ்விடங்களில் விடயத்தை சரியாகப் படித்து பாதிப்பில்லாமல் துணிந்து நன்மையான முடிவை எடுத்து கற்றல் கற்பித்தலை மேம்படுத்த வேண்டும். அதுவே ஆசிரியனாக இருந்து கல்விப் பணிப்பாளனாக உயர்ந்தவர் செய்யும் பணி. சட்டத்தை சுற்று நிருபத்தை இறுக்கிப் பிடித்த அதிகாரிகளால் இன்றும் எத்தனை ஆசிரியர்கள் மீளநியமனம்பெறாது சேவையை தொடராது ஓய்வூதியமும் இன்றி 20,30 வருடங்கள் சேவையாற்றி முடிவில்லாமல் அலைகின்றார்கள் கல்வி அமைச்சில் இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு தனிக்கிளையை நிறுவி நல்ல முடிவெடுத்து இவ்வாசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்களுக்கு உதவலாம். இவற்றுக்கு அனுபவம் துணிவு பக்கம் சராமல் உதவும் மனப்பாங்கு வேண்டும். எமது மக்கள் இடப் பெயர்வினால் புலம் பெயர்வினால் தொழில் இன்றி ஓய்வூதியம் இன்றி கூடுதலான மக்களது பணம் கோடிக்கணக்கில் கிடைக்காது உள்ளது. இவற்றை பெற ஏன் ஆவன செய்ய முடியாது. இதற்கென ஏன் தனிக்கிளை நிறுவக்கூடாது.

யாழ் மாவட்டத்தில் யான் கல்விபணிப்பாளர் வகித்த காலம் எனக்கு பெருமைதந்து திருப்தியளித்த வேளையில் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் என்ற பதவி பெரும் சோதனையாகவும் பிரச்சினையாகவும் இருந்தது.

யான் மேலே குறிப்பிட்டது போல் வலயக்கல்விப் பணிப்பாளர் பதவி பெரும் சாதனை படைத்த காலமாக இருந்தது. இக்காலத்தில் (ஏறக்குறைய 12 மாதங்களில் யாழ் கல்வி அலுவலகத்தில் புதிய வளங்கள் படைக்கப்பட்டன. இவற்றின் பின் யாழ் மாவட்ட கல்வி இணைப்பாளராக (கடித இல 8.2.2.02.31 திகதி) நியமனமாக கிடைத்தது.



நண்பர் திரு.கிருஷ்ணகுமார் யாழ் இந்து முன்னாள் ஆசிரியர் கடந்த வாரமும் கூறினார். சேர் நீங்கள் என்னைக் கூப்பிட்டு Fax மெசின் பொருத்தினீர்கள் *Intercom* வேலை செய்யாத பொழுது அழைத்துப் பார்த்தீர்கள் **Computer Room** ல் 6,7 கொம்பியூட்டர் பூட்டு வித்தீர்கள். இக் கொம்பியூட்டர் வேலைசெய்ய மறுத்து பழுதானபொழுது அவற்றின் காரணத்தை நீங்கள் அறிந்து திரு.மனோகரிநேருவிடம் முரண்பட்டமைதான் நீங்கள் புலமைப் பரிசில்கல்வி சம்பந்தமாக அமெரிக்கா சென்று 4மாதங்களில் திரும்பி வந்தபொழுது பதவி உயர்வென்ற போர்வையில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி மூலம் உங்களை வெறுமனே மனவிரக்தி அடையச்செய்த சூழ்ச்சி. இது கல்விக்கு செய்த துரோகம். இதனால் கண்முன்னாலேயே தண்டனை கிடைத்தது சம்பந்தப்பட்டவருக்கு.



**உலா 09** தாம் இன்புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்.

## யாழ் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக.....

மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் பதவியில் யான் அடைந்த கஷ்டம் எந்த ஒரு கல்வி நிர்வாக சேவை முதுநிலை உத்தியோகத்தருக்கும் ஏற்படக்கூடாது. யான் 1999ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அமெரிக்கா Bowling Green Univercityக்கு புலமைப்பரிசில் பெற்று 4 மாதம் சென்று வந்தேன். யாழ் மாவட்டத்தை விட்டு வெளியேறும் பொழுது தற்காலிக பொறுப்பை தீவக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கச் சென்றேன். அப்பொழுது "இல்லை எங்கள் வலய அலுவலகத்தில் நான் உங்களுடன் வேலை செய்யும் ஆள் இருக்க வேறு ஒருவர் வந்து அக்கடமையை அதுவும் எனக்கு முதுநிலையில் குறைந்தவர் வருவதை அனுமதிக்கமுடியாது" என என்னிடம் விரும்பிக் கேட்டார் எனக்கு கீழ் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர். நான் பொறுப்பை நல்லெண்ணத்துடன் செயலாளரின் அனுமதி பெற்று பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அங்கு கடமையை நிறைவேற்றி திரும்பி வந்த பொழுது முல்லைத்தீவு மாவட்டத்தில் பிறசக்திகளின் துணை கொண்டு எனக்கு தொல்லை தந்த அதே பெண்மணி தனது சுயரூபத்தைக் காட்டினார். கறையான் புத்தெடுக்க பாம்பு குடிபுகுந்தமாதிரி குடி ஏறினார். இந்நிலை நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு ஒரு முன்னெச்சரிக்கை (*Warning*) ஆகும்.

யான் இங்கு கடமையேற்றபொழுது யாழ் மாவட்டத்தில் க.பொ.த சாதாரண பரீட்சை



விடைத்தாள்களை பலகாலங்களின் பின் (1998ம் ஆண்டு டிசம்பர் மாதம் பரீட்சை விடைத்தாள்களை) திருத்த ஒழுங்கு பண்ணி முடித்திருந்தேன். அதே போல 1999ம் ஆண்டு டிசம்பர் பரீட்சை விடைத்தாள்களை திருத்தவும் ஒழுங்கு பண்ணிச் சென்றேன். யான் அமெரிக்காவிலிருந்து வந்திறங்கியதும் பொருட்களை கொழும்பில் இருந்து கொண்டு வர இணைப்பாளராகக் கடமையாற்றிய திரு. மநோகரி நேருவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பொழுது நீங்கள் அக்கடமையைச் செய்ய முடியாது. உங்கள் பதவி மாற்றமாகி விட்டது. நீங்கள் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் அது வலயக்கல்விப் பணிப்பாளருக்குரிய செயற்பாடு என எனக்கு முகத்தில் அறைந்தது போல் கூறினார். இவரே யாழ் வலயக்கல்வி அலுவலக, பணிப்பாளரையும் நியமிக்க ஆவன செய்துள்ளார் என அதன் மூலம் அறிந்தேன். (இந் நியமனம் அவரது முயற்சியும் பதவிக்கு வந்தவரது கணவரும் சேர்ந்து கொண்டாடிய வருட இறுதி விருந்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிந்தேன்.)

யாழ் மாவட்டத்திற்கு கடமைக்கு சென்ற பொழுது அக்கடிதத்தை கையளித்த எனக்கு கீழ் பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்தவர் கூறினார். "இன்றிலிருந்து யாழ் வலயக் கல்வி அலுவலக கல்விப் பணிப்பாளர் யானே. இது எனது கதிரை. செயலாளர் கூறினார். நீங்கள் பதவி உயர்வுடன் மாற்றப்பட்டுள்ளீர்கள் இந்த அலுவலகத்தில் மட்டும் அல்ல இவ் அலுவலக சுற்றாடலிலும் உள்ள எக்கட்டிடத்திலும் அலுவலகத்தை நடத்தமுடியாது இச்சுற்றாடலில் கால் வைக்க முடியாது" என்று கூறி இறுமாப்புடன் இருந்தார். அதாவது கறையான் புத்தெடுக்க பாம்பு குடி கொண்டமாதிரி அவரது செயல். அந்த இடிந்த பாழடைந்து இருந்த கட்டிடங்களுக்கு எவ்வளவு கஷ்ட்டப் பட்டு மீள் உருவம் கொடுத்து நிர்மாணித்தேன். எல்லாம் 9 மாதங்களில் நிறைவேற்றப்பட்டது.

அவரின் செயலைப் பார்த்து மனம் பதைபதைத்தது உடல் பதறியது எனக்கு கீழ் இருந்த நிர்வாக அதிகாரியை இது என்ன அநியாயம் எனக் கேட்டேன். செயலாளரது வாய்மூல உத்தரவு என்று கூறினார். செயலாளருடன் தொடர்பு கொள்ள தொலை பேசியில் அழைப்பு எடுக்கச் சென்றேன். மறுக்கப்பட்டது. வெளியே சென்று தொடர்பு கொண்ட பொழுது செயலாளரும் அதே பதிலை சொன்னார். ஆளுநருக்கு எதிர்ப்புக் கடிதம் அனுப்பினேன். இரண்டு

நாட்கள் எங்கள் அலுவலத்தில் இணைத்த உதவிக்கல்விப் பணிப்பாளருடன் திரு.வீரசிங்கம் நிர்வாக அதிகாரியுடனும் நாம் வெளியே நின்றேம்.

இன்னும் ஏனைய எழுது வினைஞர்கள் இருவரும் சேர்ந்து அலைந்து திரிந்தோம். மனதிலே குழப்பம் வெட்கமாக இருந்தது. ஓட வாகனம் இல்லை; இருக்க கதிரை இல்லை; எழுத ஒற்றை இல்லை என்ன செய்வது? நிர்வாக அதிகாரியும் எமது குழாமும் சேர்ந்து எனது வீடு வெறுமையாக இருந்த படியால் இரண்டு கிழமை அலுவலகத்தை அங்கு நடாத்தினோம்.

அதனையும் செயலாளர் ஆட் சேபித்தார். அதனை அறிந்து நாச்சிமார் கோவிலடியில் அண்ணர் அம்பிகாபதி ஸ்ரோஸ் முதலாளியின் வீட்டை வாடகைக்கு பெற்று அலுவலகத்தை மேல் வீட்டில் நடாத்தினோம். இவற்றுடன் என்னை முது உதவிச் செயலாளர் பதவிக்கும் நியமித்தார்கள்.

இவ்வாறு நடாத்தும் பொழுது திரு சிவராசா வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், திரு.இராசையா வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர், திருமதி மகாலிங்கம் செல்வராணி யாழ் வலயக்கல்விப்பணிப்பாளர், திரு. செல்வராசா தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் யாவரும் சேர்ந்து கொண்டனர். எனக்கு ஒத்துழைப்பு அளிக்காது பல இடையூறுகளைத் தந்தனர் இவர் எங்களைப்போல் வலயக் கல்விப்பணிப்பாளராக இருந்தவர் இவரை எவ்வாறு எமது உயர்நிலை மேலதிகமாகாணக் கல்விப்பணிப்பாளராக ஏற்பது என்று முறுகத் தொடங்கினர், திரு.சிவராசா என்னிலும் முதுநிலை உடையவர் என்று கச்சேரிக் கூட்டத்தில் நேரடியாக சவால் விடுத்து கதைத்தார்.

ஆனால் யான் எனது நிலையை ஸ்திரப்படுத்தி அவர்களுக்கு கூட்டங்களுக்கு கடிதம் அனுப்பி கட்டளைகள் பிறப்பித்து துணிந்து. எனது மேலாண்மையை *(Hierarchy)* நிலை நிறுத்தினேன். பத்திரிகைகள் எனது சாதனைகளைப் பேசின. யான் எமது கூட்டத்தில் தெளிவாகக் கூறினேன். “எனது பதவி உயர்வு (இ.க.நிர்வாகசேவை) *21.04.1982* உங்கள் *01.06.1982* அதுவும் யான் அப்பதவியில் கடமையேற்று வேலை செய்த பொழுது நீங்கள் *1*



*1/2* வருடங்களின் பின் வர்த்தக விசேட வட்டாரக் கல்வி அதிகாரியாக கடமை ஏற்றனீர். என்னிலும் முதுநிலை வகிக்க முடியாது” என்றேன். அதனை அவர் ஏற்க வில்லை. இவர்களை திருகோணமலையில் இருந்து இயக்குவித்தவர் ***Remote Conroll*** அன்றைய மாகாணப் பணிப்பாளர் அவர்கள்.

ஆனால் வடக்கு கிழக்கு செயலாளர் பதவி இடமாற்றத்துடன் திரு.க.பரமேஸ்வரன் பதவி ஏற்றதுடன் எனக்கு பல தொல்லைகள் இடர்ப்பாடுகள் ஏற்பட்டது. நாச்சிமார் கோவிலடி அம்பிகா ஸ்ரோஸ் அண்ணர் வீட்டைத்திருத்த வேண்டும். என்று கேட்டதன் பொழுது செயலாளர் அலுவலகத்தை வலயக்கல்வி அலுவலகத்தின் சுற்றுலாவிடுதிக்கு *(Circuit Bangalow)* இடமாற்றும்படி பணித்தார்.

அவரது கட்டளைப்படி அலுவலகம் மாற்றப்பட்டது. ஆனால் பின்வரும் நிபந்தனையுடன் நீர் மேலதிகமாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்தாலும் யாழ் வலய தொலைபேசி பாவிக்கமுடியாது. வாகனம் பாவிக்க முடியாது அந்த அலுவலகத்திற்குள் கால் வைக்கக்கூடாதென்று நிபந்தனைகள் பிறப்பிக்கப்பட்டன.

என்ன செய்வது என தலைவிதியை நொந்து கொண்டுமனம் தளராது முடிந்தவரை செயற்பாட்டைச் செய்தேன். வாகனத்திற்கு பதிலாக துவிச்சக்கரவண்டி மூலம் பிரயாணம் செய்தேன் எனது சம்பளமும் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்காளரிடம் தான் பெறும்படிதான் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. சம்பள உயர்வுக்கும் அவர்தான் சிபார்சு ஒரு தும்புத்தடி கொள்வனவு செய்வதாயினும் அவரிடம் தான் கையேந்தி நின்று அனுமதி பெற்று செலவழிக்கவேண்டும்.

ஒரு மேலாண்மை படைத்த அலுவலர் தனக்குக் கீழ் உள்ள ஒரு அலுவலரிடம் இவ்வாறு தங்கியிருப்பது நிர்வாக நடைமுறைக்கு முரணானது என்று பலமுறை கடிதம் செயலாளருக்கூடாக ஆளுநருக்கு அனுப்பினேன். கௌரவ ஆளுநர் யாழ் மாவட்டகல்வி அபிவிருத்திக் கூட்டத்திற்கு வந்த பொழுது செயலாளரையும் வைத்து அவருக்கு முன்னால் அநியாயங்களை

சுட்டிக்காட்டினேன். பலன் எதுவும் இல்லை நியாயம் கிடைக்கவில்லை.

கல்வி அபிவிருத்திக்கு திரு.க.கனகசிங்கம் உதவிக்கல்விப் பணிப்பாளராக இருந்தார். திருபுலேந்திரராசாவை நிர்வாக அதிகாரியாக பதவி உயர்த்தினேன். அவர் எனக்கும் யாழ் வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் இரட்டை வேடம் போட்டிருந்தார். பொறியியலாளர் திரு.சிவபாலன் இவ்வலுவலகத்தில் இணைக்கப்பட்டாலும் நிதி அதிகாரம் உள்ள வலயக் கல்விப்பணிப்பாளருக்கு விசுவாசமாக இருந்தார்.

இந்த மாவட்டத்தில் மேலதிக மாகாணக் கல்வி பணிப்பாளர் அலுவலகம் ஓர் வீண்வளவிரயம். வீணாக அலுவலர் குழுவை வைத்து சம்பளம் அளித்தார்கள். அதிகாரமும் பொறுப்பும் அற்று ஒரு பெயரளவில் நிறுவப்பட்ட நிறுவனம். எல்லோரும் சரியான அர்த்தத்துடன் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவியை மேலதிக கல்விப் பணிப்பாளர் என்று அழைத்தார்கள், கூறினார்கள். இது பற்றி பல முறை எழுதியும் மேல் உள்ள இலங்கை நிர்வாக சேவை விற்பன்னர்களுக்கும் ஆளுநர்களுக்கும் விளங்கிக் கொள்ள முடியவில்லை

இதே போல வவுனியா மட்டக்களப்பு அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும் சமகாலத்தில் இவ்வலுவலகத்தையும் பதவியையும் கொடுத்தார்கள் இன்னும் வேடிக்கை என்ன வென்றால் இன்றும் இப்பணிமனை இயங்குவது உண்மையில் அந்தந்த மாகாணங்களில் இயங்கும் வலயக்கல்விப் பணிமனைகளை மேற்பார்வை செய்ய, ஒருங்கிணைக்க ஒரு நிறுவனம் அவசியம் ஆனால் அந்த நிறுவனம் மேலாண்மை கொள்ள அதிகாரம் பொறுப்பு நிதி அதிகாரம் கொடுக்கவேண்டுமல்லவா? கொடுத்து இயங்க வைக்க வேண்டுமல்லவா? பலமுறை இத்தகைய நிறுவனம் வீண் வளவிரயம் என பத்திரிகைகளில் எழுதியும் அவர்கள் விளங்கியும், விளங்கமறுத்தனர்.

இந்த இடத்தில்தான் கல்வி நிர்வாக நிறுவனங்களின் செயற்பாட்டை மேற்பார்வையை கண்காணிக்க அடிமட்டத்தில்



ஆசிரியர் பதவியில் பதவி உயர்வு பெற்று கல்விப்பணிப்பாளராக இருந்தவர். இலங்கை கல்வி நிர்வாகசேவை 1ம் வகுப்பை சார்ந்தவர்கள் செயலாளராக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியதன் அர்த்தம் விளங்குகின்றது. இன்று அதை வற்புறுத்துகின்றேன். இந்நிறுவனத்தில் இருந்து செயலாற்றிய காலத்தில் பல பிரயத்தனம் செய்து வாதாடி செயலாளரிடம் இருந்து, 58-2929 என்ற நீல பிக்கப்பை கப்பல் மூலம் திருகோணமலைக்கு சென்று பெற்று வந்தேன் இவ் மேலதிக மாகாண கல்வி அலுவலகத்திற்கு இத்தகைய வாகனம் கொண்டு வந்தமையையிட்டு யாவரும் பாராட்டினார்கள். இவ்வாகனத்தை ஓட்டுவதற்கு சாரதியைக் கேட்டுத் தரமறுத்துவிட்டார்கள் அந்த நிலையில் முன்பு தமிழ் கன்னியர் மட மகாவித்தியாலயத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றிய திரு.அண்ணாமலையை அப்பாடசாலை அதிபரின் ஒப்புதலுடன் செயலாளரின் அனுமதியுடன் விடுவித்தேன். ஆனால் அதற்கு யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் அவரது பாடசாலை தனது நேரடி மேற்பார்வையில் இருப்பதால் விடுவித்தது பிழையென ஆட்சேபனை தெரிவித்து கடிதம் அனுப்பியிருந்தார். அவரது சம்பளம் பாடசாலையே வழங்குகின்றதென்றும் அவரை மீள அனுப்பமுடியாதென்றும் வாதிட்டிருந்தேன். எமது அலுவலகத்துடனேயே வைத்திருந்தேன். இறுதியாக எனது விருப்ப மின்றி அவரை பாடசாலைக்கு மீளவும் மாற்றினர். அனுப்பி எனக்கு விருப்பமில்லாத யாழ் கல்வி வலய திருட்டுடன், சம்பந்தப்பட்ட சாரதிலைசன்ஸ் உடைய காவலாளியை சாரதியாக அனுப்பினர். அவரை நான் ஏற்க வில்லை.

எனக்கு தனிப்பட்டமுறையில் இவ்வலுவலக வேலையை முடக்க வலயக்கல்விப் பணிப்பாளராலும் செயலாளராலும் மேற்கொள்ளப்பட்ட இடையூறுகள் பின்வருமாறு.

1. என்னுடன் பணியாற்றிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.சோ.பத்மநாதன் அவர்களது 2ம் முறை மீள் நியமனத்தை ஏற்றுக் கொள்ள மறுத்தமை. அவரது சம்பளத்தை ஒரு வருடமாக கொடுக்க மறுத்தமை. (ஆனால் இச்சம்பளம் பின்பு அவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது).

2. யான் இப்பணிமனையை விட்டு திருகோணமலைக்கு

இடமாற்றப்பட்டமை யான் அதனை ஆட்சேபித்து இரத்துச் செய்து கொண்டேன்

3. அவ்வாறு இடமாற்றம் செய்ய விடுவித்த கடிதத்தை வைத்து கல்வி அமைச்சு இசுறுபாய பகிரங்கசேவை ஆணைக்குழுவின் கல்விச் சபைக்கு முறையிட்டு கல்வி அமைச்சு இசுறுபாய ஆசிரியர் கல்விப் பிரிவிற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றேன் பின்பு என்னுடன் கடமையாற்றிய உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.க.கனகசிங்கத்தை (முன்னாள் பெரியபுலம் ம.வி.அதிபரை) பிரதி அதிபராக முன்பு அவருக்குக் கீழ் கடமையாற்றிய அதிபர் செல்வி க.கந்தையாவிற்கு கீழ் மாற்றி விட்டமை ஆனால் கல்வி விருத்தியை நோக்கதாக் கொண்ட திரு.க.கனகசிங்கம் அவர்கள் பெருந்தன்மையுடன் செல்வி க.கந்தையாவிற்கு கீழ் பிரதிஅதிபராக கடமையாற்றினார்.

4. யான் கல்வி அமைச்சில் மேலதிக செயலாளரின் உதவியுடன் கொழும்பில் அரச தொடர்மாடிக்கு விண்ணப்பித்து எனது விண்ணப்பத்தை ஏற்றுமாடி ஒதுக்கியதை செயலாளர் ஆட்சேபித்து கடிதம் அனுப்பியமை. ஆனால் யான் கொழும்பில் இடமாற்றம் பெற்று கடமையாற்றியதுடன் இவர்கள் தடுக்க முனைந்தும் முடியாமல் போய்விட்டது. எனக்கு தொடர்மாடி வீடும் கிடைத்தது.

5. என்னை தங்களது அனுமதியின்றி யாழ் பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராக கடமையாற்றியமை பிழை என விளக்கம் கோரி கடிதம் அனுப்பியமை. ஆனால் அனுமதியை முன்னைய செயலாளரிடம் இருந்து பெற்று கடமையாற்றியிருந்த படியால் ஒன்றும் செய்யமுடியாமற் போனது.

6. யான் ஓய்வூதியம் பெற விண்ணப்பித்த பொழுது அதற்குரிய *Clearance Cerntificate* ரை அனுப்பாமல் மாகாணக்கல்விப் பணிப்பாளர் தடுக்க முயன்றார். ஆனால் என்னுடன் பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற திரு.க.சண்முகலிங்கம் செயலாளராக இருந்தபடியால் தாராளமனப்பான்மையுடன்



அக்கடிதத்தை தனது ஒப்பத்துடன் அனுப்பியிருந்தார். ஓய்வூதியம் பெறக் கூடியதாக இருந்தது.

இந்த விடயங்களை யான் வெளிக் கொணர்வதன் நோக்கம் யான் எவ்வாறு பல இடையூறுகளை எதிர்நோக்கினேன். அவற்றையெல்லாம் சவாலாக எடுத்து முன்னேறினேன் என்பதை மற்றவர்களுக்கு காட்டி தோல்விகள், இடையூறுகளைக் கண்டு துவண்டு விடாமல் முன்னேறலாம் எனக் காட்டுவதற்கே. யான் **ஒரு வெட்ட வெட்ட தளைத்த மரம்.**

யான் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளராக இருந்த காலத்தில் பணிமனை நாச்சிமார் கோவிலடியில் இயங்கியபொழுத 20,30 மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு பணிமனைக்கு வந்தனர். அவர்களில் எல்லாரும் பலாலி கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இரண்டாம் வருடமாணவ நிறைவேற்றுக் குழுவினர். அவர்களில் குறிப்பிடக்கூடியவர்கள். தலைவர் திரு.நடராஜா தவசோதிநாதன், செயலாளர் திரு கோகுலவாசன் ஆகியோர். காரணம் கேட்டேன் அவர்கள் இரு ஆசிரிய கல்லூரிகளிலும் ஆசிரிய மாணவர்தொகையைக் கூட்டும்படி கடந்த மூன்று நாட்களாக எமது ஆசிரிய பயிற்சிக்கல்லூரி வாசல்களில் இடைமறிப்புப் போராட்டம் நடாத்தியும் ஐந்து வலயக்கல்விப்பணிப்பாளர்களும் திரும்பியும் பார்க்கவில்லை ஒருவரும் வந்து விசாரிக்கவில்லையென்றும் நீங்கள் எமது கோரிக்கையை செவிசாய்த்து ஆவன செய்யவேண்டுமென்று விநயமாக வேண்டினர்.

இது சம்பந்தமாக கொழும்பு செல்லும் பிரயாணக் கொடுப்பிற்குரிய பணம் எம்மிடம் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. தயவு செய்து ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டினர். யான் அப்பொறுப்பை ஏற்று அவர்களது கேரிக்கையுடன் எமது பகுதி அமைச்சரின் இருந்த கௌரவ டக்ளஸ் தேவானந்தவின் சிபார்சுடன், கௌரவ அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த அவர்களை கொழும்பில் கல்வி அமைச்சில் சந்தித்து மாணவர் தொகையைக் கூட்டும் அனுமதி பெற்றேன்.

அவ்வனுமதியின் அடிப்படையில் 2000ம் ஆண்டு

ஆனிமாதத்தில் மாணவர் அனுமதி 30 இதிலிருந்து 150 ஆக உயர்ந்தது இரு ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளில் இருந்தும் 300 மாணவர்களாக தொகை கூடியது. இவர்களுக்குரிய நேர்முகத் தேர்வை யாழ் பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி இயங்கிய திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடாத்தி முடித்தோம். அனுமதி கோரிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தொகை கூடுதலாக இருந்த நிலையை கருத்திற் கொண்டு என்னால் வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் புனர் நிர்மாணம் செய்த முத்துத்தம்பி கனிஷ்ட வித்தியாலயத்தில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆரம்ப பயிற்சி நெறியை ஆரம்பிக்க அனுமதி பெற்று அங்கு 75 மாணவர்களை அப்பயிற்சி நெறிக்கு சேர்ப்பித்தேன். இரு பயிற்சிக் கலாசாலைகளில் இருந்தும் வன்னி மாணவர்கள் உட்பட கூடுதலான மாணவர்கள் 300 மாணவர் 2002ம் ஆண்டு யூன் மாதம் பயிற்சியை நிறைவு செய்து அவ்வப் பாடசாலைகளுக்கு சென்றனர். அவர்களை ஆசிரிய வகுதி IIIம் தரத்திற்கும் இட்டுச் சென்று அதற்குரிய சம்பள உயர்வையும் பெற்றனர்.

இக்காலத்தில் இவ்விரு கல்லூரிகளிலும் நீண்ட காலமாக நிரப்பப்படாத அமய சிற்றூழியர்களுக்குரிய 14 வெற்றிடங்களுக்கு இரு அதிபர்களது கோரிக்கையை எடுத்துச்சென்று கௌரவ சமூக சேவைகள் அமைச்சரின் சிபாரிசுடன் கல்வி அமைச்சில் கௌரவ அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த அவர்களின் உத்தரவுப்பிரகாரம் அமய நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டது. அவர்கள் 14 பேரும் இன்றும் நிரந்தர ஊழியர்களாக அவ்விரு கலாசாலைகளிலும் கடமையாற்றுகின்றனர்.

அதே போல் இவ்விரு கல்லூரிகளிலும் தற்காலிக இணைப்புடன் கடமையாற்றிய 14 ஆசிரிய விரிவுரையாளர்களுக்கும் இலங்கை கல்வி நிர்வாக சேவை IIIம் வகுப்பிற்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுத்தேன். இக் கோரிக்கையை விடுத்தவர்கள் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு.சோ.பத்மநாதன் அவர்களும் கோப்பாய் பயிற்சிக்கல்லூரி அதிபர் திரு. பரம்சோதி அவர்களுமாவர். இந்த வரிசையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் வந்தவர்கள் திரு.K.சிவபாதம், திருமதி கோதை நகுலராஜா (தற்போதைய இராமநாதன் மகளிர்கல்லூரி அதிபர்)



திரு இளங்கோ, திரு.M.இக்னாசியஸ் (தற்போதைய பலாலி ஆ.கலாசாலை அதிபர்) திரு.கணபதிப்பிள்ளை செல்வி. M.சின்னையா (தற்போதைய கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்) திரு.T.ஜோன்குயின்டஸ், திரு.எம். சிவலிங்கம், திருமதி. I.இராமசந்திரன், திரு.R.தர்மகுலேந்திரன், திரு.S.கருணாமூர்த்தி, திருமதி.S.இராதாகிருஷ்ணன், கலாநிதி S.திருநாவுக்கரசு, திரு.I.புவனேந்திரன் ஆகியோர் உண்மையில் இப்பதவி உயர்வு பெரும் அதிஷ்டமான ஒன்று இவர்களுக்கு பின்பு ஒரு ஆசிரியரும் இவ்விணைப்பின் மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் பதவி உயர்த்தப்படவில்லை அவர்கள் 2006ம் ஆண்டு சம்பள கொமிசன் சிபார்சுக்கமைய இன்றும் யான் இ.க.நிர்வாக சேவை Iம் வகுப்பில் பெறும் ஓய்வூதியத்திலும் பார்க்க இரண்டு மடங்கு சம்பளம் பெறுகின்றனர். இது எனது தற்துணிவான செயல்.

யாழ் மாவட்டத்தில் இருந்து கல்வி அமைச்சு இசுறுபாயவிற்கு 24-09-2001ல் திகதியில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக இடமாற்றப்பட்டும் பழைய நிலையை எண்ணிமனவேதனையும், குழப்பமும் அடைந்தேன். ஆனால் எனது மனைவியார் குழந்தைகளுடன் ஒரே இடத்தில் கொழும்பில் இருந்தமை மன ஆறுதலைத்தந்தது.

சூழ்நிலை மாறியபின் இக்காலத்தில் எனது கவலையைப் போக்க மீண்டும் யாழ் வலயக்கல்விப் பணிப்பாளராக செயலாற்ற கல்விச் அமைச்சரின் உத்தரவைப் பெற்றிருந்தும் செயலாளர் தியாகலிங்கத்தின் சாதகமான பதில் கிடைக்காதபடியால் இடமாற்றம் பெற முடியாமல் போனது. அது போலவே மீள் நியமனம் பற்றி ஆளுநர் சிபார்சு செய்யும்படிகேட்டும் அங்கு கிடைக்கவில்லை இவற்றுடன் ஆசிரியர் பிரிவில் கல்விப் பணிப்பாளர் ஓய்வு பெற்றதும் அங்கிருந்த பிரதிக்கல்விப் பணிப்பாளர்களில் முது நிலையாளராக இருந்தமையையும் முன்பு கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியமையையும் சுட்டிக்காட்டி மேன் முறையீடு செய்து கல்வி அமைச்சர் அதனை அனுமதித்திருந்தும் பேரின வாதத்திற்குட்பட்ட மேலதிக செயலாளர் கலாநிதி நாணயக்கார (கல்வி அபிவிருத்தி நிதி, நிர்வாகம்) நியமிக்காது விட்டனர். இதனால் எவருக்கும் கடமை நிறைவேற்று பதவி கொடுக்கப்படாது இருந்தது. ஆனால் எனக்கு முதுநிலை

குறைந்த திரு.சமரசேகர அக்கடமைகளை கடிதம் இல்லாது நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டார். நிர்வாகமுறையில் நீதி ஒழுங்கு எங்கே உள்ளது. அரசியல் செல்வாக்கும் நிர்வாகச் செல்வாக்கும் தலையிட்ட காலத்தில் இருந்து கல்வி மேம்பாடு சிக்கல் அடைந்துள்ளது.

**பிரதிக்கல்விப் பணிப்பாளர் (ஆசிரிய கல்வி)**

ஆனால் யான் ஆசிரிய கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் எனது தமிழ் சமூக ஆசிரியர்களுக்கு துணிந்து சில கருமங்கள் செய்தேன். 2002 ஆனிமாத ஆசிரியர் அனுமதி நேர்முகத் தேர்வு வவுனியாவில் நடைபெற்றபோது சில ஆசிரியர்கள் கெடுபிடியால் வரவில்லை வருவதற்கு அவர்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இவர்களை மேன் முறையீடு செய்து தமிழ் மொழி மூலமான பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளராக இருந்த காரணத்தினால் 30 ஆசிரியர்களை காலந்தாழ்த்தி நேர்முகத் தேர்வுக்கு வந்த ஆசிரியர்களாக விசேட தேர்வுக்கு தோற்றச் செய்து அந்த வருடத்திலேயே இரண்டு வாரம் தாமதித்து ஆசிரிய பயிற்சி கல்லூரிக்கு அனுமதிக்க வைத்தேன். இதனை அறிந்த திரு.சமரசேகர செயலாளருக்கு எனக்கெதிராக முறைப்பாடு செய்தார். செயலாளர் என்னை அழைத்து விசாரணை செய்தார். நான் கூறினேன் "அந்தப்பிரதேச களநிலை அறிந்தவன் யான் அதுவும் யானே அம்மொழிமூலத் தெரிவுக்கு பொறுப்பானவன் அவர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து பயிற்சியாளர் தொகையை நிறைவு செய்ய வேண்டியிருந்ததால் அவ்வாறு செய்தேன்" என்று கூறினேன். செயலாளர் அவர்கள் "நீங்கள் செய்தது சரி" என்றும் தமிழ் மொழி விடயங்களில் திருசமரசேகரவை தலையிட வேண்டாமென்றும் அறிவுறுத்தினார். இத்தகைய துணிவு எமது மொழிரீதியாக சமூக ரீதியாக நிர்வாகத்தில் இருக்கும் யாம் மேற்கொள்ள வேண்டும் ஆனால் எமது வெற்றிடத்தை நிரப்ப இக்கிளைகளில் ஒரு தமிழ் பேசும் கல்வி அலுவலர் இன்று வரை எனக்குப்பின் நியமிக்கப்படவில்லை இது போலவே யான் இப்பதவியில் இருந்து Cover பண்ணின இந்துசமய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கும் ஒருவரும் இன்று வரை நியமிக்கப்படவில்லை.



இக்கிளையில் (ஆசிரியர் கல்வி) இருக்க எனது வயது பூர்த்தியாகி 02.11.2002ம் ஆண்டு ஓய்வு பெற்றேன் ஓய்வு பெறும் பொழுது எனக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை Iம் வகுப்புகுரிய பதவி உயர்வு கிடைக்கவில்லையென்ற மனக்குறையிருந்தது. ஆனால் நாம் நீதி கேட்டு கல்வி அமைச்சுக்கெதிராக தாக்கல் செய்த வழக்கின்படி இப் பதவி உயர்வு என்றோ கிடைக்கும் என்ற திருப்தி காணப்பட்டது. அதன்படி எங்களுக்கு சார்பாக தீர்ப்பு வழங்கி ஓய்வு பெற்று நான்கு வருடங்களின் பின்பு 1.1.2000ம் ஆண்டில் இருந்து எனக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குரிய பதவி உயர்வு வழங்கப்பட்டது. ஆனால் இப்பதவி உயர்வுடன் யான் 2006ம் ஆண்டு நான்கு வருடங்களின் பின்பு ஓய்வு பெற்றிருந்தால் தற்போதைய எனது ஓய்வூதியம் 24,000 ரூபா இருப்பது 56,000 ஆக இருந்திருக்கும். இந்தக் குறைபாட்டை ஓய்வூதிய முரண்பாட்டை நீக்கி எங்களுக்கும் அதே சம்பளப்பிரகாரம் ஓய்வூதியம் தரும்படி வழக்குத் தொடர்ந்துள்ளோம். அதற்கும் நியாயம் கிடைக்குமா எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.

யான் 2.11.2002ல் இருந்து ஓய்வு பெற்றாலும் எனது வேண்டுகோளுக்கிணங்க கல்விஅமைச்சில் 03.11.2002ல் இருந்து 03.05.2003ம் திகதி வரை ஆறுமாதங்களுக்கு பிரதி ஆணையாளராக கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தில் நியமிக்கப்பட்டேன் இக்காலங்களில் தமிழ் நூல்வெளியீடு சம்பந்தமாக கூடிய அக்கறை எடுத்து செயற்பட்டேன். இத்திணைக்களம் சுதந்திரமாக செயற்பட ஜனப் ஹச்சு முகமட் இடமளிக்கவில்லை. அவருக்கு என்னைக் கண்டதும் தனது இடத்திற்கு முக்கியத்துவம் குறைந்து விடும் என்ற நினைப்பில் தனியான ஒரு முக்கியத்துவமோ இடமோ அளிக்கப்பட வில்லை இறுதி 3 மாதங்களும் திரு.S.L.குணவர்த்தனவுடன் முரண்பட்டதால் யான் இந்துசமய பிரதிப்பணிப்பாளராக கடமையாற்றினேன். ஆனால் இவ் ஆறு மாதத்திற்குமுரிய சம்பளத்தை எனது ஓய்வூதியத்திற்கு புறம்பாக பெற்றுக் கொண்டேன் 04.05.2003ம் திகதியுடன் கல்வி அமைச்சைவிட்டு வெளியேறினேன்.



**உலா 10** தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற்றனைத் தூறுமறிவு

# ஒப்பந்த அடிப்படையில் சேவை

இவ்வாறு வெளியேறி நின்ற காலத்தில் அரச சார்பற்ற , நிறுவனமான Action Faim ல் விண்ணப்பத்திருந்ததன் பேரில் எழுத்துப் பரீட்சை, நேர்முகத்தெரிவில் தெரிவாகி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் *(Community Development Officer)* ஆக தெரிவாகி நியமிக்கப்படேன். இவர்களின் பிரதான பணி தூர்ந்துபோன கிணறுகளை புனர் நிர்மானம் செய்து குடிநீர் தோட்டம் விவசாயத்திற்குதவுவது.

இதன் சமூகத்தேவையை அறிந்து முன்நின்று விருப்பத்துடன் உழைத்தேன் எனக்குக்கீழ் பணிஆற்ற 7 அலுவலர்களை நியமித்தனர் இவர்களை கூட்டிச் சென்று சாவகச்சேரி நாவற்குழி கைதடி ஆகிய பிரதேசங்களில் உள்ள கிணறுகளை துரிதமாக புனர் நிர்மாணம் செய்வித்தேன். *A9* பாதை திறந்த சமாதான காலம். கண்ணிவெடிகள் அகற்றும் காலம். உயிர் ஆபத்து நிறைந்த சாவகச்சேரி சகல இடங்களிலும் நாவற்குழியில் உள்ள வயல் பிரதேசங்களில் கடமையாற்றினேன். கிராம அபிவிருத்திக்கு இது உதவியான ஓர் அனுபவத்தைப் பெற்றுத் தந்தது.

இச் சேவையில் ஆக 24 நாட்கள் மட்டுமே பணியாற்றினேன். யான் யாழ் மாவட்டத்தில் சேவையாற்றிக் கொண்டிருந்த பொழுது எனது ஆற்றலையும் அறிவையும் ஒரு மாவட்ட அபிவிருத்திக்கு பயன்படுத்தவென அக்காலத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த திரு.ந.இராஜநாயகம் எனது விருப்புக் கடிதத்தை பெற்று என்னை கிளிநொச்சி



மாவட்ட அரச செயலகத்தில் திட்டப் பணிப்பாளராக *(Project Director)* (01.07.2003ல் நியமனக்கடிதத்தை புனர்வாழ்வு புனர் நிர்மான அமைச்சில் இருந்து பெற்று) நியமித்திருந்தார். இந்நியமனம் 01.07.2003ல் இருந்து 30.06.2004வரைக்குரியதென குறிப்பிடப்பட்டிருந்தது.

இங்கு பதவி ஏற்றதும் சந்தோஷத்துடன் கடமையாற்றினேன். ஏனெனில் கிளிநொச்சி மாவட்டம் எனக்கு புதிதான ஒன்றல்ல இம் மாவட்டத்தில் 1983ல் இருந்து 1989 வரை சகல இடங்களிலும் வட்டாரக் கல்வி அதிகாரியாக கடமையாற்றியிருந்தேன். இங்கு எனக்கு உதவியாக உதவிச் செயற்திட்ட பணிப்பாளர், கணக்காளர், நிர்வாக அலுவலர், பொறியியலாளர், என ஒவ்வொருவரும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் இருவர் ஏழு எழுதுவினைஞர்கள் சிற்றூழியர்கள் மூவர் அத்துடன் கிளிநொச்சி, பளை, பூநகரி கண்டாவளை என்ற நான்கு உதவி அரசாங்க அதிபர்களது செயற்திட்ட இணைப்பாளராகவும் கடமையாற்றினேன்.

இந்நியமனம் ஓர் மீள் நியமனம். சகலஅரச ஊழியர்களுக்கு முரிய கடமைகள் பொறுப்புக்கள் தரப்பட்ட பதவியாக இருந்தது. ஆனால் அரச அதிபர் அவற்றை மட்டுப்படுத்தியே வைத்திருந்தார். இயக்கச்சி கோவில் வயல் கிராமத்தில் இயக்கச்சி பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகம், பென்சில், வேறு கற்றல் உபகரணங்கள் கொடுக்கப் பட்டது. பளைக்கிராமத்தில் புலோப்பளையில் மீள்குடியேற்றப் பொறுப்பை ஏற்று புதிய செயற்றிட்டம் மலசலகூடங்கள், கிணறுகள், வீடுகள், அமைத்துக் கொடுத்தோம் ஒரு பெரிய மலக்குழியை அமைத்து அவற்றில் தனித்தனியான மலசலகூடங்கள் 5ஐ இணைத்து அமைத்தமையால். ஒரு மலகூடத்தில் ஒரே நேரத்தில் பலரும் கியூவில் நின்று பாவிக்கும் தன்மையை நீக்கி தனித்தனியாக சுதந்திரமாக குடும்பத்திற்கு ஒரு மலசலகூடமாக பாவிக்கும் ஒரு நல்ல சூழலை உருவாக்கிக் கொடுத்தேன். மக்கள் இடம் பெயர்ந்து பட்ட கஷ்டத்திற்கு தனித்தனி கிணறு, தனித்தனி மலசலகூடம், தனித்தனி சிறுவீடு கட்டி ஆறுதலாக இருந்தனர். இவற்றுடன் நலன்புரி நிலையங்கள், நிவாரணம் வழங்குதல், பாடசாலை மீள் புனர்நிர்மாணம் ஆகிய வேலைகளைச் செய்தோம். இடம் பெயர்ந்தவர்களுக்கு மறு வாழ்வாதாரம் அளித்ததில் ஆத்மதிருத்தி ஏற்பட்டிருந்தது.

ஆனால் எனக்கொரு மனக்குறை இச் செயலகத்திற்கென ஓதுக்கப்பட்ட பிக்கப் வாகனத்தை பாவிக்க சுதந்திரம் கிடைக்க வில்லை. எனது சொந்தமான மொறிஸ்மைநர் காரை யாழில் இருந்து கிளிநொச்சிக்கு கொண்டு சென்று களவேலைக்கு அக்காரைப்பாவிக்க அனுமதி கேட்டும் அனுமதி தரப்படவில்லை பலவாகனங்கள் தருவிக்கப்பட்டும் திட்டப் பணிப்பாளர் செயலகத்திற்கென ஒரு வாகனமும் தனியாக ஓதுக்கப்படவில்லை.

இச் சூழலில் மீள் நியமனத்தில் இரண்டு வருடம் தொடர்ச்சியாக வேலை செய்தல் புதிய சம்பளமாற்றத்திற்கமைய ஓய்வூதியம் பெற சுற்று நிருபம் இடமளிக்கும் என்றபடியால் தொடர்ந்து ஆறுமாதம் சேவை செய்ய அனுமதி கேட்டிருந்தேன். ஆனால் அரச அதிபர் அவற்றுக்கு எனது விண்ணப்பத்தை சிபார்சு செய்து அனுப்ப மறுத்துவிட்டார். காரணம் கேட்க சூழல் சக்திகள் விரும்பவில்லை என்றார்; எமது மேல் பதவி வகிக்கும் சக ஊழியர்கள் விரும்பவில்லை என்றார்.

இவற்றுடன் எனது குடும்பம் கொழும்பில் இருந்தபடியால் வார இறுதியில் கொழும்பு சென்றுவருவதும் கஷ்டமாக இருந்தது. அத்துடன் யாழ்ப்பாணம் சென்றும் தனியாக இருப்பதும் கஷ்டமாக இருந்தது. இவற்றை யெல்லாம் நினைத்துப் பார்த்து கிளிநொச்சி மாவட்டத்தை விட்டு வெளியேறினேன்.

ஆனால் ஒரு விடயம் அந்த ஆறுமாத சேவை கிடைத்திருந்தால் யான் பெற்றுவரும் ஓய்வூதியம் புதிய சம்பள அமைப்பிற்கிணங்க இரட்டிப்பாகப் பெற்றிருக்க முடியும் ஓய்வூதியம் 56,000 மாதந்தம் எனக்கு உதவியாக இருந்த உதவிச் செயற்றிட்டப்பணிப்பாளர் ஒருவர் மாதம் ஒரிருமுறை கொழும்பு கிளிநொச்சி இணைப்பாளராக அரச அதிபருக்கு கடமையாற்றி தனியான வாகனத்தில் கொழும்பிற்கு சென்று வந்து ஆறு வருடங்கள் கடமையாற்றிய படியால். புதிய சம்பள அமைப்பிற்கேற்ப கூடுதலான ஓய்வூதியத்தை பெற்று வருகின்றார். இந்த அடிப்படையில் ஒரு சிலருக்கு ஒருசில சலுகை ஒரு சிலருக்கு கிடைக்க வேண்டிய நல்ல வருமானத்தை தடுத்து வேடிக்கை பார்ப்பதிலும் ஒரு சிலருக்கு விருப்பம் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். என்போலவே எனது உறவினர் இச் செயலகக்



கிளையில் கடமையாற்றிய நிர்வாக அதிகாரி திரு.வே.பரமநாதபிள்ளைக்கும் 1 வருடம் 9 மாதங்களின் நீடிப்பு மறுத்தமையால் அவரும் புதிய ஓய்வூதியத்தைப் பெறாது விட்டார்.

இக்காலத்தில் எனது மூத்த மகளின் திருமணம் நடந்தேறியது. யாழ் துர்க்கா மணிமண்டபத்தில் சிரேஷ்ட பொறியியலாளர் திரு.செ.நரேந்திரனை கைபிடித்தாள் தற்பொழுது அவுஸ்திரேலியாவில் பேத்மா நகரில் இரண்டு ஆண்குழந்தைகள் ஸ்ரீராம் ரகுராம் ஆகிய அன்பு மழலைகளுடன் சந்தோஷமாக குடியேறியுள்ளனர்.

30.06.2004 உடன் கிளிநொச்சியை வெளியேறிய யான் கொழும்பில் ஆறுமாதங்கள் (பொறியியலாளர் ஆகிய மகன் ஒரு கட்டிட நிர்மாண கொம்பனியை நிறுவ வழி அமைத்துக் கொடுத்தேன்.

**ஆசிய அபிவிருத்தி வங்கியில் கல்வி ஆலோசகர் (வ.கி.ஊவா மாகாணம்)**
***(Education Sector Development Frame Work (ESDFP) July 25th to Nov 30th 2006)***

இதற்குரிய விண்ணப்பம் 10.10.2005ல் கோரப்பட்டு அனுப்பப்பட்டது. கனடியன் குழுத்தலைவருக்கு அனுப்பப்பட்டு அவரே தெரிவு செய்தார், மாதாந்த பணமாக ஒரு இலட்சம் தரப்பட்டது. சேவை 3மாதம். எனக்கு தரப்பட்ட மாவட்டம் வடக்கு, கிழக்குடன் ஊவா மாகாணம் ESDFP அபிவிருத்தி திட்டத்திற்கு விளாக்கொத்துக்கள் தயாரித்து எடுத்துச் சென்று தகவல் திரட்டியதுடன் அவர்களிடம் களநிலையில் நேர்கண்டு அவதானித்து பகுப்பாய்வு முடிவுகள், சிபார்சுகள் அறிக்கையாக கையளிக்கப்பட்டது. இவை வலய ரீதியாக, மாகாணரீதியானவை பாடசாலைரீதியானவை.

இவற்றில் முக்கியமான சிபார்சு பாடசாலை மட்ட நியமனம் (School Based Appointment) மேற்கொள்ளவேண்டும் என்று யானும் நண்பர் குணசேகராவும் சிபார்சு செய்தோம் ஏனெனில் கூடுதலான ஆசிரியர்கள் நியமனத்தை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு 2,3 மாதங்களில் இடமாற்றம் பெற்று பாடசாலையை விட்டு சென்று

விடுவார்கள் பலகாலமாக இப்பாடசாலையில் ஆசிரியர் இடம் நிரப்பப்படாமல் அப்பாடசாலை மாணவர்கள் கற்றல் ரீதியாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதனை தடுத்து அப்பாடசாலைகளுக்கு நிவாரணம் தேடவே இத்தகைய நிபந்தனைகளை ஆலோசனையாக கல்வி அமைச்சுக்கு சிபார்சு செய்தோம். இது இன்று அமுலில் உள்ளது.

வேடிக்கையென்னவென்றால் நியமனம் கிடைத்தவுடன் என்னிடம் வருவார்கள் மாற்றித்தரும்படி யான் அவர்களை கூட்டிச் சென்றால் விடய எழுதுநர் கூறுவார் நீங்களே ஆலோசனை கூறிசுற்றுநிருபம் ஆக்கிவிட்டு அதனை மீறும் படி கேட்கிறீர்கள் என கேட்பார்கள் என யான் சிரித்து விட்டு ஆசிரியரது முகத்தைப் பார்ப்பேன்.

கிராமப்புறக் கஷ்டப் பிரதேச பாடசாலைகளது ஆசிரியர்களுக்கு கொத்தணிரீதியாக மைய ஆசிரியவதிவிடம் அமைத்தலும் சிபார்சு செய்யப்பட்டு அமுல் படுத்தப்படுகின்றது. வலய ரீதியான பணிப்பாளர்கள், மாகாணக்கல்விப் பணிப்பாளர் திட்ட பிரதிப்பணிப்பாளர்கள், அதிபர்கள் கல்வி அமைச்சுக்கு அழைக்கப்பட்டு வேலைக்களம் *(Work shops)* நடாத்தப்பட்டது. அவர்களுக்கு செயற்றிட்டம் பற்றி கூறப்பட்டது. தமிழ் மொழி ரீதியாக குழுஆக்கப்பட்டு அனைவரையும் பொறுப்பேற்றேன். வினாக்கொத்துகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

**எடுக்கப்பட்ட விடயங்கள்**

*1.* The program for school improvement (PSI)
பாடசாலை விருத்திக்காய நிகழ்வு.

A. The School Based Teacher Training
(பாடசாலை மட்ட ஆசிரியர் பயிற்சி)

B. Govt's decentralization and school governance policies
(அரசபரவலாக்கமும் பாடசாலை ஆட்சிக் கொள்கைகளும்)

C. The review of Development plan



(அபிவிருத்தித் திட்டத்தை மீளாய்தல்)

D. The Assesment of planning and implementation
(திட்டமிடல் நடைமுறைப்படுத்தல் பற்றிய மதிப்பீடு)

E. Effeetiveness of building teacher Complexes in rural areas
(கிராமப்புறங்களில் ஆசிரிய வதிவிடங்களை கட்டுவதன் பயன்பாடு)

As an incentive for teachers to serve in rural areas
(கிராமப்புறங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கிடைக்கும் ஊக்குவிப்புப் பணம்)

களஆய்வுமேற்கொண்ட இடங்கள் :-

| | | |
|---|---|---|
| ஊவா மாகாணம் | :- | பதுளை, வெலிமட, மொனராகல. |
| வ.கி.மாகாணம் | :- | மன்னார், வவுனியா, டெகியத்தகண்டிய, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம். |

*1 1/2* வருடங்கள் எனது ஆற்றல் வளம் வீணடிக்கப்படுவதை அறிந்த ஹலிஸ்டர் நாணயக்கரா கல்வி அமைச்சு, ஆலோசகர், எனது சுயவிபரத்தைப் பெற்று *01.01.2006* தொடக்கம் *30.06.2007* வரை என்னை முகாமைத்துவதர உறுதிப்பாட்டு வடக்கு கிழக்கு தர இணைப்பாளராக கல்வி அமைச்சில் நியமித்தார் அவரது தலைமையில் நாம் அறுவர் ஒவ்வொரு மாகாணத்திற்கும் பொறுப்பாகக் கடமையாற்றினோம்.

**முகாமைத்துவ தர இணைப்பாளராக....**

எமக்கு அலுவலக வேலைகளுடன் இலங்கை பூராகவும் உள்ள தமிழ்மொழிப் பாடசாலைகள், சிங்கள மொழிப் பாடசாலைகளதும் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டை அவதானித்தோம் களவேலைக்கு திருகோணமலை பதுளை, குருநாகல் பேருவளை அப்பாந்தோட்ட போன்ற பகுதிகளுக்குச் சென்று ஆலோசனை வழங்குவதில் மனச் சந்தோஷம் காணப்பட்டது. வாகனம் பெற்றுக் கொள்வதில் சில கஷ்டங்கள்

இருந்தாலும் எமது பணியை திரு நாணயக்காரா தலைமையில் நிறைவேற்றி மூன்று இன அதிகாரிகளும் கூட்டாக கடமையாற்றினோம். இக்கிளையில் எமது கல்வி, வாண்மை தொழில் அனுபவங்களைக் கொண்டு நிறையச் செய்யலாம் அதற் கேற்ற கல்வி அபிவிருத்திக்கு உதவியான பொது நிர்வாக அலுவலர்கள் ஆதரவு வழங்கவில்லை.

இறுதியாக 30.06.2007 வரை இருந்த எமது சேவையை நீடிக்க அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்த பொழுது அறுவரது சேவையும் தேவையில்லையென்றும் கிழக்கு மாகாண சிங்கள மொழி மூலப் பாடசாலைகளது கல்வி அபிவிருத்திக்கு இவ் அறுவரது சேவையும் தேவையென விசேட கபினட் பத்திரம் சமர்ப்பித்து அனுமதிக்கப்பட்டது.

இவ் அனுமதி கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அவர் சிங்கள மொழிமூலமான நால்வரது சேவையையும் ஏற்பதாகவும் எனதும். நண்பர் ஜனாப் ஹசயினதும் சேவை தேவையில்லை என்றும் கடிதம் அனுப்பியிருந்தார். அந்த நால்வரும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு செல்ல நாம் இருவரும் இடைநிறுத்தப்பட்டோம்.

இந்நிலையில் எனது சேவை தேவையென மாண்புமிகு அமைச்சர் சுசில் பிறேம்யந்த அவர்களும் தமிழ் மொழி பேசுவோரும் வேண்டியதன் பேரில் கல்வி அமைச்சிற்கு வருகைதரும் அதிபர், கல்வி அலுவலர், ஆசிரியர்கள் பெற்றோர்களது பிரச்சினையை தீர்த்து வைக்க அனுபவம் வாய்ந்த இ.நி.க.சேவை 1ம் வகுப்பு அலுவலர் தேவையென வேண்டியதன் பேரில் எனக்கு அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு கல்வி முதுநிலை ஆலோசகராக 01.09.2007ம் திகதி முதல் 31.08.2008 வரை அனுமதி கிடைத்து உரிய நியமனக் கடிதமும் கிடைத்தது.

இக்காலத்தில் கல்வி அமைச்சில் இருந்து அதிபர், அலுவலர் ஆசிரியர்களது நியமனம், இடமாற்றம், சம்பள ஏற்றம், சேவைநீடிப்பு, சம்பள நிலுவை, வெளிநாட்டு செல்வதற்கான லீவு, அனுமதி பாடசாலைத் தேவைகள் போன்றவற்றை நிறைவு செய்து



இணைப்பு வேலைகளை கவனித்துவந்தேன்.

இவ்வேலைகளில் நிறைவும் திருப்தியும் கண்ட மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அச் சேவையுடன் மேலதிகமாக கிராமப் பாடசாலைகளது கல்வி அபிவிருத்திப் பொறுப்பையும் அளித்து அமைச்சரவைப் பத்திரம் மூலம் அனுமதி பெற்றுத் தந்து 01.09.2008 தொடக்கம் 31.08.2009 வரை கடமையாற்ற அனுமதி பெற்றுத்தந்தார்.

அதன் பிரகாரம் கல்வி அமைச்சில் குளு குளு வசதிகள் கொண்ட அறையில் இருந்து பணியாற்றி வருகின்றேன். இக்காலத்தில் யான் பெரும் சாதனை நிலைநாட்ட முடிந்தது. கடந்த ஆறுவருடங்களாக யுத்தம் காரணமாக குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படாதிருந்த விஞ்ஞான உபகரணங்கள், விஞ்ஞான இரசாயனப் பொருட்கள் ஆறுகோடி பெறுமதி யானவை மாண்பு மிகு சமூக சேவை சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களின் உதவி மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களது அமைச்சே அனுப்பும் கப்பல் கூலியை பொறுப்பேற்றது. இன்று குடா நாட்டு மாணவர்கள் மகிழ்ச்சியுடன் விஞ்ஞான செய்முறை பயிற்சியை மேற்கொள்கின்றனர்.

தற்பொழுது மத்திய அமைச்சில் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் ஆசிரியர், அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் தேவைகள் இணைப்பலுவலராக இருந்து கடமைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2009 ஆகஸ் மாத பரீட்சைக்கு தோற்றும் A/L மாணவர்களுக்கு பிரதி வாரமுடிவிலும் கொழும்பு தேசிய கல்லூரி ஆசிரியர்களை அழைத்துச் சென்று விசேட வகுப்புகளை நடாத்துகின்றேன். அவர்களுக்குரிய கற்றல் உபகரணங்கள் ஊட்டச்சத்தும் அவசிய தேவையான பொருட்களையும் சேர்த்து உடன் வழங்கப்படுகின்றது.



உலா 11

கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே - தொல்.

# கல்விச் சுற்றுலா

எனது வாழ்நாளில் பிறநாட்டுக்கு உலாவராமை மனதில் மிகவும் மனவருத்தமும், தாக்கமுமாக இருந்தது. யாம் சிறுபான்மையினர் (தமிழர்) ஆனபடியால் உத்தியோக ரீதியாக, கல்வி ரீதியாக வெளிநாடு சென்று கற்க கற்பிக்க, உரையாற்ற அரசால் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 1982.04.21ல் இணைந்தும் கூட 10,12.07.1998 வரை 16 வருடங்கள் எத்தகைய சந்தர்பமும் கிடைக்க வில்லை. வடக்கு கிழக்கு மாகாணசபைக்குட்பட்ட கல்வி அமைச்சில் 1996 யூன் மாதம் கடமையாற்றத் தொடங்கியும் எனது பெயர் சிபார்சு செய்யப் படவில்லை.

இந் நிலையில் *Institute of Sathya sai Education India* நடாத்திய *Sathya sai Education in Human Values Training Programme* ல் பங்கு பற்ற பகவானால் அழைப்பு விடுக்கப்பட்டது. திருகோணமலை சத்யசாயிபாபா நிலையத்தால் என்னைத் தெரிவு செய்து (நண்பர் ஏகாம்பரம் சிபார்சில் பங்கு பற்றும் படியாக பணித்தனர். இச் செலவை நிலையம் தரமாட்டாது உங்கள் செலவிலேயே சென்று வரவேண்டுமென்று கூறப்பட்டது.

வீட்டுப் பொறுப்பை (ஐந்து பிள்ளைகளும் கல்வி கற்கும் நிலையில்) சுமந்திருந்த எனக்கு பெரும் சங்கடமான நிலையாக இருந்தது. இருந்தாலும் அவர்களது தெரிவையும் பணிப்பையும், மறுக்க முடியாமல் 'ஆம் செல்கின்றேன்' என்று கூறி இலங்கை



வங்கி உதவி முகாமையாளர் நண்பர் சிவஞான சுந்தரத்திடம் சென்று *O.D* கேட்டேன்.

அவர்கள் கடிதம் எழுதித் தரும்படி வேண்டி ரூபா *15,000* தந்தனர். அவற்றுடன் எனது இரண்டாவது மகன் திரு நந்தனும் தான் சேர்த்து வைத்திருந்த பத்தாயிரம் ரூபாவை தந்தார். இது எனது வாழ்வில் முதல் வெளிநாட்டுப் பயணம். ஆன படியால் சந்தர்ப்பத்தை நழுவ விடாது இந்தியா நோக்கி பயணத்தை மேற்கொண்டேன்.

*06.07.1998*ல் இந்தியாவில் சென்னை விமான நிலயத்தில் இறங்கிய யான் வவுனியா எனது நண்பர்கள் உறவினரின் வரவேற்புடன் சென்னை நகரில் இளைப்பாறிய பின் புட்டப்பர்த்திக்கு பஸ்மூலம் பிரயாணம் மேற்கொண்டேன். இலங்கையில் இருந்து களுத்துறை மாவட்டத்தின் சத்திய சாயி பகவான் நிலையப் பிரதிநிதி அவர்கள் தனது மகளுடன் இலங்கை விமான நிலையத்தில் இணைந்து கொண்டவர் எங்களுடன் வந்தார். பஸ் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பொழுது எமக்கு பய உணர்வு வந்தது. மாலை 7 மணிக்கு புறப்பட்டயாம் அதிகாலை 2 மணிக்கு புட்டப்பார்த்தி வாசலை அடைந்தோம் இங்கு பகவான் உள் வதிவிடத்தில் தங்குமிட வசதி எமக்கு ஏற்கனவே ஒதுக்கியிருந்தும் அதிகாலை 2 மணிக்கு உள் நுழைய முடியாது என அறிவித்தனர் நாங்கள் மூவரும் எம்முடன் வந்த சில வேற்று நாட்டுப் பிரதிநிதிகளும் இணைந்து தனியார் தங்குமிடத்தில் தங்கி காலை 6 மணிக்கு பகவானின் புனித விதிவிடத்து காரியாலயத்திற்கு சென்றோம். அங்கு எங்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அறைத் திறப்புக்கள் தரப்பட்டது. எனது அறையில் பிறேசில் நாட்டுப் பிரதிநிதியும் கனடா நாட்டு தமிழ் பிரதிநிதியுமாக நாம் மூவர் ஒன்றாகத் தங்கினோம்.

இது 7.7.1998ம் திகதியாகும். முற்றாக 7ம் திகதி ஓய்வெடுத்த யாம் 8ம் திகதி பகவானை தரிசிக்க அதிகாலை 3 மணிக்கு எழுந்து அவரது தரிசன ஆலயத்திற்கு சென்றோம். ஏறக்குறைய மூவாயிரம் மக்கள் வரிசையாக அதிகாலை ஒருவர் பின் ஒருவராகச் சென்று அமர்ந்தோம். காலை 7 மணிவரை பக்திப்பாடல் பாடிய வண்ணம் யாவரும் இருந்தனர். பகவான்

அவர்கள் தங்கத்தேரில் தரிசனத்திற்காக வருகை தந்தார். தேரை விட்டு இறங்கி ஒவ்வொரு திசையாக நடந்து சென்று காட்சி அளித்தார். ஒவ்வொரு வரும் கோரிக்கைகளை கையில் எழுதிய வண்ணம் வைத்திருந்தும் ஒரு சிலரிடம் மட்டுமே பகவான் வாங்கினார். சிலருக்கு அண்மையில் சென்று ஆசீர்வாதம் செய்தார் எமக்கண்மையில் சென்றும் கையை அசைத்துச் சென்றாரே ஒழிய அண்மையில் வந்து ஆசிர்வாதம் தரவில்லை.

9ம் திகதி புட்டர்பத்தி வளாகத்தை சுற்றிப்பார்வையிட்டோம். பகவானது விபூதி பைக்கற் பிரசாதம் உட்பட பல பொருட்களை, கொள்வனவு செய்தோம். உணவு உண்ணும் மண்டப ஒழுங்கு எம்மை வியப்பில் ஆழ்த்தியது எல்லோரும் வெள்ளை உடை அணிந்து இருந்தனர். நெறிப்படுத்த, மேற்பார்வை செய்ய ஒருவரும் இல்லாது தாமாக மேற்கொண்ட ஒழுங்குமுறையும் ஒழுங்குகளும் என் உள்ளத்தை கவர்ந்தது. சமய நிறுவனங்களில் அதி உன்னதமான ஒழுங்காக அவற்றை எனது நெஞ்சில் நிறுத்தினேன்.

அடுத்த நாள் 10ம் திகதி தொடக்கம் 12.07.1998ம் திகதி வரை மூன்று நாட்கள் கல்வி மண்டபத்தில் கலந்துரையாடல் கருத்தரங்குகள் நடைபெற்றது. அக்கருத்தரங்கில் ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

பின்னர் மனித விழுமிய மேம்பாட்டுக்கல்வி என்னும் கட்டுரையை இலங்கையில் வெளியாகும் தினக் குரல் பத்திரிகையில் 26.12.1998ல் வெளியிட்டேன். அத்துடன் இவ்விடயம் சத்யசாயிபகவானின் திருநெல்வேலியில் அமைந்த பகவானது சாயி நிலையத்தில் அவரது 23.11.1998 பிறந்த தினத்தில் பலரும் கூடியிருந்த அரங்கில் முன்வைத்தேன். யாவரும் விழுமியக்கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து பாராட்டினர்.

13.07.1998ல் பகவானது நிலையத்தில் என்னால் கொள்வனவு செய்யப்பட்ட நூல்களுடன் பி.ப 5மணியளவில் சென்னை திரும்பி எனது நண்பரது உறவினர் வீட்டில் தங்கினேன். அங்கு கொள்வனவு செய்த நூல்களில் *Life is a Game, Play it* வாழ்க்கை ஒரு விளையாட்டு விளையாடிப் பாருங்கள் என்ற நூல் எனது உள்ளத்தை நன்றாக தொட்டது. வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் சவால்களை



எதிர் கொள்ள வைத்தது. இறுதியில் விளையாட்டு ஆத்மீகத்தை நோக்காகக் கொண்டது என்பதையும் உணர்த்தியது

14.07.19998ல் எனது இந்தியா பயணத்தை முடித்துக் கொண்டு பி.ப 2 மணிக்கு இலங்கைக்கு வந்தேன். இப்பயணம் எனது வாழ்க்கையில் பகவானது ஆசியுடன் சமய நோக்குடன் அமைந்த பயணமாக இருந்தமையால் தொடர்ந்து வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வழிவகுத்த ஒரு ஆரம்பப் பயணம் என்றே சொல்ல முடியும். இப்பயணத்தை முடித்து திருகோணமலையில் கடமையாற்றிக் கொண்டிருந்த எனக்கு 01.10.1998ல் யாழ் வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியை பெற்றுத் தந்ததுடன் அக்காலத்தில் கப்பல் மூலமும் விமானம் மூலமும் கொழும்புக்கும் திருகோணமலைக்கும் குடும்பத்தாரை பார்க்கவும் உத்தியோக விடயங்களுக்காகவும் வந்த சந்தர்பங்கள் அமெரிக்க பயணத்திற்கும் வழி காட்டியது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் தங்கி காத்து நின்று கப்பல் ஏறவேண்டிய நிலையில் ஒருமுறை எதிர்பாராத விதமாக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி செல்லையா அவர்களை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. அவர்கள் வருடம் ஒருமுறை தான் கல்வி சமய காரணங்களுக்காக அமெரிக்கா சென்று வருவதாகவும் கலாநிதிப்பட்டம் படிப்பு சம்பந்தமாகவும் உரையாடினார். யான் அவரிடம் எங்களுக்கும் கல்வி ஆய்வு விடயமாக ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தரக்கூடாதா என்று கேட்டேன். அவர் அதனை சந்தோஷமாக செவிமடுத்து 'யோசிக்கலாம்' என்று கூறி எனது சுயவிபரத்தை வாங்கியதுடன் முன்பு யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டையில் கற்பித்து உயர்கல்வி புலமைப் பரிசில் சிபார்சுக்கு (போலிங்கிறின் பல்கலைக்கழகம் U.S.A) பொறுப்பாக இருந்த திரு.டான்ரி துரைரட்ணம் அவர்களுக்கு இது பற்றி எழுதி ஒழுங்குகள் மேற்கொள்ளலாம் என்று கூறினார். அதன்படி அவர் உதவும் நோக்கில் எனக்கு சகல ஒழுங்குகளையும் மேற் கொண்டிருந்தார்.

அதற்கமைய 18.03.1999ம் திகதி எனது செல்கைக்குரிய படிவங்கள் திரு டான்ரி துரைரட்ணம் அவர்களிடம் இருந்து அனுப்பப்பட்டது. அவற்றில் சர்வதேச கல்விப் பரிமாற்ற நிகழ்வுக்கு

அழைப்பதற்கு யான் தகுதியா என பரிசீலிப்பதற்குரிய விபரங்கள் கேட்டிருந்தனர் அவற்றில் எனது பெயர், வயது, பதவி வேலை செய்யும் இடம் என்னை ஸ்பொன்சர் செய்யும் பல்கலைக்கழகம் கல்வித்திணைக்களம், என்பனவும் அவற்றில் விரிவுரையாற்றுதல் ஆய்வு செய்வதற்கு சந்தர்ப்பம், பல்வேறு கல்வி அமர்வுகள், களங்கள் என்பனவற்றையும் குறித்து இந் நிகழ்வு சர்வதேச ரீதியாக கல்வி கலாசார பரிமாற்றத்திற்கு வழிவகுக்கும் என்றும் குறித்து இருந்தனர் அத்துடன் என்னை ஒரு ஆய்வு ஸ்கொலராகவும் கணித்திருந்தனர் எனக்குரிய காலம் 4 மாதங்கள் அவற்றுக்குரிய கொடுப்பனவு மொத்தமாக 4000.00 டொலர் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

இவற்றைப் பெற்றுக் கொண்ட கல்விப் பீடம் அவற்றை ஏற்றுக் கொள்வதாகவும் எனது வருகையை செப்டம்பர் மாதம் 1ம் திகதிக்கு முன்பு எதிர்பார்ப்பதாகவும் 23.07.1999ல் போலிங்கிறின் ஸ்ரேற் பல்கலைக்கழக சர்வதேச கல்வி நிலையத்தின் உதவி பீடாதிபதி *Jeffrey M.Grilliot* இடம் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது.

அவற்றை வைத்து எனது விடுமுறைக்கு விண்ணப்பித்திருந்ததுடன் புலமைப்பரிசில் நிகழ்வில் பங்கு பற்றுவதற்கு கல்வி அமைச்சிடம் இருந்து அனுமதிகோரி இருந்தேன். அவற்றுடன் *U.S.A, U,K, London, France, Canada* ஆகிய நாடுகளுக்கும் இந் நிகழ்வின் போது சென்று வருவதற்கு விசாவிற்கு விண்ணப்பித்து பெற்றிருந்தேன்.

இவ் விசாக்கள் பெற்றதன் பின்பு சேவையாற்றிய வலயக்கல்விப் பணிமனையில் யாழ்ப்பாணத்தில் எனது கடமைப் பொறுப்பை பிரதிக்கல்விப்பணிப்பாளரிடம் ஒப்படைத்து விட்டு செப்டம்பர் மாதம் 24ம் திகதி 1999ம்ஆண்டு மனைவியாரும் பிள்ளைகளும் கொழும்பில் இருந்து வழியனுப்ப அமெரிக்காநோக்கிப் பயணமானேன். 25ம் திகதி மாலை டுபாய் ஊடாக ஓகாயோ பிராதன விமான நிலையத்தில் மாலை 5 மணிக்கு இறங்கினேன். திரு.டான்ரி துரைரட்ணம் சுகவீனமுற்று இருந்தபடியால் தனது மகனாரை விமான நிலையத்திற்கு அனுப்பி என்னை வரவேற்று தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். திரு. துரைரட்ணம் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் இன்முகம்



காட்டி வரவேற்று தாய் நாட்டுப் பாசம் ஊறியவராக கட்டியணைத்து அறிவுரைகள் வழங்கினார். அடுத்தநாள் காலை உதவி பீடாதிபதி திரு. ஜிவ்றி அவர்கள் என்னை அழைத்துச் சென்று பல்கலைக்கழக வதிவிடத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட தனி அறையில் தங்கவைத்தார்.

வசதியான குளிரூட்டப்பட்ட நவீன வசதிகள் கொண்ட அறையாக இருந்தாலும் சொந்த நாட்டையும் மனைவி பிள்ளைகளையும் பிரிந்து அன்னிய நாட்டில் வந்து தங்குவதை நினைத்து சிறிது கவலை அடைந்தேன். அங்குள்ள உணவுச் சாலையில் உணவருந்தியதன் பின்பு உறங்கி காலை எழுந்து பல்கலைக்கழக *College of Education* வளாகத்திற்கு சென்று பேராசிரியர் *Joyce E Koch* அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் அன்புடன் வரவேற்று எனக்காக ஒதுக்கப்பட்ட ஆய்வு அறைக்கு அனுப்பினார். ஏனைய விரிவுரையாளர்கள், ஆய்வாளர்களுக்கு அறிமுகம் செய்தபின் பல்கலைக்கழக பட்டதாரி மாணவன் ஒருவரை எனக்கு தனியாக உதவிக்கு அனுப்பி வைத்தார். அந்த அறையில் தரப்பட்ட கணணியைப் பயன்படுத்த எனக்கு தெரியாது என்று கூற அந்த மாணவன் அன்பாக அதனைப்பயன்படுத்தும் விதத்தை காட்டி உதவியதுடன் எனது கடமையேற்ற கடிதத்தை தயாரித்து ஒப்பம் வாங்கிச் சென்று *Koch* இடம் கொடுத்தார்.

உண்மையைக் கூற வேண்டும் அவர்களது உச்சரிப்பை விளங்கிக் கொள்ள 3,4 நாட்கள் பிடித்தது. அவர்களது சொண்டு அசையும் விதத்தைப் பார்த்தே ஆங்கிலத்தை விளங்கி கொண்டேன். அங்கு எமக்குதவ ஒரு சிற்றூழியர் கூட இல்லை. அவர்கள் நாட்டில் அந்த முறை இல்லை. எமது அறையை நாமே கூட்ட வேண்டும் நாமே தேனீர் தயாரிக்கவேண்டும். எமது கோவையை பெரியவரிடம் நாமே எடுத்துச் செல்ல வேண்டும். எந்த பெரிய உத்தியோகம் வகித்தாலும் அவர்களது காரை அவர்களே ஓட்ட வேண்டும் சாரதியாரை நியமிக்கும் தன்மை இல்லை. காலையில் வந்ததும் வேலை நோரம் முடியும் வரை இயந்திரமாகவே இயங்குவர்.

சுவாத்தியம் குளிராக இருந்தது. அவற்றில் இருந்து உடலைப் பாதுகாப்பதற்குரிய யக்கற், கிளவுஸ், தொப்பி அணிந்து செல்ல வேண்டிய நிலை. வதிவிடமும் விரிவுரை மண்டபம் எனது

அலுவலகம் நடைதூரமாக இருந்தபடியால் குளிர் அவ்வளவு பிரச்சினையாக இருக்கவில்லை. எனது அலுவலக வதிவிட அறைக்குள் சென்றதும் குளிர் தாங்கி உடையை களையவேண்டியதுதான். ஆனால் ஒரு நாள் பழக்கமின்மையால் அவற்றை அணியாது யான் பட்ட கஷ்டம் அவ்வளவுதான். உள்ளங்கை அத்தனையும் விறைந்து விட்டது. பனி மழையும் பொழிந்தது. ஓடோடிச் சென்று மண்டபத்துள் பிரவேசித்தும் விறைப்பு எடுபடவில்லை. எனது உணவு சைவ உணவாக இருந்தபடியால் அங்கு பெரும் கஷ்டமாக இருந்தது. கூடுதலாக பாண், பால், பட்டர், பழவகைகளே, பச்சை காய்கறி வகைகள் உணவாக இருந்தது. நல்ல ஊட்டச் சத்தாக இருந்த படியால் உடலும் பருமனாகி இருந்தது. இலங்கை வந்ததும் எடையைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது.

இவற்றை எல்லாம் சமாளித்தாலும் மனைவியாரைம் பிள்ளைகளையும் கதைக்காமல் விட்டுப் பிரிந்து நிற்பது மனதுக்கு கஷ்டமாக இருந்தது. இந்தக் கஷ்ட்டத்தை போக்க தொலைபேசியின் உதவியை நாடி பெரும் கஷ்டமும் நஷ்டமும் அடைந்தேன் அறையில் இருந்து நேரடியாக தொடர்பு கொள்ளும் நிலை இருந்தும் அவற்றின் பில் இறுதியில் வேறாட்டல் பில்லாக வந்தமை பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இறுதியாக எமது உதவி பீடாதிபதியின் ஆலோசனைக் கிணங்க கடிதம் எழுதி கழிவுடன் சாதாரண பில்லாக கட்டணம் செலுத்தி என்னை விடுவித்துவந்தேன்.

ஒகாயோ *Bowling Green* பல்கலைக்கழகத்தில் இருந்த காலத்தில் சனி ஞாயிறு கழிவது கஷ்டமாக இருந்தது. ஆனால் ஓகாயாவின் எல்லை கனடாவாக இருந்தபடியால் *Weekend* கூடுதலாக பஸ்மூலம் கனடா சென்று ஸ்காபிரோவில் உறவினர்கள் வீடு சென்று வந்தேன். தம்பி சிவகுமார் ஸ்காபிரோ நகரில் காரில் வந்து ஏற்றிச் செல்வார். அங்கு தமிழ் சூழ்நிலை கோவில்செல்வது, விழா கண்டுகளிப்பது எல்லாம் தனிமையை நீக்கியது. அத்துடன் மைத்துனரிர் மகன் சிக்காக்கோ நகரில் இருந்தபடியால் அங்கு சென்றேன் அங்குள்ள தமிழர் ஒன்றியம் வரவேற்று விழாவெடுத்தனர். இலங்கையில் தமிழர்களது நிலைபற்றி கேட்டறிந்தனர். பழைய நண்பர்கள் சிலரை சந்திக்க



கூடியதாக இருந்தது. இந்திய தமிழ் பேராசிரியர் ஒருவர் எனது பாராட்டு விழாவிற்கு தலைமைவகித்தார். அவர் எங்களை விட இலங்கையில் தமிழர்களது நிலை பற்றி மிக விரிவாக அறிந்திருந்தமை அவரது பேச்சு மூலம் அறியக் கூடியதாக இருந்தது. கனடாவில் அங்கு செயற்படும் தமிழ் வானொலிகளில் நானும் நண்பன் திரு சுவாமி அப்பாத்துரையும் இணைந்து யாழ்ப்பாண கல்வி நிலைபற்றியும் இலங்கையில் தமிழர் கல்வி நிலை பற்றியும் பேட்டி அளித்தோம்.

சிக்காகோவில் சத்தியசாயிபாபா சமிர்த்தி நிலையம் இருந்தது. அங்கு சமயமும், கல்விபற்றியும் உரையாற்றினேன். ஆங்கிலேயர் உட்பட அனைவரும் பக்திரூபமாக அமைதியாக இருந்து செவிமடுத்தனர். அங்கு கூட பகவான் அருளால் முதன் முதலாக புட்டப்பர்த்தி மகாநாட்டில் மனித விழுமிய மேம் பாட்டுக் கல்வி பற்றி என்ன கருத்தை முன்வைத்தேனோ அதே கருத்தை உள்ளடக்கி உரையாற்றினேன். பல வினாக்களை தொடுத்து கீழைத்தேய பக்தி நெறி ஆத்மீக உணர்வை தாம் தெளிவாக கண்டு கொள்வதாகக் கூறினர்.

யான் அந்த சமித்தி குழுவில் ஒரு கோரிக்கையை முன்வைத்திலுருந்தேன். எங்கள் திருநெல்வேலி சமித்தி நிலையத்திற்கும் இந்து மாணவர் விடுதிக்கும் அன்பளிப்புகள் தரும்படி வேண்டினேன். அவர்கள் பணத்தையும் குழந்தைகளுக்காய் புதிய ஆடைகளையும் தந்துதவினர் அவற்றை இரு நிலையங்களிலும் ஒப்படைத்து அவற்றுக்குரிய பற்றுச் சீட்டைப் பெற்று அங்கு அனுப்பிவைத்தேன்.

இதே போல எனது மருமகனார் ஒகாயாவில் மருத்துவராக பணியாற்றிய படியால் அவரிடமும் வாரமுடிவில் அடிக்கடி சென்று வந்தேன். அவ்வாறு சென்று வந்தமையால் ஓரளவு அமெரிக்காவில் தனிமையைக் கழிக்கக் கூடியதாக இருந்தது.

இங்கிருந்த காலத்தில் *Hindu Religious Society of Ontario (Scarborugh)* என்னை தங்கள் கழக வருடாந்த நிகழ்விற்கு 1999ம் ஆண்டு கார்த்திகை மாதம் வரவேற்றிருந்தனர். அவ்விழாவிற்கு

பிரதம விருந்தினராக கனடாவிற்கு சென்று பங்கு பற்றியிருந்தேன். அங்கு புலம் பெயர்ந்து வந்து குடியேறிய உறவுகள் தங்கள் விழுமியங்கள், கலாசாரங்களை பேணி தங்கள் பிள்ளைகள் ஊடாக பேணிப்பாதுகாத்து, அவற்றை கையளிக்க உள்ளார்கள் என்பதை அவதானித்தேன். அந்தளவிற்கு உணர்வுபூர்வமாக அவ்விழாவை ஒழுங்கு செய்து தங்கள் தமிழ் கலாசார அடையாளங்களை வெளிப்படுத்தினர்.

யான் போலின்கிறின் பல்கலைக் கழகத்தில் கால் பதித்த காலம், நல்ல கல்வி அனுபவங்களைப் பெற்றுத்தந்தது. என்றே கூறவேண்டும் எமது நர்ட்டில் தொழில் ரீதியாக, கல்வி ரீதியாக என்னால் பெற்றுக் கொண்ட அடைவுகளை கருத்திற்கொண்டு மாகாண, மத்திய கல்வி அமைச்சு செயலாளர்களோ, எந்த நிறுவனமோ இதுவரை காலமும் சந்தர்ப்பம் அளிக்காமையை ஆத்திரத்துடன் நோக்கினேன். எனது முயற்சியால் இந்த சந்தர்ப்பம் கிடைத்தது.

கல்வியியற் கல்லூரி மனித வளவிருத்தி அபிவிருத்தியில் தலையீடுசெய்து சேவை செய்யும் போலிங்கிறின் பல்கலைக்கழக கல்வித் திணைக்களத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் பங்குபற்றினேன்.

1. ஒகாயா வோலிங்கிறினில் உள்ள சகலதரப் பாடசாலைகளுக்கும் கூட்டிச் சென்று பள்ளி நடைமுறையை அவதானிக்க வைத்தனர். இச் செயற்பாடு பல்வேறு நாடுகளில் இருந்து வந்த என்போன்ற ஆய்வாளர்கள் அடங்கிய குழுவுடனும் தனிப்பட்ட நிலையிலும் நடைபெற்றது.

2. பல்கலைக்கழக சகல பீடங்களுக்கும் சென்று அங்குள்ள கல்வி நிர்வாகிகளுடன் சந்தித்து அங்குள்ள கல்வி நிர்வாக நடைமுறையை கண்டறிந்ததுடன் அவர்களை நேர்கண்டு எங்கள் நாட்டு கல்வி நிர்வாக முறைமை பற்றியும் விளக்கியமை.

3. வருடாந்த பாடசாலை கல்வி நிகழ்வுகள் பல்கலைக்கழக நிகழ்வுகள், நிர்வாகக் கட்டமைப்பு, நிர்வாகக் கொள்கைகள் செயற்பாடுகளை அவதானித்தமை.



4. முன்பள்ளி பீடத்தில் இயங்கிய முன்பள்ளி முறைமை, நடைமுறை மாணவர் பராமரிப்பு பற்றி கண்டறிந்தமை இப்பீடம் வோலிங்கிறின் பல்கலைக்கழகத்தில் எனது அலுவலகத்திற்கு அருகாமையில் அமைந்திருந்தது. இங்கு அடிக்கடி நடைபெறும் கருத்தரங்கு களஅமர்வு, மகாநாடுகளுக்கு என்னை எமது மனிதவளவிருத்தி திணைக்களத் பீடாதிபதி *Ellen Williams* அவர்கள் அனுப்பி வைத்தார். அத்துடன் அங்குள்ள நடைமுறைபற்றி எமது நாட்டுக்கு எடுத்துச் செல்ல *CD* க்கள் நூல்களை அன்பளிப்புச் செய்தார்.

5. ஆசிரியர் கல்வி விருத்தி சம்பந்தமான பல வகுப்புக்களை பார்வையிடவும் அவதானிக்கவும். அனுப்பி வைத்தனர். இவ் அவதானிப்பில் குறிப்பிடக் கூடியது பல்கலைக்கழக கல்விப்பீட மாணவர்கள் முதலாம் ஆண்டிலேயே ஆசிரியர் தொழிலை தேர்ந்தவர்கள். புதிய பயிற்சி நெறிக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

   பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருந்தாலும் பாடசாலைக்கு வந்து அனுபவமான ஆசிரியர்களிடம் அனுபவங்களை கற்றறிந்தார்கள். கற்பித்தல் உபகரணங்களை தாங்களே கற்பித்தலுக்கு முன்பு தயாரிப்பார்கள் அவற்றை முதுநிலை ஆசிரியர் நெறிப்படுத்தினார் அப் பொருட்கள், களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் விற்பனைக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

6. ஆசிரியராக வருபவர்கள் பல்கலைக் கழகத்தில் கல்விநெறியை கற்றதுடன் கற்பித்தல் செயன்முறையிலும் தேர்ச்சி அடைந்து ஆசிரியர் தொழிலுக்கென விநியோகிக்கப்படும் லைசென்ஸ் (கற்பித்தல் அனுமதிப்பத்திரம்) பெற்ற பின்பே ஆசிரியர் நியமனத்தை பெற முடியும். இவற்றின் நடைமுறைகளை தெரியப்படுத்தினர்.

7. பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சர்வதேச கல்வி விருத்தி கூட்டங்களில் பங்குபற்றினேன். அங்கு *Full bright* புலமைப்பரிசில் கருத்தரங்கிலும் பங்குபற்றினேன் அங்கு குறிப்பாக ஸ்பெயின், கனடா, பிறேசில் நாட்டவர்கள் என்னுடன்

இணைந்து கருத்துரைத்தனர். அவர்களுக்கு எங்கள் நாட்டு கல்விமுறைபற்றி விளக்கினேன்.

8. வடமேற்கு ஓகாயாவில் இயங்கும் விசேடகல்வி நிகழ்வுப் பாடசாலை வளாகத்திற்கு அனுப்பப்பட்டேன். அங்கக் குறைபாடானவர்களுக்கு விசேட கல்வி அளிக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொருவரும் இயந்திரங்களின் உதவியுடன் வேலை செய்வது என்னை ஆச்சரியத்தில் மூழ்கவைத்தது. அவர்களுக்கென பாடசாலை வளாகம், பூந்தோட்டம், சிறு புகையிரத வண்டி நிலையம், பூங்காவனம், விளையாட்டுத்திடல் அமைக்கப்பட்டிருந்தது. சாதாரண கல்விமுறைக்கு அளிக்காத முக்கியத்துவத்தை அந்த நாட்டில் முன்பள்ளிக்கல்விக்கும், விசேட கல்விக்கும் அளித்திருந்தார்கள்.

9. தொழில் நுட்ப கல்விமுறை வகுப்புகளையும் அவதானித்தேன் மாணவர்கள் 6ம் 7ம் தரத்தில் காலை கல்வி கற்றபின் மாலை நேர வகுப்பில் சிறு சிறு பொருட்களை உற்பத்தி செய்யும் திறன் படைத்து தொழில் நுட்ப உதவியாளர்களின் உதவியுடன் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். என்னை ஒரு வருகை புலமையாளராக கணித்த *Director of the school of Education and Intervention services, Rich Wilson, PhD* அவர்கள் பின்வரும் பொறுப்புக்களையும் ஒப்புவித்தார்.

பல்வேறு கல்வி நடவடிக்கைகள் பங்கு கொள்ள வைத்தார் குறிப்பாக

1. பாடசாலை மேற்பார்வையில் உயர்கல்வி
பள்ளிக்கூடத்தில் 9ம் தர வகுப்பறையில் 21 மாணவர்களே இருந்தனர் சராசரியாக இதுவே எல்லா வகுப்பு உயர் மாணவர் தொகை.

இவ் 21 மாணவர்களை கற்பிக்க 3 ஆசிரியர்கள் இருந்தனர். வகுப்பறை மையத்தில் அனுபவமான ஆசிரியர் இருந்தார். அவர் 5 நிமிடங்கள் பாடத்தை பொழிப்பாக ஆரம்பித்து வைத்து நெறிப்படுத்தினார். 2ம் ஆசிரியர் அதன் பின் பாடத்தை 15 நிமிடங்கள் விளங்கப்படுத்தி தேட வைத்தார், மாணவர்கள்



வகுப்பறையில் உள்ள நூல்களின் உதவியுடன் அவ் விடயத்தை படித்து விளங்கின் 30 நிமிடங்கள் கழித்து தேடிய விடயத்தை ஒப்படைமூலம் ஒப்புவித்தனர்.

அவர்கள் ஒப்புவித்தது கணணியின் மூலம். வகுப்பறையில் 25 கணனிகள் பொருத்தப்பட்டிருந்தது. 3ம் ஆசிரியர் ஒப்படையை தயார் செய்ய ஒவ்வொருவருக்கும் உதவினார் அவரே உண்மையில் மேற்பார்வை செய்து நெறிப்படுத்துபவர்.

இவ் வகுப்பறையில் ஒவ்வொருமாணவர்கள் மீதும் ஆசிரியர்கள் தனியாள் கவனம் செலுத்த வாய்ப்பிருந்தது. அவர்கள் சந்தேகங்களை அறிவு பூர்வமாகவும் செய்முறை மூலமாகவும் கற்றுத் தேர்ந்தனர்.

2. முன்பள்ளி மாணவர்களது வகுப்பறை ஒரு Play School ஆக காட்சி அளித்தது. வகுப்பறையில் Carpet விரிக்கப்பட்டிருந்தது. அவர்கள் தன்னிச்சையாக விளையாட்டு முன் கல்விக்கு தயாராகும் காட்சி அவ் வகுப்பறையில் தொலைக்காட்சிப் பெட்டிமூலம் மாணவர்களைக் கவரும் விளையாட்டு ஒளி பரப்பப்பட்டிருந்தது. மூலையில் இருந்த கணனியில் 4 வயது உள்ள மாணவர்கள் Play Game விளையாடியதையும் அவதானித்தோம்.

இத்தகைய அரிய சந்தர்ப்பத்தில் நிறைய அறியவேண்டிய வற்றையும் அறியத் தந்து கற்க வைத்து அன்போடு போலிங் கிறீன் பல்கலைக்கழகம் என்னை அனுப்பி வைத்தனர். 19.12.1999ம் திகதியில் அமெரிக்க மண்ணை விட்டு 20.12.1999ல் இலண்டன் மாநகரில் கால் பதித்தேன்.

**இலண்டன் பிரான்ஸ் நாடுகளூடாக......**

அங்கு எனது மைத்துனர் பொறியியலாளர் சண்முகநாதன் Heathrow விமான நிலையத்தில் வரவேற்று தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு பாராளுமன்றம் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் போன்றவற்றை பார்வையிட்டேன். பல்கலைக்கழக கல்வி நடைமுறையை அவதானித்தேன். குறுகிய காலம் தங்கியிருந்தபடியால் அது ஒரு சிறு சுற்றுலாவாகவே

அமைந்திருந்தது. கல்விச் சுற்றுலாவாக அமையவில்லை. நண்பர்கள் உறவினர்களை கண்டு ஆனந்தம் அடைந்தேன் வட்டுர் வாழ்உறவினர் ஒன்று கூடலிலும் பங்கு பற்றினேன். அவ்வாறே இலண்டனில் தமிழ் வானொலியில் யாழ்ப்பாண கல்வி நிலைபற்றி பேட்டி கொடுத்தேன். அங்கு எனக்கு இளைவராக கல்வி கற்ற இணுவிலைச் சார்ந்த நண்பர் எனது போட்டியை நெறிப்படுத்தினார். என்னுடன் இணைந்து நண்பர் Dr.ஆனந்தவரதன் பேட்டியை வழங்கினார். இலண்டன் மாநகரை சுற்றி 10 நாட்கள் பார்வையிட்ட யான் 26.12.1999ல் பிரான்ஸ் நாட்டில் கால்பதித்தேன்.

அங்கு உறவினர்கள் யாவரையும் சந்தித்து அவர்களது பிள்ளைகள் கல்வி முன்னேற்றம் பற்றி அறிந்தேன். எனக்கு ஒரு சந்தோஷமான விடயம் எனது வட்டு இந்து A/L மாணவர் Dr.திரவியராசா தேடி வந்து கட்டி ஆரத்தழுவினார். நன்றி நவின்றார் சுகம் விசாரித்ததுடன் தனது நன்றி ஞாபக சின்னமாக Original citizen கைவாச் ஒன்றையும் அன்பளித்தார். அது அவரது ஞாபக சின்னமாக என்னிடம் உள்ளது. 27.12.1999ல் பிரான்சை விட்டு திரும்பவும் U.K வந்து சேர்ந்தேன்.

பொருட்களை எல்லாம் பொதி செய்து Dr ஆனந்தவரதன், எனது நண்பர், எனது மைத்துனர் சண்முகநாதன் ஒன்று விட்ட சகோதரன் திரு.ச.கிருபைநாதன் கீத்திரோ விமான நிலையத்தில் வைத்து வழியனுப்ப 29.12.1999ல் இலண்டனை விட்டு புறப்பட்டு 30.12.1999ல் திரும்பவும் எனது தாய்நாடு இலங்கைக்கு திரும்பினேன்.

யான் இலங்கைக்கு இவ்வளவு கல்வி அனுபவங்களுடன் திரும்பி வந்து அதனை செயற்படுத்தமுடியாதளவிற்கு எனக்கு யாழ் மாவட்ட வடக்கு கிழக்கு கல்வி நிர்வாகச்சூழல் அமைந்தது. இதனால் விரக்தியுற்று அமைதியானேன்.

யாழ் மாவட்டத்தில் வட இலங்கை சங்கீதசபையின் பரீட்சைகளை கனடாவில் நடாத்த வழிவகுத்த நன்றிக்காக 1999ம் ஆண்டு நவம்பர் மாதம் என்னை அழைத்து கௌரவித்த *Hindn Religious Society of Ontario* திரும்பவும் தங்கள் இருவழிப்பயணச்செலவில் சனிக்கிழமை டிசம்பர் மாதம் 9ம் திகதி பி.ப 6 மணிக்கு 9.11.2000ம் ஆண்டு *The Auditorium of Agian*



***Court Collegiate institue***ல் நடைபெற்ற கலாசார பெருவிழாவிற்கு பிரதமவிருந்தினராக அழைத்திருந்தனர் அந்நிகழ்வில் பங்குபற்றுவதற்காக 7.11.2000ம் திகதியில் சூரிச் வழியாக கனடா நோக்கி 8.11.2000ம் ஆண்டு கால் பதித்தேன்.

வடஇலங்கை சங்கீத சபை அங்கு பரீட்சை ஒழுங்குகளை மேற் கொண்டதுடன் 1999ம் ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் அந்நிகழ்வில் என்னால் வழங்கப்பட்டது. விழாவில் கருத்துரைத்த யான் புலம் பெயர்வாழ்தமிழ் மக்கள் தங்கள் அடையாளத்தை பிரதிபலிக்கும் சைவ தமிழ் கர்நாடக இசை நாட்டியத்தை பொன்னே போல் போற்றி வருவதை பாராட்டி ஊக்குவித்தேன்.

ஆனால் அவர்களது குறையையும் சுட்டிக்காட்டினேன். கர்நாடக இசை கற்கும் மாணவர்கள் ஆங்கிலம் மூலம் தமிழை எழுதி கற்றார்கள், தேவாரம் பாடினார்கள். இசையை இசைத்தார்கள் சிறப்பாக இருந்தாலும் உண்மையான இரசனையை அளிக்க உங்கள் வீடுகளில் கணவனும் மனைவியும் பிள்ளைகளுடன் தமிழ் மொழி மூலம் கதையுங்கள். தமிழை எழுதிப்பழக பேச, வாசிக்க தமிழ் வகுப்பிற்கு அனுப்புங்கள் படிக்கும் மொழி ஆங்கிலமாக இருந்தாலும் வீட்டில் நீங்கள் வாழும் மொழி தமிழாக இருக்க வேண்டுமென்று அன்பாக வேண்டினேன். அவர்கள் ஆவன செய்வோம் முயற்சிப்போம் என அன்பாகக் கூறினர். அவர்களுடன் கனடாவில் உள்ள பல்வேறு கோவில்களுக்கு சென்று தரிசித்ததுடன் மொன்றியலுக்கும் சென்றேன்.

மொன்றியலில் எனது மருமகளாரது வீட்டில் தங்கியிருந்து அருகாமையில் உள்ள முருகன் ஆலயத்திற்கு சென்று தமிழ் வளர்க்கும் சபையினரை சந்தித்தேன் அவர்களுக்கு தமிழை கற்பிக்கும் வழியைக் கூறியதுடன் தரம் 1ல் இருந்து 10 வரை உள்ள தமிழ் நூல்களையும் துணைப்பாட நூல்கள் ஆத்திசூடி கொன்றை வேந்தன் நூல்களை வாங்கி அனுப்புவதாக கூறிவந்தேன் கனடாவை விட்டு 12.11.2000ம் திகதி இலங்கைக்கு புறப்பட்டு கால்பதித்தேன். இலங்கைக்கு வந்த மறுநாள் அவற்றைப் பொதிசெய்து அனுப்பி வைத்தேன்



உலா 12

அறிவுடையார் எல்லாம் உடையர்
அறிவிலார் என்னுடையரேனும் இலர்.

# சமயச் சுற்றுலா

நீண்ட நாட்களாக இந்திய தலயாத்திரைக்கு செல்ல வேண்டுமென்ற எண்ணம் மனதில் எழுந்த நிலையில்கொழும்பு விவேகானந்த சபையினருடன் சேர்ந்து தலயாத்திரை மேற்கொண்டேன்.

21.9.2007 வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து 6 மணிக்கு புறப்பட்டு 6.45 மணிக்கு திருச்சிராப்பள்ளியை சென்றடைந்தோம் ராஜா என்ற ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் (வல்லெட்டித்துறையை சார்ந்தவர்) எங்களை வரவேற்றார் எமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பொருட்களை வைத்து திருச்சிராப்பள்ளி கோவில்களை தரிசித்தோம். எம் முன்னே காட்சி அளித்த வாசகம்.

கண்ணைக் காப்பது இமை
மண்ணைக்காப்பது மழை

முதல் நாம் தரிசித்த கோவில் மலைக்கோட்டை பிள்ளையார் கோவில் சித்தி விநாயகர். இங்கு மலை ஏறி பிள்ளையாரை வணங்கி மணம் முடிக்காமல் இருந்த 2ம் மகளின் திருமணம் வேண்டி திருமாங்கல்ய அர்ச்சனை செய்வித்தேன் அங்கு பல்லவர்கால குகைவரைக்கோயிலை கண்டோம்.(கி.பி.590 - 630)

பின்னர் மலைக் கோட்டை அருள் மிகு தாயுமானவர் சுவாமியைத்தரிசித்தோம் அதனை அடுத்து ஸ்ரீ வெக்காளி அம்மன் சன்னதிக்கு சென்று தரிசனம் செய்தோம். திருமாங்கல்ய வரம் வேண்டி நேர்த்தி வைத்து அர்ச்சனை செய்தேன்.



அடுத்தநாள் 28.9.2007ல் ஜெம்புகேஸ்வரர் அகிலண்டேஸ்வரி திருக்கோவில், திருவானைக்கா, வயலூர் முருகன் சுப்பிரமணிய சுவாமிசன்னதி ஆகியவற்றுக்குச் சென்றோம். அங்கு 200 வருடங்களாக உள்ள வன்னிமரத்தை கோயிலுள் கண்டோம்.

மறுநாள் விராளிமலை முருகன், திருப்பரங்குன்றம் முதலியன (ஆறுபடைவீடுகளில் ஒன்று) தரிசித்தோம்.

22.09.2007ல் மதுரை ஆதின குருமுதல்வரின் ஆசிர்வாதம் கிடைத்தது. அங்கு திருஞான சம்பந்தரது சிவிகை (கி.பி 7ம் நூ) காட்டினார்கள். அதனை அடுத்து மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் சென்றோம். 13 கோபுரங்களைப் பார்த்தோம். கோபுரம் என்ன அற்புதம்! அங்கு யாம் பார்த்தவை வெள்ளி அம்பலம். தில்லை அம்பலம், தங்கத்தாமரைக்குளம் 23.9.2007ம் அன்று கன்யாகுமரி நோக்கி புறப்பட்டோம். விருதுநகர் வழியாக காயத்தூரில் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலையைக் கண்டோம் கன்யாகுமரியில் அம்மன் திருவடியைத் தரிசித்தோம். திருவள்ளுவர் சிலை காந்தி நினைவுச்சின்னம் விவேகானந்தர் வளாகம் ஆகியவற்றைப் பார்த்தோம்.

24.09.2007ல் மேட்டுப் பாளயத்திற்கு சென்றோம் 26.09.2007ல் மைசூருக்குச் சென்றோம். சாமுண்டேஸ்வரி ஆலய வழிபாடு:அங்கு மைசூர் மகாராசா மாளிகையைப் பார்த்தோம்.

பின்பு ஊட்டிக்குச் சென்று பிருந்தாவனப் பூங்காவில் பாடும் நீரின் அலைஅலையான ஆட்டத்தைப் பார்த்தோம். என்ன அற்புதம் மகாராசா மன்னர் கட்டிய இந்த அணைக்கு தமிழ் பொறியியலாளரே பொறுப்பாக இருந்தார்.

27.09.2007ல் திருப்பதி நோக்கிச் சென்றோம். வழியில் பெங்களூர் ஊடாக ஹதரபாத் நோக்கிப் புறப்பட்டோம். இங்கு சிறிராதா கிருஷ்ண ஆலயத்தைப் பார்த்தோம். இங்கு தங்கத்தால் ஆன வசந்த மண்டபம் கண்கொள்ளாக் காட்சி.

28.09.2007ல் திருப்பதியில் கால் வைத்தோம் அங்கு திருப்பதி சென்று வந்தால், திருப்பம் ஏற்படும் என்ற வாசகம் கண்டோம்.

பி.ப 4மணிக்கு திருப்பதியை விட்டு நீங்கி திருத்தணிகை தலத்தின் ஊடாக சென்னை நகர் வந்தோம்.

சென்னை தமிழ் நாட்டில் அண்ணா சதுக்கம் MGR சிலையைக் கண்டு தரிசித்தபின் ஸ்ரீபார்த்தசாரதி கோயில் திருத்தரிசனம் செய்தோம்.

30.09.2007ல் ஆதிபராசக்தி வழிபாடு செய்தோம் இங்கு பெண்களும் ஆண்களைப் போல் பிரதிஷ்டை செய்வார்களாம் இங்கு ஐயர்மார் பூசை செய்வதில்லை. அதன் பின்பு திரு வண்ணாமலை தரிசனம் இங்கு அருணகிரியார் பாடிய கந்தரனுபூதி பாடல் சுவரில் எழுதப் பட்டிருந்தது.

தஞ்சாவூரில் தஞ்சை இராஜஇராஜ சோழன் சிவன் கோவில் தரிசனம் கிடைத்தது: லிங்க தரிசனம் மற்றும் நந்தி தரிசனம்.

01.10.2007ல் தலயாத்திரையை முடித்து இலங்கை வந்து சேர்ந்தோம்.

**அவுஸ்திரேலிய கல்வி சுற்றுலா**

எனது மூத்தமருமகனார் திரு.செ.நரேந்திரன், மூத்தமகள் திருமதி நரேந்திரன் சுதந்தி, பேரப்பிள்ளைகள் இருவர் செல்வன் ந.சிறிராம், செல்வன் ந.ரகுராம் எனது இளைய மகன் திரு.த.தணிகைபாலன் ஆகியோர் அவுஸ்திரேலியா நாட்டில் வசிக்கின்றனர். மருமகனார் மகளார் அவுஸ்திரேலியா கல்வி பற்றியும் பல்கலைக்கழகம் பற்றியும் கூறுவர். மனைவியார் எனக்கு முன்பு சென்று வந்தமையால் அவரைத் தொடர்து யானும் வரவேண்டும் என்று எனது குடும்பத்தினரின் அன்புக் கட்டளை.

மகனார் கேட்டின் பல்கலைக் கழகம் பேத்தில் கற்று வருவதால் அங்குள்ள கல்விமுறைபற்றியும், தொழில்நுட்ப முகாமைத்துவ வணிக, விஞ்ஞான கல்விப்பீட செயற்பாடு பற்றி தொலைபேசி வாயிலாகவும் இங்கு வரும் பொழுதும் அடிக்கடி எடுத்து விவரிப்பர்.

இவற்றைக் கண்டறிய ஆவலுற்ற யான் பிள்ளைகளையும் சந்திப்பதற்கு விசாவிற்கு விண்ணப்பித்திருந்தேன். விசாவும்



நிராகரிக்கப்படாமல் ஆறு மாதத்திற் கென அனுமதிக்கப் பட்டிருந்தது. ஒரு வருட கால அவகாசம் அளித்திருந்தனர் 25.01.2008ல் அவுஸ்திரேலியா பேத் நோக்கி பயணமானேன். 26.01.2008ல் அதிகாலை 3மணிக்கு பேத்மாநகரில் கால்பதித்தேன். மகனார் தனது காரில் என்னை தனது விடுதிக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒன்றரை மாத காலம தங்கிநின்று 13.02.2008ல் இலங்கைக்குத் திரும்பி வந்தேன்.

பேத்மாநகர் யாழ்ப்பாண சூழல் ஒட்டிய சுவாத்தியம் தனித்தனியான வீடுகள். வீதிகள் திட்டமுற அழகுற அமைந்த நகர். கண்ணைக் கவரும் தாவரங்கள், பூமரங்கள் அழகிய தொழில் நுட்பத்துடன் கூடிய கட்டிடங்கள்.

மகனார் தான் கல்வி பயின்று வரும் சர்வதேச புகழ் படைத்த கேட்டின் பல்கலைக்கழகத்திற்கு இரு நாட்கள் அழைத்துச் சென்றார் அங்கு வாசலில் *Look Ever Forward* என்ற வாசகம் வாசலில் பொறிக்கப்பட்டு கீழே *John Curtin Prime Minister of Australiya. 1941 - 1945* என ஆண்டு பொறிக்கப்பட்டிருந்தது. அதை அடுத்த *Curtin University of Technology* என்று எழுதி நாட்டப்பட்ட தூணைக்கண்ணுற்றேன். அவற்றுடன் பல்கலைக்கழக பல்வேறு பீடங்களையும் தரிசித்தபின்பு கல்விப்பீடத்தை அடைந்தோம்.

கல்விப் பீட ஒழுங்குமுறை பிரதானமாக ஆசிரியர் கல்விப்பீடம் என்னை நன்றாக கவர்ந்திருந்தது. அதன் பீடாதிபதியுடன் முன் கூட்டியே மகனார் திருமதி.*Marilyn parry philippe* யுடன் நியமனம் வைத்திருந்தார். இரண்டு மணித்தியாலயங்கள் அவுஸ்திரேலியா கல்விமுறை பற்றியும் நிர்வாகச் செயற்பாடு பற்றியும் கதைத்துக் கொண்டோம். அவர்களது நாட்டில் குறிப்பாக மேற்கு அவுஸ்திரேலியாவில் கிராமப் புற கல்விச் செயற்பாடு உள்ள பாடசாலைமுறை ஆசிரியர்களது கொடுப்பனவு அவர்களுக்கு அளிக்கப்பட்ட விடுதிவசதி போக்குவரத்து வசதி கொடுப்பனவு பற்றி நிறைய கதைத்துக் கொண்டோம்.

அங்குள்ள கல்விப் பீடம் *Faculty of Education, Language studies and social Work* என எழுதப்பட்டிருந்தது அதன் அர்த்தத்தை

வினாவிய பொழுது கல்விப்பீடமான மொழிக்கற்கையூடாக சமூக வேலையை விருத்தியாக்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டதன் அடிப்படையில்தான் அவ்வாறு பொறிக்கப்பட்டுள்ளதென்றார். அங்கு உலகின் பிரபல்யமான மொழிக்கற்கை இடம் பெற்றிருந்தாலும் தமிழ் மொழிக் கற்கையோ, சிங்கள மொழிக்கற்கையோ இடம் பெறவில்லை. அதனை அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்பீடாதிபதி அவர்கள் எங்கள் மகனார் இலங்கையைச் சார்ந்த ஒரே ஒரு தமிழர் என்ற காரணத்தினால் அவரது உயர் கற்கைக்கு பல்வேறு விதத்தில் வழிகாட்டி, நெறிப்படுத்தி ஊக்குவித்து வருவதை அவதானிக்க முடிந்தது.

மேற்கு அவுஸ்திரேலிய கல்வித் திணைக்களத்தை சென்று பார்வையிட்டேன். முகப்பில் Teaching WA என எழுதப் பட்டதன் கீழ் *Feel a sense of achivement every day* என எழுதப் பட்டிருந்தது. ***our staff are on hand to provide you with helpful information about all aspects of teaching in Wstern Australiya.***

*Call them mow*

கற்பித்தல் சம்பந்தமாக எல்லாத்துறைகளிலும் உதவக் கூடிய தகவல்களை தரமுடியும், என்றும் உடனேயே அவர்களை அழைக்கவும் என்றும் தகவல்களை உதவும் தன்மையைக் கண்டோம்.

அடுத்து *Team work key to success* என எழுதப்பட்டிருந்தது. "குழுநிலை வேலை வெற்றியின் பிரதான திறவு'' என எழுதப்பட்டிருந்தது. குழுநிலை இயக்கத்தின் முக்கியத்துவம் கூறப்பட்டிருந்தது.

விடுமுறை காலமாக இருந்தபடியாலும் யான் குறுகிய காலம் அங்கு தங்கியிருந்தபடியாலும் கல்வி பற்றி அதிகம் கவனித்து வரமுடியவில்லை.





உலா 13 அறிவுடையார் ஆவது அறிவார்

# மனதில் படிந்த காட்சிகள்

## * யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரி பிறந்தகதை

யாழ்ப்பாண வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக 1.10.1998ல் பதவி ஏற்று கோப்பாய் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளின் மாணவர் தொகையைக் கூட்டிய பின் கல்வி அமைச்சு இசுறுபாயவின் அறிவுறுத்தலுக்கமைய கோப்பாய் ஆசிரியர் கல்லூரியின் வகுப்பறைகள் விடுதி என்பவற்றை புனர்நிர்மாணம் செய்யும் பொறுப்பு என்னிடம் பொறுப்பிக்கப்பட்டது. இதன் தூரநோக்கு யாழ்ப்பாண கல்வியியற்கல்லூரியை ஒரு பக்கத்தில் நடாத்தலாம் என கல்வி அமைச்சில் இருந்து வந்த குழுவினருக்கு விதந்துரைக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் அதற்காய நிதி ஒதுக்கீட்டை கல்வி அமைச்சு, இசுறுபாய, ஒதுக்கீடு செய்து அனுப்பியிருந்தது. எமது பொறியியலாளர் திரு.க.சிவபாலனும் நானும் முதுநிலை தொழில்நுட்பவியலாளர் திரு.கந்தவனம் அவர்களும் சென்று பார்வையிட்டோம். வகுப்பறைகளும், விடுதியும் ஓரளவு திருத்தக் கூடியதாக இருந்தாலும் மண்டபத்திற்கு வடக்குப் பக்கமாக இருந்த விடுதியும் (பாவிக்கப்படாமல் இருந்த) வடகிழக்கில் அமைந்திருந்த உணவு தயாரிக்கும் சமையலறை, மலசலகூடம், குளியறை என்பன கால்வைக்க முடியாத அளவிற்கு கறையான் புதர், முட்செடிகள் மரங்கள் வளர்ந்து, பாம்பு குடி கொள்ளும் பற்றைக்காடாக கிழக்கு எல்லை வரை காணப்பட்டது. திரு.கந்தவனம் அவர்களது தற்துணிவு செயற்பாடு காரணமாக கிணற்று திருத்த வேலையையும் குறித்த 3

மாத தவணைக்குள் கட்டிடத்தையும் முடித்து என்னிடம் கையளித்தார். இவ்வேலைகளுக்கு அக்காலத்தில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் அதிபராக இருந்த நண்பன் பரம்சோதி அவர்களின் ஒத்துழைப்பையும், மேற்பார்வையையும் என்னால் மறக்கமுடியாது. அவருக்கும் திரு.சிவபாலன் பொறியியலாளர், திரு.கந்தவனம் சிரேஷ்ட தொழில் நுட்பவியலாளருக்கும் எனது நன்றிகள். இவற்றுக்கு மேலதிகமாக வகுப்புக்கள் நடாத்துவதற்குரிய தற்காலிக கொட்டகைகள், விளையாட்டுத்திடல் விருத்தி, மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்த ஆலயத்திற்கு அடுத்துள்ள ஆண்கள் விடுதி திருத்தும் பணி என்பன திட்டமிடப்பட்டு யான் அமெரிக்காவிற்கு போகுமுன்பு பூர்த்தியாக்கப்பட்டது.

கல்வியற் கல்லூரியை எங்கே நிரந்தரமாக கட்டுவது என்ற பிரச்சினை எனது காலத்தில் 3மாதங்களாக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்த அவரது சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி விக்னேஸ்வரன், கல்வி அமைச்சு மற்றும் யாழ் வலயக்கல்வி அலுவலகத்திற்கு மிடையில் தெரிவு சிக்கலாக இழுபட்டது.

கௌரவ அமைச்சர் அவர்களின் பணிப்பின் பேரில் யானும் கல்விவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இராசலிங்கம் அவர்களும் பொறியியலாளர் சிவபாலன் அவர்களும் ஊர்காவற்துறை பிரதேச சாட்டிப்பகுதிக்கு இடத்தெரிவிற்கு சென்றோம். நகரப்புறத்தை விட அப்பகுதி ஆசிரியர்களது பயிற்சிக்கு உகந்த ஒதுக்குப்புறமாக விடுதியில் இருந்து கல்விகற்க நல்லது என நாம் கருத்துக் கொண்டோம். சாட்டி நல்லதண்ணீர் உள்ள இடம் அங்குள்ள வெளியான திடலில் கற்கை வகுப்புக்கள், அலுவலகம், விடுதிகள் அமைக்க உகந்த இடம் என கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இவ்வறிக்கை கௌரவ அமைச்சர் ஊடாக கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. அதனை பரிசீலனை செய்து நேரடியாக பார்வையிடவந்த கல்வி அமைச்சின் குழுவினர் அந்நிலம் ஆழமான அத்திவாரத்திற்கு - மாடிக்கட்டிடம் கட்ட தோண்டும் பொழுது கூடுதலான செலவாகும் எனவும், உடனடியாக பணிகள் ஆரம்பிக்க வேறு இடத்தெரிவை தரும்படியும் வேண்டினர். அச்சமயம் யான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் அவர்களது குடும்பத்திற்கு சொந்தமான கோப்பாய் மாஞ்சோலைக் காணியை கூட்டிச் சென்று காட்டினோம்.



அக்காணியை பார்வையிட்டவர்கள் இடம் நல்லது அண்மையில் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியும் உள்ளது. யாழ் நகரத்தில் இருந்து தூர உள்ளதென்றும், கருத்து கொண்டு அவற்றை கௌரவ அமைச்சர் அவர்களுக்கு கூற ஏற்றுக் கொண்டு அதற்குரிய ஆரம்ப வேலைகளை தொடங்கும்படி பணித்தார்.

மறுநாளே யாழ்ப்பாணத்தில் அவரது காரியாலயத்தில் கௌரவ சித்தார்த்தன் அவர்களிடம் சென்று ஏற்கனவே தொடர்பு கொண்டு பெற்ற சம்மதக் கடிதத்துடன் நில அளவீடு செய்வதற்குரிய அனுமதியைப் பெற்றேன். அனுமதியைப் பெற்று அந்நில அளவீடு செய்யும் பொறுப்பை உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.இராஜலிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தேன். நில அளவீட்டு திணைக்களத்தில் பொறுப்பாக இருந்த முன்னைநாள் கல்விச் செயலாளர் திரு.பரமேஸ்வரன் அவர்களது சகோதரரிடம் பொறுப்பை ஒப்படைத்தோம்.

அவரையும் திரு.இராசலிங்கத்தையும் மறுநாளே கூட்டிச் சென்றேன் அளப்பதற்கு பணியாட்களுடன் தண்ணீர் தேநீர் தயாரிக்க சீனி, தேயிலை மா, பாண் ஆகியவற்றுடன் சென்று அரை நாள் செலவிட்டோம்.

மூன்று நாட்களில் முடிந்த அளவீடு ஒருமாதத்தில் படவரைவானது. அவற்றுடன் உறுதி எழுதுவதற்குரிய ஒப்பந்தக்கடித வரைவு என்னாலும் (வலயக் கல்விப் பணிப்பாளர்), சேவயராலும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினராலும் ஒப்பமிடப்பட்டு ஆவணமாக நில அளவை திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு பெறுமதியான ஆவணமாக்கப்பட்டு கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. இத்தகைய பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சார்ந்த ஒருவரே பீடாதிபதியாக வேண்டும் என்றும், பிரமாண அடிப்படையில் முதுநிலையில் இருந்த என்னை கல்வியியற்கல்லூரி நிரந்தர பீடாதிபதியாக கல்வி அமைச்சு ஏற்றுக் கொண்ட நிலையில் யான் அமெரிக்க ஓகாயோ *Bowling Green State University*க்கு புலமைப் பரிசில் பெற்று, பயணமானேன். யான் திரும்ப 2000ம் ஆண்டு ஜனவரி மாதம் வந்தபொழுது கலாநிதி தி.கமலநாதன் அவர்கள் தற்காலிக கடமைபார்க்கும் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவரே

அதன் நிரந்தர கட்டிடம் கட்டும் பொறுப்பையும், கோப்பாய். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தற்காலிகமாக கல்வியியற் கல்லூரியை இயக்கும் பொறுப்பையும் ஏற்றிருந்தார். இதுவே கல்வியியற்கல்லூரி பிறந்த கதை

**ஆசிரிய வாண்மை விருத்தியில் பங்கும் பணியும்.**

1991ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் யான் அமரர் திரு.இ.சுந்தரலிங்கம் அவர்கள் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்தில் முகாமைத்துவ நிலைய பாடசாலை முகாமைத்துவ ஆலோசகராகவும், பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும், இருந்தேன். தொலைக் கல்வி மூலம் நடைபெற்ற தேசிய கல்வி நிறுவகம் நடாத்திய பிராந்திய கல்வி டிப்ளோமா நிலையத்தை வடமாகாணத்தில் நிறுவ அனுமதி பெற்றிருந்தேன். இவற்றுக்கு அமரர்.இரா.சுந்தரலிங்கம் அவர்கள் எனது விருப்பத்திற்கு பூரண ஒத்துழைப்புத்தந்தார்.

1990 உம் ஆண்டில் எனது சிபார்சுக் கமைய முகாமைத்துவ நிலையத்தில் கடமையாற்றிய திருமதி வில்வநாதன் அவர்களை யாழ் இந்துக்கல்லூரி நிலையத்திற்கு பொறுப்பாளராக நியமித்தேன். அதே போல யாழ் இந்து மகளிர் நிலையத்தில் நிறுவிய பிராந்திய நிலையத்திற்கு அமரர் கலாநிதி சின்னத்தம்பி அவர்களை பிராந்திய நிலையப் பொறுப்பாளராக்கினேன். இந்நிலையங்களில் வார இறுதியில் நடைபெறும் விரிவுரைகளில் விரிவுரையாற்ற திருமதி.வில்வநாதன் இணைப்பாளரானார். அற்புதராசா (கனடா), திருமதி. பத்மினி சித்மபரநாதன் (பா.உ) திரு.ம.இரத்தினசிங்கம், திருமதி.புஸ்பா சின்னையா, திருமதி.பாலசுப்பிரமணியம், திருமதி.மா.இராஜாராம், யாழ் இந்து மகளிர் நிலையத்தில் கலாநிதி தி.கமலநாதன் (ஓய்வு பீடாதிபதி கல்வியியற் கல்லூரி, நா.சண்முகநாதன், கலாநிதி N.அமிர்தலிங்கம், செல்வி.பு.கந்தையர், திரு.செந்தில்மணி, பு.சோமசுந்தரம் (பண்டிதர்)இருந்தனர். கலாநிதி சின்னத்தம்பி அவர்கள் இணைப்பாளராக இருந்தார்.

இவர்களுக்கு நேர்முகத்தேர்வு மூலம் தேசிய கல்வி நிறுவகத்தின் பகுதிநேர விரிவுரையாளராக நியமனம் பெற்றுக் கொடுத்தேன்.



இவ்விரு நிலையங்களிலும் யாழ் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைதீவு மாவட்ட வடமாகாண ஆசிரியர்கள் கல்வி டிப்ளோமா நெறி 1990ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வகுப்பில் பங்கு பற்றினர். வெளிமாவட்ட ஆசிரியர்கள் அக்காலத்தில் கொம்படிப்பாதையால் யாழ் மாவட்டத்திற்கு வந்து கற்றுச் சென்றனர். ஒரு பெரிய பட்டதாரி ஆசிரிய பரம்பரை இத்தகைய எனது கல்வி டிப்ளோமா தொடக்கத்தால் வடமாகாணத்தில் வாண்மை ரீதியான பெரும் நன்மை அடைந்தனர்.

இதனைப் பாராட்டி யாழ் இந்துக்கல்லூரியில், யான் முல்லைத்தீவிற்கு 1993ம் பிராந்திய கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுக் சென்ற பொழுது அமரர். திரு.இரா.சுந்தரலிங்கத்தின் தலைமையில் என்னையும் மனைவியாரையும் அழைத்து 1993ம் மார்ச் மாதம் பணிப்பாராட்டு விழா நடாத்தி ஞாபகச்சின்னமாக தங்கச்சங்கிலியும் பகவான் சத்திய பாபவின் இலச்சினை பொறித்த தங்க மோதிரத்தை அணியத்தந்து பெருமைப்படுத்திய ஆசிரிய உள்ளங்களை நினைவில்கொள்கிறேன்.

அதே போலவே யான் மீளவும் யாழ் மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளராக 1998ம் ஆண்டு வந்த பொழுது பட்டப்படிப்பை மேற்கொள்ளாத ஆசிரியர்களுக்குரிய B.Ed பயிற்சி நெறியை தேசிய கல்வி நிறுவகத்தின் விசேட அனுமதி பெற்று யாழ் மாவட்டத்தில் எனது தலைமையில் யாழ் இந்துக்கல்லூரியில் 2002ம் ஆண்டு ஆரம்பித்தேன். இப்பயிற்சி நெறிக்கும் திருமதி வில்வநாதன் அவர்களே இணைப்பாளராக இருந்தார். இதன் மூலமும் கூடுதலான பட்டதாரி அல்லாத ஆசிரியர்கள் நன்மை அடைந்தனர், அடைந்து வருகின்றனர். இவையெல்லாம் ஆசிரியர்களுக்கு வாண்மை, கல்வி விருத்திக்கு பல்கலைக்கழகத்தில் சந்தர்ப்பம் அளிக்கப்படாத பொழுது எனது முயற்சியால்இச்சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இவற்றுடன் ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் சம்பள உயர்வுக்கு கல்வி டிப்ளோமா சித்தியின்மை தடையாக இருந்தமையால் 2 வகுதியினர்க்கு 3மாத குறுங்கால டிப்ளோமா வகுப்பு நடாத்தினோம் இதனால் சம்பள உயர்வும் ஓய்வூதிய

உயர்வும பெற்றனர். கல்விடிப்ளோமா. B.Ed பயிற்சி நெறிகளுடன் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விடிப்ளோமா, M.Ed.வகுப்புக்களில் யான் வருகை விரிவுரையாளராக 1991ம் ஆண்டில் இருந்த 2007ம் ஆண்டுவரை கடமை ஆற்றினேன். வவுனியா யாழ் பல்கலைக்கழக வெளிவாரி ஆசிரியர்களுக்கும் விரிவுரையாற்றியமையால் வடமாகாணம் உட்பட இலங்கையில் உள்ள கூடுதலான தமிழ் ஆசிரியர்களது, வாண்மை உயர்வுக்கு என்னால் பங்களிக்க முடிந்தது என்பது திருப்பதியாகவுள்ளது.

**கல்வி உலாவும் பரீட்சை மேற்பார்வையும்**

1966ம் ஆண்டு ஆசிரிய நியமனம் கிடைத்தாலும் எமது தொழில் மூலம் செய்யக் கூடிய எப்பணியையும் தவற விடவில்லை. 1973ம் ஆண்டில் 7 வருடங்களாக சாதாரண நோக்குநராக கடமையாற்றிக் கிடைத்த அனுபவத்தால் யாழ்மத்திய கல்லூரிக்கு மேற்பார்வையாளராக சாதாரண தரப் பரீட்சைக்கு நியமிக்கப்பட்டேன். இக் கடமை 1982ம ஆண்டு வரை ஒருவருடத்தில் க.பொ.த (சா.த) க.பொ.த (உ.த) பரீட்சைகளுக்கு ஒருவருடத்தில் மாறி மாறி புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் என நான்கு முறை கடமையாற்றினேன்.

1982ம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்பட்டதில் இருந்து, எல்லாப் பரீட்சைக்கடமைகளிலும் இணைப்பு அலுவலர், விடைத்தாள்நிலைய சேகரிக்கும் அலுவலர் என பல கடமைகளில் (பணிப்பாளர் பதவி வரை) 2000ம் ஆண்டு வரை கடமையாற்றினேன். ஒருமாதத்திற்கு நடைபெறும் க.பொ.த உயர் பரீட்சையில் பொறுப்பாக, நேர்மையாக நடந்துகொண்டு கண்ணியமாக கடமையாற்றினேன். பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத்தன்மையைப் பேணிப் பாதுகாத்தேன். இன்றும் வினாத்தாள் தயாரித்தல், விடைத்தாள் திருத்துதலில் பணிதொடர்கின்றது.

**பயங்கர அனுபவங்கள்**

1986 - 1989 வரை கிளிநொச்சி மாவட்டத்தில் வினாத்தாள்களை சாதாரண பரீட்சைக்கு கிளிநொச்சியில் இருந்து பளைக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் சகிதம் இ.போ.ச வண்டியில்



ஒருமுறை வந்தபொழுது இயக்கச்சியில் றோட்டில் வெடித்த கண்ணிவெடி. மயிரிழையில் தப்பினோம்.

அதே போல பூநகரியில் இருந்து 1987 டிசம்பர் விடைத்தாள் சேகரித்து பரந்தனை நோக்கி வந்த பொழுது நல்லூரில் வைத்து ஒரு இயக்கத்தினர் மாற்று இயக்கத்தினரை வெடிவைத்து இரத்தம் ஓட எமது பஸ்வண்டியில் தூக்கி ஏற்றினர் பரந்தனுக்கு முன் குஞ்சிப் பரந்தனில் இறக்கிச் சென்றனர். அவற்றில் வந்த சாரதி நடத்துனர் இணைப்பு அலுவலகராகிய யான் உதவி இணப்பாளர் ஆகிய நால்வரும் குடமுருட்டி ஆற்றில் தண்ணீர் அள்ளி ஊத்தி பஸ்சை கழுவித் துடைத்து பரந்தனில் வந்து ஏறியகாட்சிகள் பயங்கரமானவை.

அதே போல கிளிநொச்சியிலிருந்து வவுனியாவிற்கு ஹெலிகொப்டரில் சென்று வினாத்தாள் கொண்டுவந்தமை; வவுனியாவிற்கு விடைத் தாள்களை பரீட்சை இறுதி நாளைக்கு முன்பே விடைத்தாளை எதிர்பாராத விதமாக கொண்டு சென்றமை; திரு.இரா.சுந்தரலிங்கம் அடுத்தநாள் வவுனியாவில் சுத்தானந்த கபேயில் சாப்பிடும் பொழுது "தம்பி அந்த பேதியை (சாம்பாறை) பெடியங்களுக்கு விடாதே. நான் பக்குவமாய் பெடியங்களை கிளிநொச்சிக்கு கூட்டிச் செல்ல வேண்டும்" என விட்டபகிடி என்பன மனதில் படிந்த காட்சிகள்.

**கல்வி உலாவும் பரீட்சை மதிப்பீட்டுக் கடமையும்**

1966ம் ஆண்டில் நியமனம் கிடைத்து கற்பித்து வந்த யான் கற்பித்தலுக்கும், மாணவர் பரீட்சைக்கும் உரிய முறையில் விடையளிக்க விடையளிக்கும் திட்டம் அவசியம் என்பதை உணர்ந்தேன். இதற்கு பரீட்சை மதிப்பீட்டு வேலைக்கு உட்பட வேண்டும் என்ற அடிப்படையில் அக்காலத்தில் உதவி பரீட்சை ஆணையாளராக இருந்த திரு.இராசுந்தரலிங்கம் அவர்களிடம் விளங்கப்படுத்தினேன் அதன் அடிப்படையில் முதன்முதலாக 1970ம் ஆண்டு டிசம்பர் மாதம் க.பொ.தசாதாரண பரீட்சைக்கு றோயல் கல்லூரியில் எனது ஆசிரியர் திரு.சோமசேகரம் அவர்களின் தலைமையில் உதவிப் பரீட்சகராக நியமனம் பெற்றேன்.

1970ம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக பழைய புதிய பாடத்திட்டத்திற்கு பொருளியல் உதவி பரீட்சகராக கடமையாற்றி அனுபவம் பெற்றேன். தொடர்ந்து 1977ம் ஆண்டு க.பொ.த உயர் பரீட்சைக்கு உதவி பரீட்சகராக நியமிக்கப்பட்டேன் 1978ல் இருந்து சாதாரண மற்றும் தமிழ் மொழி பிரதம பரீட்சகராக கடமையாற்றிய யான் 1998 வரை பொருளியல் க.பொ.த.(உயர்) மேலதிக பிரதம பரீட்சகராக கடமையாற்றினேன். 1998ல் இருந்து தமிழ்மொழி சாதாரணதர பரீட்சைக்கு அகில இலங்கைக்குமான கட்டுப்பாட்டு பிரதம பரீட்சகராக நியமிக்கப்பட்டேன் *(Controlling Chief Examiner)*.

எனது அமெரிக்க பயணத்தின் பின் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை முதலாம் வருட இறுதி வருட தமிழ்மொழி வினாத்தாள் தயாரித்தல் திருத்துதல் வேலைகள் நான்கு வருடங்களாக ஒப்புவிக்கப்பட்டிருந்தது. ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள், அதிபர்கள் இவ் வினாத்தாள்களை கற்பிக்கும் தாங்களே தயாரிக்கவேண்டுமென்றும், தாமே திருத்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்ததால் இவ்வேலையை அவர்கள் பொறுப்பேற்றனர்.

இவற்றைத் தொடர்ந்து அரச அலுவலர் (இ.நி.சேவை இ.க.நிர்வாக சேவை உட்பட) களுக்குரிய வினைத் தடைதாண்டும் பரீட்சை *(EB Exam)* க்குரிய வினாத்தாள்கள் தயாரித்தல், திருத்துதல் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர்களுக்குரிய வாய்மொழிப் *(ORAL)* பரீட்சை களையும் நடாத்தினேன். இவற்றுடன் சிங்கள மொழியில் இருந்து தமிழ்மொழிப் படுத்தல், தர உறுதிப்படுத்தல் *(MODERATE)* ஆகிய பணிகளும் ஒப்படைக்கப்பட்டன.

சிங்கள மொழி அலுவலர்களுக்குரிய தமிழ்மொழி வினாத்தாள் தயாரித்தல், திருத்துதல் பணியும் ஒப்புவிக்கப்பட்டது. எனது உயர்கற்கை நெறிகளான கல்வித்தத்துவ முதுமாணி கல்வி முகாமைத்துவ டிப்ளோமா சித்திகளின் பின் கூடுதலாக பட்டப்பின் படிப்புகளான *M.A, MED, Phd, Dip in Ed, PGDEM* பயிற்சி நெறிகளின் ஆய்வுகள், பரீட்சை வினாத்தாள் தயாரித்தல், திருத்துதல் போன்ற பாடநெறிகள், பரீட்சைகள் விடைத்தாள்கள் திருத்துதல் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. யாழ் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி



வருகை விரிவுரையாளராக கடமையாற்றிய படியால் 1991ம் ஆண்டில் இருந்து 2006ம் ஆண்டுவரை கல்வி டிப்ளோமா *MEd*, விடைத்தாள் தயாரித்தல், திருத்துதல் பணி நடை பெற்றுவந்தது. *A9* பாதை அடைப்புடன் மட்டுப்படுத்தப்பட்டது.

2001, 2002ம் ஆண்டு நடைபெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கு பிரத பரீட்சகராக கடமையாற்றினேன். இங்கு பெரும்பான்மை மொழி, தமிழ் மொழி புள்ளியீடுசீர் செய்வதில் கருத்து மோதல் இடம்பெற்றது. தேசிய கல்வி நிறுவகம் (மகரம) 2004ம் ஆண்டு முதல் கல்வி ரீதியான சகல ஆங்கிலமொழி தமிழ் மொழி பரீட்சகராக ஆய்வு மதிப்பீட்டாளராக இன்று வரை பயன்படுத்தி வருகின்றது.

**கல்வி உலா கிராமத்தை நோக்கி....**

யான் பிறந்ததும், வாழ்ந்ததும், பணியாற்றியதும் கிராமம் கிராமமே எனது வாழ்க்கைக் களமானது கல்விகற்று உயர்ந்தது. கிராமத்திலே கிராமம் பாடசாலைகள் மூன்றும் (பிளவத்தை அமெரிக்க மிசன் (ஆரம்ப) வட்டு இந்துக்கல்லூரி (இடைநிலை) ஸ்கந்தவரோதயா (உயர் நிலை) பாடசாலைகள் கிராமத்தில் அமைந்திருந்தமையால் கிராமியம் நல்ல விழுமியப் பண்பாட்டுக் கோலங்களை விதைத்தது மட்டும் அல்லாமல் நல்ல பண்புகளை கையளித்திருந்தது. எனது குழந்தைகள் நகரத்தில் வாழ்ந்தாலும் இடைக்கிடை எனது பிறந்த கிராமத்திற்கு அவர்களை கூட்டிச் சென்றபடியால் எனது எதிர்பார்ப்பு அவர்களிடமும். காணப்படுவதையிட்டு ஆத்ம திருப்தி.

கிராமத்து கோவில் வழிபாடு, மக்களுடன் பழகுதல், சிறுவயதில் தோட்டம் அவர்கள் நிலத்தை நோக்கி குனிந்து பயிர் செய்ததன்மை பூமியே தெய்வமாக நினைந்து வணங்கி வாழ்ந்த தன்மை நல்ல அமைதியை, மூத்தோருக்கு மதிப்பளித்தல் போன்ற பண்புகள் கிராமம் தந்த வெகுமதிகள் அதே நேரத்தில் கிராமத்தில் மக்களின் கடின உழைப்பும், அவர்கள் ஏழ்மையுடன் போராடும் தன்மை, அவற்றில் இருந்து மீள நேர்மையாக உழைக்கும் உழைப்பு ஆதியன மனதில் பதியவைத்தது.

எல்லா வற்றிலும் மேலாக அம்மா எமது ஏழ்மையைப் போக்க உயர்ந்த இறை நம்பிக்கையுடன் செயற்பட்ட செயல், எங்கள் ஊர் மாரியம்மன் கோயிலில் அம்மா முன்னே திருவடியில் கால்பதித்து முகத்தில் இரு கன்னத்திலும் வேல் பாய்ச்சி எடுத்த பால் காவடி, எம்மையும் காவடி தூக்கி ஆட வைத்த நேர்த்திச் செயல், வாழ்க்கையில் அமைதியான நம்பிக்கையை ஏற்படுத்தித் தந்தது. பக்தி வயப்பட்டு கூட்டுப் பிரார்த்தனை ஆதியன கிராமத்தில் இருந்து பெறப்பட்டது. கிராமம் அமைதிக்கான களம். சமூகப் பார்வை மக்களை ஆற்றுப்படுத்தியது அன்புக்கும் தளமானது.



## உலா 14

கற்றவர் ஞானம் இன்றேல் காமத்தைக்
கடக்கலாமோ - கம்பர்

# கல்வி உலகில் எனது ஆய்வுப் புலம்

மேற்காட்டிய சூழலில் வாழ்ந்து அவதானித்த எனக்கு கிராம நிலைபற்றிய அவதானிப்பு ஆரம்ப வாழ்க்கையில் இருந்து மனதில் பல கேள்விகளை தோண்டித், தோண்டி எழுப்பியது. இளமையில் இருந்தே வாழ்வியல் நிலை பல எண்ணங்களை தோற்றுவித்தது. அந்தளவிற்கு அவற்றை பகுப்பாய்வுடன் நோக்கி வந்தேன். எனது வாழ்வியலுக்கு மட்டுமல்ல அம்மக்கள் எதிர்நோக்கும் வாழ்வியல் சிக்கல்களுக்கு தீர்வு காணமுடியும் என்ற சிந்தனையை நீண்ட காலமாக என்மனதில் எழுப்பியிருந்தது. அதன் அடிப்படையிலேயே கிராம உலகு, கிராமக்களம் பற்றி எல்லாஆய்வுப் புலத்திலும் விடயமாக கிராமநிலை கருப்பொருளாகக் கொள்ளப்பட்டது.

கிராமச் சமூகத்தில் காலையில் ஆண்,பெண் என்று பாராது காலை 4 அல்லது 5மணிக்கு அவர்கள் எழுந்து சுறுசுறுப்பாக தங்கள் தொழிலுக்கு எழுந்து செல்லுதல்; ஒரு ஆணின் உழைப்புக்கு பெண் எவ்வாறு உதவி ஒத்தாசையாக வாழ்தல்; காலையில் எழுந்து வீடு வாசலை கூட்டிப் பெருக்கி தண்ணீர் தெளித்து பாத்திரம் மினுக்கி, கழுவி, மாட்டுத் தொழுவத்தைக் கூட்டி பால்கறந்து, பசுவுக்கு புல்கொடுத்து, வாழ்ந்த வாழ்க்கை; கணவனுக்கு காலை பகல் உணவு சமைத்து பாசல் கட்டிக் கொடுத்து வழியனுப்பும் காட்சி; அவர்கள் பட்டபாடு; கள்ளம் அறியாமல் உள்ளம் நிறைந்த அன்பு; ஒருவருக்கொருவர் உதவுதல்; கூட்டுவாழ்க்கை இன்பியல் துன்பியலில் பங்குகொள்ளும் தன்மை.

இவற்றுக்கு மேலாக எனது வீட்டு நிலையை அவதானித்தேன் எல்லா வீடும் கல்வீடாக ஓட்டு வீடாக இருக்க எமது வீடு மண் வீடாக ஓலையால் வேய்ந்ததாக காணப்படுகின்றது. எனது தாயாரின் கடும் உழைப்பு, கணவனை இழந்த அம்மா குழந்தைகள் மூன்றையும் காப்பாற்ற பட்ட கஷ்டம், ஒரு வேட்டி 2 சேட்டு தோய்த்து மாறி மாறி உடுத்த நிலை, இந்த ஏழ்மை, இதனை **விரட்டி அடிக்க கல்வியே தகுந்த ஆயுதம்** என அம்மா கொடுத்த முக்கியத்துவம், அவற்றாலேயே கல்விப்புலத்தில் கூடிய கவனம் எடுத்ததுடன் ஆய்வுப் புலத்திலும் என்னை கால் வைக்கத் தூண்டியது. எங்கள் காலத்தில் உயர்தர வகுப்புக்களிலோ பல்கலைக்கழகத்திலோ எண்ணங்களை ஆய்வில் வடிக்காமல் கட்டுரை மூலமாகவே வடித்தோம்.

பல்கலைக்கழகத்தில் வாண்மை உயர்வுக்கு கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியைப் பயின்ற பொழுது என் ஆய்வுக்கு களம் அமைத்தது அது.

இப்பயிற்சி நெறியில் எனது ஆசான்கள் அமரர் பேராசிரியர் சந்திரசேகரம், பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களுடன் எனது ஆய்வு விடயங்களின் தலைப்பை தெரிவு செய்வதற்கு முன்பாக கலந்துரையாடுவதுண்டு. இந்த அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் கிராமத்தில் காலம் காலமாக செய்யப்பட்ட உழவு, மீன்பிடித்தொழில், கொல்லுத் தொழில், தச்சுத்தொழில் ஆகியவற்றை 1972ம் ஆண்டு கல்வியின் புதிய பாதை என்ற சீர்திருத்தத்திற்கு உதவ பாரம்பரியத் தொழில்களின் அறிமுறைகள், தெரிமுறைகளை வெளிக்கொண்டு வர எண்ணினேன். இந்த அடிப்படையில் ஆய்வு விடயமாக கல்வி டிப்ளோமாவிற்கு எடுக்கப்பட்ட தலைப்பு:

**"பாரம்பரிய தொழிற் பயிற்சி முறையில் உய்த்துணரத்தக்க கல்வி முறைகள்"** *(Educational Methods Obtained From The Traditional Vocational System)* என்பது பற்றி ஆய்வு செய்தேன். அக்காலத்தில் பூநகரி மகாவித்தியாலயத்தில் அதிபராக இருந்த காலம் கிராமச்சூழல் கூடிய அவதானிப்பையும் நேர்காணலையும் ஏற்படுத்தி ஆய்வில் எழும் கேள்விகளுக்கு நல்ல விடையைப் பெற்றுத்தந்தது. மாணவர்களது தொழில் நுட்ப பாடக்கற்கையில் எந்தளவிற்கு வீட்டில் பெற்றோர், உற்றாரிடம் இருந்து பெறப்பட்ட தொழில் அனுபவம் கற்கையில் பயன்படுத்தப்பட்டது என்பதையும் அவதானித்தேன்.



எனது ஆய்வுப் புலம் கூடுதலாக நூல் மூலம் தேடுதலாக இல்லாமல் கிராமத்தில் தன்னகத்தே பொதிந்த கையளிப்புகள், சொத்துக்களை, அவதானித்து தேடுவதன் மூலமாக அறியப்பட்ட வெளிக்கொணர்வுகளே. அந்தளவில் நூல்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை எப்போதும் ஏற்படவில்லை. பாரம்பரியத் தொழிற்பயிற்சி முறையில் உய்த்துணரத்தக்க கல்வி முறைகளில் கூட குறிப்பாக மீன்பிடிப் பாரம்பரிய தொழில் முறையில் தொழில் புரியும் கரையோரச் சூழலில் வாழ்ந்திராத பொழுதிலும் பூரணமாக அச்சூழலில் வாழ்ந்து, தொழில் புரியும் தொழிலாளிகள் பெற்றுக் கொண்ட அனுபவத்தினை தேடிச் சென்று கேட்டறிந்தேன். அக்கள ஆய்வின் துணைக் கொண்டு கருத்துக்கள் வெளிக்காட்டப்பட்டது. இப்பாட நெறியை மேற்பார்வை செய்யும் ஆசிரிய ஆலோசகர்களின் துணை என்னால் நாடப்பட்டது. இவையெல்லாம் கல்வி உலாவே. தொழில் செய்த பூநகரியும் அவற்றுக்கு களமானது.

அக் கல்வி உலாவில் மக்களின் பாரம்பரிய பயிற்சிமுறைகள் எவ்வகையிலும் புறக்கணிக்கமுடியாததொன்று. அத்தொழில் நவீன மயப்படுத்தப்படும் பொழுது பலாபலன்களை நோக்காகக் கொண்டு பழமையின் தேவைகள் புறக்கணிக்கப்படக்கூடாது, புதுமை முறை புகுத்தப்படவேண்டும், என்பது காட்டப்பட்டுள்ளது. முடிவாக இப்பயிற்சிமுறை எவ்வாறு ஏனைய பாடநெறிப் போதனைக்கு உதவ வழிவகுக்கிறதென்றும் காட்டியிருந்தேன்.

மாணவர்கள் கற்கும் காலங்களில் தொழில் அனுபவத்தை வீட்டுத் தொழில் முறையுடன் இணைத்துப் பெறவும் கற்றல் முடிவில் தாமாகவே தொழிலைத் தொடங்கும் ஆற்றலைத் தம் அனுபவம் மூலமாகப் பெறவேண்டும் என்பதும் இவ்வாய்வில் வற்புறுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் அப்பிரதேச மூலப்பொருளைப் பயன்படுத்தும் வாய்ப்பும் அத்துடன் தாம் ஈடுபாடுடைய தொழில் வளரவும் ஊக்குவிக்கப்படும்.

அப்பிரதேச சூழலுடன் ஒட்டியுறைந்து பாரம்பரிய தொழில்

முறைகளை நவீன தொழில் நுட்பங்களுடன் தொடர்புபடுத்தி புதிய முறையில் இளைஞர்கள் தொழிலைப் பழகும் வாய்ப்புக்கு இடமுண்டாகுமென ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஆரம்பக்கல்வி முடித்து உயர்நிலைக்கல்வியை தொடரும் இடைப்பட்ட நீண்ட காலத்தில் தொழிலை கல்வியோடு இணைத்துக் கற்று குரு சீட பாரம்பரிய முறையில் சாஸ்த்திரியப் பின்னணியில் முழுநிலையில் பயிற்சி பெறக் கூடிய வாய்ப்பு மாணவர்க்கு கிட்டுகின்றது.

இவ்வாய்வில் தொழில் முன்னிலைக் கல்வியின் பாடங்களாக 39 பாடங்களை காட்டியுள்ளோம். விவசாயம், மீன்பிடித்தொழில், கிராமியத் துறை சார்ந்த தொழில்முறை ஒளிப்படக்கலை, கடதாசிஉற்பத்தி, நகரம் சார்ந்த தொழில் முறை, மோட்டார் இயந்திரப் பொறித்தொழில், கடிகாரம்திருத்துதல், தொழிற்துறை சார்ந்த தொழில், உழைப்புத்துறை சார்ந்த தொழில், பன்புல்வேலை, ஈச்சோலைத் தொழில், பனை ஓலைத் தொழில், ஆகியனவற்றைக் காட்டியுள்ளோம்.

இத் தொழில் முறையில் மீன் பிடித்தொழில், கொற்றொழில், உலோகவேலை, மரவேலை ஆகிய தொழில் முறைகள் எமது நாட்டில் மரபுரீதியாக காலம் காலமாக பண்டுதொட்டு இன்று வரை செய்து வரப்படும் தொழில் முறை. இத் தொழில் முறையின் உண்மைப் பாரம்பரிய வடிவை, தோற்றத்தை இன்றும் சில கிராமப்புறங்களில் அப்படியே தத்ரூபமாகக் காணமுடிகின்றது. எந்தவித கல்வியறிவும் இன்றி புற போதனைப் பயிற்சி முறையற்ற குடும்பத் தொழிலாகத், தந்தையின் பின் தனயன் சிறு பராயம் முதல் வழிவழியாகக் கற்று வரும் தொழில் முறையாகும்.

தச்சுத் தொழிலில் கோவில் மண்டப வேலைகளுக்கு பெரிய 6''X4'' வீம் ஊசிக்கால்களை மேலே ஏற்றி அளவு சரியா எனப் பார்க்காது கீழே பொருத்திப்பார்த்து மேலே ஏற்றியவுடன் சரியாகப் பொருந்தும் நுட்பமானதன்மையை, திறமையை பாரம்பரிய தச்சுத்தொழிலாளர்கள் பெற்று விளங்கினர். யாழ்ப்பாணத்தில் நாம் வாழ்ந்த சூழலில் திரு.சிவஞானம் என்ற ஆசாரியார் பாடசாலைக்கே செல்லாதவர் அவரது தச்சுத் தொழிற் திறமை



வெளிப்பாட்டை பொறியியலாளர்களே பாராட்டினர். எனது பூநகரி ம.வி கட்டிட வேலை, வீட்டுவேலைக்கு உதவியவர்.

அதேபோலவே உறுதியான பாத்திரங்கள் மண்வெட்டி, கோடரிகள், செய்விப்பதற்கு பாரம்பரியமுறையில் தொழிலாற்றி வருபவர்களான பித்தளைவேலை செய்வோர், கொற்றொழில் வேலை செய்வோரிடம் தமக்கு வேண்டிய தொழில்கள் மக்களால் கையளிக்கப்படுவதை இன்றும் நாம் காணலாம்.

உழவுத் தொழில் செய்பவர்கள் புதியமுறையில் செய்யப்பட்ட மண்வெட்டியை விட பழைய பாரம்பரிய முறையில் செய்யும் மண்வெட்டி அலவாங்கு, கோடரி, கத்தி செய்வித்து, பாவித்து வருகின்றதன்மையை இன்றும் காணலாம். ஏன் எமது புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் யாழ் வரும் பொழுது இடியப்ப உரல், கொழுக்கட்டை உரல், கத்தி திருவலை, அரிவாள் செய்வித்து எடுத்துச் செல்வதை நாம் காணலாம்.

கற்பிக்கும் முறையில் மாணவர்களுக்கு தொழில் மகத்துவம் உணர்த்தப்படல் வேண்டும். உழைப்பின் மகத்துவத்தை உணரசமூகம் விடாது. அதற்கு சாதியமைப்பும், உழைப்பும் சமூக அந்தஸ்தைச் சுட்டிக் காட்டிய வண்ணமேயிருக்கும். இதனால் புதிய தொழில் முன்னிலைப்பாடநெறி தன் போதனைக்கு முன்பு இத்தகைய இடர்ப்பாடுகள், பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் என எனது ஆய்வில் சுட்டிக்காட்டியிருந்தேன். அது இன்றும் சரியாக உள்ளதைக் காணலாம். இவற்றுடன் பாரம்பரிய தொழில் முறையையும் பாரம்பரிய தொழிலையும் ஒப்பீட்டுக் காட்டி ஏன் பாரம்பரிய தொழிலில் கவனம் செலுத்த வேண்டும், என்பதையும் அவ்வாய்வில் சுட்டிக் காட்டத் தவறவில்லை. பாரம்பரிய பயிற்றுமுறை மக்களுக்குப் பூரணத்துவமான தொழில் வாய்ப்பை அளிக்கக் கூடிய ஒன்று என்றும் சுட்டிக்காட்டியுள்ளேன். தந்தையின் பின் சென்று தொழிலை படிமுறையாகக் கற்றுவரும் தன்மை, தந்தையின் வழிநின்று கற்கும் தனயனின் தொழிலின் தேர்ச்சிபற்றியும், எடுத்துக் கூறியுள்ளேன். ஆதலால் பாரம்பரிய பயிற்றுமுறையானது பூரணத்துவமான நிறைபயிற்றுமுறையென்றும், தொழில் வாய்ப்பை அளிக்கும் முறை என்றும் ஆய்வில் நிறுவியுள்ளேன். அது ஓர் விதிமுறையற்ற முறைமைசாரா பயிற்று

முறையாகும். தொழிலுக்கு உடனுதவும், இளமை தொட்டு பயிலுதல் கூடிய தேர்ச்சியைக் கொடுக்கும் எனவும் காட்டப்பட்டுள்ளது. அது ஒரு அனுபவவாயிலாக வளர்ந்து வரும் கல்விமுறையென்று எனது கல்வி உலாவில் கண்டேன்.

பாரம்பரிய தொழில்முறை முழுக்க முழுக்க ஒரு வாழ்க்கைமுறை, என்ற என்பது அவதானிப்பும் கூட. முழுக்க முழுக்க குடும்பமூலமே தொழிலைப் பகுத்து, பகுத்து உடன் நிறைவேற்றும் தன்மையும் அதன் சிறப்பம்சம். அன்று உடல் மூலம் உழைத்து தொழில் செய்து உடலுக்கு உரம் சேர்த்து நோய் நொடியின்றி நீண்டகாலம் வாழ்ந்த தன்மையும் எம் உலாவில் சுட்டிக்காட்டப்பட்டது.

பாரம்பரிய முறையில் தொழில் செய்யும் பொழுது பாடல்கள் பாடுவர். பழைய இலக்கண, இலக்கிய சமய அறிவைக் கேள்விச் செவியூடாக பெற்றனர். புராண, இதிகாசசம்பவங்களைப் பாடி, பழமொழிகளை மேற் கோள்காட்டி சுத்த செந்தமிழில் பாடினார்கள். உழவுத் தொழிலில் இரசித்த கலப்பை உழவு சூடுமிதித்தல் காலத்தில் பாடப்பட்ட மரபு வழிப்பாடல்கள் கேள்வி முறைக்கல்வியை வளர்த்தது.

இப்பாரம்பரிய பயிற்றல் முறையில் பயிற்றுபவரிடம் அடிவாங்கிப் பழகும் தன்மையிருந்தது. இத்தகைய பயந்து பழகும் தன்மையும் முரட்டுச்சுபாவமும் பயிற்றல் முறையுமே இப்பாரம் பரிய தொழில் முறையின் பயிற்றல் நெறி முறையெனலாம் பூரண திறன் பேறுகள், பழையபாரம்பரிய முறையிலிருந்து பெற்ற கற்கை நெறிகளாய் புதிய கற்கைக்கு உதவும் கல்வி முறையாக, பாரம்பரிய தொழிற்பயிற்சிமுறையில் உய்த்துணரத்தக்க கல்வி முறையென அவ்வாய்வில் பெறப்பட்டிருந்தது.

இவ்வாய்வின் மேற்பார்வையாளர்களான அமரர் கல்வியியல் பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களும், அக்காலத்தில் வித்தியோதய வளாக பேராசிரியராய் இருந்த எனது பெரு மதிப்பிற்குரிய கா.சிவத்தம்பி அவர்களுமே இத்தலைப்பை தெரிவு செய்து ஆய்வுக்கு ஆலோசனை வழங்கினர். எனது முதல் ஆய்வுக்களமும் இதுவே.



**ஆய்வுப் புலத்தில் கஸ்டப்பிரதேச சிறிய பாடசாலைகளில் அவற்றை முகாமிப்பதில் அதிபர்கள் பெறும் இடம் *(The Role of Principals in Managing Small Schools in Difficult Areas)***

மேற்படி ஆய்வு 1988 - 1989ம் ஆண்டில் என்னால் தேசிய கல்விநிறுவக மகரகம கல்வி டிப்ளோமா முகாமைத்துவ கற்கை நெறிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எமது மேற்பார்வையாளரும் ஆலோசகர்களுமாகிய *Mr.A.Macellan* அவர்களால் மதிப்பிடப்பட்டு உயர்தர பெறுபேறு கிடைக்கப் பெற்றது.

1945ம் ஆண்டில் இருந்து இலங்கையில் மாணவர்களுக்கு கொண்டுவரப்பட்ட இலவசக்கல்வி கலாநிதி கன்னங்கரா அவர்களால் வழங்கப்பட்டு எனது ஆய்வுக்காலம் வரை உண்மையான அர்த்தம் பெறாமை அவதானிக்கப்பட்டது. குறிப்பாக கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் அதுவும் பின்தங்கிய பகுதிகளில் கூடுதலான மாணவர்களுக்கு இக்கல்விக்குரிய வசதிகள் வாய்ப்புக்கள் அளிக்கப்படாதிருந்தது.

கிராமப் பாடசாலைகளில் இவற்றை நிவர்த்திக்க, பரிகாரம் தேட, என்ன செய்யவேண்டும். இதற்கு யார் பொறுப்பு என்பன போன்ற ஆய்வெழு வினாக்களுக்கு யான் ஆசிரியராக, அதிபராக கடமைபுரிந்த கிராமப் பாடசாலைகளில் அவதானித்த அவதானிப்புகள், மற்றும் யான் வட்டாரக்கல்வி அதிகாரியாக கடமையாற்றிய கிராமப்புற (குறிப்பாக பூநகரிப்) பிரதேச பாடசாலைகளது பிரச்சினைகளை எனது ஆய்வுத்தளமாகக் கொண்டேன்.

புவியியல் சூழல் அப்பாடசாலைகளது பிரதேச வசதி வாய்ப்புக்கள் இன்மையும் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாமையும் ஆய்வுப்பிரச்சினைகளாக அமைந்தன.

இலங்கையின் கல்வி வளர்ச்சியின் ஆரம்பமானது 2400 கிராமங்களில் இருந்து அடி மட்டத்தில் ஆராம்பிக்கப்படவேண்டும் அவை கூடுதலானவை பின்தங்கிய கஷ்டப்பிரதேச பாடசாலைகள் என்பது கருத்தில் கொள்ளப் பட வேண்டியது. ஆய்வுக்காலம் வரை 22 வருடங்கள் ஆசிரியர், அதிபர் சேவை, கல்வி அலுவலர்

சேவையில் அவதானித்த அவதானங்கள், அனுபவங்கள் குறிப்பாக சிறிய பாடசாலை அதிபர்கள் அவற்றை முகாமிப்பதில் பட்ட கஷ்டங்கள் என்முன் நின்றன.

அங்கு பாடரீதியாகவும் பாடசாலை ரீதியாகவும் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை, அவர்களின் தரம், தாய்மொழி, சமயம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை போதிப்பதற்கு ஆசிரியர்கள் வழங்கப்படாமை, நகரப் பாடசாலைகளுடன் இக்கிராமம் பாடசாலைகளை ஒப்பிடும் பொழுது அவை புறக்கணிக்கப்பட்டமை, அதுவும் இவற்றை உணர்ந்து வாதிடமுடியாத பெற்றாரை மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை, தத்தெடுத்து பணியாற்ற வேண்டிய தேவைகள் எனது மனதை உறுதித்தின. அதுவும் ஏழ்மையில் பிறந்து ஏழ்மைச் சூழலில் கல்வி கற்று, உயர்ந்த என்னால் இவ் ஏழ்மைச் சூழலுக்கு உதவாமல் இருக்க முடியாது இருந்தது. குறைகளை சுட்டிக் காட்டியதுடன் அவற்றை பகுப்பாய்வு செய்து வெளிக்காட்டியதுடன் எத்தகைய தீர்வை முன்வைக்க வேண்டும் என்பது ஆய்வின் வெளிப்பாடு. சிறிய பாடசாலை அதிபர்களது முகாமிப்பிற்கு ஆலோசனைகள் முன் வைக்கப்பட்டன.

கிராம பொருளாதார அபிவிருத்திக்கு ஏன் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் ஏழை விவசாயிகள், மீன்பிடியாளர்கள், ஏனைய கூலித் தொழிலாளர்களது. கல்வி நிலை பற்றி கருத்தில் கொள்ளவேண்டுமென்பது இவ் வாய்வில் வற்புறுத்தப்பட்டுள்ளது. சிறிய பாடசாலைகளது அமைவிடம் தொடர்பாடலின்மை, வீதிகளின்மை, போக்குவரத்தின்மை பௌதீக வளமின்மை, மனித வளமின்மையாவும் சுட்டிக்காட்டப்பட்டன. அவற்றுக்கு மேலாக அங்குள்ள பெற்றோர்களது குடிநீர்ப் பிரச்சினை, சுகாதார வசதியின்மை அப்பிரச்சினைகளை உணரும், அறியும் தன்மை ஆற்றிலின்மை என்பன வெளிப்படுத்தப்பட்டன. புவியியல், சமூக பொருளாதார பௌதீக கல்விப் பின்னணிகள் வெளிக்காட்டப்பட்டன.

குறிப்பாக யான் அதிபராக, கல்வி அலுவலராக கடமையாற்றிய கிளிநொச்சி மாவட்டத்தை முன்னுதாரணமாக எடுத்து இலங்கையின் ஏனைய கிராமிய சிறிய பாடசாலைகளது



நிலைமைகள் உணர வைக்கப்பட்டுள்ளன.

அப்பாடசாலைளில் தளபாடமின்மை, ஊக்குவிப்பின்மை, மாணவ, ஆசிரியர் வரவின்மை, மேலாண்மை படைத்த கல்வி அலுவலர்கள் கல்விக்கு முக்கியத்தவம் கொடுக்காமை, அப்பாடசாலைகள், பிரதேசங்களது கல்விப் பின்னணியாக காட்டப்பட்டுள்ளது. இவ்வாய்வில் அதிபர்களது வகிபாகம் காட்டப்பட்டுள்ளது. உண்மையான அவர்களது பெறும் இடத்தை வெளிக்காட்டியதுடன் அவர்கள் எத்தகைய முகாமிப்பை கொண்டிருக்க வேண்டும் என்பதும் எனது முகாமைத்துவ கற்கையூடாக பெறப்பட்ட அறிவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் கொள்ளப்பட்ட ஆய்வெழுவினாக்களாக நடைமுறை நிலையில் சிறியபாடசாலை அதிபர்கள் எத்தகைய சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர்; பின்தங்கிய பாடசாலைகளது அதிபர்களை ஊக்குவிக்காத காரணிகள் யாவை; வசதிகள் அளிக்கப்படாத அப்பாடசாலை அதிபரால் எத்தகைய முறைகளை கையாண்டு அதன் அபிவிருத்தியைக் காணலாம். கல்வித்திணைக்கள அலுவலர்கள் அப்பாடசாலைகளுக்கு உதவுவதில் பெறும் இடம் யாது? சிறிய பாடசாலைகளது ஆசிரியர்கள் பெறும் இடமும் அதிபர்களிடம் அவர்களது தொடர்பு யாது? என்பன போன்ற ஆய்வெழு வினாக்கள் விளக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வின் 5ம் இயலில் சிறிய பாடசாலைகளது முகாமிப்புத்தன்மையும், நிர்வாகக் கட்டமைப்பும் வெளிக்காட்டப்பட்டுள்ளன. முகாமையாளர் என்ற அடிப்படையில் சிறிய பாடசாலைகளில் அவர் பெறும் இடம் வெளிக்காட்டப் பட்டுள்ளது. அதிபர்களது முகாமிப்பு செயற்பாடு இங்கு வெளிப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறப்பட்ட முடிவுகளை இங்கு காணலாம். அவரது செயற்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்ற ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதிபர் முகாமிப்பில் எதிர் நோக்கும் சவால்களை அவர் சமாளிப்பதே அதிபரது பிராதன கடமை.

அவரே அப்பாடசாலை விருத்திக்கும், கணிப்பீட்டுக்கும், வகை கூறுவதற்குமுரியவராவர். சமூகம் அவரையே நம்பியுள்ளது. பெற்றோர் உணர முடியாத, தெரியாதவர்கள் இவரே அவர்களுக்கு

வழிகாட்ட வேண்டும். வழி நடாத்த வேண்டும். இவரை அனுப்பி விட்டு தமது கடமை முடிந்து விட்டது என மேலாண்மை அலுவலர்கள் பொறுப்பை தட்டிக் கழிக்காது அவர்களுக்கு உதவவேண்டும். சமூகம் பங்கு கொள்தன்மை பெறவேண்டும். இப்பங்குடமைபற்றி சமூகத்திற்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் (Awareness Programme) நிகழ்த்தப்படவேண்டும்.

அதிபர்களது வாண்மை கல்வித்தன்மையை உயர்த்த தொடர்ந்தேர்ச்சியான கலந்துரையாடல், கள அமர்வு நடத்தப்படவேண்டும் அவர்களும் தங்கள் அறிவை (புதுப்பிக்க) நவீன நிலைக்குட்படுத்த வேண்டும். தனது குழாமுடன் தம்மை சமூகம் குறை கூறாதளவிற்கு கல்வி வாண்மை, சமூக, கலாசார ரீதியாக தன்னை அவர் வளப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விவரமான கருத்தூன்றலை கல்விச் சமூகத்திற்கு அளிப்பதில் இவ்வாய்வு எனது கல்வி உலாவில் பிரதான பங்கெடுத்துள்ளது. அவ்வாய்வே எனது கல்வித்தத்துவமாணிப் பட்டத்திற்காய கிராமப்பள்ளிகள் விருத்தியில் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகள் என்ற விடயத்திற்கு களம் அமைத்துத் தந்தது. இவ்வாய்வு நூலாக பிரசுரமாகின்றது. எனது நூலின் மூலம் வாசகர்கள் கல்வி உலா வரலாம். இதனை தமிழ்ப்படுத்தி வெளியிட வேண்டும்.

**ஆய்வுப் புலத்தில் கல்வி முதுதத்துவமாணி**

வடபிரதேச கிராமப்பள்ளிகள் விருத்தியில் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகள் எனும் தலைப்பில் மேற்படி ஆய்வை மேற்கொண்டேன். பாரம்பரியம், கஷ்டப்பட்டப் பிரதேசம், கிராமம் நாட்டுக் கூத்து பற்றி நோக்கிய எனக்கு வடமாகாண கிராமப் பள்ளிக் கூடங்களின் மேம்பாடு தொடர்பான பிரச்சினைகள் என்பது பற்றி எனது பட்டறிவு அவதானிப்பின் ஊடாக கள ஆய்வை மேற்கொண்டேன்.

இவ்வாய்வில் கல்விபற்றிய வரையறையைக் கூறி கல்வி முக்கியத்துவம் பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. கல்வியின் முக்கியத்துவம் கிராமத்தின் மேம்பாட்டுக்கு வேண்டற்பாலது எனக்காட்டப்பட்டுள்ளது. கல்வியுடன் இணைத்து கிராமம் பற்றிய விளக்கமும். அவற்றின் கட்டமைப்பும் பற்றியும் கூறி கல்வியால்



கிராமம் முன்னேற்றம் பெறும் என்பது காட்டப்பட்டுள்ளது.

கிராமப் பள்ளிக்கூட புவியியல், பொருளாதார சமூகப்பிண்ணி அவற்றுடன் இணைத்து கிராமப் பள்ளிக்கூட நிலை முகாமிப்பு அதன் போது காணப்படும் பிரச்சினைகள் முன்கொண்டுவரப் பட்டுள்ளது. கிராம சமூகத்தொடர்பை, நிலையையும் காட்டப்பட்டுள்ளன. ஏன் கிராமப் பள்ளிக் கூடங்கள் ஊக்குவிக்கப்படவில்லை அவற்றின் மேம்பாட்டில் கல்வி நிர்வாக நிறுவனங்கள் வகிக்கும் பங்கு, அவற்றில் அரசு பெற்றோர் பழைய மாணவர்கள் பெறும் இடம், பழைய மாணவர்கள் பெறும் இடம் காட்டப் பட்டுள்ளன. கிராமத்தின் ஒரேஒரு வளம் சமூக வளமாகும். அவற்றில் பங்கு கொள்ளும் சமூக நிறுவனங்களது. பங்கு அவசியம் என்பது காட்டப்பட்டுள்ளது.

கல்வி உலாவில் தத்துவமாணி ஆய்வு முழுக்க முழுக்க கள ஆய்வாகும். வடபிரதேசத்தில் ஐந்து மாவட்ட எல்லாப் பாடசாலைகளையும் மேற்பார்வை செய்த எனக்கு பெரிய வாய்ப்பாக அமைந்தது. பாடசாலை பெற்றோர், பழையமாணவர், புலம்பெயர் பழைய மாணவர்களுடன் நிறைய தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றின் மேம்பாட்டுக்கு உதவும் வழி அமைத்து களம் அமைத்தேன்.

பாடசாலைகள் பற்றிய களஆய்வில் நேர்காணலில் உண்மை நிலை வெளிப்பட்டது. அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள், அவற்றை நிர்வகிக்கும் திணைக்கள நிர்வாக அலுவலர்கள் மேம்பாட்டில் அக்கறை கொண்டு தம்மனதில் உள்ளவற்றை வெளிக்காட்டினர்.

முக்கியமான விடயங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. பேணப்பட்ட பதிவேடுகள் பரிசீலிக்கப்பட்டு விபரங்கள் திரட்டப்பட்டது. எனது ஏனைய ஆய்வுகளை விட இங்கு சர்வதேச இலங்கை கிராமப் பள்ளிக்கூட துணை நூல்கள் வாசிக்கப்பட்டு கருத்துக்கள் சேகரிக்கப்பட்டது. அவற்றுடன் எனது கிராமப் பள்ளிக்கூடங்கள் பற்றிய எல்லா நிலைப்பட்டறிவும், பதவி வகிபங்கும், அவற்றால் பெறப்பட்ட கருத்துக்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பிரச்சினைகளை முழுதாக வெளிப்படுத்தி தீர்வு நோக்கிய

முடிவுகளும் மேம்பாட்டிற்கான விதப்புரைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில் என்னுடன் பாடசாலைச் சமூகம், பல்கலைக்கழக சமூகம். கல்வி நிர்வாக அலுவலர்கள் அனைவரும் பங்கு கொண்டு உலாவந்தனர். யாழ்பல்கலைக்கழகத்தில் யான் வருகை விரிவுரையாளராக நீண்ட காலம் பணியாற்றிய போது பட்டப்பின்படிப்பின் மாணவர்களது பாடசாலைகளது நிலை பற்றி அறிவும் உதவியது.

**கிராமத்தை அடிப்படையாகக்கொண்ட ஆய்வும் தேவையும்....**

ஒரு நாட்டின் பல்வேறு துறைசார்ந்த தேசிய மேம்பாடானது கருத்துள்ளதாக உயிருட்டமுள்ளதாக இடம்பெறவேண்டுமாயின் அது நாட்டின் அடிமட்ட நிலையான கிராம மட்டத்திலிருந்தே ஊற்றெடுக்கவேண்டும். உலக நிலப்பரப்பிற் கூடுதலான நிலப்பிராந்தியம் கிராமமாகவே காட்சியளிக்கின்றது. கிராம மேம்பாட்டின்மூலம் அந்த நாட்டின் முழுமையான மேம்பாட்டைக் காணக்கூடியதாக அமைவது மட்டுமல்லாமல் உலகின் முழுமையான மேம்பாட்டையும் ஏற்படுத்தலாம்.

கிராமத்திலேயே அடிநிலைச் சிக்கல்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. இவற்றுக்குத் தீர்வுகளை ஏற்படுத்த, இங்கேயே கூடுதலாக நிறுவனங்கள் அமைக்கப்படவேண்டும். மையநிலையிற் செயற்படும் அலுவலகங்கள், பொறுப்பாளர்கள் இந்நிறுவனங்களை இவ்வாறான மந்தமான பின்னணியில் நோக்கவேண்டும். இன்று வடபகுதிக் கிராமப் பள்ளிக்கூடங்கள் செயலிழந்துள்ளன. இலங்கையின் ஏனைய கிராமப் பள்ளிக்கூடங்களும் மேம்பாடற்றுக் காணப்படுகின்றன. சில பள்ளிக்கூடங்கள் இயங்குநிலைக்குரிய எவ்வகை வளங்களும் அற்று காணப்படுகின்றன. இது பள்ளிக்கூடச் செயற்பாட்டைக் குறைவடையச் செய்வதுடன் ஆசிரியர் செயற்பாட்டையும் செயலிழக்கச் செய்கின்றது. அனைவர்க்கும் கல்வி என்ற கோட்பாடு அர்த்தமற்று விட்டது.

வடமாகணத்தில் உள்ள மாவட்டங்கள் பாரம்பரியப் பழைமைத் தன்மை, கல்விக் கட்டமைப்பு கொண்டு மிளிர்ந்து கல்வி விருத்தியில் சிறந்த பள்ளிக்கூடங்களைக் கொண்டு விளங்கின. கூடுதலாக இப்பள்ளிக்கூடங்கள் கிராமங்களிலே தனித்துவமாக



தன்னிச்சையாக இயங்கி, வரலாறு படைத்தவை. இன்று அவை மேம்பாட்டில் பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்குகின்றன. கிராமப் பள்ளிக்கூடங்கள் பல்வேறு வளங்கள் இன்றிக் காணப்படுகின்றன. குறிப்பாக மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர்வளம் இன்றிக் காணப்படுகின்றன. பல்வேறு பாடத்துறைகள், இவ்வாசிரிய வளங்களின்றி மாணவர்கள் அவற்றில் அறிவு பெறாமற் பின்தள்ளப்பட்டுள்ளார்கள். இவற்றை நாம் அனுமதிக்கக்கூடாது. கல்வியில் இத்தகைய பின்னடைவு ஒவ்வொரு கணமும் பாரிய விளைவை ஏற்படுத்தும். இவை போன்ற பல்வேறு சிக்கல்களை ஆய்வினூடாக வெளிக்கொணர வேண்டுமென்ற நோக்கிலேயே இவ்வாய்வுத் தலைப்பாக கிராமப் பள்ளிக்கூடங்களில் மேம்பாடு பற்றிய சிக்கல்கள் என்பது தேர்ந்தெடுக்கப்பட்டது.

அத்துடன் மகரகம தேசிய கல்வி நிறுவகத்திலே கல்வி முகாமைத்துவ பட்டப்பின் படிப்பில் பெற்றுக்கொண்ட கிராமப் பள்ளிக்கூடங்கள் பற்றிய கொள்ளைகள், அறிவு என்பன இந்த ஆய்வினை மேற்கொள்ளத் தூண்டின.

இவ்வாய்வின் நோக்கமாக கிராமத்துப் பள்ளிக்கூட மேம்பாடு பற்றிய சிக்கல்களை உள்ளவாறே வெளிக்கொணர்ந்து காட்டி உண்மையான கல்வி மேம்பாடு கிராமத்தில் நடைபெறாமைக்கான காரணத்தை வெளிக்காட்டுவது. கிராமக்கல்வி மேம்பாட்டை அக்கண்டறிவூடாக ஏற்படுத்துவது: கிராமங்களிலும் கல்வி வளரவேண்டும் என்பதை கூறுவது. கிராமக் கல்விக்களம் இதனைக் காட்டுகின்றது.

இவ்வாய்வு செய்த பொழுது ஐந்து வருடங்கள் எனது. குடும்பத்தார் பொறுமையுடன் உதவினர். குறிப்பாக லீப் போவேட் செல் அடிபட்ட பொழுது எனது வீட்டில் 100க்கு மேற்பட்டோர் குடிவந்த பொழுதும் எனது முயற்சி கைவிடப்படவில்லை. இவற்றையும் நூலுருவாக்கி உங்கள் கையில் உலா வர வைத்துள்ளதால் விபரங்களை அவ் நூல் மூலம் என்னுடன் பகிரலாம்.

சென்றார். அவர் சென்ற பொழுது "படித்த இளைஞர்கள் ஆடுகின்றீர்கள். இவற்றுக்கு தொடர்ந்து உருக்கொடுத்து அழியாது பாதுகாக்க வேண்டும்" என்று முதுகில் தட்டிக் கொடுத்துச் சென்றார்.

யான் பல்கலைக்கழகம் 1962ம் பிரவேசித்து 1ம் வருடம் படிப்பு முடித்து இரண்டாம் வருடம் 1963ம் தொடங்கிய பொழுது என்னை அழைத்து "நீ முன்பு நாட்டுக் கூத்தை தென்மோடியில் ஆடினாய் நான் அரங்கேற்ற இருக்கும் கர்ணன் போரில் அர்ச்சுனன் பாத்திரம் ஏற்று ஆடி நடிக்க வேண்டும்" என்று அப்பாத்திரத்தை எனக்குத் தந்து, பாடி, ஆட வைத்தார். பல்கலைக்கழக வாழ்க்கையில் வித்திசேர் எம்மை கூட்டாளிகள் போல் இலங்கை முழுவதும் அழைத்துச் சென்று அரங்கேற்றினார். அவரால் பின்பு அரங்கேற்றப்பட்ட இராவணேசன் போன்றவற்றில் எனது குடும்பசுமை காரணமாக விரைவில் படித்து வெளியேற வேண்டும் என எனது தாயார் நிர்ப்பந்தம் விதித்தமையால் ஏனைய கூத்துக்களில் பங்கேற்காது விட்டேன்.

இக் கூத்துக்கள் தந்த அனுபவங்கள் பாடங்கள் காரணமாக எனது ஆய்வுக்கு "முறைமைசாராக் கல்வியில் நாட்டுக் கூத்துக்கள்" என்ற தலைப்பு இடப்பட்டது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்களினது ஆலோசனை மேற்பார்வையில் எனது எம் ஏ தேர்வுக்கு இது ஆய்வானது. யாழ்ப்பாணக் கிராமமொன்றில் நாட்டுக் கூத்துக்கள் மூன்றினை (அரிச்சந்திரன் மார்க்கண்டன், நல்லதங்காள்) தெரிவு செய்து அவற்றில் முறைமைசாராக் கல்வி பற்றி எனது கல்வி உலாவில் ஆய்வை மேற்கொண்டேன்.

இவ்வாய்வில் கல்வி பற்றிய வகைகள், வரையறைகள், இன்றியமையாமை, பயன்பாடு பற்றி வெளிப்படுத்தப்படுகின்றது. சமூக தெரிமரபுகள், அறிமுறைகள், முறைமை சாராக் கல்வி மூலமே உணர்த்தப்படுகின்றன, எனக் காட்டப்பட்டுள்ளது. பாரம்பரிய சமூகத்தில் முறைமை முறைமைசாராக் கல்வி தொழிற்பட்ட விதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சமகால உலகியல் வளர்ச்சியில் அவற்றின் அவசியம் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

எங்கள் தமிழ் சமூகம் ஒரு பாரம்பரிய சமூகம். ஆதலால் அவற்றின் வெளிப்பாடுகள் கையளிப்புகளை தொடர்ந்து பேண முறைமைசாரக்கல்வி பேணப்படவேண்டும் என்பது



நிறுவப்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தலை சமய பழக்கவழக்கங்களை வெளிக்காட்டுகின்றன என்பனவும், கற்கை நெறி கேள்வி வழிப்பட்டதாய் திரும்பத் திரும்ப பதித்து மனனம் செய்யும் பயிற்சிமுறைக்குட்பட்டே கல்வி பாரம்பரிய சமூகத்தில் இருந்தமை என்பதுவும் சமூகத்தின் அதிகார வன்முறை கற்றலில் ஏற்படுத்திய தாக்கமும் இவ்வாய்வில் காட்டப்பட்டுள்ளன.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மூன்று நாடகங்களும் முறைமைசாராமுலம் எவ்வாறு சமூக விழுமியங்களை கையளிக்கின்றது என்பதைக் காட்டியதுடன் இசை பற்றி விளக்கி அது நாடகங்களில், கல்வியில் அறிவையூட்ட எவ்வாறு பயன்பட்டதென எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கதைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் எமது சமூகத்தில் இன்றும் எடுத்துக் காட்டாக நாம் கொண்ட கருத்தை ஆதாரபூர்வமாக்கிக் காட்டுகின்றோம். அவை இரண்டைப்பற்றி விளக்கமளித்ததுடன். இரண்டும் பாரம்பரிய சமூக நாடகங்களில் முறைமை சாராமூலம் பெறும் இடத்தை இவ்வாய்வில் ஆதாரத்துடன் நிறுவிக் காட்டியுள்ளேன்.

இவ்வாய்வின் பெறப்பட்ட முடிவாகவும், முறமை சாராக் கல்வியும் முறைமைக் கல்வியும் சேர்ந்து இருமுறை கலந்த கல்விமுறை உருவாக வேண்டிய அவசியம் வற்புறுத்தப்பட்டுள்ளது. எனது கல்வி உலாவில் இருமுறையும் கலந்து கல்வி வெளிப்பாட்டை; அடைவைத்தந்தன.

இவ்விடயத்தை கல்வி உலாவில் இருமுறைமைகளிலும் கல்வி கற்றவர்களது பெறுபேறுகளை ஒப்பிட்டுப் பார்த்தேன். எனது இவ் ஒப்பீட்டுப் பலனை சிந்தித்த யான் எனது ஆர்வ விடயத்தை பேராசிரியர் கா.சிவத்தம்பி, அமரர் பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களுடன் கலந்து கொண்டேன். அவ்விருவரும் நெறிப்படுத்தி எடுத்துத் தந்த தலைப்பும் அவர்களது மேற்பார்வை வழிநடாத்தலுமே இவ்வாய்வில் எழுந்த கல்வி உலா.

சமூகத் தெரிமரபுகள், அறிமுறைகளை முறைமைசாராக் கல்விமூலமே பூரணமாக அறிய முடியும். சமூக உறவின் இன்றியமையாமை, பாரம்பரிய பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் படைப்புத்திறன். பாடல்கள், கதைகளைக் கூறுதல்

ஆகியவற்றின் காரணங்கள் நோக்கப்பட்டன. முறைமைக்கல்வி பெற்றவர்களது ஆய்வுத்திறன், பரந்த அறிவுத் திறன் பாராட்டப்பட்டது. முறைமைசாராக்கல்வியை கைவிட்டதால் பூரணமான ஆழ்ந்த அகலமான அறிவின்மை, பழைய இதிகாச புராண கதைகள் பற்றிய அறிவின்மையால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் என்பன கூறப்பட்டுள்ளன.

ஏனைய ஆய்வுகளுக்கு ஆய்வுத் துணைநூல்களில் தங்கியிருக்கின்றோம். இது முழுக்க முழுக்க கள ஆய்வு வெளிப்பாடாகவே உள்ளது. கல்வி உலாவில் நான் இளமையில் இருந்து இக்காலம் வரை பெற்ற அவதானிப்பதன் அனுபவங்களே இவ்வாய்வின் அடித்தளம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் முறைமைசார முறையை கல்வியில் புறக்கணிக்க முடியாதென்பதை ஆணித்தரமாக வற்புறுத்தி கூறப்பட்டுள்ளது. கற்றல், கற்பித்தலில் அழகியல் அபிநயம் புறக்கணிக்கப்படக்கூடாதென்பதும், அதன் முக்கியத்துவம் பற்றியும் காட்டப்பட்டுள்ளன. கற்றல் கற்பித்தலில் அழகியல் உணர்வு நயப்பு பூரணமான கற்றல் பெறுபேற்றைப் பெற்றுத்தரும்.

எமது வாழ்க்கையில் ஆற்றல் புறக்கணிக்க முடியாதது. கற்க, கற்பிக்க, கருத்துணர்த்த, உதவியவை, செய்து காட்டல் (போலச் செய்தல்) மீளச் செய்கை, ஆகியவை. இவற்றை உருவாகக் கொண்டவை நாடகங்களே. இறுதியாக நாடகம், கூத்து போன்ற அழகியற் கலைகள் தொடர்ந்தும் முறைமை சாரா வழியில் மக்களுக்கு கல்வியூட்டும் சாதனமாக தொடர்ந்தும் பேணப்படுவதன் மூலமே கல்வி மேம்படும், என்பதே நான் அடைந்த கல்வி உலா பெற்றுத்தந்த பட்டறிவு.

இவையாவும் எனது படைப்புகளாக, இவ்வாண்டில் (2009) நூல் உருவாகி உங்கள் கைகளில் தவழ்வதால் பூரணமாக எனது கல்வி உலா ஆய்வுப் பயனைப் பெறமுடிகின்றது.





உலா 15

கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாரெனின்.

# கல்வி உலாவில் எனது கல்வி நூல்கள்

*** கல்வியியற் சிந்தனைகள்**

யாழ் மாவட்டத்தை விட்டு வெளியேறி திருகோணமலையில் கடமையாற்றிய பொழுது தனிமைப்படுத்தபட்ட நிலையில் எனது கல்விச் சிந்தனைகள், கல்வியியற் சிந்தனைகள் என்ற நூலுருவாயிற்று. இந்நூல் கல்வி உலகில் உலாவரச் செய்த எனது கருத்தெய்வம் தெய்வத்தாய்க்கு அன்புப் படையலானது. 1998ம் ஏப்ரலில் வெளியானது. உள்ளே 21 கட்டுரைகள் சிறு தலைப்புகளாயின. இவற்றில் கல்விபற்றி, கல்வி நிறுவனம் பற்றி, உடல், உளம், தாய்க்கல்வி, ஆசிரிய அர்ப்பணிப்பு, அழகியலுணர்வு கற்றற் கற்பித்தல், கவின் நிலை, கல்வி நிறுவனத்தில் உயர்தரப்படும் உயர்பதவிகள், பற்றிய கல்விச் சிந்தனைகள் நூல் ஆகியது.

*** ஆரம்பக் கல்வி**

ஏப்ரல் 1999ல் ஆரம்பக் கல்வியின் அடி அத்திவாரம் அவசியம் பற்றி 'ஆரம்பக்கல்வி' எனும் நூலில் வடிவமைத்தேன். இந்நூல் எனது விரலைப் பிடித்து 'அனா' எழுதிய முதல் ஆசான் அமரர் செ.செல்லையா வாத்தியாருக்கு படையலானது. இவற்றில் ஆரம்பக்கல்வி பிரச்சினைகள், பாடத்திட்டம், வகுப்பறை வளப் பிரயோகம், தொடர்பாடல், உளவியல் தேவை, பரிகாரக் கற்பிதல் ஆரம்பக்கல்விச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள், முன்பள்ளி ஆரம்பக்கல்விக்கு அதன் தேவை, புதிய பார்வை ஆகியன பார்க்கப்பட்டுள்ளன. வெளியிட்ட காலத்திலேயே 4000ம் பிரதிகள் முடிவடைந்த நிலையில் தற்போது பல ஆசிரியர்களது

வேண்டுகோளுக்கிணங்க திருத்திய பதிப்பு, நண்பரும் ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளருமான திரு. மகேசின் உதவியுடன் 2009ம் ஆண்டு வெளியிடப் பட்டுள்ளது. புதுப் பொலிவுடன் நவீன கருத்துக்களைச் சேர்த்து உங்கள் கைகளில் இன்று தவழுகின்றது.

*** கல்வி நிர்வாகம்**

எனது மூன்றாவது படைப்பாக வெளிவந்தது 'கல்வி நிர்வாகம்' இந்நூல் 1999ம் ஆண்டு வெளியானது. எனது பட்டப்பின்படிப்பு, கல்வி டிப்ளோமா முதுமாணி வகுப்பு, என் முதுதத்துவமாணி வழகாட்டியான என் குருவானவர் பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களுக்குச் சமர்ப்பணமானது.

இந்நூல் எனது எல்லா பட்டறி நிலையிலும், கற்ற கல்வி நிர்வாக அறிவும், நிர்வாக பதவிகளில் பெற்றுக் கொண்ட பட்டறிவும் கல்வி நிர்வாகம் பற்றிய விரிவுரையாற்றலில் தேடிச் கொண்ட விடயங்களின் தொகுப்பு, கல்வி நிர்வாகம், கல்வி முகாமைத்துவம், கல்வி நிறுவனக்கட்டமைப்பு, நிர்வாகப் பரவலாக்கம், பன்முகப்படுத்தல், திட்டமிடல் பாடசாலைக் குணவியல்பு, பாடசாலை அலுவலக நிர்வாகம், கொத்தணி அமைப்பு, கல்வி மேற்பார்வை கல்வி நிறுவனப்பகுப்பாய்வு பற்றி வெளிப்படுத்தியுள்ளேன். இந்நூல் 1999ம் ஆண்டு வெளிவந்தது. இதுவும் புதுக்கருத்துக்களைச் சேர்த்து இரண்டாம் பதிப்பாக வெளியிட உள்ளேன்.

இலங்கைக்கல்வி நிர்வாகத் தேர்வில் தெரிவானவர்கள் இந்நூலின் பயன்பாடு பற்றி எடுத்துக் கூறினர். தற்பொழுது 10 ஆண்டுகள் கழித்தும் இந்நூலை மறுபதிப்பு செய்யும்படியும், வேண்டியும் திருத்திப் பதிக்க வேண்டியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்நூல் இவ்வாண்டு வெளிவரும்.

*** கலாநிதி ச.நா.தணிகாசலம் பிள்ளையின் கட்டுரைகள்.**

எழுத்துத்துறையுள் நுழைந்த காலத்தில் இருந்து பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இடப்பெயர்வால் அனேக கட்டுரைகள் கையில் சேர்க்க



முடியாமற்போனது தொலைந்து விட்டது. அகப்பட்ட கட்டுரைகளை மட்டும் இதில் தொகுத்துள்ளேன். இவற்றை தொகுத்துதவியவர் எனது மூத்த புதல்வி திருமதி.நரேந்திரன் சுதந்தி(அவுஸ்திரேலியா) அவர்கள்.

இந்நூலில் தமிழிசையின் ஆய்வு அறிமுகமாக எழுதப்பட்டது. இவற்றுடன் ஒரிரு வரலாற்று மொழியியல் கட்டுரைகளை இந்நூல் கொண்டிருந்தாலும். கூடுதலாகக் கல்வியியற் கட்டுரைகளே காணப்படுகின்றன.

யான் பிறந்த ஊர்ப் பற்றும் அங்கு பேணவேண்டிய ஊர்ச்சிறப்பையும் அவற்றுடன் ஒட்டியவற்றையும் கட்டுரையாக்கியுள்ளேன். எமது சங்கிலிய பரம்பரையின் மருத்துவச் சிறப்பையும் வட்டுவிசாலாட்சி சமேத காசி விசுவநாதரது சிறப்பையும் காட்டியுள்ளேன். எங்கள் மாமனார் முதுதமிழ் புலவர் தேசிய கீதத்தை மொழி பெயர்த்து தமிழ் உருவில் 'நமோ, நமோதாயே' என்று இலங்கைக்கு அளித்து பரிசு பெற்றவர். அவரைப் பற்றியும் கூறியுள்ளேன்.

பகவான் சத்திய சாயிபாவாவினது அழைப்பில் சென்று மகாநாட்டில் சமர்ப்பித்த மனித விழுமிய மேம்பாட்டுக்கல்வி இந்நூலை அணிசெய்கின்றது. கல்வி உலாவின் வெளிநாட்டு அனுபவத்தில் முகிழ்த்த இக்கட்டுரையே வெளிநாட்டு கல்வி உலாவின் அடி அத்திவாரம்.

கல்வி உலாவில் மறு சீரமைப்பு அவசியம் என்பதை முன்மொழிவாக "இடைக்கால நிர்வாகத்தின்போது கருத்திற் கொள்ள வேண்டியது" என்ற கட்டுரை கல்வி நிர்வாக மாற்றத்திற்கு முன்மொழியப்பட்டவை. கல்வி நிர்வாக நேயர்களுக்கு அது ஒரு நல்ல சிந்தனையைத் தோற்றும்.

# பிற்சேர்க்கை

## உலாவில் தொடரும் கல்விப் பணிகள்

### பெரும் மனித அவலமும் எமது பணியும்

கல்வி அமைச்சில் முதுநிலை நிபுணத்துவ ஆலோசகராகக் கடமையாற்றிவரும் இந்நாளில் வன்னிப் பிரதேசத்தின் இடம்பெற்ற போரினால் இடம் பெயர்ந்தவர்கள் மூன்று லட்சத்துக்கும் மேல்.

அவர்களில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எடுக்கும் 1260 மாணவர்களின் தேவையை உணர்ந்து, அவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை கல்வி அமைச்சினூடாக மேற்கொள்ள சந்தர்ப்பம் வாய்த்தது. கல்வி அமைச்சினதும் நலன்புரிமுகாம்களது கல்வி நடவடிக்கைக்காக மாண்பு மிகு கல்விஅமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த என்னை இணைப்பாளராக்கினார்.

பத்து தடவைகளுக்கு மேல் கொழும்பு ஆசிரியர்களையும் அழைத்துக் கொண்டு, பாடத்திட்டப் பொருட்களுடன் செட்டிகுளம் மெனிக்பாம் சென்று மாணவரது கல்விச் செயற்பாட்டுக்கு எம்மால் ஆன பங்களிப்பை வழங்கினோம். இது எனது வாழ்நாளின் பேறு என்று சொல்வேன்.

"கல்விப் பணி ஆற்றிய பெரும்பாலான நாட்களை வன்னிப் பிரதேசத்துடனேயே செலவழித்தேன். நிறைவு நிகழ்வாக எம்மண்ணின் பிள்ளைகளது கல்வியில் இடம் பெயர்ந்த சூழலில் செய்ய முடிந்தமை எனது கல்வி உலாவின் மிகப்பெரும் பாக்கியம் மீதிக்காலங்களையும் கைவிடப்பட்ட எமது மக்களுக்காக பணி ஆற்றுவதையே சிந்தையில் கொள்வேன் எனக்கூறி கல்வியுலாவின் கதை தொடர்வேன்.

நன்றி.



கிராமியமே உலக வாழ்வுக்கு ஊற்றாகவும் ஆதாரமாகவும் மிளிர்கின்றது என்றார் காந்தி. வட்டுக்கோட்டைக் கிராமத்தில் பிறந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற ச.நா.தணிகாசலப்பிள்ளை தனது கல்விப் பணியின் உச்சமான சேவையை பூநகரிக் கிராமத்தில் ஆற்றியவர். ஒரு சாதாரண ஆசிரியராக தென்னிலங்கை முஸ்லிம் கிராமத்தில் தனது கல்வி உலாவைத் தொடங்கியவர். அதிபராக, வட்டாரக் கல்வி அதிகாரியாக, பிரதம கல்வி அதிகாரியாக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, மாவட்டகல்விப்பணிப்பாளராக, யாழ் வலயக்கல்விப் பணிப்பாளராக, வடக்கு கிழக்கு மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளராக உயர்ந்து இளைப்பாறியவர். தொடர்ந்தும் மத்திய கல்வி அமைச்சில் சிரேஸ்ட கல்வி ஆலோசகராக கடமைபுரியும் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்கள் ஒரு முதல் வகுப்பு கல்வி நிர்வாகசேவை அதிகாரி ஆவார். கலைமாணிப்பட்டத்தினைத் தொடர்ந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா, பட்டப்பின் கல்வி முகாமைத்துவப் டிப்ளோமா, கல்வியில் முது தத்துவமாணி - மற்றும் கல்வியில் கலாநிதிப்பட்டங்களை தனக்கு உரித்தாக்கியவர். இவ்வாறாக கல்வியிலும், நிர்வாக சேவையிலும் உயர்ந்த ஒரு சாதாரண குடிமகனின் வாழ்வை கல்வி உலாவாக இந்நூல் தருகிறது. ஏற்கனவே கல்விச்சிந்தனைகள், கல்வி நிர்வாகம், ஆரம்பக்கல்வி, முறைமைசாராக் கல்வி முறையில் நாட்டுக்கூத்துக்கள், கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளையின் கட்டுரைகள், *The Role of Principals in Managing Small Schools in Difficult Areas of Sri Lanka,* பாரம்பரிய தொழில்முறையில் உய்த்துணரத்தக்க கற்கைநெறிகள் வடபிரதேச கிராமப் பாட-சாலைகளின் மேம்பாடு பற்றிய சிக்கல்கள் ஆகிய நூல்களைத் தந்தவர். இந்நூல் கல்வியல்சார் அனுபவப் புதையல் என்றால் மிகையாகாது. ஒரு நாவல் போல எழுதப்பட்டுள்ள இந்நூல் கல்விசார் மாணவர்கள் வாசிக்க வேண்டிய நூலாகும்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**